# உதயன்

சுடர் 30 கதிர் 333 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 8, ஞாயிற்றுக்கிழமை 25.10.2015



மகாராஜா பொதிகள் சேவை
அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறைந்த செலவில் பொதிகளை அனுப்ப இன்றே நாடுங்கள்.
லண்டன், சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு
01 Kg கட்டணம் 449/-,
கனடா 1Kg கட்டணம் 549/-
GTV Enterprises (Pvt)Ltd.
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
024 - 4930200


# ஐ.நாவின் செயற்பாடு இலங்கைக்கு திருப்தி

## 70 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 25

இலங்கையில் கடந்த ஆட்சியில் இருந்த அரசு ஐக்கிய நாடுகள் சபைக்குச் சவால்விடுத்து உறவுகளைச் சேதப்படுத்தி இருந்தது. தற்போதைய அரசு ஐ.நா. உட்பட சர்வதேசத்தின் முக்கிய தரப்புக் களுடன் நட்புறவை மீளக் கட்டியெழுப்பி வருகின்றது. இலங்கையின் அபிவிருத்தி மற்றும் மனிதாபிமானச் செயற்பாடுகளில் பங்காளியாக உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பில் நாம் முழுமையான திருப்தி அடைகின்றோம்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மனித உரிமைகளைப் பேணுதல் மற்றும் பாதுகாப்பை உறுதிப் படுத்துதல் ஆகியன ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நோக்கங்களாக இருக்கின்றன. இவற்றைப் பூரணமாகப் பொறுப்புடன் நிறைவேற்ற இலங்கை தயாராக இருக்கின்றது என்றும் அவர் உறுதியளித்தார். பக். 24



## யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கின்றது வயிற்றோட்டம்

*குழந்தைகள் கவனமென சுகாதாரத்துறை எச்சரிக்கை*

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்.மாவட்டத்தில் வயிற்றுளைவு மற்றும் வயிற்றோட்டம் ஆகியவற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வாராந்தம் இவ்வாறு 30 தொடக்கம் 40 பேர் வரை பாதிக்கப்படுகின்றனர். எனவே சுட்டாறிய நீரை அருந்துமாறும், நன்கு கழுவிய பழங்களை உட்கொள்ளுமாறும் சுகாதாரப் பகுதியினர் பொதுமக்களுக்கு அறிவுறுத்துகின்றனர்.

முன்னர் வயிற்றோட்டத்துக்கு வாராந்தம் 3 தொடக்கம் 4 பேர் வரையில் சிகிச்சை பெற்று வந்தனர். தற்போது அவ்வாறு பாதிக்கப்படுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வாராந்தம் 30 தொடக்கம் 40 பேர் வரையில் சிகிச்சை பெறுகின்றனர். பக். 24



## இலங்கையுடன் இணைந்து செயற்பட ஐ.நா விருப்பம்

*பொதுச் செயலாளர் பான் கீ - மூன் தெரிவிப்பு*

நியூயோர்க், ஒக்.25

சமாதானம், பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் நீடித்து நிலைக்கக் கூடிய அபிவிருத்தி போன்றவற்றை உறுதி செய்வதில் இலங்கையுடன் இணைந்து செயற்பட விரும்புவதாக ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ - மூன் தெரிவித்துள்ளார்.

இலங்கை, ஐ. நா அமைப்பில் உறுப்புரிமை பெற்றுக் கொண்டு 60 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டுவெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பக். 24

## ஐ.நாவுடன் மோதியதால் பின்தங்கியது மகிந்த அரசு

பிரதமர் ரணில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக் 25

கடந்த அரசு (மகிந்த அரசு) ஐ.நா. உட்பட சர்வ தேசத்துடன் மோதிக் கொண்டது. இதனால் அந்த அரசு முன்னோக்கிச் செல்லமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. 2015 ஜன வரி 8இல் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றத்துடன் மீண்டும் இலங்கை சர்வதேசத்துக்குள் பிரவேசித்தது.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 70ஆவது வருட நிகழ்வு மற்றும் உறுப்புநாடு என்ற வகையில் இலங்கை இணைந்து 60ஆவது வருட நிகழ்வு நேற்று கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் ரணில் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் சபையின் உருவாக்கத்தில் இலங்கை முக்கியமான பங்களிப்பை வழங்கியிருந்தது. ஆனாலும், துரதிர்ஷ்டவசமாக 10 ஆண்டு பக். 24

## பொலிஸாருக்கு எதிராக 120 முறைப்பாடுகள் பதிவு

அடுத்த வாரம் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 25

பொலிஸாருக்கு எதிராக நாடளாவிய ரீதியில் இதுவரை 120 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அவை குறித்து விசாரணைகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொலிஸ் நிலையங்களில் முறையிடப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக் பக். 24

## ஐ.நா. தீர்மானம் குறித்து மனோ- ஜென்கா பேச்சு



கொழும்பு, ஒக்.25

தேசிய கலந்துரையாடல் அமைச்சர் மனோ கணேசனை அரசியல் விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் நாயகம் மிரோஸ்லாவ் ஜென்கா நேற்றுச் சந்தித்து பக். 24

## அரசியல் கைதிகள் விடுதலைக்காக தேவாலயங்களில் இன்று ஆராதனை

கொழும்பு, ஒக். 25

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி வடக்கு-கிழக்கில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை விசேட ஆராதனை நடைபெறவுள்ளது.

வாராந்த ஆராதனையைத் தொடர்ந்து இந்த விசேட ஆராதனை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட ஆராதனைக்கான ஏற்பாடுகளை வடக்கு-கிழக்கில் உள்ள மறைமாவட்ட ஆயர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசு பொதுமன்னிப்பில் தங்களை விடுதலை செய்ய பக். 24


SMEPLUS speedloan
உற்பத்தியாளர்களான உங்களை கரை சேர்க்கும் வழி
வெற்றிகரமான வாழ்க்கைப் பயணத்திற்கான ஆலோசனை வழிகாட்டல்கள்.
கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏதுவானது.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
011 5 411 411
SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
தேசத்தின் முன்னோடி
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# டெங்கு மற்றும் வயிற்றோட்டம் தென்மராட்சியில் அதிகரிக்கிறது

## அவதானமாக இருக்குமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்து

சாவகச்சேரி, ஒக்.25

தென்மராட்சிப் பகுதியில் டெங்கு மற்றும் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. கடந்த 15 நாள்களில் 8 பேர் டெங்காலும், 12 குழந்தைகள் வயிற்றோட்டத்தாலும் பாதிக்கப்பட்டனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இதைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தற்போது பெய்த மழைக்குப் பின்னர் மீசாலை கிழக்கு, சங்கத்தானை, வரணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 8 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த 12 குழந்தைகள் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். குடியிருப்பு பகுதிகளை துப்புரவாக வைத்திருப்பதால் டெங்கு ஏற்படாமல் தடுக்க முடியுமெனவும் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய பாவிக்கப்படாத பொருள்களை அப்புறப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ள சுகாதாரப் பிரிவினர் வயிற்றோட்டம் பரவாமல் தடுக்க சிறு பிள்ளைகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் குடிதண்ணீர் போன்றவற்றை சுகாதார முறைப்படி வழங்குமாறும் கேட்டுள்ளனர்.

குறிப்பாக பொதுக் கிணறுகளில் குடிதண்ணீர் எடுப்போர் தமது பிரிவு பொது சுகாதார பரிசோதகருடன் தொடர்பு கொண்டு குளோரின் இடுமாறும் வலியுறுத்தியுள்ளனர். சிறு பிள்ளைகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் குடிதண்ணீர் போன்றவற்றாலேயே வயிற்றோட்டம் ஏற்படுவதால் பெற்றோர் தமது குழந்தைகளுக்கு உணவு கையாள்வதில் அவதானமாக செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-9)



# ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை

மட்டக்களப்பு, ஒக்.25

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை ஏறாவூர் அலிஸாஹிர் மௌலானா சதுக்கத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர், உபாலி ஜயசிங்க பொலிஸ் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டதுடன் பொலிஸ் பரிசோதனையையும் மேற்கொண்டார்.

ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரி தீப்தி விஜயவிக்கிரம, ஏறாவூர் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரியும் சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகருமான சிந்தக பீரிஸ் உட்படப் பலர் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற)

# பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகனம் குறித்து கவனமெடுக்குக

## மன்னார் பொதுமக்கள் பொலிஸாரிடம் கோரிக்கை

மன்னார், ஒக்.25

மன்னாரில் பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வாகனங்கள் தொடர்பில் வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வாகனங்கள் அளவுக்கு அதிகமான மாணவர்களை ஏற்றிச் சேவையில் ஈடுபடுகின்றன. ஓட்டோக்களில் 6 வரையான மாணவர்கள் ஏற்றப்படுகின்றனர் என்றும் பொதுமக்கள் கூறுகின்றனர். சிறுவர்களையும் மாணவர்களையும் ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்கும் வகையில் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பாடசாலைச் சேவைகளில் ஈடுபடும் வாகன உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற-56)

# பெற்றோரும் ஒத்துழைத்தாலேயே பாடசாலைகள் திறம்பட இயங்கும்

## மாகாண கல்விப் பணிப்பாளர் உதயகுமார் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஒக். 25

பெற்றோர்கள் அதிபர், ஆசிரியர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே பாடசாலையை திறம்பட நடத்த முடியும் என மாகாண கல்விப் பணிப்பாளர் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள பிரபல்யமான பாடசாலை ஒன்றில் கடந்த இருவாரங்களாக நிலவிய குழப்பமான சூழ்நிலை தொடர்பாக பெற்றோருக்கு தெளிவுபடுத்தும் பொருட்டு நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது பாடசாலை ஆசிரியர்கள் குறித்த பாடசாலையின் அதிபருடன் இணைந்து கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது இருப்பதாகவும் தங்களுக்கு வேறு பாடசாலைக்கு மாற்றம் செய்து தருமாறு கூறியும் வலயக்கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பாக கடந்த வாரம் ஆராயப்பட்டு பெற்றோருக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் பெற்றோர் அழைக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த பாடசாலை மிகப்பெரிய பாடசாலை. ஆகவே, பாடசாலையின் தரத்தைப் பொறுத்து அதிபர் தரம் – I உள்ளவர்களே நியமிக்கப் படுவார்கள். அந்த அடிப்படையிலேயே இந்த அதிபரும் நியமிக்கப்பட்டார். இதனை யாரும் வேண்டுமென்றே முன்னைய அதிபர் மாற்றப்பட்டார் என்று நினைக்க வேண்டாம். எல்லாப் பாடசாலைகளின் அதிபர்களும் மாற்றங்களை எதிர்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையிலேயே முன்னைய அதிபரும் மாற்றப்பட்டார்.

எனவே சிறு சிறு பிரச்சினைகளை பெரிதாக்கி மாணவர்களின் கல்வி நிலையில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடாது. எனவே மாணவர்கள், பெற்றோர்கள் சிறந்த ஒத்துழைப்பை அதிபருக்கு வழங்கினால்தான் பாடசாலை செயற்பாடுகளை அதிபர் முன்னெடுத்துச் செல்ல முடியும்.– என்றார்.

அத்துடன் பாடசாலைச் செயற்பாடுகள் எதுவித பிரச்சினைகளும் இன்றி நடைபெறவேண்டும் என பெற்றோர் சார்பாக முன்வைக் கப்பட்டதுடன் பிரச்சினைகள் தொடர்பாக அவதானிப்பதற்கு ஒரு குழு அமைக்க பெற்றோர் சார்பாக கோரிக்கை விடுக்கப்பட்டு குழுவும் அமைக்கப்பட்டது. (ற-ரி3)

# யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை நூற்றாண்டு நிகழ்வுகள் நாளை

## தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்வுகள் நாளை முதல் மூன்று தினங்கள் நீராவியடி யாழ் இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

நாளை திங்கட்கிழமை 26 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள முதல் நாள் நிகழ்வுகளுக்கு பாடசாலை அதிபர் நா.மகேந்திர ராசா தலைமை தாங்கவுள்ளார். பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் பணிப்பாளர் அ.உமாம கேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

முதல் நாள் நிகழ்வில் பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் 27 ஆம் திகதி இரண்டு அமர்வுகளாக நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுகளின் முதலாவது அமர்வு கல்லூரி அதிபர் தலைமையில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன் இந்து மழலை நூல் வெளியீடும் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளார். மேலும் இந்து மழலை நூல் முதற் பிரதியை என்பு முறிவு சத்திரசிகிச்சை நிபுணர் டி.ஆர்.கோபிசங்கர் பெறவுள்ளார். நூல் வெளியீட்டு உரையினை சிரேஷ்ட ஊடகவியலாளர் ந.வித்தியாதரனும், நயப்புரையை ஓய்வுநிலைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பியும் வழங்கவுள்ளனர்.

கௌரவிப்பு விழா நிகழ்வுகளாக பி.ப 3.30 மணிக்கு கல்லூரியின் பழையமாணவர் சங்கத்தின் தலைவர் எஸ்.ரி.பி.இராஜேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகும் இரண்டாவது அமர்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேத நாயகன் கலந்துகொள்ளவுள்ளார்.

அத்துடன் பழையமாணவர் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் ந.வித்தியாதரன் தலைமையில் 28 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3.30 மணிக்கு மூன்றாம் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுகளில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், பெற்றோர்கள், பழையமாணவர்களுக்கான நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் பாடசாலை சமூகத்தினர் அழைத் துள்ளனர். (ற-ரி5)

# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 25

கோயிலுக்குத் திருட்டுத்தனமாக மேலதிகமாக மின்சாரம் பெறமுற்பட்டவர் மின் தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் மயிலணியில் கடந்த வியாழக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கோயில் ஒன்றில் இடம்பெறவிருந்த நிகழ்வு ஒன்றுக்கு மின்சாரம் பெற முற்பட்டபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கோயிலுக்கு ஏற்கனவே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளபோதும் அது போதாதென்று அவர்கள் திருட்டுத்தனமாக மின்சாரம் பெறமுற்பட்டபோதே மின் தாக்குதலுக்கு உள்ளாகி ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4,86)

# பெரும்போக செய்கைக்கான விதை நெல் விநியோகம்

யாழ். குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் பெரும்போக நெற்செய்கைக்கென மூவாயிரத்து ஐநூறு புசல் விதை நெல் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டின் பெரும்போக நெற்செய்கையின் போது விவசாயிகளிடமிருந்து இந்த விதை நெல்லை சங்கம் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி வைத்திருந்தது.

இந்த விதை நெல் சந்தைப் படுத்தப்பட்டு பின்னர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு தரமான விதை நெல் எனவும் உறுதிப்படுத்தப்பட்டது. அவையே தற்போது விநியோகிக்கப்பட்டுள்ளன.

பி.ஜி. 406 இனத்தைச் சேர்ந்த இந்த விதை நெல்லை விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டிப் பெற்றுக் கொண்டனர் என்று சங்கத்தின் பொதுமுகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித்துள்ளார்.

இந்த விதை நெல்லின் கையிருப்பும் முடிவுற்றுள்ளது. விவசாயிகள் போதியளவு விதை நெல்லை கொள்வனவு செய்து இந்த முறை நெற்செய்கைக்கு பயிரிட்டுள்ளனர். குடாநாட்டில் கூடுதலாக விவசாயிகள் பி.ஜி. 406 இன விதை நெல்லையே பயிரிட்டுள்ளனர். இந்த விதை நெல் கடந்த போகத்தின்போது பயிரிடப்பட்ட சமயம் விவசாயிகள் அதிக விளைச்சலைப் பெற்றிருந்தனர்.– என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-17)



# இலக்கிய பெருவிழா ஆரம்ப நிகழ்வுகள்

கிளிநொச்சி, ஒக்.25

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டு துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், வடமாகாண இலக்கிய பெருவிழா நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் ஆரம்பமானது.

கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் பி.ப 2 மணிக்கு ஆரம்பமாகிய இந்த நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள கலைஞர்கள், பாடசாலை மாணவர்களுடைய கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்தோடு இறுதி நாளான நேற்று கௌரவ முதலமைச்சர் விருது சிறந்த நூலுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வு, நடனங்கள் உள்ளிட்ட கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் .வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ற-21,ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்வாடியில் இருந்து கசிப்பு போத்தல் மீட்பு



மன்னார், ஒக்.25

தலைமன்னார் பியர் பகுதியில் மீன் வாடி ஒன்றில் பதுக்கி வைக் கப்பட்டிருந்த 20 போத்தில் கசிப்பு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பொலி ஸா ரால் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் சந்தேகத்தின் பேரில் நீர்கொழும்பைச் சேர்ந்தநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமன்னார் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து தலைமன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரான் பெரேராவின் பணிப்புரைக்கு அமைவாக தலைமன்னார் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரி சமீர லக்கம் தலை மையில் சென்ற சி.பிலிப்ஸ்.சந்தன பிரிமுத்து குமார சேகர ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவே கசிப்புப் போத்தல்களைக் கைப்பற்றியுள்ளது. குறித்த வாடியில் இருந்த நீர் கொழும்பை வதிவிடமாகக் கொண்ட மீனவர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். கைப்பற்றப்பட்ட 20 போத்தல் கசிப்பு தலைமன்னார் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதோடு கைது செய்யப்பட்ட நபரிடம் தலைமன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரனைகளின் பின் குறித்த நபர் மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார் என்று தலைமன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-56)

# மூன்று லட்சம் பனை விதைகள் இம்முறை குடாநாட்டில் நடுகை

## பனை தெனை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து இந்தமுறையும் மூன்று லட்சம் பனம் விதைகளைக் குடாநாட்டில் நடுகை செய்யவுள்ளன என்று வடமாகாண பனை தெனை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் என். கணேசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- வழமையாக கார்த்திகை மாதம் மரம் நடுகை மாதமாக வடமாகாண கூட்டுறவு அமைச்சால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக சகல பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் ஒன்று சேர்ந்து பனம் விதைகளை நடுகை செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

குறிப்பாக பனை அபிவிருத்திச் சபையும் இந்தப் பனம் விதை நடுகைக்கு அனுசரணை வழங்கவுள்ளது. சுமார் 3 லட்சம் வரையிலான பனம் விதைகள் இந்தக் கார்த்திகை மாதத்தில் நடுகை செய்யப்படும். இந்தப் பனம் விதை நடுகைக்காக சமாசத்தினால் பனம் விதைகளை சேகரிக்கும் பணிகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன. பனம் விதை நடுகைத் திட்டத்தைச் சமாசம் வெற்றிகரமாக மேற்கொள்வதற்குச் சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.- என்றார்.

(ற-17)




*சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் உரிமை மீறல், பெண்களுக்கு எதிரான வன்முறை என்பவற்றைத் தடுக்குமாறு கோரி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை புத்தளத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறுவர்களைத் தீண்ட வேண்டாம் என்ற தொனிப் பொருளுடன் புத்தளம் பிரதான பஸ் நிலையத்துக்கு முன்பாகக் குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. புத்தளம் சிவில் பாதுகாப்புப் பிரிவின் சமூக சேவைகள் பிரிவு மற்றும் புத்தளம் தமிழர் சமூக சேவை நற்பணி மன்றம் ஆகியன இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்திருந்தன.* (ற)

# சிப்பாய் உயிழப்பு குறித்து சந்தேகம்

## படை உயரதிகாரி கைது

யாழ்ப்பாணம், ஒக். 25

வேலணையில் கடற்படைச் சிப்பாய் உயிர்துறக்கக் காரணம் உயர் அதிகாரிகளின் பாலியல் தொல்லை என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனால் படைமுகாமின் உயர் அதிகாரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வேலணையிலுள்ள கடற்படை முகாமில் பணியாற்றும் கடற்படைச் சிப்பாயான கமல் ஜெயதிலக (வயது 21) என்பவரே கடந்த புதன்கிழமை தனது உயிரை மாய்த்துள்ளார்.

அவர் படைமுகாமிலுள்ள உயரதிகாரிகளால் பாலியல் தொல்லைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமையே அவரது உயிர் துறப்புக்குக் காரணம் என்று அவரின் பெற்றோரால் விசாரணையில் சந் தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது பற்றிய விசாரணை இடம்பெற்றது. யாழ்.போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் விசாரணையின் பின்னர் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அது பற்றிய விசாரணையை மேற்கொண்ட ஊர்காவற்றுறைப் பொலிஸார் குறித்த கடற்படை முகா மின் உயர் அதிகாரி ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்தனர். ஆரம்ப விசாரணைகளின் பின்னர் பாலியல் தொல்லை புரிந்த குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 5 ஆம் திகதி வரைக்கும் விளக் கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ற-4)

# தபால் விநியோக சேவையை உப தபால் அலுவலகத்துடன் இணைக்கக் கோரிக்கை

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள சாளம்பைக் கேணி-2 க்குரிய தபால் விநியோக சேவையை சவளக்கடை உப தபால் அலுவலகத்துடன் இணைக்குமாறு பிரதேச வாசிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள சாளம்பைக்கேணி - 02 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு 0.5 சதுரக் கிலோமீற்றர் பரப்பைக் கொண்டது. அங்கு 191 குடும்பங்கள் வாழ்கின்றன. தற்போது சம்மாந்துறை தபால் அலுவலகத்திலிருந்து 12 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள சாளம்பைக் கேணி - 02 கிராமத்துக்குக் கடிதங்கள் விநியோகம் செய்யப்படுவ தால் தாமதம் ஏற்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதுகுறித்துக் கிராம மக்கள் தெரி விக்கையில்-

கிராமத்திலுள்ள இளைஞர், யுவதிகள் தொழில் வாய்ப்புக்காக விண்ணப்பித்து அவர்களுக்கு நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வருகின்ற கடிதங்கள் கூட இதன் காரணமாகத் தாமதமாகக் கிடைப்பதால் கடந்த காலங்களில் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதுமட்டுமல்லாது கடந்த காலங்களில் தொழில் வாய்ப்புக்கான பயிற்சிகள் வழங் கும் சந்தர்ப்பத்தில் பிரதேசத்தின் தபால் நிலையம் சம்மாந்துறை தபால் நிலையம் என விலாசத்தில் குறிப்பிடப்படுவதால் பக்கத்தில் அமைந்துள்ள நாவிதன் வெளிப் பிரதேசத்தை விட்டு விட்டு சம்மாந்துறைப் பிரதேசத்துக்கு பயிற்சிக்கான இடங்களைத் தெரிவுசெய்துள்ளனர். இது குறித்து மாவட்ட அரச அதிபரிடம்

விளக்கியதன் பின்னரே நாவிதன் வெளி பிரதேசத்துக்கு மாற்றி வழங் கப்படுகின்றது.

சவளக்கடை உப தபால் அலுவ லகம் சாளம்பைக்கேணி-2 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிலிருந்து 2.3 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இதேவேளை இக்கிராமத்தை கடந்து 2 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள கிராமங்களுக்கு சென்று சவளக்கடை உப தபால்காரர் கடிதங்களை விநியோகிக்கின்றனர்.

எமது இளைஞர் யுவதிகளின் நலனைக் கருத்தில் கொண்டும் பிரதேச மக்களின் நலனைக் கருத்தில் கொண்டும் சாளம்பைக் கேணி-2 தபால் சேவையை சவளக்கடை உப தபால் அலுவலகத்துடன் இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

அக்கரைப்பற்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகருக்கு பிரதேச அமைப்புக்கள் கடிதம் அனுப்பியும் எந்த விதமான நடவடிக்கையும் நடைபெறவில்லை. சாளம் பைக்கேணி - 2 தபால் விநியோக சேவையை சவளக்கடை உபதபால் அலுவலகத்துடன் இணைக்க தபாற்துறை அமைச்சர் மற்றும் தபால் மா அதிபர், பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் ஆகியோர்கள் இவ் விடயத்தில் துரித கவனம் செலுத்தி பிரதேச மக்களின் இன்னலைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். - என்றனர். (ற-10)

# ப. நோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் மர நடுகையில் இணைய வேண்டும்

## கூட்டுறவாளர்கள் கோரிக்கை

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட சகல கூட்டுறவு அமைப்புக்களும் மரம் நடுகைத் திட்டத்தில் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் என்று கூட்டுறவாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கார்த்திகை மாதம் மரம் நடுகை மாதமாகக் கூட்டுறவு விவசாய அமைச்சால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதையடுத்தே கூட்டுறவாளர்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சகல கூட்டுறவு அமைப்புக்களும் இந்தப் பொது வேலைத்திட்டத்தில் இணைந்து செயற்பட வேண்டும். கூட்டுறவு அமைப்புக்கள் தமது அத்தியாவசிய சேவையுடன் இதையும் பொது வேலைத்திட்டமாக - மரம் நடுகைத் திட்டத்தையும் இணைத்துச் செயற்படுவதுடன் பிரதேசத்தை மரங்கள் நிறைந்த பிரதேசமாகச் செழிப்பானதாக மாற்றியமைக்க முன்வரவேண்டும்.

இதற்காக சகல கூட்டுறவு நிறுவனங்களின் வளாகங்கள், காணிகள் மற்றும் பொது இடங்களில் பயன்தரும் மரங்களை நட்டு வைத்து அவற்றைப் பராமரிக்க சங்கங்கள் முன்வரவேண்டும். வடமாகாணக் கூட்டுறவு விவசாய அமைச்சின் இந்த தேசிய மரம் நடுகைத் திட்டத்துக்கு சகல சங்க நிர்வாகங்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்- என்றனர். (ற-17)

# வியாபார நிலையம் உடைத்துத் திருட்டு

வவுனியா பூந்தோட்டம் சந்தியிலிருக்கும் வியாபார நிலையம் திருடர்களால் உடைக்கப்பட்டு பணம் பொருள்கள் என்பன திருடப்பட்டுள்ளன என்று வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு வியாபார நிலையம் உடைக்கப்பட்டுள்ளது. பணம், மற்றும் சில பொருள்களுமாக ரூபா ஒரு லட்சம் பெறுமதியானவை கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று முறைப்பாட்டில் உரிமையாளர் தெரிவித்துள்ளார். மேலதிக விசாரணையை வவுனியா பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## குடாநாட்டின் பொருளாதாரத்தை புதிய திசைக்குத் திருப்புவோம்.....

யாழ்ப்பாண மாவட்டத்தில், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான முயற்சிகைகூட இயலாத நிலை இன்னும் களையப்படவில்லை.

வெளிமாவட்ட வியாபாரிகளின் அங்காடிச் சந்தைகளால், மாவட்ட வியாபாரிகளின் தொழில் கெட்டு, மிகக் கணிசமான அளவில் அவர்களின் பொருளாதார நிலை பாதிக்கப்படுகிறது.

சித்தன்கேணிப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பாதணிகளை விற்பனை செய்யும் நிகழ்வில்; மேற்கண்ட பாதிப்பை விரிவாக எடுத்துரைத்தார் யாழ். வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரம்.

பொதுவாகவே, தமது தொழில் முயற்சிகளில் முறையாக வரி செலுத்தி, விற்பனையில் ஈடுபட்டு பணியாளர்களுக்கு சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகிய கொடுப்பனவுகளை வழங்கும் நிரந்தர வர்த்தகர்கள் வியாபாரத்தில் வீழ்ச்சி காணும் நிலை உயர்ந்து வருவதை வணிகர் கழகத்தின் தலைவர் புள்ளி விவரங்களுடன் வெளிப்படுத்தி உள்ளார்.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஆலய மகோற்சவங்கள் அடுத்துத் தொடுத்து வரும் வேளைகளில், வெளிமாவட்ட வியாபாரிகள் பெரும் எண்ணிக்கையில் இங்கு வந்து கடை பரப்புகிறார்கள்.

அவர்கள் விற்பனை செய்யும் பொருள்களுக்கு வரியும் இல்லை, வேறு அறவீடெதுவும் இல்லை என்ற நிலையில், கூடுதல் லாபம் வைத்து வியாபாரம் நடப்பது சர்வசாதாரணமாகி விட்டது.

ஆனால், குடாநாட்டின் வர்த்தகர்கள், வியாபாரிகள் தனியாரிடம், வங்கிகளிடம் கடன்பெற்று நடத்தும் வியாபாரம் வீழ்ச்சி கண்டு கஷ்டமுறும் நிலை மேலுயர்ந்து வருகிறது.

குடாநாட்டுக்கு வந்தேகும் வெளிமாவட்ட வியாபாரிகளால், பெருந்தொகைப் பணத்தை முதலீடு செய்து தொழில் ஆரம்பிக்கும் உள்ளூர் வர்த்தகர்கள் சேற்றில் எறிந்த கல்லாக, தொழிலில் புதைந்து போகும் நிலையே இயல்பு என்று ஆகிவிட்டது.

அதன் பெறுபேறாக, அவர்களின் பண முதல் முடங்கி நட்டம் பருத்துப் பெருகுகிறது. அதனை மனதில்கொண்டு புதிய உத்தி ஒன்றை யாழ். வணிகர் கழகத்தினர் வகுத்துள்ளதாகத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பாதணி உற்பத்தியுடன் தரித்துவிடாது, சோர்ந்து விடாது வேறு துறைகள் சார்ந்த உற்பத்தி முயற்சிகளிலும் உள்ளூர் முதலீட்டாளர்கள் கால் பதிக்க வேண்டும் என்பதே அதுவாகும். அது குறித்து யாழ். மாவட்டத்தின் அனைத்து வர்த்தகர் சங்கங்களையும் இணைத்து உற்பத்திப் பொருள்களைப் பிறமாவட்டங்களுக்கு 'ஏற்றுமதி' செய்ய வேண்டும் என்ற திட்டம் தமது சங்கத்திடம் உண்டு என்பதையும் யாழ். வணிகர் கழகத்தின் தலைவர் முன்மொழிந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் விளைபொருள்களுக்கு தெற்கில் மவுசும் நல்ல விற்பனையும் உண்டு என்பதற்கு, கொழும்புச் சந்தைகளில் 'யாப்பணே அம்பே'க்கு (யாழ்ப்பாண மாம்பழத்துக்கு) பெரிய அளவில் இப்போதும் பெரும் மவுசும் விற்பனையும் உண்டு என்பதை உதாரணம் காட்ட இயலும். அதேபோன்று வடக்கில் விளையும் மாம்பழத்துக்கும் பருவ காலத்தில் கிராக்கி அதிகம்.

ஆகையால், புதிய துறைகளைக் கண்டறிந்து குடாநாட்டின் பொருளாதாரத்தை பல வழிகளிலும் , வகைகளிலும் உயர்த்துவதற்கு, திட்டமிட்டுச் செயற்படுவது காலத்தின் தேவை. ஒரு தொழிற்றுறையில் தாழ்ந்தால் மற்றொரு (புதிய) துறையைக் கவ்விக் கொள்வதே பொருத்தமும், வளர்ச்சிக்கு வழியுமாகும்.

# இலங்கை தனிச் சிங்கள நாடு எனில் தமிழரைப் பிரிந்து செல்லவிடுங்கள்

## நாடாளுமன்றில் சுமந்திரன் எம்.பி. ஆவேசம்

கொழும்பு, ஒக் 25

இந்த நாடு தனிச் சிங்கள நாடாக இருக்க வேண்டுமாயின் எங்களைத் (தமிழரை) தனியே விட்டு விடுங்கள். நாங்கள் சிங்களவர்கள் அல்லர் நாங்கள் சிங்கள இராச்சியத்துக்குரியவர்கள் அல்லர். நாங்கள் தமிழர்கள். எமக்குச் சொந்த மரபுரிமை உள்ளது. சிங்கள மக்கள் மட்டும் இறைமையை அனுபவிக்க வேண்டும் என்றால் நாங்கள் பிரிந்து செல்லவேண்டும் என்று நீங்கள்தான் கூறுகின்றீர்கள். இலங்கை சிங்கள தேசம் என்றும் நீங்கள்தான் கூறுகின்றீர்கள். எம்மைப் பிரிந்து போகுமாறும் நீங்கள்தான் கூறுகின்றீர்கள்.

– இவ்வாறு ஆவேசமாகத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

ஐ.நா. தீர்மானம் உங்களுடையது! நீங்கள் அதற்குச் சொந்தக்காரர்கள். எனவே, அதை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இது உங்களுடைய தீர்மானம். இதற்கு நீங்கள்தான் முழுச் சொந்தக்காரர். உங்களது இந்த முயற்சிக்கு நாங்கள் பாராட்டுகின்றோம்.

தமது அரசின் மீது நம்பிக்கை வைக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டிருந்தார். இந்த விடயத்தில் பேச்சளவில் மட்டும் நின்றுவிடாது, அதை செயற்படுத்த வேண்டும். உங்கள் செயற்பாடுகளை மக்கள் காண வேண்டும். அவர்கள் இதை அனுபவிக்க வேண்டும். இந்தத் தீர்மானம் முழுமையாக செயற்படுத்தப்பட வேண்டும்.

இங்கு இறைமைபற்றி குறிப்பிடப்பட்டது. இறைமை என்பது ஒரு மக்கள் சமூகம் தம்மைத் தாமே ஆள்வதாகும். இங்கு ஒரு தரப்பினர் மட்டுமே இறைமையை அனுபவிக்கின்றனர். இதை ஏற்றுக்கொள்ள முடியாது. பல தரப்பினர் இருக்கும் நாட்டில் அனைவரும் இறைமையை அனுபவிக்க வேண்டும். அதிக எண்ணிக்கை கொண்ட ஒரு தரப்பினர் மட்டும் இறைமையை அனுபவிக்க முடியாது.

அரசு உண்மையில் நல்லிணக்கம் தொடர்பில் அக்கறை காட்டினால் பொறுப்புக் கூறல் தொடர்பில் உண்மைத் தன்மையை வெளிப்படுத்த வேண்டும். ஐ.நா. தீர்மானத்துக்கு அமைய இடம்பெறும் விசாரணைப் பொறிமுறையில் பொதுநலவாய, வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்கள், சட்டத்தரணிகள் உள்வாங்கப்பட வேண்டும்.

அவர்களது பங்களிப்பு அந்த மட்டத்தில் உள்வாங்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் தொழிநுட்ப உதவி என்றால் தொழிநுட்ப உதவியென்று குறிப்பிட வேண்டும். இதை தொகுதியாகப் பிரிக்கத் தேவையில்லை. நீதிபதி நீதிபதியின் நடவடிக்கையையும், விசாரணையாளர் விசாரணை நடவடிக்கையையும், சட்டத்தரணிகள் தமது நடவடிக்கையையும் செய்து பங்களிப்பு செய்ய வேண்டும். இந்த விடயத்தில் நாம் அக்கறையுடன் இருக்கின்றோம். இந்தப் பொறிமுறை முக்கியத்துவமிக்கதாய் இல்லாவிட் டால் அதில் தோற்றுப்போனதாக அமைந்துவிடும்.

பரணகம ஆணைக்குழுவில் தமிழ் மக்களுக்குத் துளியளவும் நம்பிக்கை இல்லை. இவ்வாறு நம்பிக்கையற்ற ஆணைக்குழுவே போர்க்குற்றம் இடம்பெற்றதாகக் கூறுகின்றது. அப்படியாயின் அதன் உண்மைத் தன்மை என்ன? சனல் 4 காணொலி குறித்து குறிப்பிட்டுள்ள இந்த ஆணைக்குழு அது தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்த வேண்டும் என்றும் கூறுகின்றது.

வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தோர், காணாமல் போனோர் குறித்தும் குறிப்பிடுகின்றது. இந்நிலையில், தற்போது ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து ஆட்சி அமைத்துள்ள அரசு வெளிப்படையாக, நேர்மையாக பாதிக்கப்பட்ட தரப்பினருக்குத் திருப்தியை ஏற்படுத்தும் வகையில் இதைத் தீர்க்க வேண்டும். இந்த விடயத்தில் மறைத்து, ஒழித்து செயற்படாமல் வெளிப்படையாகச் செயற்படவேண்டும்.

ஐ.நா. தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது முழுமையான ஆதரவை வழங்கத் தயாராக உள்ளது. இந்தப் பயணத்தில் உங்களுடன் (அரசுடன்) கைகோர்த்து செயற்படத் தயார். இன வாதிகளின் குரலுக்கு செவிசாய்க்காமல், இந்த விடயத்தில் நீங்கள் உறுதியாக இருந்து பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்றார். (த–சி)

# வடக்கில் அரசியல் முரண்பாட்டை ஏற்படுத்த இந்தியாவின் "றோ" முயற்சி

## நாடாளுமன்றில் ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக் 25

வடக்கில் அரசியல் முரண்பாட்டை ஏற்படுத்தி, புதிய அரசியலைக் கட்டியெழுப்பவும், யாழில் அரசியல் ஸ்திரத்தன்மையை இல்லாது செய்யவும் இந்திய "றோ" முயற்சிக்கின்றது என்று நாடாளுமன்றில் தகவல் வெளியிட்டார் ஜே.வி.பியின் தலைவரும் எதிர்க்கட்சியின் பிரதான கொரடாவுமான அநுரகுமார திஸாநாயக்க.

மேலும் புலிகளின் ஆயுதக் கொள்வனவு தொடர்பில் கே.பியை பகிரங்க நீதிமன்றத்திற்கு அழைத்து விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாக இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கை குறித்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் கூறுகையில்,

இலங்கையில் இடம்பெற்ற போரில் எத்தனை பேர் இறந்தனர் என்று எமக்குத் தெரியாது. எவ்வளவு சொத்துகளுக்குச் சேதம் ஏற்பட்டது என்பதும் தெரியாது. இவற்றை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். போரில் சட்டம் பாதுகாக்கப்பட்டது அரசமைப்பு பாதுகாக்கப்பட்டது மனிதாபிமானம் பாதுகாக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

போரில் என்ன நடந்தது என்று நாம் தெரிந்துகொள்ளவேண்டும். வடக்கிலுள்ள தாய்மார்கள் இதைத்தான் கேட்கின்றனர். தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது, கணவர், சகோதரன் ஆகியோருக்கு என்ன நடந்தது என்றே அவர்கள் கேட்கின்றனர்.

போரில் நாம் எதிர்பாராதது நடக்கும். ஆனால், என்ன நடந்தது என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அதை மூடிமறைக்க முடியாது. எவர் மூடிமறைக்க முயற்சித்தாலும் அதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். உண்மை கண்டறியப்படவேண்டும். இன்று யாழ்ப்பாணத்திலுள்ள தாய்மார்கள் பதாகைகள் உயர ஏந்தியவாறு தமது பிள்ளை, கணவர், சகோதரர்களை மீட்டுத்தருமாறு கேட்கின்றனர். அந்த உரிமை அவர்களுக்கு உள்ளது. தமது உறவுகளுக்கு என்ன நடந்தது எனத் தெரிந்துகொள்ளும் உரிமை உள்ளது. எனவே, போரின் போது என்ன நடந்தது என்று தெரிந்துகொள்ளவேண்டும். என்ன நடந்தது என்று தெரியாவிட்டால், இந்த மக்களுக்கு நீங்கள் அதையே மீண்டும் செய்கிறீர்கள். இது எமக்கு நன்குகத் தெரியும். அதனால்தான் உண்மை கண்டறியப்படவேண்டும் என நாம் கூறுகின்றோம்.

இந்த உண்மையைக் கண்டறியும் பொறிமுறையானது உண்மையைக் கண்டறிவதாக மட்டுமே இருக்க வேண்டும். தண்டிக்கும் பொறிமுறையாக இருக்கக்கூடாது.

எமது நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நம்பிக்கை இல்லை. எமக்கும் இந்த நீதிமன்றக் கட்டமைப்பில் நம்பிக்கை இல்லை. அதனால் இந்த விடயத்தில் நாம் சிறந்த நீதிமன்றக் கட்டமைப்பை எமது நாட்டுக்குள் நிறுவி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எமது நாட்டின் பிரச்சினையை இந்தியாவோ, அமெரிக்காவோ, ஐ.நாவோ தீர்க்காது. எமது பிரச்சினையை இந்த நாடுகளும், ஐ.நாவும் தீர்க்கும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நம்புகிறதா? இவை அனைத்தும் தமது நலனைக் கருத்திற்கொண்டே செயற்படும்.

தமிழ் மக்களின் பிரச்சினையை இந்தியா ஒருபோதும் தீர்க்காது. இன்று இந்திய "றோ" உளவுப்பிரிவின் உளவு சேவையாக யாழ்ப்பாணம் உள்ளது. யாழ்ப்பாணத்தில் ஸ்திரத்தன்மை இல்லாது செய்ய "றோ" உளவுப்பிரிவு நடவடிக்கை எடுக்கிறது. இந்தியாவோ வடக்கில் அரசியல் முரண்பாட்டை ஏற்படுத்துகின்றது. புதிய அரசைக் கட்டியெழுப்புகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இதைப் பற்றி இங்கு கூறுவார்களா என்று தெரியவில்லை. இவ்வாறான நிலையில் தமிழரின் பிரச்சினையை இந்தியா தீர்க்காது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் நீடிப்பிலுள்ளது. இதை நீக்க இந்த அரசும் நடவடிக்கை எடுக்க வில்லை. வெலிக்கடை சிறையிலுள்ள ஒரு கைதியை நான் சந்தித்தேன். எதற்காக நீங்கள் கைதுசெய்யப்பட்டுள்ளீர்கள் என்று கேட்டேன். புலிகளின் அடையாள அட்டையை வைத்திருந்ததற்காக கைதுசெய்யப்பட்டேன் என்று அவர் கூறினார். – என்றார். (த–சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு/ காணி விற்பனைக்குண்டு

பண்டத்தரிப்பு கீரிமலை வீதியில் ஏழு பரப்புக் காணி இரண்டு வீடுகளுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 798 1995, 077 378 3305

## வாகனங்கள் விற்பனைக்கு

கொழும்பில் 26 (Sri) சிறி Asok Leyland லொறி மற்றும் GI-Dolphin Toyota hiace வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 730 7660

## (TIPER) டிப்பர்கள் தேவை

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள கற்குவாறி ஒன்றிற்கு டிப்பர் வாகனங்கள்(TIPER) தேவைப்படுகின்றன.

(65267) (14.15.16)

தொடர்பு: 077 237 5304 (டினேஸ்)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 34 வயதுடைய லண்டன் விசா உள்ள மணமகளுக்குத் தகுந்த மணமகன் தேவை. (லண்டன் விரும்பத்தக்கது)

தொடர்பு: 00 44 74 2409 7415(U.K)

(64475)(11,15,17)

## வேலையாள்கள் தேவை

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சைவ உணவகத்துக்கு வேலையாள்கள் தேவைப்படுகின்றனர். அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

- உணவு தயாரிப்பவர் (கோக்கி)
- ரொட்டி, தோசை, சிற்றுண்டி தயாரிப்பவர்
- தேநீர் தயாரிப்பவர்
- உணவு பரிமாறுபவர்
- சமையல் உதவியாளர்

தொடர்புக்கு: 077 421 3931, 077 446 4008

## இந்து வாலிபர் சங்கத்தில் கருத்தரங்கம் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.25

'விழுதுகளிலிருந்து வேர்களை நோக்கி' எனும் தலைப்பிலான கருத்தரங்கம் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க 'சமூகவெளி' படிப்பு வட்டத்தினரால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் ஆசிரியர், பத்திரிகையாளர், இலக்கிய விமர்சகர், மொழி பெயர்ப்பாளர் என பல்வேறுபட்ட ஆளுமையுடன் செயற்பட்ட ஏ.ஜே.கனகரத்தினாவின் அறியப்படாத ஆளுமை தொடர்பான கருத்தரங்கமே நடைபெறவுள்ளது. எனவே அனைவரையம் கலந்து கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஐ–ரி5)

## இன்று கோலாகலமான திறப்புவிழா

உ
சிவமயம்

ஆச்சி ஹொட் பூட் றெஸ் ரோரண்ட்

தனது புதிய கிளையை

இன்று (25.10.2015) ஞாயிற்றுக்கிழமை

காலை 9.00 - 10.30 வரையுள்ள

சுபமுகூர்த்த வேளையில்

147, பலாலி றோட், திருநெல்வேலியில்

திறந்துவைக்கவுள்ளது.

இந்த நிகழ்விற்கு எமது வாடிக்கையாளர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்பு: 021 222 5001

147, பலாலி றோட், திருநெல்வேலி

## புதிய ஊடக வகுப்புகள் ஆரம்பம்..... எதிர்வரும் 01.11.2015

" உரையாடல் என்பது பேச்சுக்கலையின் உச்ச நிலையாகும் நவீன போட்டி யுகத்தில் தொடர்பாடல் நுட்பமானது எல்லாத்துறை சார்ந்தவர்களுக்கும் அவசியமாகிறது. மிகப்பெரிய அறிவாளியாக இருந் தாலும் தன் எண்ணத்தை சரியாக வெளிப்படுத்த முடியாதவன் அறியப்படாதவனாகிறான்."

பத்திரிகை, வானொலி,தொலைக்காட்சி,திரைப்படத்துறைகளில் நீங்கள் சாதிக்க ஒரு அரிய வாய்ப்பு....!

- அறிவிப்பாளர்
- பத்திரிகையாளர்
- செய்தி தயாரிப்பாளர்
- இயக்குநர்
- ஒளிப்பதிவாளர்
- கதாசிரியன்

கனவு நனவாக, உங்களுக்கு முழுமையான பயிற்சிகளுடன் கூடிய கற்கைகள்.
29.10.2015 இற்கு முன்பு பதிவு செய்து கொள்ளுங்கள்
தகவல்களுக்கு

Institute of Fundamental Media Education
No- 149, Good Shed road, Vavuniya.
Face book- fmeinst
024 222 8090 / 077 280 9990

## வேலைவாய்ப்பு

உங்களுக்குப் பிடித்தவாறு அரச மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்புத் தகவல்களை வீட்டிலிருந்தவாறே SMS மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

DIALOG வாடிக்கையாளர்கள்
REG < இடைவெளி >JOBS என ரைப் செய்து 77 010 இற்கு SMS அனுப்புங்கள்.

(65265)(11,15,17)

## JOIN THE FASTEST GROWING BANK.



An opportunity to embark on a career in sales.

### Walk – in Interviews

**Northern / Eastern Province**
**On Saturday, 24th October 2015 from 9 a.m. to 12 noon**

### BUSINESS DEVELOPMENT OFFICERS

The job entails promoting the Bank's asset product portfolio which includes Personal Loans and Housing Loans.

The selected individuals will be placed within the Union Bank branch network and will be responsible to develop sales leads, cover a demarcated area and achieve the set targets for new customer acquisitions.

An attractive performance based incentive scheme will be available in addition to the basic salary.

**Requirements**

- Passion for sales.
- Flair for outdoor work.
- Be self motivated with a drive to succeed.
- Be GCE O/L or GCE A/L qualified.

Interviews will be held at

**Northern Province**
Zonal Office, Union Bank Colombo PLC, 1st floor, 398, Hospital Road, Jaffna.

**Eastern Province**
Union Bank of Colombo PLC, No.3, Station Road, Batticaloa.

Union Bank is one of Sri Lanka's leading Banks supported by the strength of TPG, the US based global private investment firm with US$74.3 billion in capital under management and an extensive global network with significant presence in Asia and Europe. With a solid foundation etched with financial stability and international know-how, Union Bank is amongst the top 5 private commercial banks in market capitalisation in Sri Lanka, offering a full range of products and services to personal and commercial financial sectors.

UNION BANK

Fitch BB+(lka). RAM BBB/P3 Union Bank of Colombo PLC is a licensed Commercial Bank supervised by the Central Bank of Sri Lanka.

Union Bank of Colombo PLC | Head Office: 64, Galle Road, Colombo 03. | www.unionb.com

## பதவி வெற்றிடங்கள்

இலங்கையில் முதல்தர காப்புறுதி நிறுவனம் தனது சேவையை விரிவுபடுத்தும்முகமாக கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வெற்றிடங்கள்**

I. விற்பனை முகாமையாளர்
II. நிதித் திட்டமிடும் உத்தியோகத்தர்
III. பகுதி நேர வேலை வாய்ப்பு (நிதி திட்டமிடல்)

**கல்வித் தகைமைகள்**

- க.பொ.த. சா/தரம் கணித பாடம் உட்பட (6) பாடங்களில் சித்தி
- வயது 25 - 50 வரை

**கொடுப்பனவு**

உதவி சம்பளம், மேலதிக படிகள், கொமிஷன், வெளிநாட்டுச் சுற்றுப் பயணம், மாதாந்த வெகுமதிகள்,உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சிகள்.

விண்ணப்பங்களை 01/11/2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம்: 5079,
C/O உதயன்,361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(64474)(11.15.16)

## SB Travels & Tours (Pvt) Ltd
### தேவை

கொழும்பில் இயங்கிவரும் பிரபல்யமான SB Travels and Tours Pvt Ltd இற்கு புதிதாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள Branch air ticketing office இற்கு

- Reservation executor தேவை. Ticketing system (அனுபவமுள்ள) தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. ஆண் or பெண் தேவை.

அத்துடன் Abacus system நன்கு தெரிந்தவர்கள் Ticketing issuing நன்கு தெரிந்த

- Ticketing executive supervisior தேவை.

உங்களுடைய bio data வை புகைப்படத்துடன் எமது email இற்கு அனுப்பவும்.

Email - sbtravels 216@ yahoo.com
sbtravels jaffna@ gmail.com
Tel.No - 021 222 9555, 0766 911 080 / 81
Address - No.216, Kasthuriyar Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீங்காத நினைவுகளோடு
ஐந்து ஆண்டுகள்....

[illegible]

பணம், சொத்து பெரிதென நினைத்து
பாசவேசம் போடும் உலகில் - உண்மை
அன்புக்கு உதாரணமான பெரியம்மாவே
என்றும் உங்கள் நினைவுகளோடு

அன்புப் பிள்ளைகள்....

# 31ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## செல்வி நிமாலினி வீரசிங்கம்

(பாப்பா)



தாயின் மடியில்
1972.04.11

ஆண்டவன் மடியில்
1984.10.25

எங்கள் அன்பு மகளே
உனை இழந்து இன்றுடன்
31 ஆண்டுகள் ஆனதம்மா - இன்று நீ
எம்முடன் இருந்திருந்தால்
எப்படி இருப்பாய் என்று எண்ணும்
போது
மனம் ஏங்கித் தவிக்குதம்மா
என் அன்புச் செல்வமே - உன்னை
பத்து மாதங்கள் தான் என்வயிற்றில்
சுமந்தேன்
ஆனால் இன்று என் உயிர்
உள்ளவரை
வேதனையில் சுமக்கின்றேன்

என்றும் உன் நினைவுகளுடன்
அப்பா, அம்மா
சகோதரர்கள், சகோதரிகள்

34/1, இராமநாதன் வீதி,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இறுதி அஞ்சலியும்

## KNIGHT
## ஜோசப் பிலேந்திரம்
(KNIGHT JOSEPH PILENDIRAM)



11.10.2015 இங்கிலாந்தில் காலமான ஜோசப் பிலேந்திரம் அவர்களின் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னார் AYLESBURY இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் பலாலி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக கொண்டவரும், காலஞ்சென்றவர்களான பிலேந்திரம்- ஞானதிக்கம் தம்பதியரின் பாசமிக்க மகனும், அசுந்தாவின் (ASUNTHA) அன்புக் கணவரும், அமால், ஷாமிளா, ஆறம் (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற லூட்ஸ் சந்தியாகோ மற்றும் ஜேன் பரோ (Australia) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிச்சடங்குகள் 26.10.2015 திங்கட்கிழமை பி.ப 2.00 மணிக்கு Our Lady of Lourdes Church, Bedgrove, Aylesbury, ENGLAND இல் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம இளைபாற்றிக்கான திருப்பலி நாளை (26.10.2015) திங்கட்கிழமை காலை 06.15 மணிக்கு நல்லூர், புனித ஆசீர்வாதப்பர் ஆலயத் தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி ஜேன் பரோ (Australia)
ஞா.ஜெயக்குமார் (U.K) 00447407832347
திருமதி லெ.ஷ்ரோமி(SriLanka) 0777 932729

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும், வீட்டுக் கிருத்தியஅழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி மஞ்சுளா (மஞ்சு) சிவராசா

நிஜமாய்
19.12.1965

நினைவாய்
25.09.2015

அம்மா!
எங்களுக்காகவே வாழ்ந்த
எங்கள் தெய்வம்....
வார்த்தைகள் இல்லை
உன்னைப்பற்றிச் சொல்ல..
என்றும் உன்னை எதிர்பார்த்து
பரிதவிக்கும் நெஞ்சோடு
வாழ்கிறோம் அம்மா!

எமது குடும்பத்தின் குலவிளக்கு அணைந்த செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவருக்கும், பற்பல வழிகளில் உதவிபுரிந்தோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் , துண்டுப்பிரசுரம் வெளியிட்டோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது இல்லத்தில் இன்று (25.10.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

"சிவமஞ்சகம்"
மீசாலை கிழக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.

# பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.25

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் சைவப் புலவர் பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரையும் கீரிமலை சிவபூமி மடாலய மண்டபம், சிவத் தமிழ்ச் செல்வி சைவப்புலவர் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அரங்கில் நடைபெற வுள்ளது. சைவப்புலவர் முத்துக் குமாரசாமி திருஞான சம்பந்த பிள்ளையின் தலைமையில் நடை பெறும் இந்த நிகழ்வில் பிரதமவிருந் தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இந்து நாகரிகத்துறைத் தலைவரும் பேராசிரியருமான மா.வேதநாதனும், சிறப்புவிருந்தின ராக தெல்லிப்பழை துர்க்கை அம் மன் தேவஸ்தானம், சிவபூமி அறக் கட்டளைத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுரு கனும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வானது மூன்று அமர்வுக ளாக நடைபெறவுள்ளதுடன் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

(ஐ-ரி-6)

# 31ஆம் நாள் நினைவலைகள்



## திருமதி தையலம்மா செல்லப்பா

தோற்றம்
21.06.1925

மறைவு
25.09.2015

என் அன்புத் தெய்வமே அம்மா
உங்கள் பிரிவை
தாங்கமுடியாமல் தவிக்கின்றேன்
அம்மா, அலை கடல் ஓய்ந்தாலும்
அம்மா உங்கள்
அன்புக் கடல் ஓயாது என் தாயே!!
என் அம்மா!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக் கின்றேன்

(64459)
(12.15.16)

J. மலர்(மகள்)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் இராசமணிகந்தையா

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.10.2015) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனிததீர்த்தக்கரையில் இடம்பெற்று அவரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 28.10.2015 புதன்கிழமை காலை 9.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அக்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகக் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும், பலவழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

(64418) (14,15.16)

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## வேலுப்பிள்ளை கனகராசா

பிறப்பிடம் : நயினாதீவு
வசிப்பிடம் : மட்டக்களப்பு
(ஓய்வு நிலை உதவிப் பதிவாளர் நாயகம் - வடக்கு கிழக்கு மாகாணம்)

தோற்றம்
1941-10-01

மறைவு
2015-09-27

நன்னெறியோடு வாழ்ந்து நல்வழிகாட்டி 27.09.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தெய்வத்தின் செய்தி அறிந்ததும் உடன் வந்து உதவிக்கரம் நீட்டியவர்களுக்கும், அன்பான ஆறுதல் வார்த்தைகள் கூறியவர்களுக்கும் தொடர்பூடகங்கள் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள், பதாகைகள், மலர்வளையங்கள் மூலம் தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியை, இரங்கல் உரை மற்றும் காடாற்றும் கிரியை என்பவற்றில் கலந்து கொண்டோருக்கும் மேலும் பல வழிகளிலும் உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

[illegible] வீதி,
மட்டக்களப்பு.
065 222 4495

நன்றியுடன்
(64161)(11,15) குடும்பத்தினர்.

# வணிக நிலையங்கள் இன்று திறந்திருக்கும்

சாவகச்சேரி,ஒக்.25

சாவகச்சேரி கைத் தொழில் வணிகர் மன்ற பிரிவுக்குட்பட்ட வணிக நிலையங்கள் தீபாவளி வியாபாரத் துக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை மற்றும் எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி , 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை களிலும் திறந்திருக்கு மென வணிகர் மன் றத் தலைவர் வ. ஸ்ரீபிரகாஸ் அறிவித் துள்ளார்.

(ஐ)

# கொண்டையா விடுதலை

கொண்டையா எனப் படும் துனேஷ் பிரிய ஷாந்த விடுதலை செய் யப்பட்டுள்ளார். கொட தெனியாவ பகுதியில் ஐந்து வயதுச் சிறுமி சேயா கொலை செய் யப்பட்ட வழக்கில் இவர் கைதாகி இருந்தார்.

குறித்த சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டி ருந்த கொண்டையா அந்த வழக்கில் இருந்து ஏற்கனவே விடுவிக் கப்பட்டார். எனினும் அவர் மீதுள்ள வேறு சில குற்றங்களுக்காக தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப் பட்டிருந்தார். இந்த நிலையில் கம்பஹா நீதவான் நீதிமன்றி னால் கொண்டையா நேற்றுப் பிணையில் விடுதலை செய்யப் பட்டுள்ளார்.

சந்தேகநபரான கொண் டையா நேற்று முன் தினம் மீண்டும் நீதி மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டவேளை கம்பஹா பிரதான நீதவான் டிகிரி. கே. ஜய திலக அவரைப் பிணை யில் விடுதலை செய் துள்ளமை குறிப்பிடத் தக்கது.

(த-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்துவ வெள்ளிவிழா அழைப்பு

## The Sacerdotal Silver Jubilee Invitation

செபமாலை மாதா துறவற சபையைச் சேர்ந்த

**அருட்பணி மனுவல் சவிரிமுத்து**



அடிகளாரின் பணிக்குருத்துவத்தின் 25ஆவது ஆண்டு நிறைவின் குருத்துவ வெள்ளிவிழா 31.10.2015 இல் நடைபெறுகின்றது. இவர் நெடுந்தீவு கிழக்கு மரியன்னை ஆலயத்தைச் சேர்ந்த மனுவேல் - பவுலீனம்மா தம்பதிகளின் தவப்புதல்வன் ஆவார். அடிகளாரின் இவ் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் எதிர்வரும் 31.10.2015 மாலை 5.00 மணிக்கு இலக்கம் 5, கோயில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் தனது வெள்ளிவிழா நன்றித் திருப்பலியை நிறைவேற்றுகின்றார். எனவே இத்திருப்பலியில் கலந்து கொண்டு அடிகளாரோடு சேர்ந்து இறைவனுக்கு நன்றி கூறி ஜெபிக்க அனைவரையும் அழைக்கின்றோம்.

செபமாலை தாசர் குடும்பம்

---

BRITISH COUNCIL

SUPPORTED BY HSBC

# YOUTH ENTERPRISE AWARDS

## Business Idea Contest

For Sri Lankan undergraduates, graduates, postgraduates and professionals aged 18 to 35 years, currently pursuing studies at universities, private higher education institutions, technical and vocational institutions and professional training bodies in Sri Lanka.

Applicants can send interests under the **agriculture, health and education** categories

## Awards

- The winning team will receive LKR 500,000
- First runner-up team will receive LKR 200,000
- Second runner-up team will receive LKR 100,000
- Two commending prizes of LKR 50,000 each

Registrations are now open.
**Application deadline extended to 30 October**

Please contact the British Council on 4521 577/ 4521 576 for more information.

www.britishcouncil.lk/yea

---

# எடுக்கவும் சூபர், கொடுக்கவும் லேசு பாருங்கோ!!




**HDFCLEASiNG**

அழையுங்கள் - 0115 73 73 73

---

## Jaftech Computer



நாம் வீடுகள் மற்றும் அலுவலகங்களுக்குச் சென்று அனைத்து வகையான கணினி மற்றும் கணினி வலையமைப்பு தொடர்பான பழுதுகளை நிவர்த்தி செய்கின்றோம்.

தொடர்புக்கு:
077 603 3650

---

## நாகபூஷணி திருமண சேவை

மணமகள்களுக்குப் பதிவுக் கட்டணம் இலவசம்.
25/10/2015 தொடக்கம் 31/10/2015 வரை.

மணமகள் தேவை (யாழ்.இந்து கௌரவ குடும்பம்)

1. 1984, 50 பாவம், 4இல் செவ்வாய் டாக்டருக்கும் (யாழ்)
2. 1985, 15 பாவம், செவ்வாயற்ற எஞ்சினியருக்கும் (யாழ்)
3. 1983, 30 பாவம், செவ்வாயற்ற அரச வங்கி மனேஜருக்கும் (யாழ்)
4. 1983, 25 பாவம், 7இல் செவ்வாய் எஞ்சினியருக்கும் (யாழ்)
5. 1986, 50 பாவம், செவ்வாயற்ற டாக்டருக்கும் (அமெரிக்கா)
6. 1985, 40 பாவம், செவ்வாயற்ற (சூரி/செவ்) எஞ்சினியருக்கும் (சிங்கப்பூர்)
7. 1982, 10 பாவம், செவ்வாயற்ற BSC MSC மனேஜருக்கும் (UK)

டாக்டர், எஞ்சினியர், அரச உத்தியோகத்தர், வங்கித் துறையினர், ஆசிரியர்கள், தனியார் துறையினர், உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் சாதகங்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளன. மிகப் பொருத்தமாக சாதகங்கள் உடன் தரப்படும்.

383/14B கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் கோவில் வடக்குப் பக்கம்)
021 222 9306, 021 320 9793, 077 138 7596, 075 554 6000
Email: nakapoosanywedding@gmail.com

குறிப்பு : எமக்கு வேறு கிளைகள் இல்லை, வாரத்தின் ஏழு நாள்களும் திறந்திருக்கும்

(64450)(11,15,17)

---




எசட்லைன் லீசிங் பிரைவேட் லிமிடட்
120, 120A, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல, மின்னத்தல் | info@assetline.lk

பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டியை **லீசிங் செய்துக்கொள்ள** அல்லது அவசரத்திற்கு முச்சக்கரவண்டியினை வைத்து **பணம் பெற்றுக்கொள்ள** வீடு போன்ற ஒரே இடம் எசட்லைன் ஆகும்.

- குறைந்த / இலகுவான ஆவணங்கள்
- மீள செலுத்துவதற்கு 4 வருடக்காலம் வழங்கப்படும்
- விரைவான லீசிங் வசதிகள்
- நாடளாவிய கிளை வலையமைப்புக்கள்

தவணைக் கட்டணத்தை செலுத்தக் கூடிய இடங்கள்

PEOPLE'S BANK

தொடர்புக்கு 0114 700 100

எசட்லைன்
தேசத்திற்கு ஓர் உந்துசக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டார் நாட்டிலுள்ள

ஏஞ்சினியரிங் கம்பனிக்கு

## உடனடி வேலைவாய்ப்பு

## 25 உதவியாளர்கள்

800Qrs / சம்பளம் : Rs.30,400/-

max adz

நியந்தனைகள் & சலுகைகள் :

- தங்குமிடம்,மருத்துவ வசதி,போக்குவரத்து வழங்கப்படும்.

இலவச உணவு கம்பனியால் வழங்கப்படும்

- 2 வருட ஒப்பந்தம் • வேலை நேரம் ஒரு நாளைக்கு 8 மணிநேரம் / வாரத்தில் 48 மணிநேரம்
- ஒரு நாள் லீவு வழங்கப்படும்.
- இரு வழி விமானச்சீட்டு வழங்கப்படும் ஒவ்வொரு 2 வருட சேவை முடிவின் பின்னர்.
- ஏனைய நியந்தனைகளும் நிதிமுறைகளும் கட்டார் நாட்டு தொழிலாளர் சட்டத்திற்கு அமைவானது.

INTERVIEW 28.10.2015

1 QRS = Rs.38.00

பாஸ்போட் உடன் கீழ்க்காணும் முகவரிக்கு விரைந்து வாருங்கள்

கடன்வசதி செய்து தரப்படும்

RODNEY FOREIGN EMPLOYMENT AGENCY LL.NO : 2427

ரொட்னி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

இல. 292B-2/1, ஹவ்லொக் றோட், கொழும்பு - 05.

Tel : 0112552598|072 720 0005 |0773074744



## போதனா ஆசிரியர்கள் தேவை

AIDE - ET - ACTION INTERNATIONAL SRI LANKA.

கீழ்வரும் போதனா ஆசிரியர் வேலை வெற்றிடமாக **யாழ்ப்பாணம்** மற்றும் **வவுனியா** மாவட்டங்களில் அமைந்துள்ள எமது தொழிற்கல்வி நிலையமான iLEAD (Intiative for Livelihood Education and Development ) இல் காணப்படுகின்றது

- **Computer Hardware Technician - NVQ Qualified**
  யாழ்ப்பாணம்,வவுனியா நிலையங்களிற்கு
- **Sales and Marketing** வவுனியா நிலையத்திற்கு

அனுபவமுள்ளவர்கள் தங்கள் தொடர்பு இலக்கத்துடன் கூடிய சுயவிபரக்கோவையை கீழ் வரும் முகவரிக்கு 02.11.2015 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும் (மின்னஞ்சலும் செய்யலாம்)

THE ADMINISTRATIVE OFFICER
23-1/1,Gregorys' Road,Dehiwala.
E-Mail : ilead.colombo@gmail.com

max adz



A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் உயர் கல்வியை தொடர்வதற்கான தரம் வாய்ந்த ஆங்கில கற்கை நெறிகள் ஆரம்பம்

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

120 Hours

சரளமாக பேச பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறி

## DIPLOMA IN ENGLISH

200 Hours

New Batches Start On :

B1 : 28-10-15 at 9.00 am
B2 : 28-10-15 at 2.00 pm
B3 : 31-10-15 at 9.00 am
B4 : 31-10-15 at 2.00 pm

Study IELTS at CIL & Get 6+ Band

## SPOKEN SINHALA CLASSES

BI : Sat & Sun - 9.30-11.30am B2 : Sat & Sun - 3.00 - 5.00pm

CIL Cambridge Institute of London
No : 17, 3rd Lane, பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம்.
(புதிய HNB, ராசி சில்க்ஸ் அருகாமையில்)
Tel : 021 2217774, 0777382108



Pinnacle DevelopmentCounsaltant (Pvt) Ltd.

## வேலையாள்கள் உடனடியாகத் தேவை

1) உப ஒப்பந்தகாரர்கள் பின்வரும் வேலைகளுக்குத் தேவை

| | | |
|---|---|---|
| 1. தச்சுவேலை | (Formwork) வரகடி | 45/= |
| 2. கொங்கிறிட் | கன அடி | 70/= |
| 3. கம்பி வேலை | 1Kg | 18/= |
| 4. செங்கல் வேலை | (9" சுவர்) கன அடி | 70/= |
| 5. செங்கல் வேலை | (4" சுவர்) கன அடி | 50/= |
| 6. பூச்சு வேலை | வரகடி | 40/= |

2) எமது நிறுவனத்துக்கு பின்வரும் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்.



1. மேசன்
2. தச்சு வேலை
3. கம்பிவேலையாள்கள்
4. கூலியாள்கள்
5. குழாய் பொருத்துநர்கள் (Plumbers)



உடனடியாகத் தொடர்புகொள்ளவும்
சிங்களம் 076 820 4531
தமிழ் 077 497 2756

(64487)(10.15.17)

இல.88, பலாலி வீதி, (கொமர்ஷல் வங்கி அருகில்) திருநெல்வேலி.


# விமல் கைது விவகாரத்தால் சபையில் வெடித்தது சர்ச்சை

கொழும்பு, ஒக். 25

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவின் பெயரும் ஹை பிரிட் (கலப்பு), நடத்தையும் ஹைபிரிட், கொள் கையும் ஹைபிரிட், கடவுச்சீட்டும் ஹைபிரிட், மேலும் சிலவும் ஹைபிரிட்தான். அவை பற்றிக் கேட்காதீர்கள் என்று நேற்றுமுன்தினம் சபையில் கூறினார் பிரதி அமைச்சர் அஜித் பி.பெரேரா.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கடவுச்சீட்டு விவகாரத்தால் கைதுசெய்யப்பட்ட விடயம் தொடர்பில் அஜித் பி.பெரேரா இவ்வாறு கருத்து வெளியிட்டதால் சபையில் நேற்றுப் பெரும் சர்ச்சை வெடித்தது.

விமலுக்கு ஆதரவாக எதிரணியிலுள்ள மஹிந்த ஆதரவுத் தரப்பினர் கூச்சலிட, அதற்கு எதிராக ஆளும் தரப்பினர் கூச்சலிட்டனர்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சபை ஒத்தி வைப்புவேளைப் பிரேரணை மீதான விவா தத்தில் உரையாற்றிய பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா-

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவுக்கு இரண்டு கடவுச்சீட்டுக்கள் இருக்கின்றன. இங்குள்ள அனைவருக்கும் ஒரு கடவுச்சீட்டுத்தான் இருக்கிறது. ஆனால், விமலுக்கு இரண்டு கடவுச் சீட்டுக்கள் இருக்கின்றன. இவர்தான் தற்போது ஹைபிரிட் (கலப்பு) பற்றிக் குறிப்பிட்டுக்கொண்டு வருகின்றார். எந்தப் பிரச்சினையையும் ஹைபிரிட் என்கிறார். இவருடைய கடவுச்சீட்டே ஹைபிரிட் தான்.

அதுமட்டுமல்ல, இவரது பெயரும்கூட ஹைபிரிட்தான். இளமைக்காலத்தில் இவரது பெயர் வேறு. அரசியலுக்கு வந்த பின்னர் வைத்துக் கொண்ட பெயர் வேறு. இவரது பெயர், நடத்தை, கொள்கை, கடவுச்சீட்டு உள்ளிட்ட மேலும் சிலவும் ஹைபிரிட்தான். அதைப்பற்றி என்னிடம் கேட்காதீர்கள்- என்று கூறினார்.

இதன்போது எதிர்த்தரப்பில் இருந்தவர்களும் ஆளும் தரப்பில் இருந்தவர்களும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். (த-சி)


### பதவி வெற்றிடம்

இலங்கையின் முதற்தர விவசாய தனியார் நிறுவனமாகிய கேலீஸ் (Hayleys Agriculture) தனது சேவையை வடமாகாணத்தில் விரிவுபடுத்தும் முகமாக களமேற்பார்வையாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- தகைமைகள்:- க.பொ.த.உ/தரம் சித்தி
- வயது எல்லை :- 20 -30 வரை
- சிங்களம் தெரிந்திருத்தல் நன்று.

விண்ணப்பங்களை எதிர்வரும் 30.10.2015 இற்கு முன்பாக கீழ்காணும் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

k.saseelan@hjs.hayleys.com 077 109 3071

(63268)(11.15.16)





## சிறி குமரன் ரெக்ஸ்

தித்திக்கும் தீபாவளியை சிறிகுமரன் ரெக்ஸ்சுடன் கொண்டாடுங்கள்

பல புத்தம் புதிய டிசைன்களில் எண்ணற்ற தெரிவுகளை மலிவாகவும், தரமாகவும் பெற்றிட

## சிறி குமரன் ரெக்ஸ்

விசேட விலைக் கழிவில் அனைத்து ஆடைகளும்

வாரத்தின் ஏழு நாள்களும் வியாபாரம் நடைபெறும்

இல.770, K.K.S. றோட், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

(C19613)(10.15.17)



### விற்பனைக்கு

புதிய HONDA ஜெனரேட்டர், 3000 W (3KG), யப்பான் உற்பத்தியானது.

(64498)(11.15.16) தொடர்பு: 077 512 3163



### தேவை

யாழ்.நகரில் உள்ள பிரபல கடை ஒன்றுக்கு ஆண், அல்லது பெண் O/L or A/L படித்த 18-35 வயதுக்குட்பட்ட வேலையாள் தேவை. (யாழ்.நகரை அண்டியவர்கள் விரும்பத்தக்கது.)

தொடர்பு:ராசிக் கிப்ட் சென்ரர், யாழ்ப்பாணம்.
077 790 5333 (64491)(11.15.16)



### அறைகள் வாடகைக்குண்டு

யாழ் நகருக்கு மிக அண்மையில் (A9) றோட் பஸ்ரியன் சந்தி இல.05 இல் மாதவாடகைக்கு அறைகள் உள்ளன.(பெண்களுக்கு மட்டும்)

தொடர்பு:
077 243 3938, 077 284 0793



### Fingerprint Door Lock Security System

உயர் நம்பகத் தன்மை!

அலுவலகங்கள் - Password enabled
கடைகள் - User Friendly
பணப் பெட்டகங்கள் - Modifications மற்றும்
இல்லங்களுக்கு - After Sale Service

ரூபா 25, 000 இல் இருந்து

தொடர்பு: 076 918 0642

(66483)(14.15.16)



### விநியோகஸ்தர்கள் தேவை

எமது நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்களான

* இனிப்பு வகைகளை விநியோகிப்பதற்கு கீழ் காணும் பிரதேசங்களுக்கு முகவர்கள் தேவை.

* யாழ்ப்பாணம்
* கிளிநொச்சி / முல்லைத் தீவு
* மன்னார்
* மட்டக்களப்பு

தொடர்பு :
4 Star Confectionery
22/3, Alwis Wathe
Hendala, Wattala
Tel- 077 873 2188



### THILEEP CIVIL CONSTRUCTION

நவீன முறையில் வீடுகள், வர்த்தக நிலையங்கள் கட்டிக் கொடுக்கப்படும்.

ரெறாசோ, கட் அன்ட் பினிஸ், ரைற்ரானியம் ஆகிய வேலைகள் சிறந்த முறையில் குறித்த காலத்தில் செய்து தரப்படும். (64473)(14.15.16)

தொடர்பு: 077 707 8229, 076 704 0214



### தேவை Travel Agent

சாவகச்சேரியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள Travel Agent காரியாலயத்துக்கு (Office)

ஆங்கில அறிவும்
Ticket System த்தில் (Sabre amadeus system)
தராதரமும் அனுபவமும் உள்ளவர்கள் தேவை.

உங்கள் Bio Data வை ,
sltravelagent.resume@gmail.com என்ற
Email இற்கு அனுப்பி வைக்கவும்.



### கணிய அளவீட்டாளர் தேவை Quantity Surveyor

வடமாகாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு கணிய அளவீட்டாளர் தேவைப்படுகிறார்.

1. கல்வித் தகைமை
   I. NCT GS / சம தகுதி
   II. MS Office / Excel போதிய அறிவு தேவை.
2. முதல் மூன்று மாத காலம் பயிற்சிக் காலமாக கருதப்பட்டு 75% மான நிர்ணயிக்கப்பட்ட சம்பளமே வழங்கப்படும். மிகுதிக் காலம் முழுமையான சம்பளம் வழங்கப்படும்.
3. சம்பளம்- திறமையின் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படும்.
4. வேலை நேரம்- 8.30 - 4.30 (பொதுவாக)
5. விடுமுறை வாரத்தில் - இரு நாள்கள் வழங்கப்படும். அவை சனி, ஞாயிறு தவிர்ந்த நாள்களாகவே வழங்கப்படும்.
6. வேலையின் தன்மை- வாரத்தின் பெரும்பாலான பகுதி அலுவலக வேலையாகவும் மீதம் கள வேலையாகவும் அமையும்.
7. வேலை அமைவிடம்- யாழ்ப்பாணம் உப அலுவலகத்துக்குரியது.
8. பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு:- நிர்வாக உத்தியோகத்தர்,
077 874 8314


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைகோர்த்துள்ள யமஹா–சிங்கர்

உலகின் முன்னணி வர்த்தக நாமங்களில் இரண்டான சிங்கர் மற்றும் யமஹா என்பன இலங்கையில் வர்த்தக பிரதிநிதித்துவர்களாக கைகோர்த்துள்ளனர். பல்வேறு வகை இசைக் கருவிகளின் தெரிவுகள் மற்றும் ஹோம் தியேட்டர் சிஸ்டம் (வீட்டுத் திரையரங்க முறை) என்பனவற்றின் விற்பனைக்காகவே இரு பிரதான நிறுவனங்களும் இணைந்துள்ளன.




இந்த மைல்கல் உடன்படிக்கையின் அமுலாக்கம் கொழும்பில் அண்மையில் கண்கவர் இசை நிகழ்வொன்றுடன் தொடக்கிவைக்கப்பட்டது.

யமஹா இசை நிலையத்தின் இசைக் கருவிகளையும் ஹோம் தியேட்டர் சிஸ்டம்களையும் எதிர்வரும் காலங்களில் சிங்கர் மெகா மூலம் பெற்றுக் கொள்ள முடியும். இலங்கையில் கடந்த 93 வருடங்களாக யமஹா வர்த்தக முத்திரைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் யமஹா இசை நிலையம் செயற்பட்டு வருகின்றது.

இதன் தொடராக யமஹா கீபோர்ட்டுகள், கிட்டார்கள், ரெக்கோடர் மற்றும் ஹோம் தியேட்டர் சிஸ்டம்களையும் இலங்கையில் உள்ள 16 சிங்கர் மெகா விற்பனைக் காட்சியறைகளில் பெற்றுக் கொள்ள முடியும். தரம் வாய்ந்த இசைக் கருவிகளை நாடி நிற்கும் மாணவர்களுக்கும் இசை ஆர்வலர்களுக்கும் இது பெரும் வசதியாக அமையும்.

2015 ஒக்ரோபர் 1 வியாழக்கிழமை முதல் இந்த இணைவாக்கம் அமுலுக்கு வந்துள்ளது. சிங்கர் மெகா காட்சியறையில் உள்ள ஊழியர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்க ஜப்பானில் இருந்து இரண்டு யமஹா நிபுணர்களும் இங்கு வருகை தந்திருந்தனர். சிங்கர் காட்சியறைகளில் நிறுவப்பட்டுள்ள யமஹா கூடங்களின் அங்குரார்ப்பண நிகழ்விலும் அவர்கள் பங்கேற்றனர்.

இந்த வைபவத்தில் உரை நிகழ்த்திய சிங்கர் ஸ்ரீலங்காவின் சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தகப் பணிப்பாளர் மகேஷ் விஜேவர்தன, யமஹா போன்ற தரம் வாய்ந்த இசைக் கருவி விற்பனைகளில் பங்காளியாக இணைந்து கொள்கின்றமை குறித்து தமது நிறுவனம் மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார். அதன் உற்பத்தி தரம் காரணமாக இன்று இலங்கையில் பலராலும் விரும்பப்படும் ஒரு உற்பத்தியாக அது திகழுகின்றது. மக்களின் இந்த விருப்புக்கு யமஹா இசை நிலையத்தின் ஆற்றலும் ஒரு காரணம் என்று அவர் கூறினார்.

யமஹாவின் கல்விசார் தொடர் கீபோர்ட்டுகள், ஒலிசம்பந்தமான கிடார்கள், பிரவேச நிலை சொப்ரானோ ரெகோடர்கள் என்பனவே ஆரம்பக் கட்டமாக சிங்கர் காட்சியறைகளில் விற்பனைக்கு வைக்கப்படும். இவை பெரும்பாலும் பாடசாலை மாணவர்களின் தேவையோடு தொடர்புடையவை. அத்தோடு ஹோம் தியேட்டர் சிஸ்டம்களையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

'சிங்கர் ஸ்ரீலங்காவுடனான எமது ஒத்துழைப்பு எமது விற்பனையைக் கணிசமாக வலுவடையச் செய்யும். உற்பத்தித் தரம் மற்றும் தொழில்நுட்பத் தரம் மிக்க யமஹா இசைக் கருவிகள் மற்றும் ஹோம் தியேட்டர் சிஸ்டம் உற்பத்திகளையும் ஆர்வம் மிக்க பெருந்தொகையானவர்கள் பெற்றுக் கொள்ள முடியும்' என்று தெரிவித்த யமஹா இசை நிலையத்தின் பணிப்பாளர் ரஜீவ் கதிரமன்புள்ளே. 'இந்த இணைவாக்கம் எமக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது' என்று மேலும் கூறினார். (த)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை காலமும், மழலைகளின் நோய்களும்



மழைகாலம் தொடங்கி விட்டது. இதனால் நோய் நொடிகளும் இலகுவில் குழந்தைகளை அணுகத் தொடங்கிவிடும். நாம் கவனமாக இருப்பதன் மூலம் அவற்றிலிருந்து குழந் தைகளைக் காப்பாற்றலாம். மழை காலங் களில் ஏற்படக் கூடிய பொதுவான நோய்கள் பின்வருபவையாகும்.

1. தடிமனும், சளிக்காய்ச்சலும்
2. தொண்டை முளை அழற்சி
3. நியூமோனியா
4. வயிற்றுளைவும், வயிற்றோட்டமும்
5. சாதாரண வைரசுக் காய்ச்சல்
6. டெங்குக் காய்ச்சல்
7. தோற்புண்கள்
8. நீர்ச்சிரங்கு
9. முட்டு வருத்தம் (ஆஸ்துமா)
10. விஷ ஜந்துங்களின் கடி

மழை காலங்களில் காணப்படும் வெப்ப நிலை மாற்றங்களும், அதிக ஈரப்பதனும் ஈரலிப்பான. சூழல் சுவாசத் தொகுதியைப் பாதிக்கக் கூடிய வைரசுக்களினதும், பக்ரீறியாக்களினதும் வளர்ச்சிக்கு ஏதுவாகின்றன. சுவாசத் தொற்று ஒருவருக்கு ஏற்படுகையில் அது இருமும் போதும், தும்மும்போதும் காற்றின் மூலமாக இலகுவில் மற்றவர்களுக்கும் பரவிவிடும்.

நீர், உணவு போன்றவற்றால் பரவக் கூடிய வயிற்றோட்டம் போன்ற நோய்களும், மழை காலங்களில் அதிகளவில் நீர் மாசடைவதன் மூலம் பரவக் கூடும். அதேபோல் வீட்டுச் சூழலில் நீர் தேங்குவதன் மூலம் நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டு டெங்கு நோய் அதிகமாகப் பரவலாம்.

சிறுவர்களுக்கும், குழந்தைகளுக்கும் நீர் நிலைகளில் விளையாடுவது விருப்பமான ஒன்றாகும். அதனால் தோல்கள் ஈரலிப்பாக இருப்பதால் நீர்ச்சிரங்கும், தோற்புண்களும் அதிகமாக ஏற்படலாம்.

இவற்றைவிட தொற்றா நோயான முட்டு (இழைப்பு) வருத்தமும் குளிரான கால நிலை காரணமாகவும், தடிமன், சளிக் காய்ச்சல் என்பன அடிக்கடி ஏற்படுவதாலும் ஏற்படலாம்.

எனவே நாம் எமது குழந்தைகளை இவ் வகையான நோய்களிலிருந்து எவ்வாறு பாதுகாக்கலாம் எனப் பார்ப்போம். எளிமையான சில பாதுகாப்பு முறைகளால் அடிக்கடி ஏற்படும், பாதிப்பை உண்டாக்கக் கூடிய நோய்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கலாம்.

1. ஒழுங்கான முறைப்படி, சவர்க்காரம் கொண்டுகைகளைக் கழுவுதல் வேண்டும். குறிப்பாக உணவு சமைக்க முன்னரும், உட்கொள்ள முன்னரும், மலசல கூடத்துக் குச் சென்ற பின்னரும், இருமல் தும்மலின் பின்னரும் இதைப் பின்பற்ற வேண்டும். அதை விடப்பெரியவர்கள் வெளியே சென்று வீடு திரும்பியவுடன் கைகளைக் கழுவியபின்னரே குழந்தைகளைத் தூக்கவும் பராமரிக்கவும்வேண்டும்.



2. இருமும்போதும் தும்மும்போதும் ரிசுத் தாள்களை (Tissues) பாவிப்பதுடன், அவற்றைப் பாதுகாப்பாகக் குப்பைத் தொட்டியில் போட வேண்டும். கைக்குட்டையைப் பாவிப்பதாயின் அதைக் கழுவிப் பாவிக்க வேண்டும்.

3. இயன்றவரை குழந்தைகளை இருமல், தடிமன் உள்ளோர் பராமரிப்பதைத் தவிர்க்க வேண்டும். அதைத் தவிர்க்க முடியாவிடின், வாயையும், மூக்கையும் மூடக் கூடியவாறு முகமூடி (Mask) அல்லது கைக்குட்டையைப் பாவிக்கலாம்.



4. வீட்டிலுள்ள ஒருவருக்குத் தொற்று நோய் ஒன்று ஏற்படின், அவர் பாவிக்கும் துவாய், சவர்க்காரம், பாத்திரங்கள் போன்றவற்றை ஏனையோர் பாவிக்கக் கூடாது. குறிப்பாகக் குழந்தைகளுக்கெனத் தனியாகபொருள்களை என் றும் வைத்துக் கொள்வது நல்லது.

5. வீட்டை எப்போதும் துப்புரவாக வைத்திருக்கவேண்டும். மேசை, கதிரை, கட்டில், பாத்திரங்கள் என்பனவற்றைத் துப்புரவாக வைத்திருப்பதுடன், வீட்டினுள் தூசி, சிலந்திவலை போன்றன இல்லாமலும் வைத்திருக்க வேண்டும்.

6. வீட்டுச் சூழலில் நீர்தேங்கக் கூடிய சிரட்டைகள், யோக்கட் கோப்பைகள், வெற்றுரின்கள், போத்தல்கள், குரும்பைகள், ரயர்கள் போன்ற நுளம்பு பெருகக் கூடிய பொருள்களை அகற்றிச் சூழலைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். மேலும் நுளம்புக் கடியிலிருந்து பாதுகாக்க நுளம்பு வலை போன்றவற்றைப் பாவித்து நுளம்புக் கடியிலிருந்தும் பாதுகாக்க வேண்டும்.

7. கொதித்தாறிய நீரைப் பருகுவதுடன், குளோரினிடப்பட்ட கிணற்று நீரையே பாவிக்க வேண்டும்.

8. மழை காலங்களில் ஈக்கள் அதிகமாகப் பரவுவதால், கழிவுகளை முறைப்படி அகற்ற வேண்டும். ஈ மொய்க்காதவாறு உணவுப் பொருள்களை மூடி வைக்க வேண்டும்.

9. குழந்தைகளின் மலசலங்களை மலசல கூடத்தில் இட்டு அகற்ற வேண்டும். அல்லது முறைப்படி அவற்றைக் குழியிலிட்டுப் புதைத்தோ எரித்தோ விட வேண்டும்.

10. இயன்றவரை குழந்தைகளை சன நெருக்கடியான இடங்களுக்குக் கொண்டு செல்வதைத் தவிர்க்க வேண்டும். அதே

> சிறுவர்களுக்கும், குழந்தைகளுக்கும் நீர் நிலைகளில் விளையாடுவது விருப்பமாகும். அதனால் தோல்கள் ஈரலிப்பாக இருப்பதால் நீர்ச் சிரங்கும், தோற்புண்களும் அதிகமாக ஏற்படலாம். இவற்றைவிட தொற்றா நோயான முட்டு (இழைப்பு) வருத்தமும் குளிரான கால நிலை காரணமாகவும், தடிமன், சளிக் காய்ச்சல் என்பன அடிக்கடி ஏற்படுவதாலும் ஏற்படலாம்.

போல் நோயுற்றவர்கள் நோய் சுகமாகும் வரை பாடசாலைக்கோ அல்லது வேலைக்கோ செல்வதைத் தவிர்ப்பதுடன், தகுந்த சிகிச்சை பெறவேண்டும். இதன் மூலம் மற்றையோருக்கும் நோய் பரவுவதைத் தடுக்கலாம்.

மேற்குறிப்பிட்ட சில எளிய பாதுகாப்பு முறைகளைவிட குழந்தைகளைப் பொறுத்தவரையில், நோய்த் தொற்றுக்களுக்கு எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க ஊட்டச்சத்துள்ள உணவுகளை வழங்குவதுடன், (குறிப்பாக நோயுற்ற வேளையில்) இயன்றவரை தாய்ப்பாலூட்டலைக் கைக்குழந்தைகளுக்குத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். மேலும், தகுந்த காலங்களில் தடுப்பு மருந்து ஊசிகளைக் குழந்தைகளுக்கு வழங்குவதன் மூலமும், அவர்களை நோய்களிலிருந்து பாதுகாக்கலாம். மேற்குறிப்பிட்ட பல விடயங்கள் எம்மில் பலருக்குத் தெரியுமாயினும், அலட்சியம் காரணமாக அவற்றை நாம் பின்பற்றுவதில்லை. குழந்தைக்கு நோய் வந்தபின் நாம் எடுக்கும் அக்கறையைப் போல், அந்த நோய் வராமல் பாதுகாக்க அக்கறை கொள்வதில்லை. குறைந்த பட்சம், நோய் பரவும் காலங்களிலாவது மேற்குறிப்பிட்ட பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றலாம் அல்லவா?

Dr ந.ஸ்ரீசரவணபவானந்தன்
குழந்தை நல வைத்திய நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலையில் அருள்மழை பொழிந்து வரும் கைவிடப்பட்டோரின் காவலர் புனித யூதாததேயு

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர் – யாழ்.பல்கலைக்கழகம்



**கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் திருவிழா ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி இளவாலையில் கொண்டாடப்படுவதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது**

கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் திருவிழா ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. எல்லா ஆலயங்களிலும் இதே தினத்தில் இந்தத் திருவிழா கொண்டாடப்படுவதில்லை என்றாலும், சுதுமலை – இளவாலை – கிளிநொச்சி – கனகபுரம் – செல்வபுரம் – அரியாலை – தேற்றாதீவு, மட்டக்களப்பு – இந்திகொல, கொழும்பு ஆகிய இடங்களில் கைவிடப்பட்வர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயு கைவிடப்பட்ட நிலையில் இருப்போர்க்கு அருள் வரங்களை வழங்கி வருகிறார்.

கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் பக்தி இலங்கையில் நீண்ட காலத்துக்கு முன்னரே அறிமுகப்படுத்தப்;பட்டிருந்தாலும், இன்னும் வளருகின்ற ஒரு பக்தியாகவே உள்ளது. தேற்றாதீவு, மட்டக்களப்பு மறைமாவட்டம், – இந்திகொல, கொழும்புமறைமாவட்டம் –அரியாலை, யாழ்ப்பாண மறைமாவட்டம் ஆகியமறைமாவட்ட யாத்திரைத்தலங்கள் இலங்கையில் பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலங்களாக உள்ளன.

1971ஆம் ஆண்டு முதல் யாழ் நகரின் நுழைவாயிலில் அமர்ந்திருந்து அருள்பாலிக்கும் அரியாலை, புனித யூதாததேயு ஆலயம் கொடிய போரின்போது மோசமாகத் தாக்கப்பட்டிருப்பினும் இப்போதுகட்டிஎழுப்பப்பட்டுபுதுப்பொலிவுடன்பக்தர்களுக்குக் காட்சி தந்து அருள் பாலித்து வருகிறது. நீண்ட காலமாகப் பெரும் புகழ் பெற்று விளங்கி வந்த அரியாலை புனித யூதாததேயு யாத்திரைத்தலம் போரின் பின்னர் இப்போது தான் அதிக பக்தர்களைத் தன்பால் ஈர்க்கத்தெடங்கியுள்ளது எனலாம்.

ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி விழாக்கொண்டாடும் இளவாலை புனித யூதாததேயு ஆலயம் தனக்கென ஒரு தனிச்சிறப்புப் பெற்றது. 1976ஆம் ஆண்டு முதல் புனித யூதாததேயுவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்தக் கிராமம் இளவாலை மேற்கு என அழைக்கப்பட்ட தன் பெயரை இளவாலை சென் யூட் என மாற்றி அழைக்கப்படும் அளவுக்குப் புனித யூதாததேயுவோடு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரைக்கான தகவல்களை இளவாலை சென் யூட் என அழைக்கப்படும் மேற்படி தலத்தின் முதற் குருவான எஸ்.ஏ.ஜோர்ஜ் அடிகளார் வழங்கிய குறிப்புக்களில் இருந்தும், அமரர் ஆசீர்வாதம் ஞானப்பிரகாசம் அவர்களின் அமரத்துவ 10ஆவது ஆண்டுநிறைவுநினைவு மலரில் குறிப்பாக மண்ணின் மைந்தன் க.பேர்ணாட் – ஊரவன் என்பவர் எழுதிய பிரகாசிக்கும் அணையா விளக்கு என்னும் ஆக்கத்தில் இருந்தும் பெற்றுக்கொண்டோம்.

முழுக்க முழுக்க கத்தோலிக்க மக்களைக் கொண்ட இந்தக் கிராமத்தின் திருப்பு முனையாகவும், திசைகாட்டும் வழிகாட்டியாகவும் புனித யூதாததேயு ஆலய உருவாக்கம் அமைந்துள்ளது. புனித யூதாததேயு ஆலய உருவாக்கத்துக்கு அமரரான அன்ரன் இராஜநாயகம் அடிகளாரும், அமரரான ஆசீர்வாதம் ஞானப்பிரகாசம் அவர்களும் முக்கிய பங்கு வகித்துள்ளனர். இன்று அபரிமித வளர்ச்சி கண்டு பட்டதாரிகள் – ஆசிரியர்கள் – அரச உத்தியோகத்தர்கள் – கலைஞர்கள் – குறிப்பிடத்தக்கவசதிபடைத்தோர் எனப்பலதரப்பட்டவர்களுடன் சீரோடும் சிறப்போடும் இருக்கும் இந்தக்கிராமம் ஏறக்குறைய 39 ஆண்டுகளுக்கு முன்னர் பின்தங்கிய கிராமமாக இருந்தது. இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் ஏற்கனவே பெயருக்கு வரையறுக்கப்பட்ட சில சடங்குகள் மட்டுமே இடம் பெற்றுவந்த நிலையில் அங்கிருந்து பிரிந்து புனித யூதாததேயு ஆலயப்பங்கு மக்களாக மாறி புதிய ஆலயம் அமைக்கும் முயற்சிகள் தொடங்கின என 'பிரகாசிக்கும் அணையா விளக்கு' என்னும் ஆக்கத்தில் க.பேர்ணாட் – ஊரவன் தெரிவிக்கிறார்.

புனித யூதாததேயு ஆலய உருவாக்கத்துக்கு அமரரான அன்ரன் இராஜநாயகம் அடிகளார் தலைமையில் அமரரான ஆசீர்வாதம் ஞானப்பிரகாசமும் அவரது குழவினரும், மறைந்த முன்னாள் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையைச் சந்தித்து முடிவுகளை மேற்கொண்டு – கத்தோலிக்க திருச்சபைக்குச் சொந்தமான – முன்னொரு காலத்தில் புனித ஹெ,ன்றியரசர் கல்லுரியின் விளையாட்டு மைதானமாக விளங்கி.ய – அமரர் ஆசீர்வாதம் ஞானப்பிரகாசம் அவர்களின் வீட்டுக்கருகில் இருந்த காணியில் 1976 ஆம் ஆண்டு பங்குனி மாதம் இயேசு உயிர்த்த தினத்தன்று புதிய புனித யூதாததேயு ஆலயத்துக்கான அடிக்கல்லை நாட்டினர். சிற்றாலயம் ஒன்று அமைக்கப்பட்டு, 1976ஆம் ஆண்டு வைகாசி மாதம் 2ஆம் திகதி புனித யூதாததேயு திருவிழா முதன் முதலில் கொண்டாடப்பட்டது. நிரந்தர ஆலயம் அமைக்கும் பணி உடனேயே ஆரம்பிக்கப்பட்டு, ஓராண்டு நிறை வடைவதற்கு முன்னதாகவே, அந்த ஆலயத்தின் நிறைவுற்ற பகுதியில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

புனித யூதாததேயு பங்கு புது எழுச்சி பெற்று கல்வி, கலை, கலாசாரம் பண்பாடு என்பவற்றில் வளர்ந்து ஒரு முன்மாதிரியான பங்காகத் திகழ வேண்டும் எனக் கனவு கண்ட அமரரான அன்ரன் இராஜநாயகம் அடிகளார் மற்றும் அமரரான ஆசீர்வாதம் ஞானப்பிரகாசம் ஆகி யோரின் கனவு இன்று நனவாகி உள்ளது. புனித யூதாததேயு பங்குக்கு பல குருக்கள், கன்னியர் பணியாற்றிச் சென்றுள்ளனர். இவர்களில் அன்று இங்கு உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றி, இன்று யாழ் மறை மாவட்ட ஆயராக நியமனம் பெற்றிருக்கும் மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்கப்படுகிறார். இவரது வழிகாட்டலிலேயே எஸ்.ஏ.ஜோர்ஜ் அடிகளார், புனித யூதாததேயு பங்கின் முதற் குருவாகிப் பணியாற்றி வருகிறார். இன்று புனித ஹென்றியரசர் கல்லூரியின் பல சாதனைகளுக்குப் புனித யூதாததேயு பங்கு உரிமை பாராட்டும் அளவுக்கு வளர்ந்துள்ளது என்றால், அதற்கு அமரரான அன்ரன் இராஜநாயகம் அடிகளார் மற்றும் அமரரான ஆசீர்வாதம் ஞானப்பிரகாசம் ஆகியோர்தான் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இளவாளை புனித யூதாததேயுவு பங்கு அருளிலும், ஆன்மிகத்திலும் அறிவிலும் ஆற்றலிலும் மென்மேலும் வளர்ந்து சிறக்க இறையாசிர் வேண்டுவோம்.

கைவிடப்பட்வர்களின் பாதுகாவலர் என அழைக்கப்படும் புனித யூதாததேயுவின் அருள், துன்பத்தில் – வேதனையில் – தனிமையில் – விரக்தியில் வாழும் தமிழ் மக்கள் அனைவருக்கும் நிறைவாகக் கிடைப்பதாக. குறிப்பாக இன்று எவர் சொல்லையும் கேட்காமல் – ஏனோதானோ என்ற போக்கில் வாழ்ந்து – எல்லோராலும் விமர்சிக்கப்பட்டு – எல்லோராலும் பேசப்பட்டு – எல்லோரது வெறுப்பையும் பெற்று கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் இளைய சமுதாயத்தின் மேல் கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரின் அருள் நிறைவாகக் கிடைப்பதாக.

புனித யூதாததேயுவின் வாழ்வையும் பணியையும் அறிந்து அவரது அருளைப் பெற அவரின் வாழ்வு எமக்கு மேல் வரிச்சட்டமாகும். புனித யூதாததேயு இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரர் என்பது நற்செய்தியும், பாரம்பரியமும் சொல்லுகின்ற உண்மையாகும். அதாவது இவர் குளோப்பாவினதும் இயேசுவின் தாய் மரியாவின் சகோதரியுமாகிய மரியாவினது, மகனாவார். சின்ன யாக்கோபு – சீமோன் – யோசே ஆகியோரின் சகோதரர் ஆவார்.

திருக்குடும்பமாகிய இயேசு, மரியா, யோசேப்பு ஆகியோரின் இரத்த உறவினரான யூதாததேயு இயேசுவின் சிறுபராய நண்பர் ஆவார். இளமைப்பருவத்தில் இயேசுவோடு உண்டு, அன்போடு உறவாடிய ஒருவர். இவர் எப்போது எவ்வாறு இயேசுவின் திருத்தூதர் ஆனார் என்பது தெரியவில்லை. நற்செய்திகளிலே திருத்தூதர்களின் பெயர்ப்பட்டியல் சொல்லப்படு முன்னர் புனித யூதாவைப் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால் இயேசுவின் பன்னிரெண்டு திருத்தூதர்களுள், யூதாததேயுவும் ஒருவர் என்று நற்செய்தி ஆசிரியர்களான மத்தேயு, (10–33) மாற்கு, (03–11) ஆகியோர் ஆணித்தரமாக சொல்லுகின்றனர்.

இரவு உணவின் பின் தம்மை அன்பு செய்பவருக்கு வெளிப்படுத்துவேன் என இயேசு கூறியபோது, புனித யூதா ஏன் உலகுக்கு வெளிப்படுத்தவில்லை என்று இயேசுவிடம் கேள்வி கேட்டார் (யோவான் 14:22). புனித யூதா எழுதியதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட யூதா எழுதிய திருமுகத்தை வேதாகமஏடுகளில் காணலாம். புனித யூதாததேயு இயேசுவின் நெருங்கிய உறவினராய் இருந்த போதிலும், தாம் எழுதிய திருமுகத்தில் தமது தாழ்மையின் நிமித்தம் தந்தையாம் கடவுளால் அழைக்கப்பெற்று அவரது அன்பிலும் இயேசுக்கிறிஸ்துவின் பாதுகாப்பிலும் வாழ்வோருக்கு இயேசுக்கிறிஸ்துவின் பணியாளனும் யாக்கோப்பின் சகோதரருமாகிய யூதா எழுதுவது என்றே ஆரம்பிக்கிறார்.

சிரிய மொழியில் ததேயுஸ் என்றால் 'புகழ்ச்சி அல்லது விசுவாசத்தை அறிக்கையிடல்' என்ற கருத்தையும் – யூதா என்ற சொல்லைக் குறித்து நிற்கின்ற லெபாயுஸ் என்ற எபிரேய சொல் 'புரிந்து கொள்ளும் மனிதர்' என்ற கருத்தையும் – லெப் என்ற கிரேக்க சொல் 'இதயம்' என்ற கருத்தையும் குறித்து நிற்கின்றது. சிரிய மொழியில் கபடமற்றவர் – சாந்தமும் அன்பும் உடையவர் என்ற பொருள் படுகிறது.

புனித யூதாததேயு கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர் என அழைக்கப்படுகிறார். மொசப்பத்தோமியாவில் நற்செய்தி அறிவித்த யூதாததேயு அங்கிருந்து பேர்சியா செல்ல நேர்ந்தது என்றும், அங்கேயே அவர் வேதசாட்சியாக மரணம் அடைந்தார் என்றும் மேற்கத்தைய வேத சாட்சிகளின் வரலாறு கூறுகிறது. அவரை அறிவு மயங்கும் வரை அடித்து, அவரின் தலையை ஒரு கோடரி கொண்டு வெட்டினார்கள் என்றும், இதனாலேயே ஒரு தடியைத் தாங்கியவராக புனித யூதாததேயு சித்தரிக்கப்படுகிறார் என்றும் சொல்லப்பட்டது.

பேர்சியாவில் ஆர்ற் என்ற இடத்தில் நற்செய்தி அறிவித்துக்கொண்டிருந்தபோது, அம்புகளால் தைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்று பஸில் பேரரசனின் 'புனிதர்களின் பட்டியல்' நூல் கூறுகிறது. அவர் அங்கே சிலுவையில் கட்டப்பட்டு அம்புகளால் எய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். ஆர்மீனியர்களின் பெரு வணக்கத்திற்குரிய புனிதராக இவர் விளங்குகிறார். கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் திருச்சொருபத்தைப் பார்க்கும் போதெல்லாம், அவர் கையில் வைத்திருக்கும் தடியைக் கொண்டு அவர் அறிவு மயங்கும் வரை அடித்து அவரின் தலையை ஒரு கோடரி கொண்டு வெட்டினார்கள் என்றும், இதனாலேயே ஒரு தடியைத் தாங்கியவராக புனித யூதாததேயு சித்திரிக்கப்படுகிறார் என்பதையும், இதனாலேயே இவர் வேத சாட்சியாக மரித்தார் என்பதையும் நினைவிற் கொள்வோம்.

உலகில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளவர்கள், கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர் என அழைக்கப்படும் புனித யூதாததேயுவின் அருளைத்தம் துன்பத்திலும் – வேதனையிலும் – தனிமையிலும் – விரக்தியிலும் பெற்று உறுதி உடன் வாழ புனித யூதாததேயுவின் அருள் நிறைவாகக் கிடைப்பதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் உயர்த்தும் கரங்கள் திட்டத்தின் கீழ் வேலணையைச் சேர்ந்த தந்தையை இழந்த மாணவன் ஒருவரின் மருத்துவ உதவிக்காக 20 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டது. (ஐ)



சுதுமலை தெற்கு எச்சாட்டி நாவலர் முன்பள்ளியின் சிறுவர் தின விழாவும், ஆசிரியர் கௌரவிப்பும் முன்பள்ளி மைதானத்தில் நிலைய தலைவர் இரா.பேரின்பநாயகம் தலைமையில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டதுடன் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் அதிபர் எஸ்.பேரின்ப நாயகம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (ஐ-86)



உலக உளநல தினம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தயாளன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்தியசாலை குருந்தம் சிகிச்சைப் பிரிவின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி திருமதி அ. வினோதா, யாழ்.மாவட்ட மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர், மற்றும் உள சமூக பணியாளருமான எஸ்.இரவீந்திரன், உளவள துணையாளர் திருமதி தி.சிவானந்தம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-9)




வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் அதிபர் செல்வி உமா இராசையாவின் மணி விழா நிகழ்வு வவுனியா கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. (ஐ)



உலக முதியோர் தினத்தை முன்னிட்டு கைதடி லயன்ஸ் கழகத்தால் கைதடி சாந்தி நிலையத்தில் தங்கியுள்ள 84 முதியோர்களுக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (ஐ-9)




வவுனியா பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வவுனியா சேமமடு சண்முகாநந்தா மகாவித்தியாலயத்தில் சிறுவர், முதியோர், விசேட தேவைக் குட்டப்பட்டோர் தினம் பாடசாலை அதிபர் [illegible] நிகழ்வில் முதியோருக்கு லயன்ஸ் கழக[illegible] வழங்கப்பட்டதுடன், சிறுவர்களின் கலை நிகழ்வுகளும், விசேட தேவைக்குட்பட்டோரின் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ)




சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் முதியோர் தின நிகழ்வுகள் தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் அனுஷ்டிக்கப்பட்டன. கழகத் தலைவர் லயன் பு.டினேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக முதியோர் பராமரிப்புப் பிரிவு மாவட்டத் தலைவர் லயன் சுந்தரேசன் கலந்து கொண்டார். கழகத்தின் சார்பில் முதியோர்களுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா மாவட்டத்தில் வசிக்கும் வசதிகுறைந்த குடும்பங்களுக்கு வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா. குறித்து ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சிறுகைத்தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் முகமாகத் தெரிவுசெய்யப்பட்ட 07 பயனாளிகளுக்குத் தையல் இயந்திரங்களை வழங்கி வைத்தார். (ஐ-402)




முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்தின் சிறுவர் தின நிகழ்வு பாடசாலை ஆசிரியர் மதியழகன் தலைமையில் நடைபெற்றது. இதில் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ-422)



சோபிகாவின் இயக்கத்தில், உதயா நிறுவனத்தின் தயாரிப்பில், கிருபா லேனர்சின் அனுசரணையில் 'மாசறு' குறும்படம் யாழ். செல்லா திரையரங்கில் வெளியீடு செய்யப்பட்டது. குறும்படத்தை வைத்தியர் வேலணையூர் தாஸ் வெளியிட்டு வைப்பதைக் காணலாம். (ஐ)



தொண்டமானாறு மகாவித்தியாலயத்தில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் இரா சிறிநடராசா தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் ஓய்வுபெற்ற வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் அ. சிறிகரன் விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ஐ-108)





வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயத்தில் வருடாந்த பாடசாலை மட்ட கற்றல் கற்பித்தல் கண்காட்சி பாடசாலை அதிபர் திருமதி கி. நந்தபாலன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வவுனியா கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் சுவர்ணராஜா. முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ. பூபாலசிங்கம். அண்ணா நகர் பரமேஸ்வரா வித்தியாலய அதிபர் உதயன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள். மாணவர்கள். பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)





மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட விவசாய உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு மன்னார் உயிலங்குளம் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளரின் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பா.ஐங்கரநேசன், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான வைத்திய கலாநிதி ஞா.குணசீலன்,சட்டத்தரணி பிரிமூஸ் சிறாய்வா மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ-56)



கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தின் 125 ஆவது வருடாந்தத் திருவிழா அண்மையில் நடைபெற்ற போது அன்னை தேரேறிப் பவனி வந்து பக்தர்களுக்கு அருளாசி வழங்கினார். (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண சபை உறுப்பினர் ஜீ.குணசீலன் தனது ஒதுக்கீட்டில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கணினித் தொகுதியை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பயன்பாட்டுக்காக அதிகாரிகளிடம் கையளித்தார். (ஐ-56)



நவராத்திரி விரதத்தை முன்னிட்டு தொண்ட மானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களிடையே பல்வேறு வகையான போட்டி கள் நடத்தப்படுகின்றன. அதன் ஒரு கட்டமாக ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே மாலை கட்டுதல், கோலம் போடுதல் போட்டிகள் இடம்பெற்றன. (ஐ-108)





வவுனியா, தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலை திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் திருமதி மோகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா மற்றும் வடமாகாணசபை உறுப்பினர் எம்.பி.நடராசா ஆகியோர் கலந்து கொண்டதுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சரஸ்வதி சிலையை பிரதேச செயலாளரும் அதன் பெயர் பலகையை வடமாகாண சபை உறுப்பினர் எம்.பி.நடராசாவும் திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு ஒரு தொகுதி கதிரைகள் மற்றும் நூலகத்துக்கான தளபாடங்கள் வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் யாசின் ஜவாஹிர் (ஜனோபர்) ஆகியோரின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து வழங்கப் பட்டுள்ளன. (ஐ)



முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்துக்காக ஒரு தொகை ஆடுகள் வழங் கப்பட்டுள்ளன. வடமாகாண சபை உறுப்பினர் யாசின் ஜவாஹிரின் தமது பன் முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து குறித்த ஆடுகளை வழங்கியுள்ளார். (ஐ)



மாதகல் சகாயபுரம் மலரும் மொட்டுக்கள் சிறுவர் கழகத்தால், சிறுவர் தினநிகழ்வு சகாயபுரம் சர்வோதய மாலைநேர கற்றல் வகுப்பு சிறுவர்களால் நடத்தப்பட்டது. .இதில் சிறுவர்களின் நடைபவனி ஒன்றும் நடத்தப்பட்டது. (ஐ)



வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பிரிவில் நேரியகுளம் வீரபுரம் பகுதியில் வசிக்கும் வறிய குடும்பங்களுக்கு வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா குறித்து ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து குடும்பத்தின் வாழ்வாதாரத்தை [illegible] சுயதொழில் மேற்கொள்வதற்காக குறிப்பிட்ட குடும்பங்[illegible] வழங்கிவைத்தார். (ஐ-421)



பாடசாலைகளுக்கிடையில் நட்புறவை வளர்க்கும் அன்பின் கல்விக் கூடம் செயற்றிட்டத்தின் கீழ் மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையை பார்வையிட வருகை தந்த மாத்தளை மாவட்ட கல்வி அதிகாரியை பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் அழைத்து வருவதையும், பாடசாலை பாண்ட் வாத்தியக் குழுவினர் வரவேற்பதையும் காணலாம். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு.காவின் பேராளர் மாநாடு நவ. 7 ஆம் திகதி கண்டியில்

கொழும்பு, ஒக், 25

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 26ஆவது பேராளர் மாநாடு எதிர் வரும் நவம்பர் 7ஆம் திகதி கண்டி பொல் கொல்லையிலுள்ள தேசிய கூட்டுறவு அபி விருத்தி நிலையத்தின் மகிந்த ராஜபக்ச அரங்கில் நடைபெற வுள்ளது.

காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை இடம்பெற வுள்ள இந்த மாநாட்டில் அடுத்த வருடத்துக்கான பதவி வழி உறுப்பினர் கள், அதியுயர் பீட உறுப் பினர்கள் மற்றும் செயற் குழு உறுப்பினர்களுக் கான தெரிவு இடம் பெறவுள்ளது. இதன் போது கட்சியின் தலைவரும், நகரங்கள் அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல், வடிகால மைப்பு அமைச்சரு மான ரவூப் ஹக்கீம் விசேட உரையாற்ற வுள்ளமை குறிப்பிடத் தக்கது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் யாப்பின் படி வருடாந்தம் பேரா ளர் மாநாடு நடத்தப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

(த-10)


DAMRO

we seek to recruit suitable persons for following positions at Jaffna area.

### AREA SALES EXECUTIVE
(Panasonic Smart Phones)

APPLICANT SHOULD ;

- be a male below 26 years of age.
- be a permanent resident within 20km from the above area.
- have G.C.E. (A/L) qualification.
- have a motor bike licence.

Experience in selling mobile phones will be an advantage.

**Total earnings after the 3 months training period will be Rs. 40,000 - Rs. 60,000 p.m.**

### STORE CLERK
(Trainee)

APPLICANT SHOULD ;

- be a male below 26 years of age.
- be a permanent resident within 20km from Jaffna showroom.
- have G.C.E. (A/L) qualification in commerce subjects.

**Total earnings will not be less than Rs. 25,000/- p.m.**

The selected candidates will be given following benefits for above positions.


- Company pension scheme.
- EPF / ETF.
- Annual bonus & other welfare benefits.

If the above positions are of interest to you, please forward a detailed resume with your contact numbers & contact details of two non-related referees to reach us within ten days of this advertisement.

The Human Resources Manager,
DAMRO
No: 361, Kandy Road,
Nittambuwa.
E-mail: hrm@damro.lk



HDFC வங்கி இப்ப லீசிங்கும் குடுக்கினம் என்ன!



நிபந்தனைகளுக்கு உட்பட்டது*

HDFCLEASiNG

அழையுங்கள் - 0115 73 73 73

Fitch Rating : BBB (lka)



இப்போது கை நிறையப் பரிசுகளுடன் சம்பத் e ரெமிட்டன்ஸ் "கேஷ் வாசி" மீண்டும் வந்துவிட்டது




2015 செப்டெம்பர் 01ஆம் திகதி முதல் 2016 ஜனவரி 31ஆம் திகதி வரை வெளிநாட்டுப் பணத்தை சம்பத் e ரெமிட்டன்ஸ் ஊடாக இலங்கையில் பெற்றுக்கொண்டால்

முதலாம் பரிசு

**10 இலட்சம் ரூபாய்**

மற்றும் 3 பேருக்கு தலா 100,000 ரூபாய் மேலும் வீட்டு மின் உபகரணங்கள் பல.

• 32" LED TV • குளிர்சாதனப் பெட்டி (2 Door) • முழு தன்னியக்க சலவை இயந்திரம் • Hifi Setup • Home Theater system

மேலதிக விபரங்களுக்கு 077 3 933 833 அழையுங்கள்.

e Sampath remittance service

XPRESS MONEY Ria MoneyGram

சம்பத் வங்கி

Sampath Bank Fitch Ratings A+(lka) 0112 30 30 50 www.sampath.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் இடமாற்றங்கள் சாவுக்கு வழிகோலக்கூடாது

## தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை

யாழ்ப்பாணம், ஒக். 25

ஒரே பாடசாலையில் ஏழு வருடங்கள் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு அவர்களது நியாயமான காரணங்களைக் கருத்தில் எடுக்காது இடமாற்றம் என்னும் பெயரில் வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் இடமாற்றங்களால் ஆசிரியர்கள் சாவடைவதும், ஓய்வுபெற வேண்டிய நிலைக்கும் தள்ளப்படவும் நேர்கிறது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஏழு வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்க வேண்டுமென்று சுற்றுநிருபத்தில் எங்கும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆனாலும் ஏனைய ஆசிரியர்களுக்கும் வாய்ப்பளிக்கும் விதத்தில் ஆசிரிய இடமாற்றங்கள் நடைபெற வேண்டும் என்ற நியதிக்கு அமைய இடமாற்றங்கள் இடம்பெறுகின்றன.

அண்மையில் நடைபெற்ற இத்தகைய இடமாற்றத்தின் மூலம் வயது முதிர்ந்த பெண் ஆசிரியருக்கு நகரப் பாடசாலை ஒன்றில் இருந்து மற்றொரு நகர்ப்புறப் பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. அந்த ஆசிரியருக்கு இருதய சத்திர சிகிச்சை நடைபெற்றுச் சில மாதங்களும் ஆகாத நிலையில் வழங்கப்பட்ட இட மாற்றத்தை இரத்துச் செய்யுமாறு மேன்முறையீடு செய்து செல்லக்கூடிய இடங்களுக்கெல்லாம் சென்று முடியாத நிலையில் மனமுடைந்து மேலும் நோய்வாய்ப்பட்டு இடமாற்றப்பட்ட பாடசாலையில் கடமையைப் பொறுப்பேற்று தற்போது மரணமடைந்துள்ளார். இவரது மரணத்துக்கான முழுக் காரணமும் அந்த ஆசிரியரின் மனதில் இடமாற்றம் காரணமாக ஏற்பட்ட விரக்தியே என்று சங்கம் குறிப்பிடுகின்றது.

குறித்த ஆசிரியரின் சத்திர சிகிச்சையைக் கருத்தில் கொண்டு இடமாற்றம் செய்யவேண்டாம் என்று நாம் முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது மட்டுமன்றி இன்னும் ஒரு வருடத்தில் தான் ஓய்வு பெறுவதாக அவ்வாசிரியர் கூறியதையும் கருத்தில் எடுக்காமல் இடமாற்றம் வழங்கியதால் இப்போது குறித்த ஆசிரியரின் மரணம் நிகழ்ந்துள்ளது.

இதேபோன்று வயது முதிர்ந்த கடும் சுகவீனமான இன்னும் இரண்டு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு அவர்கள் மன[...]டைந்து குறித்த வயதுக்கு முன்னரே இளைப்பாறியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க உயர் செல்வாக்குகளைப் பயன்படுத்தி இடமாற்றமும் இல்லாமல் விசேட பதவியுயர்வுகளோடு பலர் ஒரே பாடசாலையில் பல ஆண்டுகளாகக் கடமையாற்றுவதனை யாரும் கண்டுகொள்வதில்லை. இத்தகைய நடைமுறைகளுக்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சரியான தீர்வைக் காணத் தவறினால் ஆசிரியர்களுக்கு மன அழுத்தங்கள் எற்படுவதோடு பிள்ளைகளின் கல்வியில் பாதிப்பு ஏற்படுவதோடு ஆசிரியர்கள் இளைப்பாறுதலும், மரணமாவதும் சாதாரணமாகி விடும்- என்றுள்ளது.

(த-[...])

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் வீரசிங்கம்



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், வவுனியா குருமன்காட்டை வசிப்பிடமாகவும், தற்காலிகமாக கனடாவை வதிவிடமாகவும் கொண்டவருமான ஆறுமுகம் வீரசிங்கம் 23.10.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - இராசம்மா தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி- அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நடராசா, ரத்தினம்,சோமசுந்தரம், அம்பிகாபதி, வைத்தியநாதன், சுவாமிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து அவர்களின் அன்புக் கணவரும், வசந்தகுமார், நந்தினி, சாந்தினி, வினோதினி, தயாழினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், லீலாவதி, சந்திரன், கஜிற்றன், வில்பிறட், றொபேர்ட் ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜவிந்தன், கேசவன், லியோன், சுரேன், சாறுகேசி, சாரங்கன், நிருஷ்டா, ருவேன்ஷா, மேரிக்கா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.10.2015) திங்கட்கிழமை இல.50/04, சிறிநகர் பூந்தோட்டம், வவுனியா இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.50/04,
சிறிநகர், பூந்தோட்டம், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.
077 202 1389

(65289)(11,15,16,17)

### திருமதி நாகேஸ்வரி பற்குணராசா



உரும்பிராய் மேற்கு, அன்னங்கை, உரும்பிராயைச் சேர்ந்த திருமதி நாகேஸ்வரி பற்குணராசா 23.10.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா தங்கச்சியம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - பாக் கியம் தம்பதியரின் மருமகளும் பற்குணராசாவின் (தவம்) அன்பு மனைவியும் தங்கலட்சுமி, யோகேஸ்வரன், உதயசூரியன், பிறேமா, கருணாகரன் ஆகியோரின் சகோதரியும் பிருந்தா, பிரியா, தட்சனா, ராஜ்பிரித் ஆகியோரின் அன்புத் தாயாரும் புறொக்ஷ் ஆனந் (றொக் சன்)ரஜீவ் ஆகியோரின் மாமியாரும் தஷானந், மகிஷாந் ஆகியோரின் பேர்த்தியாரும் பாலசிங்கம், ஸ்ரீமோகன், மஞ்சுளா,ரஞ்சி, விஜயலக்ஷ்மி, சற்குணராசா (சோதி), யோகராசா(வேவி), சந்திரராணி, உஷாராணி ஆகியோரின் மைத்துனியும் சித்திரா, பத்மாவதி, ராஜேஸ்வரன், ஞானசேகரம் ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

077 087 1619,
077 706 5843

தகவல்:
குடும்பத்தினர்.

# ஜெனிவா விவாதம்; மாயமானார் மகிந்த

கொழும்பு. ஒக் .25

ஐ.நா. அறிக்கை தொடர்பான விவாதத்தில் உரையாற்ற வாய்ப்புக் கோரிப் பெற்றிருந்த மகிந்த ராஜ பக்ச, ஏன் உரையாற்ற வரவில்லை என பிரதி அமைச் சர் அஜித் பி. பெரேரா கேள்வி எழுப்பியதால் நேற்று முன்தினம் சபையில் பெரும் கூச்சல், குழப்பம் ஏற் பட்டது.

ஆளுந்தரப்பினரும் எதிரணியில் உள்ள மகிந்த ஆதரவு தரப்பினரும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். தனது ஆதரவுத் தரப்பினரான தினேஷ், வாசு, விமல் ஆகியோருக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கக்கூட மகிந்த சபைக்கு வரவில்லை என்றும் ஆளுந்தரப்பினர் கடுமையாகத் தாக்கினர்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரண்டாவது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கை தொடர்பில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதம் இடம்பெற்றது.

இந்த விவாதத்தில் ஐ.ம.சு.முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்த ராஜபக்சவும் (நேற்றுமுன் தினம்) உரையாற்ற இருந்தார். இதே வேளை, ஐ.நா. அறிக்கை தொடர்பில் தமது நிலைப்பாட்டை மகிந்த ராஜபக்ச இந்தச் சபைக்கு வந்து அறிவிக்கவேண்டும் என்றும் சபையில் உரையாற்றிய ஆளும் தரப்பினரால் குறிப்பிடப்பட்டது.

இருப்பினும், இன்று (நேற்றுமுன்தினம்) விவாதத்தில் முன்னாள் ஜனாதிபதி உரை நிகழ்த்தமாட்டார் என்ற தகவலை டலஸ் அழகப்பெரும வழங்கினார். இதன் பின்னர் உரையாற்றிய பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே சபையில் குழப்பம் ஏற்பட்டது.

அஜித் பி. பெரேரா உரையாற்றியபோது, இன்றைய விவாதத்தில் 5ஆவது பேச்சா[...]ராக மகிந்த ராஜபக்ச உரையாற்ற இருந்தார். இதற்காக அவர் 15 நிமிடங்களை ஒதுக்கிப் பெற்றிருந்தார். ஆனால், அவர் உரையாற்ற வரவில்லை. இந்தத் தகவல் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெருமவினால் வெளியிடப்பட்டது- என்றார்.

இவர் இப்படி உரையாற்றிக் கொண்டிருந்த போதே எதிரணியில் உள்ள மகிந்த ஆதரவுத் தரப்பினர் கூச்சலிட்டுக் குழப்பம் ஏற்படுத்தினர். இதைத் தொடர்ந்து ஆளும் தரப்பினரும் கூச்சலிடத் தொடங்கினர்.

இந்த நிலையில், தனது உரையைத் தொடர்ந்த அஜித் பி.பெரேரா,

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை விடயத்தில் தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச ஆகியோரின் நிலைப்பாட்டில் மஹிந்த ராஜபக்ச இல்லை. அவர் எமது நிலைப்பாட்டுடன் இருக்கிறார். தினேஷ், வா[...] விமலுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க மகிந்த இந்தச் சபையில் இல்லை. மகிந்த எமது நிலைப்பாட்டுடன் இருக்கிறார். அவர் எமக்கு ஆதரவாக இருக்கின்றார் என்று குறிப்பிட, தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட எதிரணியில் இருந்த மகிந்த ஆதரவுத் தரப்பினர் தொடர்ந்து கூச்சலிட்டனர்.

இதையடுத்து உங்களுக்கு ஆதரவாக மகிந்த ராஜபக்சவை இந்தச் சபையில் உரையாற்ற வையுங்கள் என்று சவால் விடுத்தார் அஜித் பி.பெரேரா. இதன் பின்னர் இரு தரப்பினரும் அமைதியடைந்தனர். குழப்பம் முடிவடைந்ததுடன் அஜித் பி.பெரேரா தனது உரையைத் தொடர்ந்தார்.

(கு-சி)

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் சுப்பிரமணியம்



வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், ஐயனார்புரம், வன்னேரிக்குளத்தை வசிப்பிடமாகவும்,இல 35,156 ஆம் கட்டை தொண்டமான் நகர்,கிளிநொச்சியை தற்போதைய வசிப்பிட மாகவும் கொண்ட வல்லிபுரம் சுப்பிரமணியம் 22.10.2015 அன்று காலமானார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.10, 2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தற்போதைய வசிப் பிடமாகிய தொண்டமான் நகரில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை, உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

(63553)(12,15,17)

### திருமதி சாந்தகுணதேவி கணபதிப்பிள்ளை



தோற்றம்: 19.07.1942
மறைவு: 22.10.2015

யாழ்ப்பாணம், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதிசாந்தகுணதேவி கணபதிப்பிள்ளை 22.10.2015 வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் இரத்தினராஜா கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய விரிவுரையாளர் உயர் தொழில்நுட்பக்கல்லூரி, யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற இராஜரத்தினம் -பரிமளம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை- அன்னம் (அரசடி வீதி, வடலியடைப்பு, பண்டதரிப்பு) தம்பதிகளின் அன்பு மருமகளும். கணதீபன், கார்த்திகா, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் அழகேசன், நிரோஷா ஆகியோரின் அன்பு மாமியாரும் லிவ்யன்,ஜவின் ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் சாந்தகுண நாதன், சற்குணதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகசிங்கம் காலஞ்சென்றவர்களான மகாதேவன், செல்வராஜா வாமதேவன், சண்முகநாதன், தில்லைநாதன், காமினி ஆகியோரின் மைத்துனியும் அம்பிகையின் பெரியம்மாவும் தர்சனின் மாமியும் ஆவார்

அன்னாரின் பூதவுடல் 22.10.2015 வியாழக்கிழமை பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 5.00 மணி அளவில் தகனக்கிரியைகள் பொரளை இந்து மயானத்தில் நடைப்பெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் [...]

077 340 5893 (மகன்)
011 2503 920 (சகோதரி)

33-4/3, 42 nd Lane
Colombo-06

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### விற்பனைக்கு உண்டு
Albam box
மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சாவகச்சேரி
தொடர்பு : 076 717 1699

### வீட்டுடன் காணி விற்பனைக்கு
வட்டுக்கோட்டை, அடைக்கலந்தோட்ட கந்தசாமி கோவிலுக்கு அண்மையில் 4லீ பரப்பு நிலத்தில் 5 அறைகள், சமையல் அறை மற்றும் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 854 3909
077 431 9749
(64438)(14.15.16)

### வான் விற்பனைக்கு
டாட்டா ACE (Zip) படி பதிவு செய்யப்பட்ட புதிய வான் விற்பனைக்குண்டு.
0777066487 யாழ்ப்பாணம்.

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் ஊரெழு கிழக்கு கிளானைப்பதிவுயில் 3 ½ பரப்பு தோட்டக்காணி பாதையுடன் கிணற்றில் பங்குடன்விற்பனைக்குண்டு.
T.P:075 500 1211

### FRONT DOOR WASHING MACHINE FOR IMMEDIATE SALE
IDESIT (ITALY)
MODEL W43T LB 2001 1800W
HARDLY GSED BY LECTURER
CONTACT:
077 723 8528,021 300 7966
(64482)(14.15.16) 6AM - 9AM OR 6PM - 8PM

### நாய்க்குட்டி விற்பனைக்கு
டொபர்மன் நல்லின நாய்க்குட்டிகள் (டொமன்) முதல் தடுப்பூசி போடப்பட்டு உள்ள நிலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
7ஆம் கட்டை, சங்குப்பிட்டி. 077 104 1359

### வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை வீதி சயன்ஸ் அக்கடமி ரியூசன் சென்ரருக்கு அருகில் வீடு கிணற்றுடன் சேர்ந்த மூன்று பரப்பு ஆதனம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: சந்திரதாசன் 077 610 6760
சிவா(416)438 8509, (416) 845 8509

### வீடு விற்பனைக்கு
34/5, மயிலங்காடு - சூராவத்தை அம்மன் கோயில் வீதியில் 3 அறைகளுடன் 1400 ச.அடி கொண்ட வீடு 2 பரப்புக் காணியுடன் விற் பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 071 832 1142, 077 615 8800
(64431)(11.15.17)

### விற்பனைக்கு
கறுப்பு நிற Rot weiller - German Supperd ஆண், பெண் 1 ½ மாத நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. பூச்சி மருந்து, தடுப்பு ஊசி போடப்பட்டது. விலை நேரில்.
சிவானந்தன்- 077 634 1541

### லொறி விற்பனைக்கு உண்டு
லங்கா அசோக் லேடன் கொமட்சுப்பர் லொறி, தேக்கு Body என்ஜின் புதியது. உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 075 047 0828
021 222 6884
(64480)(14.15.16)

## தேவை

### வேலை ஆள் தேவை
Full HD Video ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வதற்கு ஆள் தேவை.
தொடர்பு : 076 717 1699

### பெண் உதவியாளர் தேவை
கௌரவமான, பாதுகாப்பான, யாழ். நகரில் இருந்து 10 கி.மீ. தூரத்தில் உள்ள வீட்டில் தங்கி இருந்து சமையல் மற்றும் வீட்டு வேலைகள் செய்வதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை.
தொடர்பு: 077 613 8964

### வீட்டுப்பணிப்பெண்கள் தேவை
திருநெல்வேலியில் அமைந்துள்ள டொக்டர் வீட்டிற்கும் கொடிகாமத்தில் உள்ள வீட்டில் வயோதிபரைப் பராமரிப்பதற்குமாக இரு பணிப்பெண்கள் முழுநேரமாக தங்கிநிற்கக் கூடியவர்கள் தேவை. ஆகக்குறைந்தது ஒரு வருடத்திற்கு நிற்கக் கூடியவர்கள் நன்று.
(64451)(14.15.16) தொடர்பு: 077 664 7977

### வேலையாள்கள் தேவை
யாழ் நகரில் அமைந்துள்ள பான்சிக் கடைக்கு பெண் வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 076 688 2470

### தேவை
கட்டட நிர்மாணப்பணிகளை மேற்கொண்டு வருகின்ற (DECON) எமது நிறுவனத்திற்கு **அனுபவமான** தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் (T/O) தேவை.
தொடர்பு: 077 361 4638 (64488)(14.15.16)
முகவரி: கேணியடிரோட், கோக்குவில் மேற்கு.

### காணி குத்தகைக்குத் தேவை
பலாலி வீதியில் உரும்பிராய்க்கும் திருநெல்வேலிக்கும் இடையில் காணி தேவை.
தொடர்பு: 076 900 4807 (64472)(14.15.16)

### பங்குதாரர் தேவை
யாழ். நகர் மத்தியில் சகல வசதிகளுடன் இயங்கிவரும் ஒரு சிறிய தனியார் நிறுவனத்தை நிர்வகித்து நடத்த அனுபவமுள்ள பங்குதாரர் தேவை. இலாபத்தில் பங்கு கொடுக்கப்படும்.
தொடர்பு : 077 756 1346

### மணமகன் தேவை
1992 இல் பிறந்த கிரகபாவம் 29½ உயரம் 174 cm, திருவோண நட்சத்திரம் 2ஆம் பாதம் BSC படித்துக் கொண்டிருக்கும் மணமகளுக்கு உள்நாட்டில், வெளி நாட்டில் மணமகன் தேவை.
தொடர்பு: 021 222 3602, 072 946 9949

### பணியாளர்கள் தேவை
கிளிநொச்சியில் அமைந்திருக்கும் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் பணிகளுக்கு பணியாளர்கள் தேவை.
- பில் கிளாக்
- கணக்குப் பதிவாளர்
- சேல்ஸ்மன்(பொதி கட்டுபவர்)

ஐந்து வருட அனுபவம் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 071 735 4308

## ஏனையவை

### வீடு வாடகைக்கு
இல. 68 , கச்சேரி நல்லூர் வீதியில் அமைந் துள்ள புதிய வீடு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு : 077 839 3531

### அமெரிக்க விசா லொத்தர்
A/L தகுதியுடையவர்கள் விசா லொத்தர் மூலம் அங்கு குடியேறலாம்.
BBS NETTING தொடர்பு:- 077 581 1106

### நொதேர்ன் கால்நடை சிகிச்சை நிலையம்
Northern Animal Clinic & Surgery
மிருக வைத்திய சேவையும் கால்நடை மருந்தகமும்
கே.கே.எஸ். வீதி உப்புமடச் சந்தி கோண்டாவில். (64439)(11.15)
077 333 7146, 021 221 5322



- பல் முக சீராக்கல் (Consultant orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் டென்டல் கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (சுஜனி)

### வேலைக்கு ஆள்கள் தேவை
கால்நடைத் தீவனம் விற்பனை செய்யும் கடைக்கு (O/L)படித்த ஆண்கள் தேவை.
SK ஏஜென்சி
128/D, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்,
தொடர்பு: 021 222 6884
075 047 0828
(64481)(14.15.16)

### வீடு வாடகைக்கு
2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.
(64416)(11.15.)
தொடர்பு: 077 154 7395

**Majestic Cineplex Jaffna**
**கார்கில்ஸ் ஸ்குயெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் பலட்டினம் 10.30 / 2.30 / 6.30
சில்வர் 10.15 / 2.15 / 6.15
ப்ரொன்ஸ் 10.30/ 2.30 / 6.30
விசாரணை 021 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

### வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் கட்டட நிர்மாணப் பணிகளுக்கு சகலவிதமான வேலையாள்கள் தேவை. மேசன், கூலி உட்பட
தொடர்பு: 077 146 8223
(64485)(14.15.16)

### வேலைவாய்ப்பு
ரூ.48000 அதி உயர் சம்பளம். விமான நிலையம், துறைமுகம், தனியார் தொழிற்சாலை ஆகியவற்றுக்கு (வயது: 18-40)ஆண், பெண், உணவு, தங்மிடம் முற்றிலும் இலவசம். 6 மாதத்தில் நிலையான தொழில். இன்னும் 50 வேலை வாய்ப்புகள் மற்றும் அதிஉயர் சம்பளம். சிறந்த எதிர்காலம். வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்.
தொடர்புகொள்ளவும்:
077 956 9606, 075 420 4351

இலங்கை முழுவதும் இப்போது உடனடி வேலைவாய்ப்புகள். நீங்கள் எதிர்ப்பார்க்காத வருமானத்தை ஈட்டிக்கொள்ளலாம். சொக்லேட், கோடியல், பால்மா, சோயா, குளிர்பானம் ஆகிய துறைகளில் உடனடியாக 75 வேலைவாய்ப்புக்கள். (வயது: 18 - 55) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். ஆண், பெண். சம்பளம் (20000 - 40000) நாள் சம்பளம் - OTயுடன் 1500 (OT-1 Hrs) நாள் சம்பளம் பெற்றுக் கொள்ளலாம் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
T.P. 075 028 7319, 078 308 8234

நாள் சம்பளம் 1500/= மாதாந்தம் எவ்வளவு? உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம். சொக்லெட், பால்மா, ஐஸ்கிறீம் போன்ற தொழிற்சாலைகளின் அனைத்துப் பிரிவுகளுக்கும். வந்த நாளிலே வேலை. ஆண்/பெண், (18-55) OT உடன் 40000/= இற்கும் அதிகமான சம்பளம் (நாள் சம்பளம், கிழமைச்சம்பளம், மாதச் சம்பளம்) உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
T.P. 077 401 7543, 755 446 898

சொன்ன சம்பளம் கிடைத்ததா? மாதக் கடசியில் (8000 -12000) ஆகிய சம்பளமா கிடைத்தது. உணவு, தங்குமிடம், உங்கள் சம்பளத்தில் கழித்துக்கொண்டார்களா? இதோ உண்மையான சம்பளம் நாள் சம்பளம் -1500/= உங்கள் விரும்பப்படி ஒவ்வொரு நாளும் சம்பளம் உணவு, தங்குமிடம் உடை ஆகியன முற்றிலும் இலவசம். உங்கள் சம்பளத்தை நீங்களே கணக்குப் போட்டு பார்த்துக்கொள்ளவும். (நாள்சம்பளம் - 1500×25 Day= 37500) (உண்மையான சம்பளம்) பிரதான தொழிற்சாலைகளில் லேபல், உற்பத்தி, பொதியிடல் ஆகிய பிரிவுகளுக்கு, ஆண், பெண் (வயது: 18 -50) உடனடி வேலை.
T.P. 775 977 259, 77 891 0598
(64479)(14.15.16)

இதோ உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

### பாரதி அக்கடமி
அழகுக்கலை பயிற்சி நிலையம்
கல்வியகத்தில் அதி திறமை வாய்ந்த ஆசிரியர்களினால்
செய்முறைப் பயிற்சியுடனான கற்கைநெறி வகுப்புக்கள்:
- அழகுக்கலைப் பயிற்சி
- தையற் கலைப் பயிற்சி
- கேக் தயாரித்தல்

குறிப்பு : பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
ஒவ்வொரு மாணவியிடமும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
ஓடர்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
224, Dr.Subramaniam Road, Chunnakam
தொடர்பு: 077 126 6908




நாம் உங்களுக்கு உதவ தயார்
•Visit Visas •Rejected Visas
நிராகரிக்கப்பட்ட மற்றும் புதிய விண்ணப்பங்கள்
*Appeals & Rejected Visas *Special Occasions
*Family & Friends Visit *Medical Visits
*Tourist/Business Visits

| | | |
|---|---|---|
| Australia | Italy | Switzerland |
| Canada | Japan | Sweden |
| China | New Zealand | UK |
| France | Netherlands | USA |
| Germany | Norway | |

100% உத்தரவாதம்*

**THE VISA CENTRE**
Migration, Work & Study Solutions
Level One, 21, Maitland Crescent, Colombo 07.
HOTLINES:
0777 633 955 / 0777 633 977 / 0773 444 447
The Visa Centre
Tel: 5 334433 Fax: 5 352303 Email: info@thevisacentre.com
www.thevisacentre.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டு முதல் நீதித்துறை அபிவிருத்தி

## நீதி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஒக்.25

அடுத்த ஆண்டு முதல் அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளும் உள்ளடங்கும் வகையிலான அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றைச் செயற்படுத்தத் திட்டமிட்டு உள்ளதாக நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

நீதித்துறை அமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய மற்றைய நிறுவனங்களிலும் நீண்ட காலமாக காணப்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கும் நோக்கில் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது.

இதனூடாக வழக்கு விசாரணைகளின் தாமதத்தை மட்டுப்படுத்திப் பொது மக்களுக்கு வழங்கக்கூடிய சேவையை உயர் தரப்படுத்துவதற்கு எதிர்ப்பார்ப்பதாக நீதியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி இந்த உத்தேசத் திட்டமானது பிரதான 05 உத்திகளைக் கொண்டு திட்டமிடப்பட்டுள்ளது.

நீதிமன்றங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், நீதிமன்ற நடைமுறைகளைத் துரிதப்படுத்தும் வகையில், வழக்குகளை முகாமைத்துவப்படுத்தும் புதிய தொழில்நுட்ப கணினிமுறைச் செயற்பாட்டை அறிமுகப் படுத்தவதனூடாக சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் ஆய்வுகளை செய்வது அந்த உத்திகளில் உள்ளடங்குகின்றன என நீதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (த-வ)

## சேவையில் மீளிணைக்கப்பட்ட படையினரைச் சந்திக்கிறார் தளபதி

கொழும்பு, ஒக்.25

பதவிகளில் மீளவும் அமர்த்தப்பட்ட படையினர் இராணு வத் தளபதி கிருஸாந்த டி சில்வாவைச் சந்திக்க உள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் அரசியல் ரீதியாகப் பழிவாங்கப்பட்டு கட்டாய ஓய்வு மற்றும் பணி நீக்கம் செய்யப்பட்ட 40இற்கும் மேற்பட்ட படை அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மீளவும் சேவையில் இணைக் கப்பட்டுள்ளனர்.

201 படை அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியலிலிருந்து 40இற்கும் மேற்பட்டவர்களை மீளவும் பணியில் அமர்த்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. படையினரை மீளவும் பணியில் அமர்த்துவது தொடர்பிலான விசேட சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. (த-வ)

## புதிய மருந்து கண்டுபிடித்தது பேராதனைப் பல்கலைக்கழகம்

கொழும்பு, ஒக்.25

பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் பாம்புக் கடிக்கான புதிய மருந்து கண்டறியப்பட் டுள்ளது.

அந்தப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடச் சிரேஷ்ட பேராசிரியர் தம்மிக கவரம்மான உள்ளிட்ட குழுவினரால் இந்தப் புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பலனாக இந்த மருந்து கண்டு பிடிக்கப்பட்டதாகப் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் உபுல் திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்த மருந்தை அறிமுகப்படுத்துவதால் பல பிரதிபலன்கள் கிடைக்கும் என்று பேராசிரியர் உபுல் திஸாநாயக்க தெரிவித்தார். (த-வ)

## பயிற்சிப் பட்டறை

சாவகச்சேரி,ஒக்.25

யாழ்.மாவட்ட செயலக இடர் முகாமைத்துவ இணைப்பு அலகின் ஏற்பாட்டில் கிராம மட்ட ஆபத்து மதிப்பீடு வழி காட்டலுக்கான தென்மராட்சி பிரதேச மட்ட ஆரம்ப பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சிப்பட்ட றையில் கலந்து கொள்ளுமாறு பிரதேச அரச திணைக்களத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் பத்மநாதன்



புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவரும் அத்தாயைத் தற்காலிக வதிவிடமாகக் கொண்டவருமான வல்லிபுரம் பத்மநாதன் 23.10.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சற்குணவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேதவனம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, இராமநாதன், பரமேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பொன்னம்பலம், கிருஸ்ண பிள்ளை ஆகியோரது அன்பு மைத்துனரும் ஸ்ரீசிதம்பரலிங்கம், பத்மசீலன், பாக்கியசீலன், வனதரூபி, தாரணி ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பமலர், சிவானந்தன், வசந்தகுமார், சறோஜினிதேவி, ஜெகநிதி ஆகியோரின் அன்பு மாமனாரும் தனிஸன், தயானி, கிருஷானி, வினுஜா, அபிலன், குயிலினி, சமினா, அபிஸ்னா, மகிழ்னன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(26.10.2015) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அத்தாய், அல்வாய். 077 614 6717 + 447 931 570 003 தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**கட்டாரில் வேலைவாய்ப்பு**

கட்டார் நாட்டில் இலகுரகவாகன ஓட்டுநர்கள் (Light vehicle Drivers) 10 பேர் (Pizza) விற்பனை நிறுவனத்திற்கு. சம்பளம் 1200 கட்டார் றியாள் (கட்டார் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற பின் 1600 QR)

- 1200+OT+ Commision
- தங்குமிடம், மருத்துவம் போக்குவரத்து இலவசம்
- இலங்கை இலகு ரக சாரதி அனுமதிப்பத்திரம் போதுமானது. ஒருவாரத்தில் பயணம்

தொடர்புகளுக்கு: சுபேரன் :077 395 7291

**அமெரிக்கா லொத்தர் விசா** 0770435330/ 0214546468

இவ்வருடம் 25 நாடுகள் அமெரிக்க லொத்தர் விசாவிற்காக விண்ணப்பிக்க தகுதியற்ற நாடுகள் பட்டியலிலிருப்பதால் இலங்கையிலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு தெரிவாவதற்கான சந்தர்ப்பம் அதிகமுண்டு.

ஆகவே தாமதம் வேண்டாம். இன்னும் சொற்ப நாட்களே விண்ணப்பிக்க முடியும். எமது நிறுவனத்தில் விண்ணப்பிப்பவர்கள் இலவசமாக எமது நிறுவனத்தில் புகைப்படம் எடுத்துக்கொள்ளலாம்.

Twinstar IT Unit, Main Street, Chankanai.

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- இலங்கையில் FRENCH MINISTRY OF FOREIGN AFFAIRES & FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே.
- 136 நாடுகளில் 1092 கிளைகள். தலைமை நிறுவனம் 1883 PARIS இல் நிறுவப்பட்டது
- ஆசிரியர்கள்: பிரான்ஸ்நாட்டு நிபுநர்களால் பயிற்றுவிக்கப்படும் ஆசிரியர்கள், யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் ஆசிரியர்கள்,பிரான்ஸ்நாட்டவர்...இலங்கையில் AF ஆசிரியர்களே சர்வதேச பரீட்சையை (DELF,DALF) நடத்துகிறார்கள்
- இலங்கையில் AF மட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF,DALF)ஐ வழங்குகிறது. எமது சான்றிதழ்களை எந்தவொரு நாட்டிலும் சமர்ப்பிக்கலாம்.
- யாழ்,வன்னி,மன்னார்,திருகோணமலை,மட்டக்களப்பு,கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AFஇல் படித்தே FRANCE, CANADA...(திருமணம் மூலம்/தொழில்/படிப்பிற்கு)செல்கிறார்கள்.

ஆரம்பம் விரைவில். உடன் பதிவை உறுதிப்படுத்துக

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்.

கச்சேரி பஸ்நிலையம் →புகையிரதகடவை → AF(வெள்ளை மாடிக்கட்டடம்)

**பயிற்சி மூலம் ஆசிரியர்களை சேர்த்துக்கொள்ளல்**

**English Medium (Gr 1 - 11) All Subjects**

**10 மாதங்கள் தமிழ் பேசும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்**

**மேலதிகமாக**

சிங்களக்கல்வி மற்றும் கணினி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது. ஆசிரியர் பயிற்சி டிப்ளோமா, சிங்கள டிப்ளோமா ( பேசும் ஆங்கிலம் அடங்கியது ) ஆங்கில இலக்கிய டிப்ளோமா, சுயதிறன் விருத்திடிப்ளோமா, கணினி டிப்ளோமா என்பன இலவசமாக கற்பிக்கப்படும்.

ஐந்து வருடங்களாக சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக பயிலுநர் ஆசிரியர்களைப் பயிற்றுவித்த எமது நிறுவனம் நாடெங்கிலும் ஆங்கிலம் கற்றலிலும் கற்பித்தலிலும் பேசுவதிலும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக எல்லா மாகாணங்களிலும் எங்களது 45 புதிய நிறுவனங்களுக்கு 300 ஆசிரியர்களை இணைத் துக்கொள்ள முன் வந்துள்ளோம்.

❋ தகைமைகள் ❋

- க.பொ.த சாதாரண தரம் 6பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த உ.ய தரம் கற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கில பாடத்தில் குறைவானவர்களிற்கு 60நாள்களிற்கு ஆங்கிலப் பயிற்சி கொடுக்கப்படும்.
- பயிற்சி கிழமையில் 5நாள்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களிற்குக் கொடுக்கப்படும்.
- பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவீர்கள்.
- போயாதினம் உட்பட அரசவிடுமுறை தவிர ஏனைய நாள்கள் காலை 8.30 - 5.00 மணி வரை வேலை நாள்களாகும்.

கற்கைநெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிக்கடன் ஏற்பாடு செய்து தரப்படும். (நிபந்தனைக்கு உட்பட்டது)

பயிற்சியின் பின்னர் மாதாந்தக்கட்டணம் 34,000/= ஐ சம்பளமாகக் கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்.

உங்கள் விண்ணப்பத்திலைனப் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் தராதரப்பத்திரக் குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் [9X4] அளவுள்ள தபாலுறையில் 45 ரூபாய் முத்திரை ஒட்டி தராதரப்பத்திரத்துடன் இணைத்து பதிவுத்தபாலில் அனுப்பவும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் மேல் மூலையில் 01 - 11 வகுப்பு வரை என்று எழுதி அனுப்பவும்.

கிளைகள்: தெமட்டகொட, புத்தளம், ஹட்டன், யாழ்ப்பாணம் [சுதுமலை], கல்முனை

*பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி*

*Officer*

**Blooming Buds International Teacher Training Institute**

*Thavadi Road, Suthumalai, Manipay*

PV 94034

தொடர்புகளுக்கு: 077 152 9731/ 011 267 7641 021 225 6641

Hotline: 071 566 9641

**நொதன் சென்றல் மெற்றோ போலிஸ் ஆய்வு கூடம் வழங்கும் விசேட சலுகை**

நொதன் சென்றல் வைத்தியசாலையில் இயங்கும் மெற்றோ போலிஸ் ஆய்வு கூடத்தில் 25.10.2015 இல் இருந்து 25.11.2015 வரையான காலப்பகுதியினுள் மிகக் குறைந்த கட்டணத்தில் பின்வரும் ஆய்வுகூட பரிசோதனைகள் நடைபெறவுள்ளன. பொதுமக்கள் இவ்வரப்பிரசாதத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். குறைந்த கட்டணத்துடனான பின்வரும் பொதிகளில் ஒன்றைத்தெரிவு செய்பவர்களுக்கு மேலதிகமாக கீழ் குறிக்கப்பட்டுள்ள ஒன்றையும் குறைந்த கட்டணத்தில் செய்து கொள்ளமுடியும்.

**Package No1:** FBC, Fasting Blood suger, SGOT, SGPT, UFR, 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் Rs:1435/= Creatinine, Cholestrol and Calcium

**Package No.2:** FBC, Fasting Blood suger, SGOT, SGPT, 35 வயதிற்கு மேற்பட்டவர்கள்; Rs:2470/= Creatinine,BUN,Lipid Profile,TSH,Calcium

**Package No.3:** FBC, Fasting Blood suger, SGOT, UFR, 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் Rs:6450/= GGT, ALP, SGPT, HBSAG, Creatinine, BUN Lipid Profile, TSH and T3,Calcium, Homocystein


மேலதிகமான சலுகை கட்டணம்

| | |
|---|---|
| Lipid Profile | Rs:490/= |
| TSH | Rs:630/= |
| Homocystein | Rs1975/= |
| Vitamin D3 | Rs:4530/= |

முகாமையாளர்
ஆய்வுகூடம்

(C/19616)(10.15.17)

# மகிந்தவின் அதிசொகுசு மாளிகையை பார்வையிட்டனர் ஊடகவியலாளர்கள்

கொழும்பு, ஒக்.25

கொழும்பு, கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையின் நிலக்கீழ் அதிசொகுசு மாளிகைக்கு நேற்றுமுன்தினம் குறிப்பிட்ட சில ஊடகவியலாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது பதவிக்காலத்தில் இந்த மாளிகையை நிர்மாணித்திருந்தார். மாளிகையை நிர்மாணிப்பதற்கான நல்லநேரத்தையும் மகிந்தவின் ஆஸ்தான சோதிடரான சுமணதாச என்பவரே குறித்துக் கொடுத்துள்ளார்.

மாளிகையின் உள்ளே நுழைவதற்கு இரகசியக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் உள்ளே இரு ந்து கதவை மூடிக் கொண்டால் வெளியில் இருந்து இரகசியக் குறி யீட்டின் மூலம் கூடத்திறக்க முடியாதளவுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மாளிகையில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் ஏ.சி. வசதி, தொலைபேசி , இன் டர்நெட், அகலத்திரை தொலைக்காட்சிகள், சொகுசு இருக்கைகள், நிலமட்டத்திற்கு மேலே ஜனாதிபதி மாளிகையை முழுவதும் நடப்பவற்றை கண்காணிப்பதற்கான கமெராக்கள் என கற்பனை கூட செய்ய முடியாத அளவு நவீன மற்றும் சொகுசு வசதிகள் இந்த மாளிகைக்குள் உள்ளடங்கியிருந்தன.


மாளிகையின் மேற்புறம் நில மட்டத்திற்கு மேலாக இரண்டு அறைகள் கொண்ட ஓய்வு விடுதியொன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் தமிழ் ஊடக அதிகாரி ஆர்.எப். அஷ்ரப் அலீயும் இந்த ஊடகவியலாளர் குழுவில் இடம்பெற்றிருந்த ஒரே தமிழ் ஊடகவி யலாளராக நிலக்கீழ் அதிசொகுசு மாளிகையை பார்வையிடுவதற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

(த-வ)


## மரண அறிவித்தல்கள்

அன்னையின் மடியில் 13 05 1948

ஆண்டவன் அடியில் 23 10 2015



### அருட்தந்தை இராயப்பு மரியநாயகம்

**Rev. Fr. Dr. R. MARIYANAYAGAM - OMI**

யாழ்ப்பாணம், வசாவிளானைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு, மறை மாவட்ட அருட்பணியாளருமான அருட்தந்தை இராயப்பு மரியநாயகம் அவர்கள் நேற்று முன்தினம் (23.10.2015) இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற இராயப்பு எலிசபெத் தம்பதியரின் மூத்த புதல்வரும், பெனடிக்ற் (இரத்தினராசா - யாழ்ப்பாணம்), சௌந்தரநாயகம் (யோகராசா - யாழ்ப்பாணம்), மதுரநாயகம் (துரை - இத்தாலி / இங்கிலாந்து), அருட்சகோதரி விக்டோரியா பேணடேட் (நல்லாயன் கன்னியர் மடம் - கொழும்பு), மேரி கொலஸ்டிகா (ரீற்றா - இங்கிலாந்து), மேரி யசிந்தா (லீலா - பிரான்ஸ்), மேரி லில்லிமலர் (வசந்தா - அவுஸ்திரேலியா), பெலின்டா ராணி (ராதா - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று மட்டக்குளி, பார்ம் றோட், De Mazenod - OMI House-இல் வைக்கப்படும். நாளை திங்கட்கிழமை காலை மருதானை, புனித பாத்திமா அன்னை (Fatima) ஆலயத்தில் வைக்கப்பட்டு, பிற்பகல் 3.00 மணிக்கு இறுதி ஆராதனைகள் இடம்பெற்று, நல்லடக்கத்துக்காக கொழும்பு, பொரளை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ. பெனடிக்ற் (சகோதரன்) Tel: 077 6341468

### தில்லைநாதன் சிவகுமார் (சிவா)



கரம்பனைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லைநாதன் சிவகுமார் (சிவா) நேற்று (24.10.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தில்லைநாதன் நாகபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடேசு மற்றும் ராஜேஸ்வரி தம்பதியரின் மருமகனும் கிரிஜாவின் அன்புக் கணவரும் துசன்ஜா, அருன்ஜா, நிஜாகஜானன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகௌரி, சிவரூபன், சிவரூபினி, சிவராகினி, சிவதர்சினி ஆகியோரின் சகோதரனும் ரகுநாதன், ஜெகநாதன், புஸ்பதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2015) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப 2.00 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்


# அனைத்து மாவட்டங்களிலும் கலந்துரையாடல் நிலையங்கள்

**அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு**

கொழும்பு, ஒக்.25

இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக நாடெங்கிலும் கலந்துரையாடல் நிலையங்களை உருவாக்கவுள்ளதாக தேசிய கலந்துரையாடல்களுக்கான அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் அமையவுள்ள இந்தக் கலந்துரையாடல் நிலையங்களில் சமூக மட்டங்களில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு பயணம் மேற் கொண்டுள்ள ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான துணை தலைமைச் செயலாளர் மிரஸ்லாவ் ஜென்கா தலைமையிலான குழுவினருடன் நடத்திய சந்திப்பின்போது, மேற்படி விடயம் தொடர்பில் மனோ கணேசன் விளக்கமளித்துள்ளார்.

(வ)

# காணாமற்போன குடும்பஸ்தரின் எலும்புக் கூடு காட்டில் மீட்பு

திருமலை, ஒக் 25

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் காணாமற் போனதாக கூறப்பட்ட புவனேந்திரன் தேவராசா (43-வயது) என்ற குடும்பஸ்தரின் எலும்புக்கூடு, நொச்சிக்குளம் - சாந்திபுரம் காட்டுப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளதென திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 8ஆம் மாதம் 27ஆம் திகதி தேவராசாவின் மனைவி, தனது கணவன் காணமற்போயுள்ளதாகவும் அதற்கு தர்ஷன் என்பரே காரணம் எனவும் திருகோணமலை தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

கடந்த 08ஆம் மாதம் 27ஆம் திகதி தர்ஷன் என்பவர் தனக்கு அழைப்பை ஏற்படுத்தி காட்டுப்பகுதியில் கணவரை தடுத்து வைத்துள்ளதாகவும் பணம் மற்றும் நகைகளைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு அவரை மீட்டு செல்லும்படி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, தனது மகனையும் அழைத்துக் கொண்டு குறித்த காட்டுப்பகுதிக்கு தர்ஷனுடன் சென்றுள்ளார். காட்டுப்பகுதிக்குள் செல்வதை அவதானித்து அவ்வழியில் சென்ற ஒருவர் வினவியதும் தன்னையும் மகனையும் அவ்விடத்திலே விட்டு தப்பிச் சென்று விட்டார் என முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

குறித்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை மேற்கொண்ட தலைமையக பொலிஸார், சந்தேக நபரை கைதுசெய்து விசாரணை செய்ததை அடுத்து , குறித்த நபரைக் கொலை செய்ததாகவும், கொலை செய்த இடத்தையும் குறித்த நபர் காண்பித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கடந்த 2011-10-11ஆம் திகதி நொச்சிக்குளம் பகுதியில் தனது பெரியம்மாவான தங்கம்மா என்பவரை அழைத்துச் சென்று கொலை செய்ததாகவும், 2013-09-30ஆம் திகதி சோமநாதன் சத்தியசீலன் என்ற 17 வயது இளைஞனை குளத்துக்கு அழைத்துச் சென்று கொலை செய்தார் என்ற குற்றச் சாட்டில் இரண்டு வருடங்கள் சிறையில் இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

சம்பவ இடத்துக்குத் திருகோணமலை நீதவான் டி.சரவணராஜா சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(கு)

# கணக்கீட்டு, கோப் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நேற்று நியமனம்

கொழும்பு, ஒக்.25

நாடாளுமன்றக் கணக்கீட்டுக் குழு மற்றும் கோப் எனப்படும் பொது நிறுவனங்களுக்கான நாடாளுமன்றக் குழு என்பவற்றுக்கான உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்காக ஆளும் மற்றும் எதிர்க்கட்சி ஆகிய இரண்டு தரப்பில் இருந்தும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, நாடாளுமன்றக் கணக்கீட்டு குழுவுக்காக, அமைச்சர்களான மகிந்த சமரசிங்க, பாலித்த ரங்கே பண்டார, நிசோரன் பெரேரா, சுஜீவ சேனசிங்க, லசந்த அலகியவத்த, இரான் விக்ரமரத்ன ஆகியோருடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், வாசுதேவ நாணயக்கார, நலிந்த ஜயதிஸ்ஸ, எஸ். ஜயலந்திரன் மற்றும் எஸ். சிறிதரன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

அதேபோன்று, கோப் குழுவுக்கு, அமைச்சர்களான அனுர பிரியதர்சன யாப்பா, வசந்த அலுவிகார, ஹர்ச டி சில்வா, அஜித் பி பெரேரா, ரஞ்சன் ராமநாயக்க, அசோக்க அபேசிங்க ஆகியோருடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரசிறி கஜதீர, சுனில் ஹந்துநெத்தி, பிமல் ரத்நாயக்க, எம்.ஏ.சுமந்திரன் மற்றும் ஞானமுத்து சிறினிவாசன் ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளனர். (த-வ)

# இலங்கை மத்திய வங்கிக்கு ரூ. 4,490 மில்லியன் நஷ்டம்

*முன்னாள் ஆளுநர் கப்ராலின் செயற்பாடே காரணமாம்*

கொழும்பு, ஒக்.25

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுனர் அஜித் நிவாட் கப்ராலின் செயற்பாடுகள் காரணமாகவே கோல்டன் கீ வைப்பாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாக நேர்ந்துள்ளது.

இதனால் இலங்கை மத்திய வங்கிக்கு தற்போது 4,490 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக, கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

செலிங்கோ நிறுவனத்தின் இணை நிறுவனமான கோல்டன் கீ நிலையான வைப்புத்திட்டத்தில் சுமார் ஆயிரம் கோடி ரூபாவுக்கும் அதிகமான பொதுமக்களின் பணம் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

சந்திரிகா அரசின் கடைசிக் காலத்தில் கோல்டன் கீ நிறுவணம் பொது மக்களின் பண வைப்புகளுக்குப் பாதுகாப்பற்ற நிறுவணம் என்று அறிவித்த மத்திய வங்கியின் அன்றைய ஆளுநர் சுனில் மெண்டிஸ், பொது மக்களின் வைப்புகளை மீளக் கையளிக்குமாறு கோல்டன் கீ நிறுவனத்திற்கு உத்தரவிட்டிருந்தார்.

எனினும் அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த மகிந்த ராஜபக்சவின் காலத்தில் மத்திய வங்கி ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டிருந்தார். கோல்டன் கீ நிறுவனத்தின் செயற்பாடுகளை கண்டும் காணாமல் நடந்து கொண்ட இவர், பொதுமக்களின் வைப்புகள் குறித்தும் கிஞ்சித்தும் கரிசனை கொள்ளவில்லை.

இதன் பின்னர் கோல்டன் கீ நிறுவனம் சரிவைச் சந்தித்த போது ஆயிரக் கணக்கான கோடி ரூபாய் பொதுமக்களின் பணம் அதில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. ஒரு சிலர் மட்டுமே தங்கள் வைப்புக்களை மீளப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

இதற்கான முழுக்காரணமும் அஜித் நிவாட் கப்ராலையே சேரும். அவர் மட் டும் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத் திருந்தால் கோல்டன் கீ நிறுவனத்தில் வைப்புச் செய்யப்பட்ட பொதுமக்களின் பணம் மீளக் கையளிக்கப்பட்டு பெரும் பாதிப்புக்கள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

இந்நிலையில் நல்லாட்சி அரசின் கீழ் இரண்டு கட்டங்களாக தற்போதைக்கு சுமார் 4,490 மில்லியன் ரூபா வரையிலான பணம் கோல்டன் கீ வைப்பாளர்களுக்கு மீளக் கையளிக்கப்பட்டுள்ளது. இது மத்திய வங்கிக்கு பெரும் நஷ்டமாக அமைந்துள்ளதாகவும், அஜித் நிவாட் கப்ரால் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என்றும் பொருளாதார நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்அஞ்சலி



பிறப்பு 14.05.1930 இறப்பு 24.10.2015

எமது ஆசிரியை திருமதி வி. தேவகுமாரன் அவர்களின் அன்புத் தந்தை

### சி. சிவகுருநாதன்

இறைபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/யாழ். இந்து ஆரம்ப பாடசாலை

(C/19617) (10.17)

## மரண அறிவித்தல்கள்



### இளையதம்பி திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி திருநாவுக்கரசு நேற்று (24.10.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-சின்னத்தங்கச்சி தம்பதியரின் மருமகனும், பூமணியின் அன்புக் கணவரும், ரஞ்சினி, ரோகினி சிவாஜினி (லண்டன்), சுதாஜினி (யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி), முருகதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரன் (குவைத்), குகானந்தபவன் (இணுவில்), ஞானமுரளி (லண்டன்), சஞ்சீவ் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்-கொடிகாமம் பிரதேச சபை), செல்வரஞ்சினி (யா/புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும், பொன்னம்பலம் (கனடா), சுப்பிரமணியம் (கனடா), கமலாதேவி (கனடா), கண்மணி (கனடா), செல்வலக்சுமி (நீர்வேலி) ஆகியோ ரின் சகோதரனும், ராகுலன், திசங்கர், அபினாஸ், நிருஜா, பிரணவன், கோபிநாத், கோபிராம் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மதியம் 12 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 901 5653, 077 9426 719

(65553) (10)

### பொன்னம்பலம் சந்திரசேகரம்



குப்பிளானைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சந்திரசேகரம் நேற்று முன் தினம் 23.10.2015 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் பாக்கியம் தம்பதிகளின் ஏகபுத்திரனும் காலஞ்சென்றவர்களான செல்லக்குட்டி மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் பத்மாவதியின் பாசமிகு கணவரும் பாலச்சந்திரன் (சுதன்–ஜேர்மனி) ஜெயச்சந்திரன் (சுமன்–ஜேர்மனி) சுமதி (லண்டன்) ரவிச்சந்திரன் தர்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திராதேவி, இந்திராதேவி ஆகியோரின் பாசமிகு தம்பியும் நடராஜா அமரர் பாலசிங்கம் மற்றும் பாலகிருஸ்ணன் இரத்தினகுமார் புவனராணி லதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் றூபன் சாந்தி, ராஜேந்திரன், கௌசலா (கௌசி ஆசிரியர் யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்) பிரேமிளா, கெங்காதரன், யமுனா, கேதீஸ்வரன், தர்சினி, மதுரா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வசீகரன், அபிசா, சஜீத், நவிதா ஆகியோரின் அன்புப் பேரனும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.10.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் நீர்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நீர்வேலி மேற்கு, நீர்வேலி. தகவல் குடும்பத்தினர்

### நடராஜா ஸ்ரீரங்கநாதன் (ஆசாரி)



வட்டுத்தெற்கு காளிகோவிலடியை பிறப்பிடமாகவும் மூளாய் வீதி, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா ஸ்ரீரங்கநாதன் 23.10.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சின்னராசா தெய்வநாயகி (டென்மார்க்) தம்பதிகளின் பாசமிகு மருமகனும், அருள்நாயகியின் அன்புக்கணவரும், யசோதரனின் பாசமிகு தந்தையும், ஜெயஸ்ரீ(லண்டன்) ஜெயராணி(லண்டன்) ஸ்ரீகரன்(லண்டன்) காலஞ்சென்ற ஸ்ரீரஞ்சன் மற்றும் ஸ்ரீகாந்தன், ஜெயராஜ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுரேஸ்குமார்(டென்மார்க்) நகுலாம்பாள், பத்மினி(டென்மார்க்) ரஜனி(டென்மார்க்) கிருஸ்ணவேணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.10.2015) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை. தகவல் குடும்பத்தினர்

## வணிக வரி மீள வருகிறது

நடைமுறையில் இருக்கும் வற்வரிக்குப் பதிலாக முன்னைய பி.ரி.ரி வரியை மீள அறிமுகம் செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

பெறுமதி கூட்டிய வரி எனும் வற் வரி அறவிடும் நடைமுறையில் நிலவும் குறைபாடுகள் காரணமாக அரசுக்கு பெரும் வரி இழப்பு ஏற்படுகின்றது. அத்துடன் வற்வரி ஒரே தடவையில் அறவிடப்படுவதன் காரணமாக வர்த்தகர்களும், பொது மக்களும் அதிருப்தி அடைந்துள்ளார்கள்.

இதனைத் தவிர்க்கும் வகையில் வர்த்தகத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளின்போதும் சிறு சிறு வரிகளாக முன்னைய வணிக வரியை மீள அறிமுகப்படுத்தத் தீர்மானித்துள்ளது. இந்த நடை முறை மிக விரைவில் செயற்படுத்தப்படும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)



### வயலை மண்ணின் மைந்தனுக்கு
## கண்ணீர் அஞ்சலிகள்

பிறப்பு: 13.05.1948 இறப்பு: 23.10.2015

அருட்திரு
இராயப்பு மரியநாயகம் அடிகளார் (அ.ம.தி)

திருமறையின் ஒளிபரப்பும் ஆன்மீக வித்தாக
அமலமரிச் சபையிணைந்து அரும்பணியாற்றி
இறையரசின் பாதையினை திடமுடன் செப்பனிட்டு
இறையடி சேர்ந்த குருமகனே! எம் இதய அஞ்சலிகள்!
எம்மண்ணின் முதற்குருவாக முடிசூடிய தலைமகனே !
இனமத பேதமற்று அருட்பணி புரிந்தவரே
யாகப்பர் பதிவாழ் உறவுகளின் உள்ளத்தில் நிறைந்தவரே
ஆலய வரலாறொடு பங்குமக்களின் வழிமரபை
நூற்றாண்டின் மலராக ஆவணப்படுத்தியவரே!
காலத்தால் அழியாத நின் 35 ஆண்டுகள், நிறைபணிகள்
ஞாலத்தில் எந்நாளும் நிலைத்து நிற்க எங்கு சென்றீர்?
இறைமகிமையில் இளைப்பாற வேண்டுகின்றோம்
அருட்தந்தையின் பிரிவால் துயருறும் இறைமக்கள், உறவுகள், சக துறவிகள்
அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாப அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம்.

பலாலி தெற்கு வயாவிளான் சென் ஜேம்ஸ் ஆலய
பங்குத் தந்தையும் பங்கு மக்களும்.

(6554) (10.17)

## மரண அறிவித்தல்கள்

### காசிப்பிள்ளை கனகசபை



காரைநகர் இராசாந் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் காரைநகர் விளானையை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை கனகசபை 23.10.2015 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான காசிப்பிள்ளை - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினபூபதியின் அன்புக் கணவனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-பூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும், சசிகலா (லண்டன்), லோகேஸ்வரி ஆகியோரது பாசமிகு தந்தையும், பரமேஸ்வரி, பத்மநாதன், காலஞ்சென்ற சரஸ் வதி மற்றும் நவரத்தினம் ஆகியோரது அன்புச் சகோதரரும், சற்குணராசாவின் (லண்டன்), அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சண்முகசுந்தரம் மற்றும் சரஸ்வதி, சுப்பிரமணியம் காலஞ்சென்ற தவபாலன் மற்றும் சிவபாலன் ஆகியோரது அன்பு மைத்துனரும், கபிஷா, யசிந்தா, றஜிந்தன், சஜிந்தன் ஆகியோரது அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.10.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக களபூமி தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளானை,
களபூமி, காரைநகர் T.P : 077 433 6920

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
(64497)(11,15,16,17)

### சின்னத்துரை சிவகுருநாதன்



வேலணையை பிறப்பிடமாகவும் இல 32, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவகுருநாதன் நேற்று (24.10.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதர் இளையபிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தங்கலட்சுமி, திருவிளங்கம், நல்லையா, பூபதி, சற்குணம் மற்றும் திருநாவுக்கரசு, புனிதவதி, நகுலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற கௌசல்யாதேவி மற்றும் சசிதரன்(உரிமையாளர். S.S தரன் பான்சி, யாழ்ப்பாணம்) சறோஜாதேவி (பிரான்ஸ்) வனஜாதேவி (ஆசிரியர் யா/மத்திய கல்லூரி) கருணாதேவி (பிரான்ஸ்) விஜயலட்சுமி (ஆசிரியர் யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தினி, பத்மநாதன் (பிரான்ஸ்) கதிரவேல் (ஆசிரியர் யாழ் முத்துத்தம்பி ம.வி) இராமச்சந்திரன் (பிரான்ஸ்) தேவகுமாரன் (உதவிக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனும் நிறோஜா, நிரோஜன், நீரஜா, நீரஜன் (பிரான்ஸ்) துலாஞ்சன் (மாணவன் யாழ் இந்துக்கல்லூரி) றொசானி, நிஷானி, றணுஷா (பிரான்ஸ்) மிதுர்ஷியன், துஷாந்தி, அக்ஷயா, விஷ்ணுகா, அபிஷேக் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.10.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 32, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (65563)

தகவல்
குடும்பத்தினர்

## புலிகளைச் சந்திக்கவே இத்தாலிக்கு வீரவன்ச

**பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவிப்பு**

கொழும்பு, ஒக்.25

ஜெனிவாப் பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரண்டு நாள் விவாதம் நடைபெற்று வரும் வேளையில் அதில் கலந்து கொள்ளாமல் விமல் வீரவன்ச வெளிநாடு செல்லத் தயாரானதற்குரிய காரணம், இத்தாலியிலுள்ள புலி உறுப்பினர்களை அவசரமாகச் சந்திப்பதற்காகும் என வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச இத்தாலியிலுள்ள புலி உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவிருந்ததற்கான முக்கிய பல தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும், இதற்காக அவர் இரு கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தத்தயாராகஇருந்ததாகவும் பிரதி அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (த–வ)

## உலகப் பொருளாதாரத்தின் மையப்புள்ளி இந்து சமுத்திரம்

**அமெரிக்கத் தூதுவர் கூறுகிறார்**

ஜாகார்த்தா, ஒக்.25

உலகப்பொருளாதாரத்தின்மையப் புள்ளி இந்து சமுத்திரம் என வர்ணித் துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அப்துல் கெசாப், இந்தப்பிராந்தியத்தின் ஸ்திரன்தன்மையும் நலனும் அனைத்து நாடுகளினதும் கூட்டுப் பொறுப்பு என தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவில் ஆரம்பமாகியுள்ள இந்துசமுத்திர நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டுஉரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன் போது அவர் மேலும் கூறுகையில்:–

.உலகம் அதிகளவுக்கு இந்து சமுத்திரம் குறித்துத் தற்போது கவனம் செலுத்துகின்றது.இந்தப் பெரியளவிலான கடற்பகுதி உலகப்பொருளதாரத்தின்மையப்புள்ளியாக மாறியுள்ளமை மறுக்கமுடியாத விடயம். இந்தநூற்றாண்டிலும் அடுத்த நூற்றாண்டிலும் இந்துசமுத்திரம் உலக விவகாரங்களின் மையமாக விளங்கப் போகின்றது.இந்தப் பிராந்தியத்தின் முக்கியத்துவம் காரணமாகவே அமெரிக்கா இந்தோ பசுபிக்கிற்கு மீண்டும் முக்கியத்துவம் அளிக்க ஆரம்பித்துள்ளது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அப்துல் கெசாப் தெரிவித்துள்ளார். (த–வ)

## மின்மோட்டர் திருட்டு நெடுந்தீவு நபர் கைதாகி மறியலில்



யாழ்ப்பாணம், ஒக். 25

நீரிறைக்கும் மின் இயந்திரத்தைத் திருடிய குற்றச்சாட்டில் நெடுந்தீவில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு12ஆம்வட்டாரத்தில்இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஒருவரே வீடு புகுந்து குறித்த மின்மோட்டரைத் திருடிச் சென்றுள்ளார். அது தொடர்பில் நெடுந்தீவுப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து குறித்தசந்தேகநபர்கைதுசெய்யப்பட்டார். அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார். (ற–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நீதிபதிகளை நியமிப்பதானால் சர்வகட்சிகளின் அனுமதி பெறவேண்டும்

## ஜனாதிபதிக்கு சமசமாஜக் கட்சி யோசனை

கொழும்பு, ஒக்.25

இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் முன்னெடுக்கப்படவுள்ள விசாரணைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக சர்வதேச நீதிபதிகளை நியமிப்பதாயின் அதற்கு சர்வகட்சிகளினதும் அனுமதி பெறப்படவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குலங்காசமசமாஜக்கட்சியோசனை வழங்கியுள்ளது.

ஐ.நா. தீர்மானம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் கட்சிகளின் ஆலோசனைகளை இரண்டு வாரங்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்தநிலையில், லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ விதாரண உதயனுக்கு வழங்கிய செவ்வியின்போது, தமது கட்சியின் யோசனைகள் தொடர்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அதில் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தலைமையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் நாங்கள் எமது நிலைப்பாட்டைத் தெரிவித்தோம். இரண்டு வாரங்களுக்குள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்துவதற்கு நாங்கள் சில யோசனைகளை வகுத்துள்ளோம். அவற்றில் பிரதானமாக, உள்ளகப் பொறிமுறையிலேயே விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுடன், இலங்கை அரசமைப்புக்கு அமைவானதாகவும், இலங்கை சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதாகவும், நம் நாட்டு நீதிபதிகளைக் கொண்டே விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தவுள்ளோம்.

அடுத்து, விசேட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கான சர்வதேச நீதிபதிகளின் உதவியைப் பெற்றுக் கொள்வதாயின் அதற்கு சர்வகட்சிகளினதும் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள், பரணகம, உடலகம ஆணைக்குழுக்களின் யோசனைகள் ஆகியனவும் விசாரணைகளின் போது கருத்தில்கொள்ளப்பட வேண்டும்.

முன்னெடுக்கப்படுகின்ற விசாரணைகள் தொடர்பில் சர்வகட்சி சந்திப்பு அடிக்கடி ஒன்றுகூடி அதன் நடவடிக்கைகள் தொடர்பில் கலந்தாலோசிக்க வேண்டும். இது போன்ற பல யோசனைகளை நாங்கள் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தவுள்ளோம் என்றார்.

(த-சி)

# என்னைக் கட்டாயப்படுத்தி, தாக்கி கையொப்பம் வாங்கினர் பொலிஸார்

## விடுதலையான கொண்டையா தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.25

வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 5 வயது சிறுமியான சேயா சந்தவமியின் கொலையுடன் தொடர்புடைய ஒப்புதல் வாக்குமூலமடங்கிய போலிப்பத்திரத்தில், என்னைக் கட்டாயப்படுத்தி கைச்சாத்திட வைத்தார்கள் என்று கொண்டையா என்று அழைக்கப்படும் துனேஷ் பிரியாந்த தெரிவித்துள்ளார்.

அவரைப் பிணையில் எடுப்பதற்காக அவரது தாயார் கையொப்பம் இட்டுள்ளமையால் அவரை விடுதலை செய்ய, கம்பஹா நீதவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அனுமதியளித்ததையடுத்து, முதன் முறையாகஊடகங்களுக்குமுன்னால் உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தான் குற்றப்புலனாய்வு அதிகாரிகளால் கடுமையாகத் தாக்கப் பட்டதாகவும் அதன்பின்னர், ஒரு நீண்ட வாக்குமூலத்தில் கையொப்பமிடத் தான் கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நான் கல்வி கற்காதவன். நான்தான் சிறுமியைக் கொலை செய்தேன் என்று நான் வாக்குமூலமளிக்கவில்லை. அந்த வாக்குமூல அறிக்கையில் என்ன எழுதியிருந்தது என்பதும் எனக்கு தெரியாது. நான் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டமையினாலேயே அந்தப் பத்திரத்தில் கையொப்பமிட்டேன் என்று அவர் கூறியுள்ளார்.

இந்த கொலையை புரிவதற்கு எனது அண்ணனுக்கு நான் உதவி புரியவில்லை. நான்சிறுமி சேயாவை கண்டதும் கிடையாது. சிறுமியின் குடும்பத்துடன் எனக்கு எந்தத் தொடர்பும் கிடையாது. சிறுமி சேயாவைக் கொலை செய்த குற்றத்துக்காகத் தான் நான் கைது செய்யப்பட்டேன் என்ற விடயமே எனக்குத் தெரியாது. எனது நண்பனுடைய சில குற்றங்களுக்காக, என் மீது வழக்குகள் தொடர்கின்றன என்பதை நான் மறுக்கவில்லை. இந்த குற்றங்களுக்காக நான் கைது செய்யப்படுவேன் என்ற பயத்திலேயே, நான் பொலிஸாரிடமிருந்து தலைமறைவாகியிருந்தேன் என்று துனேஷ் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரினால் தயாரிக்கப்பட்ட ஒரு போலிக்கதையையே அனைவரும் நம்பியதாகவும் தான் குற்றமற்றவன் என்பதை நீதிமன்றம் விளங்கிக் கொள்ளவேண்டும் என்றும் பொலிஸாரை நினைத்து தான் பயந்து இருப்பதாகவும் அவர் இதன்போது கூறினார்.

மேலும் சிறுமி சேயாவின் கொலை தொடர்பில் தான் கைது செய்யப்படுவதற்கு முன்னர் தனக்கு கொண்டையா என்ற பெயர் இருக்கவில்லை என்றும் ஊடகங்கள் தன்னை கொண்டையா என்று முத்திரை குத்தியது என்றும் அவர் குறிப் பிட்டார்.

ஒரு சாக்கில் எனது தலையை மூடி, சிமெந்து சுவரில் முட்டி, தடியால் என்னை குற்றப்புலனாய்வு பிரிவினர் கடுமையாக தாக்கினார்கள். இந்த கொலையுடன் நான் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கசிந்ததால், என்னுடைய காதலியும் என்னைப் பிரிந்து சென்று விட்டாள் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஊடகங்கள் துனேஷினுடைய பெயரை முற்றாக அழித்து விட்டதாக உரிமைகளுக் கான சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணி உதுல் பிரேமரத்ன தெரிவித் துள்ளார்.

கொண்டையா யார், அந்த பெயரை யார் வைத்தது. ஊடகங்கள் மற்றும் மற்றைய அனைவரும் துனேஷினுடைய இந்த விடயத்தில் நடந்து கொண்ட முறையைச் சிந்தித் துப் பார்க்க வேண்டும். இந்த விசாரணையை விரைவில் முடித்துவிடும் நோக்கிலேயே, குற்றப்புலனாய்வுப்பிரிவின் இந்த அறிக்கையை தயாரித்துள்ளனர்.

மரபணுப் பரிசோதனை தொழில்நுட்பம் எமது நாட்டில் இருந்திருக்காவிடில், துனேஷ் இந்த வழக்கில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட் டிருப்பார். இவ்வாறு ஒரு பொறுப்பற்ற சட்டம் நம் நாட்டில் இருக் கையில், சாவுத்தண்டனை நம் நாட்டில் நடைமுறைக்குக் கொண்டுவர உள்ளமை சிந்திக்க வேண்டிய விடயமாகின்றது. அனைத்து அப்பாவிகளும் அநியாயமாக கொலை செய்யப்படுவர் என்று அவர் இதன்போது கேள்வியெழுப்பினார்.

எனவே, இந்த விடயத்தை தீவிரமாக விசாரணை செய்யவேண்டும் என்றும் சாவுத் தண்டனையை நாட்டில் செயற்படுத்தவேண்டும் என்பது தொடர்பான கருத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

(த)


**அறைகள் நாள் வாடகைக்கு**

600/= முதல் 3950/= வரை AC/TV இணைந்த குளியலறை உடன் Hotel Villa (ராமகிருஸ்ண Shard அருகில்) 422/1, Galle Road வெள்ளவத்தை. 072 255 2222 011 499 9944

**வீடு வாடகைக்கு உண்டு**

தெல்லிப்பழையில் உள்ள வீடு ஒன்று வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 076 918 1091

**அழகுக் கலை வகுப்புக்கள்**

Oli Alakan Studio வும் British College of Beauty Studies உம் இணைந்து நடத்துகிறது

திங்கள்- சனி வரை

சான்றிதழ் வழங்கப்படும் வீட்டில் இருந்தே அழகுக்கலை நிபுணராகலாம்

Make up order மற்றும் vedio எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

தொடர்பு: 076 701 1645

திருநெல்வேலி சந்தி

**வாங்குக் கட்டில்கள் தேவை**



நல்ல நிலையில் உள்ள வாங்குக் கட்டில்கள் தேவை

தொடர்பு:0777 190 871

**பராமரிப்பாளர் தேவை மற்றும் முதியோர்களுக்கான அனுமதி வழங்கலும்**

சுப்பிரமணியம்-கனகம் ஞாபகார்த்த மகிழ்ச்சி முதியோர் இல்லத்தில் வசிக்கும் வயோதிபரை பராமரிப்பதற்கு 25 வயதுக்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை. உணவு, தங்குமிடம் மற்றும் மருத்துவ வசதியுடன் மாத சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

பணிபுரிய விரும்புவோர் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். மேலும் மேற்படி முதியோர் இல்லத்தில் முதியோர் வசிப்பதற்கு போதிய இடவசதிகள் உள்ளதால் விருப்பமுள்ள முதியோர் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

சுப்பிரமணியம்-கனகம் ஞாபகார்த்த மகிழ்ச்சி இல்லம்

மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்.

021 205 4443, 0776848306 (65552) (10.17)

SUPER BALL

சீட்டிழுப்பு இலக்கம் 413

சீட்டிழுப்பு திகதி 2015.10.24

09 26 40 46 03 G

ரூ. 31,799,720/=

**பதவி வெற்றிடம்**

வவுனியாவிலுள்ள இலத்திரனியல் பொருள்கள் உற்பத்தி செய்யும் கம்பனிக்கும் மற்றும் Travel Agency இற்கும் கீழ்வரும் பதவிகள் வெற்றிடமாக உள்ளதால் தகைமை உடையவர்கள் விண்ணப்பிக்கலாம். கீழ்வரும் பதவிகள் E.P.F., E.T.F ஆகியவற்றுக்கு உரித்துடையதாகும்.

- தனிப்பட்ட உதவியாளர் - பெண்
- முகாமைத்துவ உதவியாளர்
- இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர்கள்
- Electonic Engineers
- விற்பனை உதவியாளர்கள்
- Marketing Officers
- Field Officers

கடவுச்சீட்டு புகைப்படத்துடன் கூடிய உங்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி,

Mobile No: 070 206 3333, 076 767 6772,
Head office No: +12345648108
Email: nnjackshan@gmail.com
jfffsi, No-01, Veppankulam, Omanthai, Vavuniya.

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள கண்ணாடி அலுமாரியும், கவுண்டர் மேசையும் மலிவு விலையில் விற்பனைக்கு

இணுவில் - 077 249 7082

**பணிப்பெண் தேவை**

கொக்குவிலில் வயோதிபப் பெண் நோயாளியை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பணிப் பெண் தேவை. (64499)(11.16.17) தொடர்பு: 077 837 8597

**விற்பனை பிரதிநிதி தேவை**

முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு விற்பனைப் பிரதிநிதி இருவர் தேவை. முன் அனுபவம் உள்ளவர்களும், ஆர்வம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு - 077 257 9844

**அறை வாடகைக்குண்டு**

வைத்திய பீடத்திலிருந்து 300M தூரத்தில் வைத்திய பீட மாணவர்களுக்கு சாப்பாடு உடன் தங்குமிட வசதி உண்டு.

தொடர்பு: 0776543926

**விற்பனைக்கு**

Samsung Galaxy Grand Prime மொபைல் மற்றும் A/C outdoor units (Singer) 12000 BTV & 24000BTV விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 071 4620806

**மோட்டர் சைக்கிள் உடன் விற்பனைக்கு**

CD 200Road Master
Red Colour
BBO xxxx

தொடர்பு - 077 869 6960

**இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளருக்கான உடனடி வேலைவாய்ப்பு**

நளின் கணினி நிறுவனத்திற்கு அதன் துணை நிறுவனத்திற்கும் வேலைவாய்ப்பு கோரப்படுகின்றன. இலத்திரனியல் துறையில் தகைமை இருப்பவர்கள் விண்ணப்பிக்கவும். பணிநிலைக்கேற்ப EPF/ETF உடன் சம்பளம் வழங்கப்படும்.

பணிநிலைகள்

1. இலத்திரனியல் தொழில்நுட்பவியலாளர் – 03
2. இலத்திரனியல் உதவி தொழில்நுட்பவியலாளர் –02

தகைமைகள்

- இலத்திரனியல் தொழில்நுட்பத்தில் அனுபவம் விரும்பத்தக்கது.
- விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கும் பதவிகளை அஞ்சல் உறையில் குறிப்பிடவும்.
- விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபாலிலோ விண்ணப்பிக்க முடியும்.

அடிப்படைச் சம்பளம் 20,000/= க்கு மேல்

விண்ணப்ப முடிவுத் திகதி 31.10.2015

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.

No. 195/4, Parameswara Junction, Palaly Road. T.P: 021 222 1121. 0777 66 7975


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் சேவையின் தரம் மேம்படுத்தப்படும்

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

பொலிஸ் சேவையின் தரத்தை மேம்படுத்துவது அரசின் நோக்கம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இலங்கை பொலிஸ் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில் நாட்டின் சட்ட ஒழுங்கை பாதுகாப்பதற்கும், ஒரு சிறந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டங்களின் போதும் பொலிஸாரின் பணி ஒரு பெரும் பங்காகும்.

சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாப்பதுடன் நல்லாட்சிக்காக உருவாக்கப்பட்ட அரசின் கொள்கைகளைச் செயற்படுத்தும் போது பொலிஸ் பிரிவு தனித்துவமான பங்காற்றுகின்றது.

பொலிஸ் சேவை என்பது இலங்கையில் மட்டுமன்றி உலகின் அனைத்து நாடுகளிலும் மனிதர்களின் நலன்கள், நலன்புரிகளுக்காகச் சேவையாற்றும் தரப்பே பொலிஸாராகும்.

நாட்டின் வறுமையை ஒழிப்பதே அரசின் முதன்மை நோக்கமாக இருக்க வேண்டும் வறுமையை ஒழிப்பதன் மூலம் பொலிஸாரின் பொறுப்புக்களைக் குறைக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (இ)

# பஸ்-மோட்டார் சைக்கிள் மோதியதில் இருவர் சாவு

சேருநுவர பொலிஸ் பிரிவு முத்துச் சேனைச் சந்தியில் இடம்பெற்ற விபத்தொன்றில் இருவர் உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுச் சனிக்கிழமை மாலை உல்லாசப் பயணிகளுடன் சென்ற பஸ் மற் றும் மோட்டார் சைக்கிள் என்பன மோதியதனாலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெருகல்-சூரை நகர் கிராமத்தைச் சேர்ந்த கனகசிங்கம் புஸ்பகலா (வயது 51) மற்றும் நற்சிங்கம் கயிலை நாதன் (வயது 38) ஆகிய இரு வருமே சம்பவத்தில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் ஈச்சிலம்பற்றிலிருந்து வெருகல்முகத்துவாரத்துக்குச் சென்று கொண்டிருக்கும் போது, முத்துச்சேனைச் சந்தியில் வைத்து எதிரே வந்த உல்லாசப் பயணிகளின் பஸ்ஸில் மோதியுள்ளது.

விபத்து இடம்பெற்றவுடன் படுகாயமடைந்த இருவரையும் அருகிலிருந்த வெருகல் பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே அவர்கள் இருவரது உயிரும் பிரிந்துள்ளது.

பின்னர், இவர்களை மோதிய பஸ் சாரதி உல்லாசப் பயணிகளுடன் சேருநுவர பொலிஸில் சென்று சரணடைந்துள்ளார். விபத்து குறித்து தற்பொழுது பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (இ)

# விபத்தில் 33 பேர் படுகாயம்

கொழும்பு, ஒக். 25

தம்புள்ளை, இனமலுவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில், 14 பெண்கள் உட்பட 33 பேர் படுகாயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலனறுவையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பயணிகள் பஸ் ஒன்று, லொறியொன்றுடன் மோதியதாலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தினால் படுகாயமடைந்த பயணிகள் தற்போது தம்புள்ளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ)

## ஐ.நா. தீர்மானம்

உரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில், இலங்கைக்கான ஐ.நா. வதிவிட இணைப்பாளர் கலாநிதி சுபிணை நந்தி, நல்லிணக்க மற்றும் அபிவிருத்தி ஆலோசகர் கீதா சபர்வால் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இராஜகிரியவில் அமைந்துள்ள தேசிய கலந்துரையாடல் அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கான இலங்கையின் உள்நாட்டுப் பங்களிப்பு, புதிய ஆட்சியின் கீழ் இலங்கையில் தற்போதைய நல்லிணக்கச் செயற்பாடுகளின் முன்னேற்றம், அவற்றுக்கான சமகால தடைகள் மற்றும் தேசிய கலந்துரையாடல் அமைச்சின் இனங் களுக்கு இடையிலான சகவாழ்வை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஐ.நா. சபையின் உதவி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப் புகளை வழங்குவது தொடர்பிலும் ஆராயப் பட்டதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார். (த-சி)

## இலங்கையுடன்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சமாதானம், பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் நீடித்து நிலைக்கக் கூடிய அபிவிருத்தி போன்றவற்றை உறுதி செய்வதில் இணைந்து செயற்பட விரும்புகின்றோம். இலங்கையும் இந்த முனைப்புக்களில் பங்கேற்று வருகின்றமை வரவேற்கப்பட வேண்டியது. அமைதி காக்கும் பணிகளில் இலங்கை சிறந்த பங்களிப்பை வழங்கி வருகின்றது.

ஐ. நா அமைப்பின் இலக்குகளை இணைந்து பகிர்ந்து கொள்வதற்காக இலங்கைக்கு நன்றி பாராட்டுகின்றேன். அச்சுறுத்தல்களை ஒன்றாக இணைந்து எதிர்கொள்வதோடு, சந்தர்ப்பங்களை ஒன்றாக இணைந்து பகிர்ந்து கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளோம் -என்றார். (த-வ)

## ஐ.நாவுடன்

களின் பின்னரே அங்கத்துவத்தைப் பெற்றுக் கொண்டது. அதன் பின்னர் தொடர்ச்சியாக வந்த ஆட்சியாளர்கள் ஐ.நாவுக்கு ஒத்துழைத்து நெருக்கமாக செயற் பட்டுப் பங்களிப்பையும் நல்கிவந்தார்கள். எனினும், கடந்த 5, 6 வருட காலப்பகுதியில் எமது முன்னைய ஆட்சியாளர்கள் இந்த ஒத்துழைப்பையும் நட்புறவையும் இல்லாமல் ஆக்கப் பார்த்தனர். நாமே உலகத்துடன் மோதிக்கொண்டு முன்னோக்கிச் செல்லமுடியாத நிலைக்குத் தள்ளப் பட்டி ருந்தோம்.

2015 ஓகஸ்ட் 17ஆம் திகதி பொதுத் தேர்தலின் பின்னர் இரு பிரதான கட்சிகளும் இணைந்து வேலைத்திட்டத்தை முன்னெடுத்தோம். ஐ.நா. பொதுச் செயலாளருக்குக் கொடுத்த உறுதி மொழியை நடைமுறைப்படுத்தும் யோசனையை முன்வைத்து முழு உலகின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டோம்-என்றார். (த-சி)

## யாழ்ப்பாணத்தில்

அனைத்து வயதினருக்கும் இந்தப் பிரச்சினை உள்ளபோதும் மிக அதிகளவில் 5 வயதுக்குட்பட்ட சிறார்களே பாதிக்கப்படுகின்றனர் என்பது புள்ளி விவரங்கள் மூலமாகத் தெரிய வருகின்றது என்றும் சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

சுட்டாறிய தண்ணீரை அருந்தாமையாலும், பழங்களை நன்கு கழுவி உட்கொள்ளாததனாலும் இந்த நோய் அதிகளவில் தொற்றுகிறது. பழங்களில் உள்ள பக்ரீரியாக்கள் மிக அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எனவே எத்தகைய பழமாக இருப்பினும் அதனை நன்கு கழுவி உட்கொள்ளுமாறும், சிறார்களுக்கும் நன்கு கழுவி உட்கொள்ளக் கொடுக்குமாறும் சுகாதாரப் பகுதியினர் கூறினர்.

வயிற்றுளைவு மற்றும் வயிற்றோட்டம் ஏற்பட்டால் அருகிலுள்ள ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் அல்லது பிரதேச வைத்தியசாலை அல்லது ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெறமுடியும் என்றும் சுகாதாரப் பகுதியினர் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (த-4)

## பொலிஸாருக்கு

காமை, முறைப்பாடுகள் கிடைத்த பின்னர் பக்கச்சார்பாகச் செயற்பட்டமை, முறைப்பாடுகளைப்பதிவு செய்யாது முறைப்பாட்டாளர்களைத் திருப்பி அனுப்புதல், விசாரணைகளில் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றமை உள்ளிட்ட பல வகையான முறைப்பாடுகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழு வில் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஆணைக் குழுவின் செயலாளர் ஆரியதாச கூரே தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் இத்தகைய முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அவை குறித்து அடுத்த வாரம் தொடக்கம் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கூரே கூறினார்.

முறைப்பாட்டுக்குரிய தரப்பினரைப் பிராந்திய அலுவலகங்கள் ஊடாக வரவழைத்து விசாரணைகளை முன்னெடுப்பதற்கான ஒத்துழைப்புகளை ஆணைக்குழு பெற்றுக் கொடுக்கும்.

பொலிஸார் தொடர்பில் முறைப்பாடுகள் இருப்பின் செயலாளர், தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலக்கம் 9, பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம், கொழும்பு 07 என்ற முகவரிக்குத் தெரிவிக்க முடியும் என்று ஆணைக்குழுவின் செயலாளர் மேலும் கூறியுள்ளார். (த-வ-4)

## அரசியல்

வேண்டும் எனக் கோரி, நாடு முழுவதிலும் உள்ள 14 சிறைச்சாலைகளில் தடுத்துவைக் கப்பட்டுள்ள 217 தமிழ் அரசியல் கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தைக் கடந்த 12ஆம் திகதி ஆரம்பித்திருந்தனர். இதனையடுத்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தொடர்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தரத் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனிடம் உறுதியளித்திருந்தார்.

அதேவேளை, இந்த உறுதிமொழியை சிறைச்சாலைகள் ஆணையாளர் ரோஹண புஷ்ப குமாரவுக்கு எழுத்துமூலம் ஜனாதிபதி வழங்கியிருந்தார். ஜனாதிபதியின் உறுதிமொழியை எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் கடந்த 17ஆம் திகதி தமிழ் அரசியல் கைதிகளை நேரில் சந்தித்துத் தெரியப்படுத்தி அறிவித்ததையடுத்து தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை அவர்கள் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி உறுதிமொழிக்கு அமைவாக நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் தமது விடுதலை விவகாரம் குறித்து நிரந்தரத் தீர்வு எட்டப்படாவிட்டால் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ் அரசியல் கைதிகள் எழுத்துமூலம் அறிவித்துள்ளனர் என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது.

இந்நிலையிலேயே, தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி வடக்கு, கிழக்கில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் இன்று விசேட ஆராதனை நடைபெறவுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கு-கிழக்கில் உள்ள இந்து ஆலயங்களிலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி விசேட பூஜை நடத்துவதற்கான ஏற்பாடுகளை இந்துமா மன்றம் மேற்கொண்டு வருகின்றது எனவும் அறியமுடிகின்றது. (த-சி)

## ஐ.நாவின்

ஐக்கிய நாடுகள் சபையின் 70ஆவது வருட நிகழ்வு மற்றும் உறுப்புநாடு என்ற வகையில் இலங்கை இணைந்து 60 ஆவது வருட நிகழ்வு நேற்றுக் கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த அரசின்போது தாம் அமைச்சராக இருக்கையில் நடைபெற்ற சம்பவத்தையும் இதன்போது ஜனாதிபதி கூறியதுடன் முன்னைய அரசில் அமைச்சராக இருந்த ஒருவர் ஐ.நா. தலைமைக்காரியாலயத்துக்கு முன்பாக உணவு தவிர்ப்பில் இருந்தததையும், அவருக்கு முன்னாள் ஜனாதிபதி இளநீர் பருக்கியதையும் நினைவுபடுத்தினார்.

இப் படியாக நாம் ஐ.நா. நட்புறவை சேதமாக்கியிருந்தோம். கடந்த 10 மாதங்களில் இந்த நட்புறவை மீண்டும் கட்டியெழுப்ப முனைந்ததையிட்டு நாம் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 70ஆவது ஆண்டு நிகழ்வு கொழும்பில் உள்ள ஐ.நா. வளாகத்தில் நேற்று சனிக்கிழமை பகல் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றச் சபாநாயகர் கரு ஜயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி கலாநிதி சுபைனே நண்டி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால மேற்கண்டவாறு கூறினார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு நீண்ட கால உறுப்பினராக இலங்கை இருப்பதோடு அண்மையில் நாங்கள் ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராகிய 60ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியிருக்கின்றோம். எனவே, இந்த ஐக்கிய நாடுகள் தினத்தில் இங்கு உரையாற்றுவதையிட்டு நான் பெருமையடைகின்றேன்.

ஒரு உறுப்பு நாடு என்றவகையில் இலங்கை இந்த அமைப்பில் செயல்திறனும் பொறுப்பும் வாய்ந்த ஒரு பாத்திரத்தை வகித்து வருகிறது. ஐக்கிய நாடுகள் சபை ஸ்தாபிக்கப்பட்டு 70 வருடங்கள் ஆன நிலையிலும் இலங்கை அதில் உறுப்பினராகி 60 வருடங்கள் பூர்த்தியாகியிருக்கின்றது.

கடந்த மாதம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நான் உரையாற்றியவேளையில் குறிப்பிட்டதுபோல் இலங்கை ஒரு தேசமாக ஐக்கிய நாடுகள் சபையினுடைய சாசனம், சர்வதேச மரபுகள் மற்றும் கொள்கைகளை மதிக்கின்றது. மனித உரிமைகளைப் பேணுதல் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் ஆகியன ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான நோக்கங்களாக இருக்கின்றது. இவற்றைப் பூரணமாகப் பொறுப்புடன் நிறைவேற்ற இலங்கை தயாராக இருக்கின்றது.

இதன்பிரகாரம் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு நாம் இலங்கையில் ஒரு புதிய நிகழ்ச்சித் திட்டத்தையும் செயற்திட்டத்தையும் நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம்.

இலங்கை, ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு பன்முகத்தன்மையான பங்கு வகிக்கிறது. 1960 களில் தொடங்கிய ஐ.நா. அமைதி காக்கும் பணிக்காக நம்முடைய பங்களிப்பு தொடர்கின்றது. எதிர்காலத்திலும் ஐ.நா. அமைதி காக்கும் பணிக்கு எமது அர்ப்பணிப்புமிக்க பங்களிப்பை மேலும் அதிகரிக்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டுக்கான எம்முடைய புதிய குறிக்கோளானது நிலையான வளர்ச்சி மற்றும் நல்லிணக்கம் ஆகிய இரட்டை நோக்கங்களை அடைவதற்கானதாகவே காணப்படுகின்றது. இது இந்தச் சூழலில் அடிப்படை தேவையாக இருக்கின்ற நேர்மையாக கடந்த காலத்தினை கையாள்வதனூடாக ஒரு நவீன இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்தைக் கொண்டது.

சமூக ஜனநாயகத்தின் பாதையைப் பின்பற்றி, இலங்கை மோதல் ஆண்டுகளில், மனிதவள மேம்பாட்டு குறியீட்டு உயர்ந்த இடத்தில் வைத்திருப்பதில் வெற்றி அடைந்துள்ளது. இந்த வெற்றியை ஐக்கிய நாடுகள் சபையின் புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான நமது உறுதிப்பாட்டுக்கான சான்றாகும்.

இலங்கை அரசு முன்னுரிமை ரீதியில் வரையறுக்கும் செயற்திட்டங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு 2012ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் -2013 - 2017 ஐ.நா. அபிவிருத்தி உதவி கட்டமைப்பு- உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. இதனூடாக புத்தாயிரமாம் ஆண்டில் நிலையான அபிவிருத்தி மற்றும் தரமான சமூக சேவையினை வழங்கும் பொருட்டு உள்ளக பொருளாதார வளர்ச்சி, மனித திறன்கள் மற்றும் நல்லிணக்கததை பலப்படுத்துவதனூடாக சமாதானத்தை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றை அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்பட்டது.

இலங்கையர்களுக்கு ஒரு சிறந்த வாழ்க்கையை வழங்கும் பொருட்டு சமூக, பொருளாதார, மனிதாபிமான மற்றும் கலாசாரம் ஆகியவற்றில் உள்ள சவால்களை இனம் கண்டு அதுதொடர்பான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக இலங்கையில் அபிவிருத்தி மற்றும் மனிதாபிமான செயற்பாடுகளில் பங்காளியாகச் செயற்படும் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பில் நாம் முழுமையான திருப்தி அடைந்திருக்கின்றோம்- என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிய போர் குறித்து ஜோர்தானில் பேச்சு

## ஜோன் கெரியும் கலந்து கொண்டார்

வொஷிங்டன், ஒக்.25

சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டுப்போரை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் சர்வதேச மட்டப் பேச்சுக் குறித்து ஆலோசிக்கும் வகையில் அமெரிக்க ராஜாங்கச் செயலர் ஜோன் கெரி ஜோர்தான் புறப்பட்டுச் சென்றுள்ளார்.



நேற்றுமுன்தினம் அவர் சவூதி அரேபியா, துருக்கி மற்றும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதுவரை நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களில் ஈரான் அழைக்கப் படாதிருக்காத நிலையில் நடைபெறவுள்ள பேச்சுக்கு ஈரான் அழைக்கப்பட வேண்டும்என்றுரஷ்யவெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த கலந்துரையாடலில் சிரிய ஜனாதிபதி அல் அசாத்தின் எதிர்காலம் குறித்து ஒருமித்த கருத்தைப் பெற முடியவில்லை என்று சவூதி அரேபிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (ற)

# ஆயுத அதிகரிப்புக்கு இந்தியாவே காரணம்

## பாகிஸ்தான் பிரதமர் தெரிவிப்பு

இஸ்லாமாபாத், ஒக்.25

இந்தியாதனது ஆயுதபலத்தை அதிகரித்து வருகின்ற நிலையில் அதற்கான எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ளது என்று பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர், வொஷிங்டனில் உள்ள அமெரிக்க சமாதான கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள் ளார். அங்கு தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது–

தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் மட்டத்திலானபேச்சை இந்தியாரத்து செய்திருக்கும் நிலையில் பாகிஸ்தானை அச்சுறுத்தும் வகையில் தனது ஆயுத பலத்தை அதிகரித்து வருகிறது. இப்படிச் செய்தால் பாகிஸ்தானும் பதிலுக்கு இராணுவ நடவடிக்கையைத் தீவிரப் படுத்த வேண்டியிருக்கும்.

நான் ஆட்சிக்கு வந்த பின்னர் இரண்டரை ஆண்டுகளுக்கு முன் இந்தியாவுடன் நல்லுறவை வளர்க்கப் பல முயற்சிகளை எடுத்து வந்தேன்.

டில்லியில் பிரதமர் மோடி பதவியேற்பு விழாவுக்கு என்னை அழைத்த போதும் கூட நான் அதை ஏற்று விழாவில் கலந்து கொண்டேன். ஆனால், இதையெல்லாம் இந்தியா பேச்சை இரத்து செய்ததன் மூலம் மறந்துவிட்டதாகவே கருதுகிறேன். – என்றார். (ற)

# முகமூடி மனிதன் தாக்கி ஆசிரியர், மாணவன் சாவு

## சுவீடனில் சோகம்




ஸ்டாக்ஹோம், ஒக்.25

பாடசாலைக்குள் முகமூடி அணிந்து வந்த மர்ம நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் ஆசிரியரும், மாணவனும் உயிரிழந்தனர். சுவீடனின் திரோல்கட்டன் பிரதேச பாடசாலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. உடனடியாக சம்பவ இடத்தைச் சுற்றி வளைத்த பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் குறித்த நபரும் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலை நாடுகளில் தற்போது ஹாலோவீன் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. அதைப் பயன்படுத்தியே குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் நடப்பதற்கு முன்பு எடுக்கப்பட்ட புகைப்படத்தில் , முகமூடி அணிந்து ,கறுத்த உடையுடன் , கையில் வாள் போன்ற கூரிய ஆயுதத்துடன் அடையாளம் காணப்பட்டுள்ளான். சம்பவத்தை நேரில் பார்த்த சிறுமி கூறுகையில், அவரை ஜோக்கர் மான் என நினைத்தோம், ஒரு போராளியைப் போன்று நடந்து காட்டினார், ஆனால் சடுதியாக கையில் வைத் திருந்த வாளினால் மாணவர்க ளைச் சரமாரியாகத் தாக்கத் தொடங்கினார். மாணவர்கள் அனைவரும் செய்வதறியாது அதிர்ச்சியில் உறைந்தனர், என்றார்.


இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த சுவீடன் பிரதமர், இது கரி நாள், உயிரிழந்தவர்களுக்கும் , அவர்களின் குடும்பத்தினருக்கும் எனது அனுதாபங்களை தெரிவிக்கிறேன். நடைபெற்ற சம்பவத்துக்காக பாடசாலை சமூகத்திற்கு எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

தாக்குதலில் ஈடுபட்ட நபர் குறித்த தகவல்களை பொலிசார் வெளியிடவில்லை. இந்தச் சம்பவம் சுவீடனில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற–ரி4)

# வடகிழக்கு நைஜீரியாவில் இரட்டைக் குண்டு வெடிப்பு

யோலா, ஒக்.25

வடகிழக்கு நைஜீரியாவில் இடம் பெற்ற இரட்டைக் குண்டு வெடிப்புகளில் 42 பேர் உயிரிழந்துள்ளனர். 100க்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.



யோலா நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாசல் ஒன்றை இலக்கு வைத்து முதலாவது தாக்குதல் நேற்று முன்தினம் நடத்தப்பட்டுள்ளது. அதில் 27 பேர் உயிரிழந்தனர்.

அதேவேளை மைடூரி எனும் பகுதியில் நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டனர். இரு தாக்குதல் சம்பவங்களிலும் 100க்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரையில் எந்த அமைப்பும் உரிமை கோரவில்லை. எனினும் நைஜீரியாவில் தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்தி வரும் போகோ ஹாரம் தீவிரவாத அமைப்பு இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

குறித்த அமைப்பினர் தமது கொள்கைகளைக் கடைப்பிடிக்காத முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களை இலக்கு வைத்துத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். (ற)

# இந்தோனேசிய காட்டுத்தீ தீவிரம் குழந்தைகளை வெளியேற்றத் திட்டம்

இந்தோனேசியாவில் தீவிரமடைந்து வரும் காட்டுத் தீயால் பரவிய கடும் புகையால் ஏற்பட்டுள்ள சூழல் மாசடைவை அடுத்து பாதிப்படைந்த குழந்தைகளைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு போர்க்கப்பல்கள் மற்றும் படகுகளை அதிகாரிகள் தயார்ப்படுத்தி வருகின்றனர்.

தென் கிழக்கு ஆசியாவில் பெரும் பகுதியின் வளி மாசடைந்துள்ள நிலையில் பலர் தாமாகவே குறித்த பகுதியில் இருந்து வெளியேறி வருகின்றனர் என்று இந்தோனேசிய ஒருங்கிணைப்புப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தோனேசியாவின் 6 மாகாணங்கள் குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் வசிப்பதற்கு உகந்தவை அல்ல என்று இனங்காணப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதையடுத்து இந்த வெளியேற்றல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும், அதற்கு ஜனாதிபதியின் ஒப்புதல் நடவடிக்கை பெறப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# ஆர்ப்பாட்டம் கலவரமானது; கொங்கோவில் 4 பேர் சாவு

லண்டன், ஒக்.25

கொங்கோ ஜனாதிபதிக்கு எதிராக அந்த நாட்டு எதிர்க்கட்சிகள் நடத்திய ஆர்ப்பாட்டம் கலவரமாக உருமாறியது.



அதையடுத்து ஆர்ப்பாட்டதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொங்கோவில் 71 வயதான சாஸ்சோ நிகிசா ஜனாதிபதியாக உள்ளார். அவர் தனது பதவிக் காலத்தை நீடிக்கும் வகையில் சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வர நடவடிக்கை எடுத்துள்ளார். அந்தச் சட்டத்திருத்தம் ஜனாதிபதிப் பதவியில் இருப்பவரது வயது எல்லையை அதிகரிக்கும் வகையிலும், ஆட்சிக் காலத்தை அதிகரிக்கும் வகையிலும் மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றன. அதன்போது அரசுக்கு எதிரான கோசங்கள் எழுப்பட்டதுடன் வாகனங்களும் தீ வைத்து எரிக்கப்பட்டன.

அதையடுத்து கூட்டத்தைக் கலைக்கப் பொலிஸார் புகைக் குண்டுத் தாக்குதல் மேற்கொண்ட போதும் அது பயனளிக்கவில்லை. அதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது எதிர்க்கட்சியைச் சேர்ந்த நால்வர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று முறிப்பு ம.வி. - செட்டிகுளம் ம.வி. சமபோச தொடரின் இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், ஒக். 25
சமபோசகிண்ணத்துக்காகவவுனியா மாவட்ட பாடசாலைகளின் 15 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கு (ஆண்கள் பிரிவு) இடையில் முன்னெடுக்கப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரில் மூன்று முறிப்பு மகா வித்தியாலய அணி, செட்குளம் மகா வித்தியாலய அணி ஆகியவை இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

**முதலாவது அரையிறுதி**

முதலாவது அரையிறுதியாட்டத்தில் முஸ்லிம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து மூன்று முறிப்பு மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் குறிக்கப்பட்ட நிமிடங்கள் வரை எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலைத் தவிர்ப்பு வரை இழுபறிப்பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளை கச்சித மாகப் பயன்படுத்திய மூன்று முறிப்பு மகா வித்தியாலய அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

**இரண்டாவது அரையிறுதி**

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் செட்டிகுளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து நெடுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய அணி மோதிக்கொண்டது. இதில் செட்டிகுளம் மகா வித்தியாலய அணி 1:0 என்ற கோல்கணக்கில்வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.
(ம-23)

## இன்றைய மோதல்கள்



**மைக்கல் வி.கழகத்தொடர்**

மாங்குளம், ஒக். 25
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழத்தினால் நடத்தப்பட்டுவரும் வட மாகாண அணிகளுக்கு இடையிலான 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வடமராட்சி றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து மன்னார் கிறீன் பீல்ட் அணியும், மாலை 4.30 மணிக்கு வடமராட்சி வல்வை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னார் அடம்பன் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.
(ம-422)

**786 வி.கழகத் தொடர்**

வவுனியா உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் 786 விளையாட்டுக் கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில்ஈஸ்வரன் அணியை எதிர்த்து 786 அணி மோதவுள்ளது.
(ம-23)

**இலங்கை உதைபந்தாட்ட சங்கத் தொடர்**


40 வயதைக் கடந்தவர்களுக்கான உதைபந்தாட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இலங்கை உதைபந்தாட்ட சிரேஸ்ட சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து அம்பாறை ஈஸ்வரன் யுத் அணி மோதவுள்ளது.
(ம-422)

## யைற்சின் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஒக். 25
பருத்தித்துறை ஹாட்லி யைற்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான ரி-20 தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெறும் இறுதியாட்டத்தில் ஜொனியன்ஸ் அணியும் ஜொலிஸ்ராரும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. முன்னதாக காலை 9 மணியளவில் இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சென்றல் வி.கழகத்தை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. வி.கழகம் மோதவுள்ளது.
(ம)



மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்துக்கு வடமாகாண சபை உறுப்பினர் சிவயோகனால் கோல் கம்பங்கள் கடந்த கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ம-422)



*கராத்தே ஆசிரியர் அன்ரோ டினேஸ் அமெரிக்காவைத் தலைமையகமாக கொண்ட கராத்தே அமைப்பு ஒன்றின் வெளிவிவகாரப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கை கராத்தே தேசிய சம்மேளனம், இலங்கை பாடசாலைகள் கராத்தே சம்மேளனம், இலங்கை சோட்டோக்கான் கராத்தே சம்மேளனம் ஆகியவற்றின் அங்கத்தவரும் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவனும் ஆவார். (ம-23)*

## அடுத்த ஐ.பி.எல். தொடரில் விளையாடுகின்றார் டோனி

சென்னை சுப்பர் கிங்ஸ் மீதான இரண்டு வருட தடையை அடுத்து அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு வேறொரு அணியில் விளையாட முடிவுசெய்துள்ளார் டோனி.
சென்னை, ராஜஸ்தான் அணிகளின் உரிமையாளர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து இந்த இரண்டு அணிகளுக்கும் இரண்டு வருட காலம் தடை விதிக்கப்பட்டது. இதனால் அடுத்த வருடமும், 2017ஆம் ஆண்டும் சென்னை பங்கேற்காத நிலைமை ஏற்பட்டது. விளையாடினால் சென்னைக்குத் தான் என்ற முடிவில் அடுத்த இரண்டு வருடமும் ஐ.பி.எல். தொடரை விட்டு விலகியிருப்பதாக தெரிவித்திருந்தார் டோனி.
இந்த நிலையில் சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்குப் பதிலாக தெரிவுசெய்யப்பட்ட இரண்டு புதிய



அணிகளில் ஓர் அணிக்கு தலைவராக டோனி களமிறங்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. டோனி தலைவராகப் போகும் அணியிலேயே ஜடேயா, அஸ்வின், ரெய்னா, பிளாஸிஸ் போன்ற வீரர்கள் இடம்பெற்றிருக்கின்றனராம்.
சென்னையின் தடைக்காலம் முடிவடைந்த பின்னர் 2018ஆம் ஆண்டின் ஐ.பி.எல். தொடரில் டோனி, ரெய்னா, ஜடேயா, அஸ்வின், பிளாஸிஸ் இவர்கள் மீண்டும் சென்னைக்கே திரும்புவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.
(ம)

# யங்கம்பன்ஸ் மூன்றாமிடம்




யாழ்ப்பாணம், ஒக். 25
யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையில் மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவந்த உதைபந்தாட்டத் தொடரில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் நவஜீவன்ஸை வீழ்த்தி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது யங்கம்பன்ஸ் அணி.
நேற்று சனிக்கிழமை அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், முதல் பாதிவரை இரு அணிகளாலும் ஒரு கோலேனும் பதியப்படவில்லை. இரண்டாம் பாதியும் இழுபறியாக நீடித்தது. நீண்ட போராட்டத்தின் பின்னர் யங்கம்பன்ஸ் வீரன் குகரதன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்ய அதுவே ஆட்டத்தின் இறுதிக் கோலும் ஒரே கோலுமானது. முடிவில் 1:0என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தினை தனதாக்கிக் கொண்டது யங்கம்பன்ஸ்.
(ம-23)

## வில்லியர்ஸைப் புகழ்ந்த கோக்லி

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 4ஆவது ஒருநாள் ஆட்டத்தில் சதம் விளாசிய வில்லியர்ஸை புகழ்ந்துள்ளார் அதே ஆட்டத்தில் இந்தியா சார்பாக சதம் விளாசிய கோக்லி.
குறித்த ஆட்டத்தில் வெற்றியிலக்காக 300 ஓட்டங்களை நிர்ணயித்தது இந்தியா. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா இறுதிவரை அச்சுறுத்திக் கொண்டிருந்தது. இறுதிக் கட்டத்தில் பவுண்டரிகள் சிக்சர்களாக விளாசிக்கொண்டிருந்த வில்லியர்ஸ் சிக்சருடன்சதம்கடந்தார். வில்லியர்ஸை வீழ்த்தியதாலேயே ஆட்டம் இந்தியாவுக்கு சாதகமாக அமைந்தது. வில்லியர்ஸின் வில்லத்தனமான ஆட்டத்தை புகழ்ந்து தள்ளியுள்ளார் கோக்லி.
வில்லியர்ஸ் தொடர்பாக கோக்லி தெரிவித்ததாவது:- 'வில்லியர்ஸ் துடுப்பெடுத்தாடும் பொழுது எனது இதயம் என் வாயில் தான் இருக்கும். இதை நானே உடைமாற்றும் அறையில் வில்லியர்ஸிடம் அடிக்கடி சொல்வேன். அந்த அளவு நம்ப முடியாத வகையில் அசத்தக்கூடியவர் அவர். வெற்றிக்காக போராடக் கூடியவர். அவர் அவரையே பாராட்டிக் கொள்ள மாட்டார். அதனால் நான் அவரைப் பாராட்டுகிறேன். தென்னாபிரிக்கா கிரிக்கெட் மட்டுமல்ல கிரிக்கெட் உலகமே பார்த்த அற்புத வீரா் அவர் என்றார்.
(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைலோ கிண்ணம் மீண்டும் மேரிஸிடம்

## யாழில் அசைக்க முடியாத ஆதிக்கம்




யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையே தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாகவும் நடத்தப்பட்ட மைலோ கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் மூன்றாவது தடவையாகவும் கிண்ணம் வென்று ஹற்றிக் சாதனை படைத்துள்ளது நாவாந்துறை சென்.மேரிஸ் அணி.

சமீபகாலமாக நடத்தப்பட்டு வந்த மைலோ தொடரின் இறுதியாட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் அணியும் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியும் நேற்றுச் சனிக்கிழமை அரியாலை உதைபந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் பலப்பரீட்சை நடத்தின. ஆரம்பம் முதலே அன்ரனிஸ் அணிக்கான வாய்ப்புக்கள் அமையத்தான் செய்தது. ஆனால் கோல் கணக்கை ஆரம்பிக்கத் தவறியது அந்த அணி. 15ஆவது நிமிடத்தில் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்தார் மேரிஸின் யூட். மேலதிக கோல்கள் பதியப்படாத நிலையில் 1:0 என்ற மேரிஸின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல் பாதி.

எதிர்பார்ப்புக்கள் இரட்டிப்பாகியிருக்க ஆரம்பமானது ஆட்டத்தின் இரண்டாம் பாதி. விட்டுக்கொடாத வலுவான போராட்டம் அரங்கேறியது. கோல் கணக்கில் மாற்றமில்லாமல் சென்று கொண்டிருந்த ஆட்டத்தில் இரண்டாவது கோலை விளாசினார் மேரிஸின் சாள்ஸ். கிட்டத்தட்ட உறுதியாகியிருந்த மேரிஸின் வெற்றியை மேலும் வலுப்படுத்தும் விதமாக யூட் 55 ஆவது, 60ஆவது நிமிடங்களில் மேலும் இரண்டு கோல்களை விளாச முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் கிண்ணத்தைக் கைப்பற்றியது சென்.மேரிஸ்.

தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் நடத்தப்பட்ட மைலோ கிண்ணத் தொடரில் மூன்று தடவைகளும் சென்.மேரிஸ் அணியே கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. ஆட்ட நாயகனாக சென்.மேரிஸ் அணியின் யூட் தெரிவான அதேநேரம் தொடராட்ட நாயகனாக சென்.அன்ரனிஸ் அணியின் கலிஸ்ரஸும் சிறந்த கோல்காப்பாளராகச் சென்.மேரிஸ் அணியின் சுதர்சனும் தெரிவானார்கள். (ம-23)

# தீவுகளை சுருட்டும் முனைப்பில் இலங்கை

## வெற்றிக்கு இன்னமும் 9 இலக்குகள் தேவை




இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான 2 ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட் டத்தின் மூன்றாம் நாளான நேற்றைய தினம் இலங்கை இரண்டாவது இன்னிங் ஸிற்காக 206 ஓட்டங்களில் சுருண்டது டன் 244 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிவரும் தீவுகள் நாள் முடிவில் 20-1 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க முன்னிலை வீரர்கள் எவருமே சிறப்பாக செயற்படாத நிலையில் சகல இலக்குகளையும் இழந்து 200 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. சிறிவர்த்தன அதிகபட்சமாக 68 ஓட்டங் களைப் பெற்றார். பந்துவீச்சில் தீவுகள் சார்பாக வரிக்கன் 4 இலக்குகளையும் கோல்டர், ரெய்லர் இருவரும் தலா 2 இலக்குகளையும் றோச், பிஸ்கு இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தீவுகள் 163 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. பந்துவீச்சில் இலங்கை சார்பாக பிரசாத் 4 இலக்குகளையும் பெரேரா 3 இலக்குகளையும் சிறிவர்த்தன 2 இலக்குகளையும் கேரத் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

37 ஓட்டங்கள் முன்னிலை பெற்று இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கைக்கு இரண்டாவது தடவையாகவும் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. இரண்டாம் நாள் முடிவில் இலங்கை 76-2. சில்வா 31 ஓட்டங்களுடனும் சந்திமல் 5 ஓட்டங்களுடனும் மூன் றாவது நாளுக்காக களமிறங்கினர். வந்த வேகத்திலேயே ஆட்டமிழந்தார் சில்வா. சந்திமல்லும் நிலைக்கத்தவற மத்தியூஸ், சிறிவர்த்தன இருவரும் இணைந்து மத்திய வரிசையில் பலம் சேர்த்தனர். இருப்பினும் இருவருமே அரைச்சதத்தை நிறைவுசெய்யவில்லை. பின்வரிசையும் அணியை கைவிட 206 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது இலங்கை. அதிகபட்சமாக மத்தியூஸ் 46 ஓட்டங்களையும் சிறிவர்த்தன 42 ஓட்டங்களையும் எடுத் தனர். பந்துவீச்சில் தீவுகள் சார்பாக பிரீத் வைட் 6 இலக்குகளையும் ரெய்லர், வறிக்கன் இருவரும் தலா 2 இலக் குகளையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் முன்னிலை வகித் தது கைகொடுக்க தீவுகளுக்கு இலக்காக 244 ஓட்டங்கள். ஆரம்ப வீரர்களாக பிரீத்வைட் மற்றும் ஜோன்சன் அடிக்கடி மழை அச்சுறுத் தினாலும் அதற்குள்ளும் வீழ்ந்தது ஓர் இலக்கு. மூன்றே ஓட்டங்களுடன் பிரீத்வைட் ஆட்டமிழந்தார். நாள் முடிவில் தீவுகள் 20-1. (ம)

ஒரு நாளில
எடுக்கலாம்
எண்டேக்க....



HDFC LEASING
அழையுங்கள் - 0115 73 73 73
Fitch Rating : BBB (lka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவா? தெ.ஆபிரிக்காவா?

# இறுதி ஆட்டம் இன்று



இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக்கொண்ட ஒருநாள்தொடரின் இறுதியாட்டம் இன்று மும்பை வான்கடே மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்று முடிந்த முதல் நான்கு ஆட்டங்களில் இரு அணிகளும் தலா இரண்டு ஆட்டங்களில் வெற்றிபெற்றுள்ளன. இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியிடமே கிண்ணம் செல்லும். இந்திய அணியில் மாற்றங்கள் செய்யப்பட வாய்ப்பில்லை. தென்னாபிரிக்கா சார்பாக இன்றைய ஆட்டத்தில் மோர்கல் அணிக்குத்திரும்பவாய்ப்புக்கள் உள்ளன. (ம)



# காலிறுதிக்குள் சாய்னா

பிரான்ஸ் நாட்டின் பூப்பந்தாட்டத் தொடர் தற்பொழுது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் பெண்கள் ஒற்றை யர் பிரிவில் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார் சாய்னா நேவால். காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் சாய்னா நெவாலை எதிர்த்து மோதினார் ஜப்பானின் மிதானி. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதல் இரண்டு செற்களையும் 21:19, 21:16 என்ற அடிப்படையில் கைப்பற்றிய சாய்னா காலிறுதிக்குள் நுழைந்தார். (ம)

## கோக்லிக்கும் அனுஸ்காவுக்கும் சண்டையாமே!

இந்திய அணியின் உபதலைவர் கோக்லியும் பொலிவுட் நடிகையான அனுஸ்கா சர்மாவும் காதலித்து வந்த நிலையில் இவர்கள் இருவருக்கும் இடையே தமது திருமணம் தொடர்பான வாக்குவாதங்கள் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவருகிறது.

தொடர்கள் நடைபெறும் வேளையில் மைதானத்துக்கு அனுஸ்கா வருவதும், தொடர்கள் இல்லாத நாள்களில் அனுஸ்கா படப்பிடிப்பில் இருக்கும் நாடுகளுக்கு கோக்லி செல்வதும் சில மாதங்களாக இடம்பெற்றுவந்தன. இவர்கள் இருவரும் தமது திருமணத்தை இந்த வருடத்தின் இறுதிப்பகுதியில் நடத்தத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் கிரிக்கெட்டில் கவனம் செலுத்துவதற்காகத் திருமணத்தைச் சிலமாதங்களுக்கு தள்ளிப் போட்டுள்ளாராம் கோக்லி. இதனால் அனுஸ்காவுக்கும் கோக்லிக்கும் இடையில் தமது திருமணம் தொடர்பாகக் குட்டிச் சண்டைகள் இடம்பெறுகின்றனவாம். மட்டுமல்லாமல் 29ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஹர்பஜன் திருமணத்துக்கும் 'உங்களோட சேர்ந்து நான் வரமாட்டேன். நீங்க தனியப் போங்க' என்றவாறு சொல்லியிருக்கிறாராம் அனுஸ்கா. எதுஎப்படியோ அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையைப்பற்றி விவாதிக்காமல் இருப்பதே அவர்கள் இருவருக்கும் கொடுக்கும் மரியாதை.' (ம)



விளம்பரங்கள் மூலம் அதிக பணம் சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்களின் பட்டியலில் 380 கோடிகளுடன் ஐந்தாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார் டோனி. இதன் மூலம் அவர் உதை பந்து ஜாம்பவான் ரொனால்டோ, வேகமான மனிதர் உசைன் போல்ட் ஆகியோரை பின்னுக்குத் தள்ளியுள்ளார். குறித்த தரவரிசைப் பட்டியலில் அமெரிக்காவைச் சேர்ந்த கோல்ப்வீரர் டைகர்உட்ஸ் 495 கோடிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். (ம)




**தேவை**

கணினியில் Stock மற்றும் billing செய்வதற்கு பெண் ஒருவர் தேவை. (யாழ்.நகர்) கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

T.P: 0778314201

**Personal Class-கணினி**

Laptop மூலமாக உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்:KRC நல்லூர்

**ALK ENGINEERING**

Design - Construction - Engineering

உங்களுக்கான அழகிய வீடுகள் மற்றும் கட்டடங்களை உங்களுக்குப் பிடித்தமான வகையில் சிறந்த கட்டட வடிவமைப்புடன் (ஆர்க்கிடெக்), நவீனமுறையில், குறைந்த செலவில், உயர்ந்த தரத்துடன் நிர்மாணித்துக் கொள்வதற்கு

தொடர்பு: 076 726 6899

Email: alkengineering.lk@gmail.com

**Experience our totally new method to learn to communicate confidently in English**

We invite you to join us in this one day fun & friendly English communication workshop and see the difference yourself!

Registration fee Rs.200 only Free for Spectra Students

Day : 27.10.2015

Time : 9 am to 2 pm

Place : Spectra Skills No.19, Stanley Road, Jaffna.

Places limited and will be allocated on a first come first served basic!

If you are interested in participating in this workshop, confirm your participation by an SMS <Full Name><English workshop> to 0767520940 before 26 October 2015.

Spectra Skills No.19, Stanley Road, Jaffna. Tel: 0212221422/ Mob: 0767520940

**வேலைவாய்ப்பு**

கொழும்பில் இயங்கிவரும் தனியார் நிறுவனமொன்றிற்கு அலுமினிய பிற்றிங், வெல்டிங், பெயின்டிங் வேலை தெரிந்த வேலையாள்களும் உதவியாளர்களும் உடனடியாகத் தேவை.

சம்பளம் 45,000 - 60,000 வரை

தங்குமிட வசதி, சாப்பாடு ஒழுங்கு செய்து தரப்படும்.

T.P - 077 498 2578

Sivo

யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பாக 213, இராமநாதன் வீதி, திருநெல்வேலி. 077 044 4496, 021 221 2424

உலகத்தரம் வாய்ந்த
* Bosch
* Swann
* CCTV Cameraக்களும், சாதாரண Camera க்களும் விற்பனைக்கு உள்ளன.

அத்துடன்
* Laptop & Desktop
* Alarming System,
* Camera & Cam Corder

திருத்திக்கொடுக்கப்படும்.

USA Lottary Visa விண்ணப்பப் படிவங்கள் உள்ளன.

**தேவை**

கணினி அறிவுடைய பெண் விற்பனையாளர் தேவை. சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

**அமெரிக்க லொத்தர் விசா**

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

இன்னும் 5 நாளில் பதிவுகள் நிறைவடைகின்றன.

V2 TRAVELS

யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | வல்வெட்டித்துறை 0776697960

**விற்பனைக்கு**

Dell i7 2.70GHZ

உயர்தர மடிக்கணினி விற்பனைக்கு உண்டு.

(64492) (14,15,16) தொடர்பு: 077 131 1663

KU Education

No 1 for: IELTS AC/GM, A1 Life Skils, Spoken English, தனிப்பட்ட வகுப்பு

16 வருடத்துக்கு மேற்பட்ட அனுபவம் உள்ள இங்கிலாந்து பட்டதாரி விரிவுரையாளிடம் கற்கும் வாய்ப்பு, விபரங்கள் :

http://edu.kugroup.info/ielts

Knowledge Universe

No 626,1/1 K.K.S Rd,Jaffna

MEGA SALE

**தீபாவளி தினத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை**

பிரம்பு கதிரை 14750/= ; 24500/= 17500/= ; 13800/= 8500/= ; 14750/= 10750/= ; அலுமாரி - 6x3 13000/= 8950/= ; Table Fan 4000/= 3250/= ; 6 கதிரை ரீப்போ 5150/= 4380/= ; மெத்தை 3850/= 2200/= ; kitchen rack 2100/= 1550/= ; 8750/= 6100/= ; 41300/= 32900/=

இல: 33, அரசடி வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். (தட்டாதெருசந்தியில் இருந்து அரசடி வீதியில் 100m தூரத்தில்) T.P: 076 821 9413


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பிதழ் 25.10.2015




# ஈழ மண்ணில்
# இந்திய போர்க் குற்றம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மு.ஈழத்தமிழ்மணி



# ஈழ மண்ணில் இந்திய போர்க் குற்றம்

1987 ஒக்ரோபர் 10ஆம் நாள் ஈழத் தமிழர்களின் போராட்ட வரலாற்றில் தமிழினப் படுகொலைகளையும், துரோகங்களையும் தமிழர்களைப் பாதுகாப்பதற்காக வந்தோமென கூறிக்கொண்டு தமிழர்களின் தாயகப் பிரதேசங்களில் கால்பதித்த இந்திய அமைதிப் படையினர் மேற்கொண்ட ஈனச் செயல்களையும் அடக்குமுறைகளையும் மறக்க முடியாது.

1987 ஒக்ரோபர் மாதம் 10 ஆம் நாள் இந்திய அமைதிப் படையினர் யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியிலிருந்து பிற்பகல் வேளையில் நகரை நோக்கிப் போர் செய்வதற்கான ஆயதங்களோடு புறப்பட்டனர். இந்திய அமைதிப் படையினர் அப்போது விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதற்கும் தமிழ் மக்களை வேட்டையாடுவதற்கும் பெரும் போரைப் பிரகடனப்படுத்தியிருந்தனர்.

'பவான்' என்ற பெயரோடு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தவர்கள் பலநூற்றுக் கணக்கான போராளிகளையும், குழந்தைகளையும், சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்களையும் கொன்றொழித்தனர். அது மட்டுமன்றி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் அதிரடியாகப் புகுந்து மருத்துவர்கள், தாதியர்கள், பணியாளர்கள் 21 பேர் உட்பட 85 பேரைச் சுட்டுக் கொன்று வெறியாட்டம் நிகழ்த்தினர்.

ஒக்ரோபர் 11ஆம் நாள் கொக்குவில் பிரம்படி வீதியில் இந்திய இராணுவத்தினர் டாங்கிகள் சகிதம் சென்று வீடுகளுக்குள் இருந்த மக்களைச் சுட்டுக்கொன்றது மட்டுமன்றி, அச்சமடைந்த மக்களில் பலர் வீதியால் தப்பி ஓடிய போது சுட்டுக்கொன்றும் குற்றுயிரோடு விழுந்து கிடந்தவர்கள் மீது டாங்கிகளை ஏற்றி உடல்களை இனம்காணாதவாறு சிதைத்தும் தங்கள் ஈனத்தனமான வெறித்தனங்களைச் செய்தனர். 1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில், இந்தியப் படையினரின் இந்த அட்டூழியங்கள் தொடர்ந்தன.

ஒக்ரோபர் 21, 22ஆம் நாள்களை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மறக்க முடியாது. இந்த நாள் வருடாவருடம் நினைவு கூரப் பட்டும் வருகின்றது. இந்த வருடம் 28 வது ஆண்டு.

ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி இரவு வேளையிலிருந்து குடாநாட்டுக்குள் இந்திய அமைதிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் வெடித்த போரில் காயப்பட்ட மக்கள் ஏராளமானோர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபடியிருந்தனர். இவ்வாறு தினமும் காயப்பட்டவர்கள் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு விடுதிகள் யாவும் காயப்பட்ட நோயாளிகளால் நிரம்பி வழிந்தன.

நோயாளர்களுக்கு உதவியாகவும், மருத்துவமனை பாதுகாப்பானது என்று கருதியும் பலரும் வைத்தியசாலையிலேயே தஞ்சமடைந்திருந்தனர். மருத்துவ மனைகள் மீது தாக்குதல்களை மேற்கொள்வது போர் நீதியாகாது என்பதைக் காந்திய தேசத்தின் படையினர் மதிப்பார்கள் என்று அநேகர் நம்பினர். பொது மருத்துவமனைக்குள் புகுந்து கொலை வெறியாட்டத்தை நடத்துவார்களென அவர்களில் எவரும் கனவுகூடக் கண்டிருக்கவில்லை.

யாழ். நகரைக் கைப்பற்றுகின்ற முயற்சியில் இந்தியப் படைகள் விடுதலைப் புலிகளோடு சண்டையிட்டுக்கொண்டிருந்தன. இயல்பு வாழ்க்கை முற்றாக முடங்கிப் போனது. அரச ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் கடமைக்குச் செல்ல முடியாத நிலையிலும், எவருமே வீட்டுக்கு வெளியே செல்லமுடியாத நிலையிலும் 11ஆம் திகதி முதல் முடக்கம் தீவிரமாக இருந்தது. அப்போது யாழ்ப்பாணத்தின் முக்கிய பிரமுகர்கள் அரச அதிபரின் அலுவலகத்திலிருந்து இந்தியத் தூதரகத்துக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இது பற்றி முறையிட்டனர். இதையடுத்து இந்தியப் படையினரின் எறிகணைத் தாக்குதல்கள் குறைவடைந்தன.

ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி எறிகணைத் தாக்குதல்களும், விமானக்குண்டு வீச்சுக்களும் தீவிரமாக நடந்துகொண்டிருந்தன. இவை குறித்தும் உரியவர்களிடம் முறைப்பாடுகள் தொலைபேசியில் தெரிவிக்கப்பட்டுக் கொண் டிருந்தன. ஆனால், இந்தியத் தூதரகம் அப் பாவி மக்களுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தக்கூடிய இத்தகைய தாக்குதல்கள் குறித்துத் தங்களுக்கு எதுவும் தெரியாதெனக் கைவிரித்துவிட்டது. மக்களைப் பற்றிக் கவலையின்றி இந்தியப் படையினர் நடத்திய தாக்குதல்களுக்கு அரசியல் ஆதரவு இந்த வழியில் கிடைத்தது.

ஒக்ரோபர் மாதம் 21ஆம் நாள் – அன்று தீபாவளி –இந்தியப் படையினர் யாழ். நகரைக் கைப்பற்றுவதுடன் போதனா மருத்துவமனையையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாண மருத்துவமனையின் சுற்றுப் பகுதிகளை நோக்கிக் கோட்டை முகாமிலிருந்து மோட்டார்களைப் பொழியத் தொடங்கினர். உலங்கு வானூர்திகளிலிருந்தும் தாக்குதல்கள் தீவிரமடைந்தன.

மு.ப.11.30 மணியளவில் வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைக் கூடத்தின் மேல் எறிகணை விழுந்து வெடித்தது. பிற்பகல் ஒரு மணியளவில் தற்போதைய செல்வா சினிமாத் திரையரங்கு ஒழுங்கையில் இந்தியப் படையினர் நிலையெடுத்துள்ளனர் என்று மருத்துவ அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டது. பிற்பகல் 1.30 மணியளவில் 8ஆம் இலக்க நோயாளர் விடுதி மீது எறிகணை வீழ்ந்து வெடித்தது. எறிகணை வீழ்ந்து வெடித்ததில் அந்த விடுதிக்குள்ளிருந்த ஏழு பேர் கொல்லப்பட்டனர். விடுதி கடுமையாகச் சேதமடைந்தது.

அத்தோடு மருத்துவமனை இலக்கு வைக்கப்படமாட்டாது என்கிற எண்ணமும் தகர்ந்து போனது. எந்த நேரத்திலும் மருத்துவமனைக்குள் இந்தியப் படையினர் நுழைந்து விடுவார்கள், வெறியாட்டம் போடக்கூடும் என்ற அச்சம், பீதி உச்ச அளவில் பரவத் தொடங்கியது. நோயாளர்கள், உத்தியோகத்தர்கள், வைத்தியர்கள் மத்தியில் நிமிடத்துக்கு நிமிடம் அச்சம் எகிறிக் கொண்டிருந்தது. எங்கும் மயான அமைதி. என்ன செய்வது, எவ்வரைத் தொடர்புகொள்வது என்று தெரியாது அனைவரும் உறைந்து போயிருக்கின்றனர்.

முடிந்தவரை ஏனையோரின் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள கொஞ்ச நஞ்ச முயற்சிகளில் துணிவுள்ளவர்கள் இறங்கியிருந்தனர். ஏழாம் விடுதி மற்றும் அதனை அண்மித்த விடுதிகளில், தங்கியிருந்தவர்கள், ஊழியர்கள் வேறு பிரிவுகளில் பாதுகாப்புத்தேடி துரிதமாகத் தஞ்சமடைகின்றனர்.

எதற்கு அஞ்சினார்களோ கடைசியில் அதுவே நடந்துவிட்டது. இந்தியப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியபடியே மருத்துவமனை வளாகத்துக்குள் முன்னேறி விட்டனர். 9ஆம் விடுதி, மருத்துவர்கள் தங்கும் விடுதிகளை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்படுகின்றன. இந்தியப் படை யினர் பலர் 9 ஆம் விடுதி, 12, 13 ஆம் விடுதிப் பகுதிகளுக்குள் புகுந்துகொண்டனர். கண்ணில் கண்டவர்களை எல்லாம் சுட்டுக் கொல்கின்றனர்.

கதிரியக்க அறைகளுக்குள்ளும், மலசல கூடங்களுக்குள்ளும், வெளித்தரைகளிலும் நோயாளர் கள், வைத்தியர்கள், ஊழியர்கள், பொது மக்களென பல நூற்றுக்கணக்கானோர் நின் றும், விழுந்து படுத்தும் உயிரைக் காக்க அவ லக் குரல் எழுப்புகின்றனர். மேற்பார்வையாளர் அறை, தாதியத் தலைமை உத்தியோகத்தர் அறைகளிலும் உரிய சில உத்தியோகத்தர்கள் அந்தச் சமயத்தில் முடங்கியிருந்தனர். இந்தப் பகுதிகளுக்குள் உள்ளே நுழைந்தனர் இந்தியப் படையினர்.

மருத்துவர்களில் சிலர் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு முன்னே வந்தனர். மருத்துவர்களான தங்களை – மனிதாபிமான சேவகர்களான தங்களை – இந்தியப் படையினர் எதுவுமே செய்யமாட்டார்கள் என்று அவர்கள் அப்போதும் நம்பினர். இது வைத் தியசாலை இங்கு ஆபத்தானவர்கள் இல்லை என்பதை அவர்களுக்குப் புரியவைத்துவிட்டால் எல்லாம் சுமுகமாகிவிடும் என்று நினைத்தனர்.

அப்படியும் சந்தேகம் ஏற்பட்டால் அவர்கள் சோதனைகளைத் தானே மேற்கொள்வார்கள், அதற்கு ஒத்துழைத்து நாங்கள் விடயங்களை விளங்கப்படுத்தலாம் என்று நம்பினார்கள்.

நெருங்கி வந்த இந்தியப் படையினர் கதிரியக்கப் பகுதிகளுக்குள் நெருக்கியடித்துக் கொண்டிருந்தவர்கப் பார்த்தனர்; ஆனால் எதுவும் கேட்கவில்லை. கண்மூடித்தனமான சூடு. கொலைவெறியாட்டம். குருதி அந்தச் சுவர் எங்கும் சிதறியது. மாலை நான்கு மணியளவில் வைத்தியசாலைக்குள் ஊழித் தாண்டவத்தை தொடங்கிய இந்தியப் படைகள் சுமார் 75 பேரின் உயிரைக் குடித்த பின்னரும் வெறிநாயாக அந்தப் பகுதியிலேயே மூச்சு வாங்க நின்றன.

தாதிகள் பொறுப்புப் பரிபாலகியை நோக்கி இந்தியப் படையினரில் ஒருவன் தனது துப்பாக்கியிலிருந்து சன்னத்தைத் துப்பியபோது அவர் சீருடையுடன் கந்த சஷ்டிக் கவசம் படித்துக்கொண்டிருந்தார். நோயாளர்கள் பலர் தங்களது கண் முன்னாலேயே இறந்து வீழ்வதை எதுவும் செய்ய முடியாது மருத்துவர்கள் நேரில் கண்டார்கள். விரலைக்கூட அசைக்காமல் தரையோடு தரையாக செத்துப் போனவர்களைப்போல் கிடந்துதான் உயிரைக் காத்துக் கொண்ட துயரத்தின் வடு பலரது மனங்களில் இன்னமும் மாறாமல் இருக் கிறது.

நாங்கள் அப்பாவிகள் எனக்கூறி தனது இரண்டு கைகளை உயர்த்தியவாறு எழுந்து நின்று நாங்கள் இந்திராகாந்தி அம்மாவுக்குத்தான் ஆதரவு என உரத்துக்கூறியவர்களை இந்தியப் படையினர் வரவேற்றது கைக் குண்டைக் கழற்றிப் போட்டுத்தான். சகோதரர்கள் இருவர் அந்த இடத்திலேயே உயிர் துறந்தனர்.

உடல் முழுவதும் குருதிச் சகதியுடன் சடலங்களுடன் சடலங்களாக அன்றிரவு முழுவதும் கிடந்தவர்களும் உண்டு. குருதியின் நெடில் வாடை நாற்றமெடுத்தது.

பயங்கரமான, கொடூரமான நாளான 21 ஆம் திகதி கழிந்து 22ஆம் திகதி காலைப்பொழுது விடிகின்றது. செய்வதறியாத நிலையில் மருத்துவர்கள், ஊழியர்கள் திகைக்கின்றனர். பேரதிர்ச்சியிலிருந்து விடுபடமுடியாமல் அவலப்படுகின்றனர். வலிகளைத் தாங்கியபடி கனத்த இதயங்களோடு மேலும் இதயங்களைக் க்னமாக்கிக் கொண்டு மேலே பார்த்தவாறு விழித்திருக்க இந்தியப் படையினரின் சத்தங்களும், கூக்குரல்களும் அடங்கவேயில்லை.

(18 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழ விழ எழுவோம்!

# நிரூபிக்கும் வீமன்காமம்

டிலீப் - தர்சன்

பற்றைக் காடாய் படர்ந்திருந்த பிரதேசம். ஆறு மாதங்களில், சவரம் செய்த முகம் போல் வெளியாகி இருக்கின்றது. அந்த வெளியில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் கல் குடிசைகள். தகரத்தை தலையாய் கொண்ட அந்தக் குடிசைகள் மனித வாடை இன்றி மூடிக்கிடக்கின்றன.

**இரும்புக் கதவும் இளகியது**

1990ஆம் ஆண்டு, நொடிப் பொழுதில், ஆண்டாண்டாய் ஆட்சி செய்த பூமியை விட்டு ஒரு கோணிப் பையுடன் இடம்பெயர்ந்தனர் வலி.வடக்கு மக்கள். சமாதானம் என்ற பெயரில் ஒரு போர் நிறுத்த ஒப்பந்தம் வந்தபோது, தங்கள் சொந்த நிலம் திரும்பலாம் என்று எண்ணுவதற்குள்ளேயே மீண்டும் போர் மேகம். 2009 ஆம் ஆண்டுடன் எல்லாம் முடிந்தாலும் இந்த மக்களின் துயர் மட்டும் முடிவுக்கு வரவேயில்லை. தங்கள் நிலத்தைத் திருப்பியளித்து விடுவார்கள் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்கு, எப்போதுமே இனி உங்கள் நிலம் கிடைக்கப் போவதில்லை என்ற செய்தியே கிடைத்தது.

வளம் கொழிக்கும் வலி. வடக்குப் பூமியை அப்படியே அள்ளிச் சுவீகரிக்க மகிந்த அரசு நடவடிக்கை எடுத்தது. ஏங்கித் தவித்த மக்கள் எழுப்பிய குரல்கள் கடவுள்களுக்கு கேட்டதோ தெரியவில்லை மகிந்தவுக்குக் கேட்க வில்லை. எனினும் தங்கள் நிகழ்சி நிரலுக்காக இந்த அப்பாவி மக்களையும் சேர்த்தே பாவித்தன வல்லரசுகள்.

ஆட்சி மாறியது. மாற்றத்தின் பங்காளிகளாக தமிழர்கள் இருந்தற்காக, பிச்சையாக கிள்ளித் தெளித்ததில், 1000 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டது. கிடைக்கவே கிடைக்காது என்றிருந்த நிலங்கள் மீண்டதில் சில டசின் கணக்கான வர்கள் மகிழ்ந்தனர். எஞ்சியவர்கள் தொடர்ந்தும் வலி சுமந்தனர்.

**ஊர்முகம் உருமாறிப் போயிருந்தது**

பெப்ரவரி – மார்ச் மாதங்களில் காணிகள் விடுவிக்கப்பட்டன. கால் நூற்றாண்டு தவத்தின் பின்னர் கிடைத்த பிள்ளையைப் பார்க்க ஆவலுடன் அணி திரண்ட மக்களுக்கு கிடைத்தது ஏமாற்றம்தான். செம்மண் பூமியாய் கிடந்த பிரதேசம், பச்சைக் காடாய் மாறியிருந்தது. இருந்த வீடுகளை இராணுவம் இடித்தழித்து அதன் எச்சத்தை மாத்திரம் விட்டுச் சென்றிருந்தது. உருமாறிப் போன தங்களின் ஊரை நினைத்து வேதனைப்பட்டனர்.

என்றாலும் விழ விழ எழுவோம் என்பது போல் ஆறு மாத காலத்தில் மீண்டும் பழைய ஊராக்கி விட்டனர் வலி. வடக்கு மக்கள். பளை வீமன்காமம் வடக்கு, பளை வீமன்காமம் தெற்குப் பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டு ஆறு மாதங்கள் கடந்துள்ளன. தமிழனின் உழைப்பால் ஊர் மீண்டும் ஊராகிவிட்டது. அரசால் போதிய வசதிகள் ஏற்படுத்தப்படாமையால் மனித வாடையை முகர்ந்துதான் பிடிக்க வேண்டியிருக்கின்றது.

**தொல்லை கொடுக்கும் திருடர்கள்**

"பகல்ல சனம் வந்து வேலை செய்யும். இரவில நிக்கிறேல்ல. பொம்பிளைகளைக் கொண்ட குடும்பங்கள்தான் இங்ககூட. இந்த வீட்டில இருக்கிறவ பகல் இஞ்ச இருந்திட்டு இரவு போட்டுவர அவையின்ர வீட்டை உடைச்சு களவெடுத்திட்டாங்கள். அதுகளின் உடுப்புகள் – சாமான் சட்டுகள் – பாத்திரங்களைக் கொண்டுபோட்டாங்கள். மூன்று சில்லு மோட்டார் சைக்கிளில வந்து எடுத்துக் கொண்டு போயிருக்கிறாங்கள். இப்படி கள்ளர பயம் இருக்கேக்க இரவில சனம் எப்படி தங்கி நிற்கிறது? அதுவும் பொம்பிளைப் பிள்ளைகளோட!" இழுக்கிறார் கந்தப்பு. பளைவீமன்காமம் வடக்கைச் சேர்ந்த 60 வயதை தாண்டிய தாத்தா.

அவரது பெயரைக் கேட்டதும், "தம்பி நீங்கள் பேப்பரில்ல பெயரைப் போட்டுவிடுவியள். பேந்து இங்க ஜி.எஸ். அவன் இவன் என்று எல்லோரும் வந்து எனக்குத்தான் பிரச்சினை குடுப்பாங்கள். நான் விசயத்தை வேணுமென்றா சொல் லுறன்" என்றார். ஒரு காலத்தில் இராணுவத்திற்கும் – புலனாய்வுப் பிரிவு களுக்கும் பயந்து தங்களை வெளிக்காட்ட மறுத்த மக்கள் இப்போது எங்களது அரச அதிகாரிகளுக்குப் பயந்து பயந்து சாகவேண்டியிருக்கிறது. என்ன வாழ்க்கைடா இது! அலுத்துக்கொண்டே, "பாறவாயில்லை, நாங்கள் பார்த்துக்கொள்ளுறம் பெயரைச் சொல்லுங்கோ" என்றோம். "அப்ப பின்ன கந்தப்பு எண்டு எழுதி வை" என்றார்.

**ஒரு சாரம் மிச்சம்**

"நான் இஞ்ச முந்தித் தொடக்கம் இருந்தனான். இடையில வெளிநாட்டுக்குப் போய் உழைச்சன். அந்தக் காசோட இங்க வந்து நல்லா இருந்தம். சண்டையெண்டு வந்து இஞ்சயிருந்த வீட்டால வெளிக்கிட்டதுதான். பேந்து வன்னிக்குப் போய் கடைசிச் சண்டை முடிஞ்சு வரேக்க ஒரு சாரத்தோடதான் வந்தன். வெளிநாட்டில உழைச்சது எல்லாம் போய்ட்டுது. நானும் இப்ப இங்க பகல்ல வந்து துப்பரவாக்கிறனான். வீடு தந்திருக்கிறாங்கள். இரண்டு அறைதான் இப்ப எங்கட வீடு. இரண்டு பேர் கால் நீட்டிப் படுக்கலாம் அவ்வளவுதான். முந்தி கல் வீடு கிடந்தது. அதெல்லாம் இப்ப மண்ணுக்க கிடக்குமாக்கும். கிளறித்தான் பாக்கவேணும்."

கந்தப்பு கையை விரித்து வெறுத்துப்போன பாவனை காட்டுகிறார். எல்லாம் அவனுக்குத்தான் வெளிச்சம் என்பதுபோல் வானத்தை அண்ணார்ந்து, கையை உயர்த்தி உயர்த்திக் காட்டுகிறார். வார இறுதி நாள்களின் பகல் பொழுது களில்தான் அந்தப் பகுதிகளில் அதிகமான மனிதத் தலைகளைக் காணக்கூடியதாக இருக்குமாம். நாம் சென்றபோதும் பலர் தமது காணிகளைத் துப்புரவு செய்வதில் மும்முரமாக இருந்தனர்.

**கருங்கல் ஆலயம்**

இந்தப் பகுதியில் உள்ள ஞான வைரவர் ஆலயம் ஒன்று மிகச் சிறப்பானது. அந்தக் காலத்திலேயே பிரசித்தமானது. கலசிட்டி ஞான வைரவர் ஆலயம் என்பது அதற்குப் பெயர். பொதுவாகச் சைவர்கள் வைரவருக்கு என்று மிகப்பெரும் கோயில் எழுப்புவது அரிது. இந்தக் கோயில் அதிலிருந்து மாறுபட்டது. மொத்தமும் கருங்கல்லால் அமைக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பு. கோயிலின் பெரும் சிறப்பே அங்குள்ள கருங்கல்லில் செதுக்கப்பட்ட நாயுருவம்தானாம். அந்தப் பிரமாண்டமான "நாயின் வாயினுள் மாபிள் போன்ற உருண்டை ஒன்று சுற்றிக் கொண்டே இருக்கும்" என்று ஊரவர்கள் பெருமையாகச் சொல்லிக் கொண்டார்கள். எமக்கும் ஆவல் அதிகரித்தது.

ஆனால் எமக்கு அதிர்ஷ்டம் இருக்கவில்லை. கோயில் இருந்தது. பூட்டி இருந்தது. அது தனி ஒருவருக்குச் சொந்தமானது என்பதால் பூட்டப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். இராணுவத்தினர் இருந்தபோதுகூடக் களவு போகாத அந்தக் கோயிலின் கலசங்கள் அண்மையில்தான் களவு போயினவாம் என்றும் தகவல் சொன்னார்கள். "சாமிக்கே இந்தக் காலத்தில பாதுகாப்பில்லாதப்போ நாங்கள் எல்லாம் எந்த மாத்திரம்" என்று ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்கள் பெண்கள்.

**கறண்டை கண்ணில காட்டுறாங்கள் இல்லை**

"ரோட்டுப் போட வேணும், கறண்ட் தர வேணும். அப்பிடியென்றால்தான் சனம் இஞ்ச வந்து இருக்கும்." 30 வயது மதிக்கத்தக்க இளைஞன் கருத்து இது. அச்சம் அவரிடம் இருந்தும் விலகியிருக்கவில்லை. பெயரைக் கேட்டதும் "அது வேண்டாம் அண்ணை" என்றார். "பேந்து பிரச்சினை வரும்." இதுதான் அவரும் சொன்னது.

திருட்டைப் பற்றி முறையிட்டால், திருடனைக் கண்டால் அறிவிக்கும்படி சொல்கிறார்களாம் பொலிஸார் என்று குறைப்பட்டுக்கொண்டார்.

சில தினங்களுக்கு முன்னர் பொலிஸார் – கிராம சேவையாளர் – ஊர் மக்கள் கலந்துரையாடல் நடந்தாகவும் அதன் போது களவுப் பிரச்சினை மக்கள் பேசியதும் திருடனைக் கண்டால் தங்களுக்கு அறிவியுங்கள் என்றனராம் பொலிஸார். "கள்ளனை நாங்கள் கண்டு இவைக்குச் சொல்வதென்றால் பின்னர் இவர்களுக்கு என்ன வேலை?" அவரது கேள்வியில் கோபம் தெறித்தது.

அவர் பெயரைச் சொல்ல அஞ்சியதன் காரணத்தை அவர் சொன்ன விவகாரமே வெளிப்படுத்திவிட்டது. "இந்தக் களவுகளில அரசியல்வாதிகளுக்கும் தொடர்பு இருக்கின்றது." அடித்துச் சொல்கிறான் அந்த இளைஞன். யார் அரசியல்வாதிகள் என்பதைச் சொல்ல விரும்பவில்லை.

திருட்டுப் பயம், மின்சாரம் இல்லை, வீதி ஒழுங்காக இல்லை இதனாலேயே தாங்கள் மீளக்குடியமர வரவில்லை என்று பலரும் சொல்கிறார்கள். கடவுளே இவர்களுக்கு விரைவில் விடிவு கிடைக்கட்டும் என்று வேண்டியபடியே கலசிட்டி ஞான வைரவரைச் சுற்றி வந்த பின்னர் அங்கிருந்து புறப்பட்டோம்.

(21ஆம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சண்டைக் களமாகும் நாடாளுமன்றம்

## அமர்வுகள் அனைத்திலும் கூச்சல் குழப்பமே அதிக நேரம்

■ அதிரன்

உலக நாடுகளில் அதிஉயர் பீடமாகக் கருதப்படும் நாடாளுமன்றம் அதன் புனிதத்தையும் பண்பாட்டையும் பேணும் ஒரு உன்னத அமைப்பாக கருதப்பட்டுவருகின்றது. நாட்டு மக்களுக்கான சட்டங்களையும் ஒழுங்குகளை இயக்கும் இந்த அதியுயர் பீடம் பெரும்பாலான நாடுகளை மிக உன்னத நிலையில் வைத்து நோக்கப்படுகின்றது. அரசியல் ரீதியில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் நாடாளுமன்றத்தில் அதன் உறுப்பினர்கள் ஒழுக்கத்துடனும் பண்பாட்டுடனும் நடந்து கொள்வதுடன் அங்கு நிகழ்த்தும் உரைகளை மிகவும் அலசி ஆராய்ந்தே நிகழ்த்துகின்றனர். காரணம் நாட்டை வழிநடத்தும் மிகப் பெரிய பொறுப்பு அந்த நாடாளுமன்றத்துக்கு உள்ளதால் அதில் அங்கம் வகிப்பவர்கள் மக்களுக்கு முன்மாதிரியானவர்களாக விளங்க வேண்டும் என்பது பொதுவான ஒரு வரையறை. ஆயினும் இலங்கை நாடாளுமன்றம் அண்மைக் காலமாக அந்த நற்பண்புகளையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு ஒரு மோசமான நிலையை அடைந்திருப்பது வேதனைக்குரிய ஒரு விடயம்.

நாடாளுமன்றத்துக்குள் நுழைந்துவிட்டால் அங்கு அமைதியான ஒரு நிலை நிலவும் என்பதற்கு மாறாக இலங்கை நாடாளுமன்றத்தில் தினமும் கூச்சல் குழப்பங்களுக்கே அதிக நேரம் செலவிடப்படுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மைத் தெரிவு செய்து அனுப்பிய மக்களின் நலன்களையோ, தேவைகளையோ கருத்தில் கொள்ளாமல் ஒருவருக்கு ஒருவர் வார்த்தைகளால் மோதிக்கொண்டும், சபையில் உபயோகிக்கக் கூடாத மோசமான வார்த்தைகளைப் பேசிக்கொண்டும், முஷ்டியை முறுக்கிக்கொண்டு சபா பீடத்துக்கு முன்னால் வந்து நின்று சண்டித்தனம் செய்வதும் இப்போது இலங்கை நாடாளுமன்றத்தில் சர்வசாதாரணமாகிவிட்டது. நாடாளுமன்ற அமர்வின்போது அங்கு அதி உன்னதமாக நோக்கபபடுவது செங்கோல். அந்த செங்கோலையே தூக்கிக் கொண்டு ஓடும் அளவுக்கு ஒரு கீழ்த்தர அரசியலுக்குள் இறங்கிவிட்டார்கள் இலங்கை அரசியல்வாதிகள். நாடாளுமன்ற அமர்வு நடைபெறுகிறது என்றால் அது ஊர்களில் நடக்கும் தெருச் சண்டையைவிட மோசமாக இருக்கும் என்று மக்கள் சிந்திக்கும் அளவுக்கு - வேடிக்கை பார்க்கும் நிலைக்கு இலங்கை நாடாளுமன்ற அமர்வுகளில் சீத்துவத்தனம் இது.

எதிர்கால அரசியல் தலைவர்களுக்கு வழிகாட்டவேண்டிய அரசியல் தலைவர்கள் அந்தப் பொறுப்புணர்வை மறந்து - நாடாளுமன்றத்தின் புனிதத் தன்மையைப் புறந்தள்ளி மிகக் கேவலமாக நடந்துகொள்ளும் நிலைமை இலங்கை நாடாளுமன்றைவிட இப்போது வேறெங்கும் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

கடந்த வியாழக்கிழமையும் இலங்கை நாடாளுமன்றத்தில் இது தான் நடந்தது.

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சம்பந்தமாக நாடாளுமன்றில் விவாதம் நடந்துக் கொண்டிருக்கையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மஹிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள் திடீர் குழப்பத்தில் ஈடுபட்டனர். செங்கோலையும் தூக்கிக்கொண்டு சபைக்கு நடுவில் சென்று கூச்சல் குழப்பத்தில் ஈடுபட்டதால் நாடாளுமன்றத்தில் பெரும் களேபரம் ஏற்பட்டது. இதையடுத்து சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப் பட்டது.

நாட்டுக்கு நல்ல தீர்மானங்கள், பிரேரணைகள் வருகின்றபோது அது குறித்து கிஞ்சித்தும் யோசிக்காமல் தமது அரசியல் சுயலாபங்களுக்காக இலங்கை நாடாளுமன்றத்தில் அரசியல் வாதிகள் இவ்வாறு அடிக்கடி கீழ்த் தரமாக நடந்துகொள்கின்றனர்.

இப்போது சபையில் இந்த மோதல்களும் கூச்சல் குழப்பங்களும் சர்வசாதாரணமானதொன்றாகிவிட்டது.

> “அந்த செங்கோலையே தூக்கிக் கொண்டு ஓடும் அளவுக்கு ஒரு கீழ்த்தர அரசியலுக்குள் இறங்கிவிட்டார்கள் இலங்கை அரசியல் வாதிகள். நாடாளுமன்ற அமர்வு நடைபெறுகிறது என்றால் அது ஊர்களில் நடக்கும் தெருச் சண்டையைவிட மோசமாக இருக்கும் என்று மக்கள் சிந்திக்கும் அளவுக்கு- வேடிக்கை பார்க்கும் நிலைக்கு இலங்கை நாடாளுமன்ற அமர்வுகளில் சீத்துவத்தனம் இது.

30 ஆண்டு காலப் போரில் தமது வாழ்வைத் தொலைத்த தமிழ்மக்கள் அந்த இழப்புக்களில் இருந்து இன்னும் மீண்டெழவில்லை.

அவர்களது மீள்குடியமர்வுகள், காணிவிடுவிப்புகள், இழப்பீடுகள் என்பன அரசினால் உரியவாறு செயற்படுத்தப்படவில்லை.

தமிழர்கள் நீண்டகாலமாகக் கோரிவரும் இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஆட்சியில் அமரும் அனைத்து அரசுகளும் தான்தோன்றித்தனமாகவும் மெத்தனப் போக்குடனும் தமது அரசியல் லாபங்கள் கருதியுமே செயற்பட்டுவருகின்றன.

இப்போதுள்ள நல்லாட்சி அரசும் தமிழருக்கான தீர்வு மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் அதிக அக்கறை காட்டி செயற்படுவதாகத் தெரியவில்லை. காணாமற்போனோர், கடத்தப்பட்டோர், தமிழ் அரசியல் கைதிகள் விடயங்களில் பொறுப்புக் கூறவேண்டிய அரசு, அதனைத் தொடர்ச்சியாகத் தட்டிக்கழித்து வருகிறது.

இவ்வாறானதொரு நிலையில் இவற்றுக்கான திர்வுகளை சரியாக அலசி ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கைகயை மேற்கொள்ள வேண்டிய நாடாளுமன்றம் தினமும் இவ்வாறு கூச்சல் குழப்பங்களால் மோசமான நிலையை எதிர் நோக்கியிருப்பது இலங்கையின் எதிர்கால அரசியல் இருப்புக்கு ஏற்றதல்ல. எனவே இந்த அதியுன்னத சபையின் புனிதத்தைப் பேணி அதற்குரிய கௌரவத்தை வழங்கி உறுப்பினர்கள் ஒழுக்க சீலர்களாக அங்கு செயற்படவேண்டும் என்பதே நாட்டு மக்களின் விருப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில்: ரஜீபன்



# எங்களை எல்லோரும் மறந்துவிட்டார்கள்

சென்னையிலிருந்து 90 கிலோமீற்றர் தொலைவில் ஆந்திர பிரதேசத்தின் எல்லைக்கு அருகிலுள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கும்மிடிப் பூண்டி என்ற கிராமம் சுமார் 3000 இலங்கை தமிழர்களுக்கு தஞ்சம் வழங்கியுள்ளது.இவர்களில் மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்த பிள்ளைகளும் உள்ளனர்.

அவர்களது ஓரேயொரு கனவு தங்களின் சொந்த மண்ணுக்குத் திரும்புவது. மூன்று தலைமுறையைச் சேர்ந்த இலங்கைத்தமிழர்கள் அங்கு வாழ் கின்றனர். அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் குருதி, போர், உயிரைப் பாதுகாப்பதற்காகத் தப்பியோடுவது, குடும்பத்தவர்களின் சாவுகள் மாத்திரமே. தாங்கள் எப்படியான சூழலில் வாழ்கின்றோம் என்பதை பார்ப்பதற்காக இன் னொரு இலங்கையர் தங்கள் முகாமுக்குள் நுழைந்தது குறித்து அவர்கள் எந்த வித உணர்ச்சியையும் வெளிப்படுத்தவில்லை. அவர்கள் மகிழ்ச்சியடையவும் இல்லை, கவலை யடையவுமில்லை.

சிலர் வணக்கம் தெரிவிக்க விருப்பமில்லாமல் விலகிச்சென்றனர். சிலர் தொந்தரவாக உணர்ந்தனர். அதற்குக் காரணம், கடந்த காலங்களில் பலர் அந்த முகாமுக்கு வந்து அவர்களது கதறல்களைக் கேட்டதுடன் நின்றுவிட்டதுதான். அவர்கள் அந்த முகாம் மக்களுக்கு எதனையும் செய்யவில்லை.

**உடற்பயிற்சி நிலையத்தை நடத்துதல்**

"இலங்கையின் போரால் இடம்பெயர்ந்த, போரின் எச்சங்களாகவே நாம் பார்க்கப்படுகின்றோம். இலங்கையிலும் இதே நிலையே காணப்படுகின்றது என நான் அறிந்தேன். உலகம் முழுவதிலுமிருந்து சுற்றுலாப் பயணிகள் எங்களைப் போன்றவர்களைப் பார்க்கவும் கதையெழுதவும் சந்திக்கின்றனர்" எனத் தெரிவித்தார் சேகர் (வயது32). அவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர். தன்னுடைய தமிழ் நாடு நண்பர்கள் அளித்த பணத்தில் ஒரு உடற்பயிற்சி நிலையத்தை நடத்துகின்றார்.

"இது கடும் சீற்றத்தையும், ஏமாற்றத்தையும் அளிக்கின்றது" எனவும் அவர் குறிப்பிட்டார். 2007இல் தான் கடத்தப்பட்டு கொல்லப்படலாம் என்ற அச்சம் காரணமாக இலங்கையிலிருந்து தப்பியோடிய அவர் இரவோடிரவாக இராமேஸ்வரத்துக்குப் படகேறினார். பயமின்றி உறங்குவதற்கும்இன்னொருஅதிகாலையைகண் விழித்துப் பார்ப்பதற்குமான நிம்மதியை இந்தியா தனக்கு வழங்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். அந்த நிம்மதி அவருக்கு இலங்கையில் மறுக்கப்பட்டது.

**பிரிவுகள்**

முகாமின் ஊடாக நடந்து செல்கையில் அவர் முகாமில் உள்ள மக்கள் மத்தியில் காணப்படும் பிரிவினைகள் குறித்து எச்சரித்தார். முகாமுக்கு வருபவர்கள் குறித்து சிலர் இந்திய அதிகாரிகளுக்கு தகவல்களை வழங்குகின்றனர் என்றார் அவர்.

குறிப்பாக ஊடகவியலாளர்களுக்குக் குறித்த தகவல்களை மக்களில் சிலர் வழங்குகின்றனர். முகாமில் உள்ள நிலைமை பற்றி திரிபுபடுத்தப்பட்ட செய்திகள் வந்தால் பின்னர் அந்த முகாமுக்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகின்ற உதவிகள் குறைக்கப்படும். அதனைத் தடுப்பதற்காகவே தகவல் வழங்குகின்றனர்.

சிறுவர்களுக்கு என அந்த முகாமில் சிறிய பாடசாலை ஒன்றுள்ளது. தமிழ் அகதிகள் தமிழ்நாடு பாடசாலைகளில் உயர் கல்வியைப் பயில்வதற்கான ஓதுக்கீடுகளும் காணப்படுகின்றன. "இந்திய அரசு தன் னால் முடிந்ததைச் செய்கின்றது. ஆனால் அது மாத்திரம்போதாது. நிதிநெருக்கடியே முக்கிய பிரச்சினை" என்கிறார் சேகர்.

மிகச் சிறிய வயதில் இலங்கையிலிருந்து தப்பியோடிய சிறுவர்கள், முகாமில் கரப்பந்தாட்டத்தில் ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகின்றது. அவர்களில் சிலர் எம்மைப் பார்த்ததும் ஓடிச்சென்று வீடுகளின் தகரங்களுக்கு பின்னால் மறைந்து கொள்கின்றனர். தங்களை வெளிப்படுத்த அவர்கள் விரும்பவில்லை. இலங்கை எங்களை மறந்து விட்டது என அவர்களில் ஒருவர் கூறினார். இன்னொருவர் போர் முடிவடைந்த பின்னர் இலங்கை எப்படியிருக்கின்றது என்பதே எனக்குத் தெரியாது என்றார்.

**இந்திய உதவி**

இந்திய அரசு மாதாந்தம் குடும்பத் தலைவருக்கு 1000 ரூபாயையும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 800 ரூபாயையும் வழங்குகின்றது.

58 வயதான குமரேசன் 1990ஆம் ஆண்டு தனது மனைவி மற்றும் ஐந்து மகள்களுடன் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தப்பியோடினார். இவரது கண் எறிகணைத் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளது. அவரது கிராமத்தின் மீது ஆட்டிலறி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து தான் அங்கிருந்து தப்பியோடினார் என அவர் குறிப்பிட்டார். அவர் தனது மனைவியுடன் பல முகாம்களில் இருந்துவிட்டே கும்மிடிப் பூண்டிக்கு வந்துசேர்ந்தார்.அவரது பெண் பிள்ளைகள் திருமணமாகி வேறு முகாம்களில் வாழ்கின்றனர்.

முகாமில் சிறிய கடையொன்றை நடத்தி வரும் இவர் வருமானம் ஈட்டுவது மிகவும் கடினமானது என்கிறார்.

"எனக்கு யாழ்ப்பாணத்தில் காணியிருந்தது. ஆறு மாதத்துக்கு ஒரு முறை நான் மிளகாய், வெங்காயம் போன்றவற்றை விற்று 200,000 வரை உழைத்தேன். யாழ்ப்பாணத்தில் கையில் கட்டுக்கட்டாக பணம் இருந்தது. ஆனால் இங்கு 1000 ரூபாயைக் காண்பதே கஷ்டம்."முகாம் முழுவதும்இதே நிலையே காணப் படுகின்றது. அரசு வழங்கும் தொகைக்காக அவர்கள்முகாமில்வாழநிர்பந்திக்கப்பட்டுள்ளனர்.

**சனத்தொகை**

தென்னிந்தியாவின் 21 மாவட்டங்களில் இவ்வாறான 108 முகாம்கள் உள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த முகாம்களில் 65.000ற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். மேலும் 40,000 இலங்கையர்கள் முகாமுக்கு வெளியே வாழ்கின்றனர்.

இலங்கைக்குத் திரும்புதே குமரேசனின் கனவு. ஆனால் அதற்காக என்ன நடைமுறைகளை பின்பற்றவேண்டும் என்பது தெரியாத நிலையில் அவர் இருக்கிறார்.

இவர்கள் விரும்பினால் இலங்கைக்குத் திரும்பலாம் என இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது. எனினும் இடம்பெயர்ந்த மக்கள் தாங்களாகத் திரும்புவது குறித்து அச்சம் கொண்டுள்ளனர்.

"நாங்கள் இப்படியே வரவிரும்பவில்லை. நாங்கள் படகுகள் மூலம் இந்தியாவிற்கு வந்தோம். இலங்கைக்குச் சென்றால் அவர்கள் எங்களை விசாரணைக்கு உட்படுத்தலாம். அது தேவையற்ற பிரச்சினை" என்கிறார் குமரேசன்.

"நாங்கள் திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதிக்கு தெரிவியுங்கள். நாங்கள் கும்மிடிப் பூண்டியைச் சேர்ந்தவர்கள் அல்லர்" என முகாமில் உள்ள மூத்தவர்கள் தெரிவித்தனர்.

**வியர்வையும் குருதியும்**

"பலவருடங்களாக இங்கு கஷ்டப்பட்ட பின்னரும், நாங்கள் உருவாக்கிய இந்த வீடுகள்கூட எங்களுக்குச் சொந்தமில்லை. நாங்கள் அன்னியர்களே. எங்கள் கனவுகளில்கூட நாங்கள் கும்மிடிப் பூண்டியில் இருக்கவிரும்பவில்லை" எனச் சொல்லும் போது குமரேசனுக்கு நா தளுதளுத்தது.

இடம்பெயர்ந்த மக்கள் இலங்கைக்குத் திரும்பிவர விரும்பவில்லை என தெரிவிக்கப்படுவதையும் அவர்கள் மறுத்தனர். "எந்த வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படாததாலேயே நாங்கள் அங்கு வரவிரும்பவில்லை. எங்களை எங்கள் நிலங்களில் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளில் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் உதவவேண்டும். பாதுகாப்பிற்காக அவ்வாறான நடவடிக்கைகள் அவசியம்" எனக் குமரேசன் தெரிவித்தார்.

முகாமில் உள்ள அனைவரும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் குறித்து நன்கு அறிந்துள்ளனர். "முன்னர் அவர்கள் வந்து சென்றனர், தற்போது அவர்கள் வருவதேயில்லை"என்கின்றனர் முகாம் மக்கள்.

"அனைவரும் எங்களை மறந்துவிட்டனர்" எனத் தெரிவிக்கின்றார் 23 வயது சுஜீபன். இவர் கும்மிடிப்பூண்டியில் பிஎஸ்சி பட்டம் பெற்றுள்ளார். அவரது கல்விக்கேற்ற வேலைகள் எதுவும் அவருக்குக் கிடைக்கவில்லை

கடும் எறிகணைத் தாக்குதல்களைத் தொடர்ந்து அவர் தனது பெற்றோரையும் விட்டுவிட்டு கிளிநொச்சியிலிருந்து உறவினர்களுடன் இந்தியாவுக்குத் தப்பி வந்தார். மன்னாருக்குச் சென்று அங்கிருந்து படகு மூலம் இந்தியா வந்தார் எனத் தெரிவித்த அவர், தற்போது தனது பெற்றோரைப் பார்ப்பதற்காக கிளிநொச்சி திரும்புவதற்கு ஆர்வமாக உள்ளார்.

எனினும் தனது இந்திய மனைவியை இலங்கைக்கு அழைத்துவருவது எப்படியென்பதே அவரது பிரச்சினை. அதிகாரிகள் அவர் தனது மனைவியை சுற்றுலா வீசாவில் அழைத்துச்செல்ல முடியும் எனத் தெரிவித்துள்ளனர். ஆனால் இவர் தனது மனைவியுடன் இலங்கைக்குச் சென்று வாழ விரும்புகின்றார். தனது மனைவி குறிப்பிட்ட காலத்திற்கு அப்பால் இலங்கையில் தங்கியிருந்தால் அதிகாரிகள் அவரை கைதுசெய்வார்களோ என சுஜீபன் அச்சம் கொண்டுள்ளார்.

முகாமில் உள்ள பலர் இந்தியாவின் சட்ட திட்டங்கள் தெரியாத நிலையிலேயே வாழ்கின்றனர். "எல்லாவற்றுடனும் பணம் சம்பந்தப்பட்டுள்ளது" என்கிறார் சுஜீவன்.

**கடவுச்சீட்டு இல்லாதநிலை**

முகாமில்உள்ளபலர் படகுகளில்தப்பிவந்தவர்கள் என்பதால் அவர்களிடம் கடவுச்சீட்டு இல்லை என்பதும் பிரச்சினைக்குரிய விடயம். அவர்கள் முகாமுக்கு வந்து தங்களைப் பதிவுசெய்துள்ளனர். ஆனால் பொலிஸில் பதியவில்லை.இதனால் அவர்கள் வாழ்க்கை மேலும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

இந்திய அதிகாரிகள் அவர்களை முகாமில் பதிந்துள்ளபோதிலும் உரிய ஆவணங்கள் இல்லாததால் அவர்களால் கடவுச்சீட்டுகளை பெறமுடியவில்லை. பொலிஸாரின் கடிதமொன்றையும் சட்டத்தரணிகளின் அத்தாட்சி கடிதங்களையும் பெறுவதற்கு 2000 ரூபாய்க்கு மேல் செலவாகும், முகாமில் உள்ளவர்கள் அவ்வளவு பணத்தை செலுத்தும் நிலையில் இல்லை. அவர்கள் முகாமிற்குள்ளேயே முடங்கிக் கிடப்பதற்கு இதுவும் ஒரு காரணம் என்கிறார் சுஜீவன். நிதி நெருக்கடி காரணமாகவும் இந்திய அரசின் கொள்கைகள் காரணமாகவும் இவர்கள் தங்கள் பிரச்சினைக்குத் தீர்வை காணமுடியாத நிலையில் உள்ளனர்.

"யாழ்ப்பாணத்தில் எங்களுக்கு எல்லாம் இருந்தது. ஆனால் அன்னியமண்ணில் முகாமில் அல்லற்படவேண்டிய தலைவிதி எங்களுக்கு" என வேதனை வெளியிட்டார் பலாலி கிழக்கை சேர்ந்த கமலாதேவி.

இவரின் முதியபெற்றோர் தெல்லிப்பழையிலுள்ள முகாம் ஒன்றில் வாழ்கின்றனர். அவர்களது சாவுக்கு முன்னர் அவர்களுடன் இருக்கஇவர் விரும்புகின்றார்.தனது பிள்ளைகளைத் தனது பெற்றோர் ஒரு முறை கூடப் பார்க்கவில்லை என்பதே அவரது கவலை.

"அவர்கள் இறப்பதற்கு முன்னர் அவர்கள் அருகில் இலங்கையில் வாழ ஆசைப்படுகிறேன். எனது நிலத்தையும் வீட்டையும் இராணுவம் இன்னமும் மீளக் கையளிக்கவில்லை என அறிந்தேன். எனது நிலம் இல்லாமல் என்னால் இலங்கைக்கு வரமுடியாது. அங்கு நல்ல வீதிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், மக்கள் சுதந்திரமாக நடமாடுவதாகவும் அறிகிறேன். ஆனால் கடவுச்சீட்டு இல்லாமல் என்னால் வர முடியாது. அதுவே பிரச்சினை" என்றார் அவர்.

"பலாலி அம்மன் கோவிலடி என்பது அழகான இடம்" அது இன்னமும் உள்ளதா என ஆவலுடன் கேட்டார்.

***நன்றி: சிலோன்ருடே***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்டேர ஸ்வாமி

# மழைகாலத்தில் தீவாகும் மன்னார்!

**மழைக்காலம் வழிவழுக்கும் மிகக்கவனம் மக்காள்**
**வழியருகே வெள்ளமுண்டு விலகிவர வேண்டும்!**
**வெள்ளத்தில் கல்லெறிந்து விளையாட வேண்டாம்!**
**வீண் சண்டையால் வழுக்கி விழுந்தெழும்ப வேண்டாம்!**

பருவமழைக்காலம் வருகிறதென்கிற போது பால வயதினரை மழை தொடர்பாக அவதானத்துடன் செயற்படுமாறு வலியுறுத்தும் இந்த பாலர் பாடல் நம்மில் பலருக்கு பரிச்சயமானது. தற்போதைய காலகட்டத்தில், மழை காலம் வருகிற தென்றால் பாலர் மட்டுமன்றி மாந்தர் அனைவரும் வெள்ள இடருக்கு முகம் கொடுக்கத் தயாராக வேண்டிய சூழ் நிலையும் இடர்முகாமைத்துவத்திற்கு தம்மைப் பயிற்றுவித்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலையும் தவிர்க்க முடியாததாகி வருகிறது.

காலநிலை தளம்பல்கள், எதிர்வுகூறலுக்கு அப்பாற்பட்ட தீவிரத்தன்மையை கொண்டமைந்து விடுவது மழை தொடர்பான கட்டியங்களையும் பல சந்தர்ப்பங்களில் பொய்யாக்கி விடுகிறது.

கடந்த சில வருடங்களாக மாரிகால மழையைத் தொடர்ந்து வரும் காலநிலை கோளாறுகளினால் மன்னார் தீவு சார் நகரப் பகுதி மற்றும் அதன் பெரு நிலப்பரப்பு பிரதேசங்களுக்கும் நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்குமான தரைவழித்தொடர்பு துண்டிக்கப்பட்டுவிடுவது வழமையான நிகழ்வாக மாறி வருகிறது. ஆறுகள் பெருக்கெடுப்பதன் காரணமாகவும் குளத்தின் நீர் மட்டம் அதிகரிப்பதனையடுத்து வான் கதவுகள் திறக்கப்படுவதன் காரணமாகவும் சேருகின்ற வெள்ளநீர், வீதிகளுக்கு மேலாக மேவிப்பாய்கிறது. அது மட்டுமல்லாது வீதிகளையும் சேதப்படுத்துகின்றது.

**வெள்ளத்தில் மூழ்கும் ஏ-14 வீதி**

மன்னார் மாவட்டத்திற்கான முதன்மைப் பயண மார்க்கமாக விளங்கும் தலைமன்னார் – மதவாச்சி (ஏ–14) நெடுஞ்சாலை, அருவியாற்று வெள்ளம் பெருக்கெடுக்கும்போது மேவிப்பாய்வதன் காரணமாகத் தம்பனைக்குளம் பிரதேசத்தில் தடைப்படுவது கடந்த சில வருடங்களாகத் தொடர்ந்து நடக்கிறது. நாட்டின் தென்புல பிரதேசங்களிலிருந்து மதவாச்சி வழியாக மன்னார் மாவட்டத்திற்குள் பிரவேசிக்கும் வாகனங்களும் வன்னி, வவுனியா மற்றும் வடபுல பிரதேசங்களிலிருந்து மன்னாருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களும் மற்றும் இதே பிரதேசங்களுக்காக வெளியேறும் வாகனங்களும் இந்த நெடுஞ்சாலையையே பயன்படுத்துகின்றன.

தற்போது இந்த வீதி புனரமைக்கப்பட்டுள்ள போதிலும், கடும் மழையை அடுத்து வெள்ளப்பெருக்கு ஏற்படுமிடத்து வெள்ளம் மேவிப்பாய்வதன் காரணமாகப் போக்குவரத்து தடைப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கவே செய்கின்றன.

> “பெருக்கெடுக்கும் கலாவாவியின் வெள்ளம் காரணமாக இந்த வீதிப்போக்குவரத்து அடிக்கடி தடைப்படுகிறது. கடந்தவாரம்கூட கலாவாவி தாம்போதிக்கு ஒன்றரை அடிக்கு மேல் வெள்ளம் பாய்ந்ததன் காரணமாக இந்த வீதியினூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது.

**முற்றுப்பெறாத ஏ-32 வீதி**

ஏ–9 வீதிக்கான மாற்றுப் பாதையாகவும் கொழும்பையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் குறுக்கு வழி மார்க்கத்தின் பகுதியாகவும் விளங்கும் நாவற்குழி – தள்ளாடி வீதி முன்னொருபோதிலும் இல்லாத வகையில் புனரமைக்கப்பட்டுள்ள போதிலும், அதன் புனரமைப்பு இன்னும் முழுமையடையவில்லை. பிரதானமான மூன்று பாலங்கள் அல்லது நீர் குறுக்கறுக்கும் பகுதிகள் இன்னமும் புனரமைக்கப்படவில்லை. குறிப்பாக பாலியாற்றுப்பாலம் திருத்தத்திற்குட்படவில்லை. மண்டகல் ஆற்றுப் பிரதேசத்திலும் பாலம் திருத்தப்பணியில் இருப்பதாக அறிவிப்பு செய்யப்பட்டுள்ள போதிலும் அது பழைய நிலை யிலேயே இருக்கிறது. இலுப்பைக் கடவையை அண்டிய பிரதேசத்திலும் இந்தப் பாதையூடான போக்கு வரத்து, பாலத்தின் புனரமைப்பிற்காக உப–பாதை ஒன்றினூடாகவே நடைபெற்று வருகிறது.

**இலகுவில் தடைப்படும் பி-379 வீதி**

வில்பத்து வனப்பகுதி ஊடாக மன்னார் மாவட்டத்தைப் புத்தளத்துடன் தொடுக்கும் வடமேல் கரையோர மார்க்கமான புத்தளம் – மன்னார் வீதி, வெள்ளப்பெருக்குக் காரணமாக மூடப்படுவது தற்போது வழமையாகி வருகிறது.

பெருக்கெடுக்கும் கலாவாவியின் வெள்ளம் காரணமாக இந்த வீதிப்போக்குவரத்து அடிக்கடி தடைப்படுகிறது. கடந்தவாரம்கூட கலாவாவி தாம்போதிக்கு ஒன்றரை அடிக்கு மேல் வெள்ளம் பாய்ந்ததன் காரணமாக இந்த வீதியினூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது.

**வெள்ளம் வருமுன் இடர்முகாமைத்துவம் தயாராக வேண்டும்!**

மன்னார் குஞ்சுக்குளம் பகுதிக்கான பாலம் அண்மையில் புதிதாக கட்டப்பட்டு பரீட்சார்த்தமாக மக்கள் பாவனைக்காக திறக்கப்பட்டிருக்கிறது. மன்னார்–மதவாச்சி வீதியிலிருந்து குஞ்சுக்குளம் பிரதேசத்திற்குச் செல்லும் வீதி, அருவி ஆற்றினைக் கடந்தே பயணிக்கிறது. அந்த ஆற்றுக்குக் குறுக்கே அமைந்திருந்த தாழ்வான பாலம் மழைகாலங்களில் வெள்ளம் பெருக்கெடுக்கும்போது மூழ்கிவிடுவதால் குஞ்சுக்குளம், மாதா கிராமம் மற்றும் பெரிய முறிப்பு போன்ற கிராமங்கள் தரைவழித் தொடர்பு துண்டிக்கப்பட்டு உலங்குவானூர்தி மூலம் உணவுப்பொருள்களை விநியோகிக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டிருந்தது. புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் இப்பாலம் மழைகாலத்தில் மேற்சொன்ன கிராம மக்கள் எதிரநோக்கிய அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ள பேருதவி புரியும்.

எதிர்பாராத வகையிலான வெள்ளப் பேரிடரை எதிர்பார்த்து இடர்முகாமைத்துவப் பொறிமுறையை எப்போதும் தயாராக வைத்திருக்க வேண்டியது தற்போது காலத்தின் கட்டாயமாகி வருகிறது. வருடாந்தம் வெள்ளப்பாதிப்பிற்கு உட்படும் பிரதேசங்களை முன்னைய தரவுகளை வைத்து இனங்கண்டு மற்றும் தாழ்வான பிரதேசங்களுக்கான முன்னெச்சரிக்கை அறிவிப்புக்களை விடுத்து விவேகமான முறையில் செயலாற்ற வேண்டிய தேவை மாவட்ட பேரிடர் முகாமைத்துவ கட்டமைப்பு பங்காளிகளின் தவிர்க்க முடியாத பணியாகும்.

இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பருவமழை துமிக்க ஆரம்பித்துவிட்டது. இருக்கின்ற கால அவகாசத்தினை பயன்படுத்தி திட்டமிடுதல்களை மேற்கொள்வதன் மூலம் உயிர் மற்றும் உடைமை இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்வது மாத்திரமல்லாது தகுந்த மாற்றுவழியை உத்தேசிப்பதற்கும் இதுவே சரியான தருணம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்திப் பத்திரிகைகளும் அவை புரியும் பணிகளும்

# 6

# செய்திப் பத்திரிகையின் இதயம் எது?

உண்மையில் சொல்வதானால் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் மேற்கில் குறிப்பாக பிரிட்டனில் செய்திப் பத்திரிகைத் துறையானது மிக வேகமாக வளரத் தொடங்கி புரட்சிகரமான சாதனைகளை நிகழ்த்தியது. அத்துடன் அந்தக் கால கட்டத்திலேயே பல்வேறு விதமான கட்டுப்பாடுகளையும் எதிர்ப்புக்களையும் எதிர்கொண்டது. இந்த நிலைமைகளை ஆக்ரோசமாக எதிர்த்துப் போராடிய பத்திரிகையாளர்களும் தோன்றினார்கள். அதுமட்டுமல்ல வாசிக்கும் மக்களும் கல்வி மற்றும் அறிவுத்துறையில் முன்னேறி இருந்தமையால் வெறும் செய்திகளை மட்டுமன்றி செய்திகள் மீதான விமர்சனங்களையும் விரும்பி வாசிக்கலானார்கள்.

இந்தநிலைமையில் விசித்திரமான கொள்ளை, கொலைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள், உயர்குடிமக்கள் வாழ்க்கை தொடர்பான செய்திகளைத் தேடி பிரசுரித்துக் கொண்டு, பத்திரிகை விற்பனையை அதிகரித்துக் கொள்வதில் ஒரு வகை பத்திரிகைகள் ஈடுபட்டிருந்த அதே சமயம் அரசியல்வாதிகள், அரசியல் விவகாரங்கள் போன்ற விடயங்கள் தொடர்பான விமர்சனங்களையும் கடும் கண்டனங்களையும் வெளியிடுவதில் பின்னிற்காத பத்திரிகைகளும் வளரவே செய்தன. அவைகளுக்கென்று வாசகர்களும் இருந்துள்ளார்கள்.

அந்த வகையில் பார்க்கையில் ஒரு பிரபல்யமான மக்கள் ஆதரவு பெற்ற பத்திரிகைக்கு குற்றச் செயல்கள், காதல் விவகாரங்கள், நீதிமன்றங்களில் இடம்பெறும் உணர்ச்சிகளைத் தூண்டும் அல்லது இளம் சந்ததியினரைக் கிளர்ந்தெழச் செய்யும் செய்திகள் அவசியமில்லை என்றே தோன்றுகின்றது.

19ஆம் நூற்றாண்டில் பொலிற்றிக்கல் றெஜிஸ்ரர் (Political Registers – அரசியல் பதிவேடு) என்ற பெயரில் வில்லியம் கொப்பெற் என்பவர் பத்திரிகையொன்றை நடத்தியுள்ளார். அவர் தமது பத்திரிகையில் மேற்கண்டவாறு உணர்ச்சிமயமான செய்திகளுக்கு இடம்கொடுக்காமல் சமகால விவகாரங்கள் தொடர்பான கடும் கண்டன விமர்சனங்களை மட்டுமே வெளியிட்டு வாரம் 50,000 பிரதிகளை விற்பனை செய்துள்ளார். இது அந்தக் காலத்தில் மாபெரும் சாதனையாகக் கருதப்பட்டது.

பொலிற்றிக்கல் றெஜிஸ்ரர் பற்றியும் அதன் ஆசிரியர் கொப்பெற் பற்றியும் சுவாரஷ்யமான பல தகவல்கள் உண்டு.

அந்தக் காலத்தில் வாழ்ந்த வெற்றிகரமான அரசியல் விமர்சக பத்திரிகையாளராக அவர் கணிக்கப்பட்டுள்ளார். அவர் சுய கல்வியில் உயர்ந்தவர். ஒரு விவசாயின் மகன். கிராமப்புறத்திலேயே வளர்ந்தவர். ஆரம்ப காலத்தில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுபவராக அவர் பிரசித்தி பெற்றிருந்தார். பீட்டர் போர்க்குபைன் என்ற புனைபெயரில் எழுதிவந்துள்ளார்.

1802ஆம் ஆண்டு த வீக்லி பொலிற்றிக்கல் றெஜிஸ்ரர் முதன்முதலில் வெளியிடப்பட்டுள்ளது. அடுத்து வந்த 30 ஆண்டுகாலம் கொப்பெற் அந்தப் பத்திரிகையின் பக்கங்களைத் தாமே நிரப்பி வெளியிட்டு வந்துள்ளார்.

அப்போதைய பிரதமர் பிட்சின் அரசைக் கடுமையாகத் தன் எழுத்துக்களால் சாடிவந்துள்ள கொப்பெற் அந்தக் காலத்தில் உருவாகி வந்த மாற்றங்களுக்கான தீவிரவாதக் கொள்கைகளை தீவிரமாக ஆதரிப்பவராக விளங்கியுள்ளார்.

அந்தக் காலத்தில் கிளர்ச்சியாளர்கள் ஐந்து பேருக்கு தடியால் அடித்துத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது தொடர்பாக கொப்பெற் கடும் கண்டன விமர்சனங்களை வெளியிட்டிருந்தார். அதன் மீது அவருக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் பொலிற்றிக்கல் றெஜிஸ்ரருக்கு பெரும்வரவேற்பு இருக்கவில்லை. என்றாலும் காலம் செல்லச் செல்ல மக்கள் கூடும் இடங்களில் அது ஆர்வத்துடன் வாசிக்கப்பட்டது.

செய்திப் பத்திரிகைகள் மீது கடுமையான வரி விதிப்புக்களை ஆட்சியாளர்கள் மேற் கொண்டதால் தமது பத்திரிகையில் செய்திகளைப் பிரசுரிப்பதை நிறுத்திவிட்டார் கொப்பெற். அதன் மூலம் செய்திப் பத்திரிகை என்ற பட்டியலில் இருந்து விடுபடுவது அவர் நோக்கம். செய்திகளை விடுத்து அவை பற்றிய விமர்சனங்களை வெளியிடத் தொடங்கினார்.

### பத்திரிகையில் என்ன இருக்கிறது?

முறையாக சகல வசதிகளோடும் வெளிவருகின்ற பத்திரிகை ஒன்றை வாசகர் ஒருவர் கையில் எடுத்து விரித்துப் பார்த்தால் அதில் அவரை வாசிக்க செய்யவும், பார்த்து ரசிக்கவும், சிந்திக்க வைக்கவும் எந்தெந்த பொருளை எங்கெங்கே வாங்கலாம், ஊரில் உலகத்தில் என்னென்ன நடைபெறுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளச் செய்யவும், கவர்ச்சியான தலைப்புக்கள், படங்கள், கேலிச்சித்திரங்கள், செய்திக் கட்டுரைகள் என்ற பல அம்சங்களை பார்க்கலாம். இவை அனைத்துக்கும் காரணமாய் இருப்பவர்கள்தான் பத்திரிகையாளர்கள். உலகம் முழுவதும் இடம்பெறும் சம்பவங்ளை சேகரித்து, தொகுத்து, சீராக்கி, மக்கள் அறிய வேண்டியவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கான தலைப்புக்கள், வர்ணனைகள், வர்ணமெருகூட்டல்கள் என்று இன்னோரன்ன நுட்பங்களைக் கையாளும் பத்திரிகையாளர்கள் மற்றும் அவர்கள் பணிசெய்யும் முறைகளையும் மட்டும் இனி நாம் சுருக்கமாகப் பார்க்கலாம்.

### பத்திரிகை நிறுவனத்தின் இதயம்

ஒரு பத்திரிகை நிறுவனத்தை எடுத்துக் கொண்டால் அங்கு பணிபுரியும் விநியோகப் பணியாளரிலிருந்து பத்திரிகையின் உரிமையாளர் வரை அனைவருமே ஏதோ ஒரு வகையில் முக்கியமானவராக இருப்பார். பத்திரிகை நிறுவனம் எனும்போது அங்கே பல்வேறு பிரிவுகள் இருக்கும். எந்த ஒரு தொழில் நிறுவனத்திலும் காணக்கூடிய விடயம்தான் இது. என்றாலும் இங்கே அந்த நிறுவனத்தின் இதயம் என்பதுபோன்ற ஒரு பகுதி உண்டு. அதுவே ஆசிரியர் பகுதி என்று அல்லது ஆசிரியர் பீடம் என்று அழைக்கப்படுவது. இன்னும் சரியாகச் சொல்வதானால் செய்திப் பத்திரிகையொன்றில் இதய[illegible] செய்திப் பிரிவு அல்லது செய்தி அறைதான்.

ஆசிரிய பீடத்தில் பல பிரிவுகள் இருப்பதைக் காணலாம். பெரிய பத்திரிகைகளில் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் தனித்தனியே தலைவர்கள் அல்லது முகாமைத்துவ அதிகாரி ஒருவர் இருப்பார். இந்த ஒவ்வொரு பிரிவுக்கும் தனியான அறைகள் உண்டு. அவ்வாறானதே செய்தி அறை அல்லது செய்திப் பிரிவு ஆகும். பத்திரிகைக்கான செய்திகள் யாவும் இந்தப் பிரிவுக்கே வந்து சேர்கின்றன. அவைகளின் தரம் மற்றும் முக்கியத்துவம் முதலியவற்றைக் கொண்டு பத்திரிகை பகுதி பகுதியாகத் தயாரிக்கப்படும்.

### செய்தி என்றால் எதைக் குறிக்கும்

மக்கள் விரும்பி அறிய விரும்புபவைகள் யாவும் செய்திகள்தான். ஆனால் பத்திரிகைகள் வெளியிடுவதற்கான செய்திகள் மக்கள் விரும்புகின்றமை மட்டுமல்ல அந்தப் பத்திரிகையின் கொள்கையின்படி சில வகையான




செய்திகள் தவிர்க்கப்படுவதும் உண்டு. சில சமயம் சில செய்திகள் அதிக முக்கியத்துவம் பெறுவதுமுண்டு. இது விரிவாக ஆராயப்பட வேண்டிய விடயம். அதனால் அதை மேலும் விரிக்காமல் தவிர்ப்போம்.

பொதுவில் ஊரில் உலகில் மூலை முடுக்குகளில் எல்லாம் நிகழ்கின்ற சம்பவங்கள்தான் செய்தியாகின்றன. ஆனால் எல்லாச் சம்பவங்களும் பத்திரிகை செய்தியாகி விடமாட்டா. ஒரு விடயத்தை மட்டும் பார்ப்போம்.

ஒரு கிராமத்தில் பெரியவர் ஒருவர் திடீரென்று இறந்துபோகிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்தக் கிராமத்துக்கு அது ஒரு பெரிய செய்தியாக இருக்கலாம். ஆனால் அது பத்திரிகை வாங்குகின்ற அனைத்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டிய விடயமாக கருதப்படமாட்டாது. பெரிய தேசியப் பத்திரிகைகளில் அதனை பெரிதுபடுத்தி பிரசுரிக்க வேண்டிய அவசியமில்லை. வேண்டுமானால் அந்த ஊர் அமைந்துள்ள பகுதிக்கு என்று அச்சாகும் பிரதிகளில் அது உரிய இடம்பெறலாம். அந்த ஊர் மக்கள் அல்லது அவரின் உறவினர்கள் அதனை பத்திரிகையின் சகல பிரதிகள் பதிப்புகளிலும் வெளிவரும் வகையில் பணம் செலுத்தி அந்தச் செய்தியை விளம்பரமாக வெளியிடச்செய்வது சாத்தியமாகவிருக்கும். ஆனால் அதே பெரியவர், ஒரு பிரபலமான அரசியல்வாதி, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது ஓர் அமைச்சர் அல்லது நாட்டுமக்கள் மத்தியில் தன் சேவைகளின் காரணமாக மதிப்பும் மரியாதையும் பெற்றவர் என்றால் அவரது மறைவுக்கு பத்திரிகைகள் வழங்கும் முக்கியத்துவம் எவ்வாறு இருக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை.

### செய்திகள் எவ்வாறு கிடைக்கின்றன?

செய்திகளை பத்திரிகை நிறுவனங்கள் பல்வேறு முறைகளில் பெற்றுக் கொள்கின்றன. இரண்டு முறைகள் முக்கியமானவை. ஒன்று அந்தந்தப் பத்திரிகைகள் தங்களுக்குரிய செய்திகளை வழங்குவதற்கென்றே பணியாளர்களை நியமித்துக் கொள்கின்றன. இரண்டாவது, பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களுக்கு செய்தி வழங்குவதற்கென்றே முகவர் நிறுவனங்கள் இருக்கின்றன. அவ்வாறான நிறுவனங்கள் உலகம் முழுவதும் காணப்படுகின்றன. அவ்வாறு வெகுகாலமாக செயற்படும் ஒரு நிறுவனமாக ரொய்டர் (RAUTER) என்பதைக் குறிப்பிடலாம். ஆனால் இன்றைய காலகட்டத்தில் செய்திப் பத்திரிகைத்துறையானது நவீன தொழில்நுட்பத்துக்கு உள்ளாகியிருப்பதால் செய்தி நிறுவனங்களும் பத்திரிகைகளும் இணையத்தளங்கள் மூலம் செய்திகளை பதிவிறக்கம் செய்து கொண்டு விரைவாகச் செய்திகளை வழங்கும் வாய்ப்பையும் பெற்றுள்ளன.

எனவே முக்கிய பல விடயங்களுக்காக இணையங்களில் தங்கியுள்ள பத்திரிகை நிறுவனங்கள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு முன்னதாக பத்திரிகையைப் பிரசுரித்து மக்கள் கைகளுக்கு சென்றடையச் செய்ய வேண்டிய நிலையில் உள்ளன. இதில் பத்திரிகைகளுக் கிடையில் செய்திகளை முன்கூட்டியே வெளி யிடுவதில் போட்டி ஏற்படுகின்றது. போட்டியில்லாத பட்சத்தில் ஒரே சமயத்தில் பல பத்திரிகைகளிலும் ஒரே செய்தி ஒரே மாதிரியான முறையில் காணப்படுவதுண்டு. ஆனால் சில பத்திரிகை ஆசிரியர்கள் இணையத்தளங்களில் இருந்து செய்திகளை எடுத்துக் கொண்டாலும் அவைகளை வழங்கும் முறையில் மாற்றங்களை அல்லது தமக்குரிய பாணிகளைக் கையாள்வதன் மூலம் தமது செய்திக்கு ஒரு கிராக்கியை ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

இணையத்தளங்களில் வரும் செய்திகள் பெரும்பாலும் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்ப்பவையாகவே காணப்படுகின்றன. சில சமயங்களில் இணையத்தள மொழிபெயர்ப்பு த்வறாக இருக்கும் பட்சத்தில் அதே தவறு அதனை எடுத்துக் கையாளும் பத்திரிகைகளிலும் காணப்படுவதுண்டு. அதனால்தான் அவ்வாறான தவறுகள் செய்திகளில் ஏற்படாவண்ணம் இணையத்தில் கிடைக்கும் செய்திகளை ஆங்கில மூலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள முக்கியமான பெரிய பத்திரிகைகள் அதற்கெனத் தகுதி வாய்ந்தவர்களை நியமித்துக் கொள்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு நாடாகும் சிரியா (Hybrid Country)

சிவா செல்லையா

> வல்லரசுகளின் பொம்மைகளாக உள்ள ஆட்சியாளர்களை இஸ்லாத்தின் பெயரால் தூக்கி எறிய வேண்டிய கட்டாயம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

ஒரு நாட்டினுள் பல அரசுகள் இயங்கும் செயன்முறைக்கு உதாரணமாக (Hybrid Country) இன்று சிரியா விளங்குகின்றது. அங்கு மூன்று அரசுகள் அல்லது நிர்வாகங்கள் நிகழ்கின்றன. ஒன்று அதிபர் ஆசாத் தலைமையிலான அரசு, அடுத்து ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சி அரசு, மூன்றாவது ஆசாத்துக்கு எதிரான புரட்சி அரசு. இவற்றில் ஆசாத்துக்கு எதிரான கிளர்ச்சிப் படைகளுக்கு அமெரிக்க அரசு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவு அளித்து வருகின்றது. ஆசாத்துக்கு ரஷ்யாவும் சீனாவும் ஆதரவு அளிக்கின்றன.

உலக வல்லரசுகள், அமைதியாக வாழவிடாது சிரியாவைத் தமது ஆதிக்கப் போட்டிக்குள் தள்ளி உள்ளன. இஸ்லாத்தின் அடிப்படை வாதத்துக்கு எதிராக மேற்குநாடுகள் மட்டுமல்ல, ரஷ்யா, சீனா ஆகிய வல்லரசுகளும் இணைந்துள்ளன. இந்த நிலையில் மதத்தின் பெயரால் உலகில் உள்ள இஸ்லாமியர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.

பயங்கரவாதம் என்று கூறியபடி சிரியாவில் நிகழ்வதுபோல் ஏனைய இஸ்லாமிய நாடுகளையும் இராணுவ மேலாண்மைக்குள் கொண்டு வந்து, அங்குள்ள பெற்றோலிய வளங்களை வல்லாதிக்க நாடுகள் அபகரிக்க விடக்கூடாது. வல்லரசுகளின் பொம்மைகளாக உள்ள ஆட்சியாளர்களை இஸ்லாத்தின் பெயரால் தூக்கி எறிய வேண்டிய கட்டாயம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

சிரியாவில் ஏற்பட்டுள்ள மோதல் நிலையை மூன்றாம் உலகப்போரின் ஆரம்பமாகவே கருத வேண்டி உள்ளது. இதில் மூன்று அணிகள் உள்ளன. முதலாவது ரஷ்யாவும் சீனாவும், இரண்டாவது அமெரிக்கா, மூன்றாவது இஸ்லாமிய அடிப்படைவாதிகள். தற்போதைய நிலையில் நேட்டோ அணியில் இருந்து ஜேர்மனியும், பிரான்சும் விலகும் சூழலும் ஏற்பட்டுள்ளது. இதனால் ரஷ்யாவின் மேலாண்மை உலகில் ஏற்படும். ரஷ்யா, சீனா இணைந்து மத்தியதரைக் கடலைக் கட்டுப்படுத்தும் சூழலை சிரிய ஆக்கிரமிப்பு ஏற்படுத்தும்.

தற்போதைய சூழலால் உலகப் போர் ஏற்படாதவிடத்தும், மத்தியதரைக் கடலில் இருந்து சீனாவுக்கான கப்பல் பாதைக்கு அம்பாந்தோட்டைத் துறைமுகமும் மத்தள விமான நிலையமும் சீனாவில் இலங்கையிடம் இருந்து கடன் அடிப்படையில் குத்தகைக்குப் பெறப்படும். அவ்வாறு நிகழின் திருமலையில் இந்தியப் படைகள் நிலை கொள்ளவும் இலங்கையின் வடக்கே மாற்று அரசு ஒன்று உருவாகும் நிலையும் ஏற்படும். (Hybrid Country) சிரியாவில் ஏற்பட்ட நிலை இலங்கையிலும் ஏற்படுவது தவிர்க்க முடியாத உலக ஒழுங்காக மாறும். ஏற்கனவே போரால் அழிவுகளைச் சந்தித்த தமிழினம் முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் தலைமையில் பெரிய அரசியல் நகர்வை மேற்கொள்ள இன்றைய காலம் கனிந்துள்ளது.



# சிரிக்க சிந்திக்க சில வரிகள்

கலாபூசணம்
மு.மாசிலாமணி

உண்மையைச் சொன்னால் உடம்பெல்லாம் எரியும் என்பார்கள். இதுதான் இப்பொழுது எமது நாட்டிலும் ஏன் உலகெங்கும் நடைபெறுகிறது கண்கூடு.

நம்மில் பலர் உலகம் அழியப்போகிறது, அழியப் போகிறது எனப் பயந்து கொண்டு உலகத்தையே தாமே அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உதாரணத்துக்கு ஒன்று...... நாமெல்லாம் விவசாய தொழில்புரியும் விவசாயிகள், பலர் சொல்வது போல் எமக்கு உணவு மட்டுமல்லாது வியாதிகளையும் மறைமுகமாகப் பரப்பி வருகிறார்கள். அவர்கள் சேற்றில் கால்வைத்தால் தான் நாம் சோற்றில் கைவைக்கலாம் எனச் சொல்வதெல்லாம் சும்மா எதுகை மோனைக்காக சொல்வது என நினைக்கத் தோன்றுகிறது. மாறாக அதிக அளவில் கிருமி நாசினிகள், செயற்கைப் பசளைகள் மூலம் எமது சோறும் காய்கறிகளும் நஞ்சாக மாறி எம்மை மெல்ல மெல்லக் கொல்கின்றன.

மரக்கறி வகைகளை விட்டு கடல் உணவு உண்போம் என்றால் அவற்றின் விலையும் ஒருவித கட்டுப்பாடில்லாது உச்சியில் நிற்கிறது. மீன் சந்தையில் விற்பவர்கள் சொல்வதுதான் விலை. பாவம் நுகர்வோர். விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் சந்தைப் பக்கம் போவதில்லையா? பாண் போறணையில் ஒரு கிராம் நிறை குறைந்தால் வழக்குப் பதியும் அதிகாரிகள், மீன் வியா பாரிகள் தராசு இல்லாது தாம் நினைத்த விலையை நிர்ணயிப்பதைப் பார்ப்பதேயில்லையே! பத்திரிகைகளில் தினமும் கடலுணவு விலைப் பட்டியல் வருகிறது. அதில் குறிப்பிடும் விலையை யார் நிர்ணயிக்கின்றார்களோ தெரியவில்லை. மாறாக மரக்கறிகள் யாவும் தராசு மேல் ஏறி நுகர்வோரை திருப்திப்படுத்துகின்றன. வாழைப்பூவும் எலக்ரோனிக் தராசில் ஏறும் பாக்கியம் சந்தைகளில் கிடைக் கிறது. மீன்கள்தான் பாவம்.

மீனைப்பற்றி சொல்லும்போது, நான் சிறுவனாக இருந்தபோது வீட்டில் மீன் வாங்கும் டியூட்டியை அம்மா என்மேல் சுமத்தி விடுவார். பள்ளிக்கூடத்தில கணக்கு வாத்தியாரின் பிரம்பைக் கண்டு பயப்படுவது போல் பயந்து பயந்து மீன் சந்தைக்குப் போவேன். சந்தையில் பெண் வியாபாரிகளின் பேச்சைக் கேட்டால் சைவனாக மாறினால் என்ன என எண்ணுவேன். அம்மா சொல் லிவிட்ட விலைக் குள் அடக்கமாகவும் நாறாத நல்ல மீனாகவும் இருக்க வேண்டும். இல்லையேல் அம்மாவின் பத்துக்கட்டளைகளை மீறிவிட்டதாகிவிடும். தவிர நல்ல மீனைத் தெரிவு செய்வது எப்படி என அம்மா சொல்லித் தந்த ரிப்ஸ் - மீன் சோர்வாக இல்லாது விறைப்பாகவும், அமத்திப் பார்த்தால் கடினமாகவும் இருக்க வேண்டும் என்பது. இதைச் செய்ய மீன் வியாபாரி அனுமதிப்பாரா? இருந்தும் ஒருமுறை மனத் துணிவுடன் வலது கை சுட்டிவிரலால் அமத்திப் பார்த்தேன். என்ன தம்பி மீனுக்கு ஊசி போடுறியோ என்று கேள்வி பிறந்தது. என்ன விலை எனக் கேட்க 50 ரூபா என்று வெற்றிலை வாயால் பதில் வந்தது. குறையாதோ என சற்றுத் தூரம் தள்ளி நின்று கேட்க "[illegible]" என்றார். அன்று [illegible] என நரி சொன்னது போல் அன்றுவிட்டேன் மீன் வாங்கும் வேலையை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பகல் வேளை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பரபரப்பாக நின்றுகொண்டிருந்தார் ஜம்புலிங்கம். வட்டுக்கோட்டைக்குப் போகும் பஸ்ஸைப் பிடிக்க வந்த அவரது நண்பர் ஜம்புவின் பரபரப்பைப் பார்த்துவிட்டு அருகில் நெருங்கி என்ன விசயம் என்று கேட்டார்.

"என்னுடைய செக் புக் தொலைஞ்சு போச்சு" என்றார் ஜம்பு பரிதாபமாக.

உடனே நண்பர், முன்னெச்சரிக்கை முனுசாமி மாதிரி, "ஐயய்யோ! யாராவது எடுத்து உங்கட மாதிரி பொய்க் கையெழுத்தப் போட்டு காச எடுத்திடப் போறாங்கள். உடனே வங்கிக்கு அறிவியுங்கள்" என்றார்.

ஜம்புலிங்கம் சும்மா இருப்பாரா, நண்பரை விட தான் மேதாவி என்பதைக் காட்ட அவர் சொன்னார், "நான் என்ன அவ்வளவு முட்டாள் என்றா நினைத்துக்கொண்டாய். இப்படி ஏதாவது நடக்கும் என்று தெரிந்து தான், என்னுடைய கையெழுத்தை எவனும் பொய்யாகப் போட முடியாதபடிக்கு எல்லாச் செக்கிலேயும் நானே கையெழுத்துப் போட்டு வச்சிருக்கிறேன்" என்றாராம்.

## ஜம்புவின் முன்யோசனை



# பிரசாத் வடக்கின் ஒளி

ந.லோகதயாளன்



பட்டதாரிகள் அரச வேலைக்குக் காத்திருப்பதைப் பற்றி வடக்கு மாகாண முதலமைச்சர் அண்மையில் காரசாரமாகக் கருத்துத் தெரிவித்திருந்தார். என்றைக்கோ வரப்போகிற அரச ஓய்வூதியம் என்கிற ஒன்றுக்காக வலியவரும் தனியார் வேலைஎன்கிற சீதேவியைப் பட்டதாரிகள் கண்டுகொள்ள மாட்டேன் என்கிறார்கள் என அவர் கலைப்பட்டிருந்தார்.

ஆனால், வடக்கு முதலமைச்சரின் கருத்து எல்லாப் பட்டதாரி களுக்கும் பொருந்தி விடாது என்று தனது செயல் மூலம் உணர்த்தி வருகிறவர் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த இராயரட்ணம் பிரசாத் (வயது – 24).

பிரசாத்துக்குச் சிறிய வயதுதான். பட்டப்படிப்பை முடித்ததும் அரச வேலைக்காக காத்திருக்க அவர் தயாராயில்லை. அனுபவமில்லா விட்டாலும் அறிவையும் துணிவையும் மூலதனமாக்கிக் கொண்டு சிறிய முதலுடன் சொந்தமாக ஏற்றுமதி வியாபாரம் தொடங்கினார். இப்போது ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அவரை பிலிப்பைன்ஸுக்கு தொழில் சுற்றுலாவுக்கு தனது செலவில் அனுப்பியுள்ளது.

பிரசாத் உயர்தரத்தை முடித்துவிட்டு கணக்கீட்டு நுட்பவியல் (ஏ.ஏ.ரி) பட்டயம் மற்றும் நில அளவீட்டியல் போன்ற தொழிற் கற்கைகளைப் பூர்த்தி செய்தார். என்றாலும் அரச தொழிலுக்காகக் காத்திருக்க வில்லை. தனியார்துறையிலும் அவருக்கு அவ்வளவு இலகுவில் தொழில் கிடைத்து விடவில்லை. தளராத துணிவோடு களமிறங்கிய அவர் புதிய சிந்தனையுடன் ஏற்றுமதி வியாபாரத்தை ஆரம்பித்தார்.

2014 ஆரம்பத்தில் கிராமங்களில் பன்னவேலை செய்பவர்களைத் தேடிப்பிடித்து அவர்களின் உற்பத்திகளைக் கொள்வனவு செய்தார். அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தார். வெளிநாடுகளில் வாழும் நண்பர்களின் உதவியுடன் இதனை அவரால் வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்தது. கணிசமான இலாபமும் கிடைத்தது.

கிளிநொச்சி ஏ – 9 வீதியில் கே.எம்.ரி. இம்போட் எக்ஸ்போட் எனும் சிறு ஏற்றுமதி வியாபார நிலையத்தைத் திறந்தார். இதன் மூலம் கிராமங்களில் குடிசைத் தொழிலாக பன்ன வேலை புரிபவர்களிடம் இருந்தும் இந்தத் தொழிலை முழு நேரமாகக் கொண்டவர்களிடம் இருந்தும் உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்துவருகிறார். 11 பேருக்கு நேரடியாகவும் பலருக்குமறை முகமாகவும் வேலை வாய்ப்பையும் வழங்கியுள்ளார். இதன்மூலம் உள்ளூரில் பன்ன வேலையில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு சிறப்பான சந்தை வாய்ப்பு உள்ளூரிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தனது வியாபாரத்தைப் பெருக்கியதுடன் நின்று விடாமல், ஏற்றுமதி அபிவிருத்திச் சபையில் அதனைப் பதிவு செய்தும் கொண்டார். அவரது விரைவான வளர்ச்சி, ஊக்கம் என்பவற்றைப்பார்த்த சபை, இந்த ஆண்டில் சிறு ஏற்றுமதியாளர்களுக்கான வெளி நாட்டுப் பயிற்சித் திட்டத்தில் அவரையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது. அரச செலவில் பிலிப்பைன்ஸ் சென்றுள்ளார் இப்போது. வடக்கு – கிழக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு தமிழர் இவர் மட்டுமே.

"15 மாதங்களாக இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறேன். அரச தொழில் தேடும் துன்பத்தை உணர்ந்த பின்னரே இதனை ஆரம் பித்தேன். 12 பேருக்கு இப்போது என்னால் தொழில் கிடைக்கிறது. இது பெரிய சந்தோசம். ஆரம்பத்தில் மாதம் 20 தொடக்கம் 30 ஆயிரம் ரூபா தேறிய லாபம் கிடைத்தது. இப்போது 75 ஆயிரம் ரூபாவுக்கு குறையாத மாத லாபம் கிடைக்கிறது. 8 முதல் 10 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை ஏற்றுமதி செய்கின்றேன்" என்று கூறும் பிரசாத், வியாபாரத்தை மேலும் விரிவாக்குவதில் துடிப்புடன் செயற்படுகிறார்.

இப்போது பொருள்களை அவர் விமானப் பொதிகள் மூலமே ஏற்றுமதி செய்து வருகிறார். இதனால் பெரும் செலவு ஏற்படுகிறது. இதுவே கப்பல் பொதியாக இருந்தால் செலவு அரைவாசியாகக் குறைந்து விடும். மாவட்டச் செயலகம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபையினரின் இதற்கான உதவிகளைச் செய்ய முன்வந்திருக்கிறார்கள்.

"தொழில் மேலும் வளர்ந்தால் இன்னும் பலருக்கு வேலை கொடுக்கலாம்" என்று சொல்லும் பிரசாத்தின் கண்களில் நம்பிக்கை பளிச்சிடுகிறது.

வேலைக்காக கையேந்தி நின்றிருந்தால் பிரசாத்தாலும் இன்று பிரசாத்தாலும் மற்றையவர்களுக்கு வேலை கொடுத்திருக்க முடியாது.

# அடுத்தவருக்காகவும் சிந்தியுங்கள்!

ம. திருமலை



மனிதன் தோன்றி காடுமேடு களில் அலைந்து திரிவதிலிருந்து தன் வாழ்க்கை யைத் தொடங்கினான். தனக்குப் புரியாத இயற்கை நிகழ்வுகள் குறித்து அவன் முதற்கண் பயம் கொண்டான். புரியாத விடயங்கள் குறித்துப் புரிந்து கொள்ள முயற்சி செய்த போதுதான் அவன் சிந்திக்கத் தொடங்கினான். மனிதனின் சிந்தனை எவ்வாறு போய்க் கொண்டிருக்கிறது என்பதே இன்றைய கவலை.

மனிதனின் சிந்தனை காலப்போக்கில் பொதுமை நோக்கில் இருந்து தனிமனித நோக்குக்கு மாறி விட்டதானது வேதனைக்கு உரியது. இந்த உலகம் தன்னைப் பற்றிச் சிந்திக்காமல் அடுத்தவரைப் பற்றிச் சிந்திப்பவர்களாலும், மற்றவர்களுக்காக முயற்சி செய்பவர்களாலும் மட்டுமே நிலைத்துச் சுழல்கின்றது என்று பாண்டிய மன்னனும் தமிழ்ப் புலவருமான கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி கூறினான். "உண்டாலம்ம இவ் வுலகம்..... தமக் கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலு நர் உண்மையானே" என்பது புகழ் பெற்ற பாடல் வரிகளாகும்.

இற்றை நாள்களில் சமூகத்தின் மிகப் பெரிய மனி தனிலிருந்து கடைகோடி மனிதன் வரை சிந்தனை பெரி தும் தன்னை மையமிட்டதாக மாறி விட்டதை எவ ராலும் உணர முடியும். மிகப் பெரிய நிறுவனங்கள், வங்கிகள் முத லியவை பெரும் இழப்புகளைச் சந்தித்து இருப்பதை நன்கு அறி கிறோம். பொருளா தாரத்தில் வலிமை மிக்க நாடுகளில் கூட, சில ஆண்டுகளுக்கு முன்னர் தொழில் துறைகள் வீழ்ச்சி அடைந்ததை அனைவரும் அதிர்ச்சியுடன் நோக் கினர். இந்தத் திடீர் வீழ்ச்சிக்குச் சில பொறுப்பான தனி மனிதர்கள்தான் காரணம் என்பதை பலரும் அறியார்.

சமுதாயம் நன்கு திகழ வேண்டுமானால், மனிதர்கள் பொதுநலன் உடையவர்களாக மனமாற்றம் அடைய வேண்டும். தமிழ் இதி காசங்கள், காவியங்கள், புராணங்கள் என் பவற்றின் நீண்ட சிந்தனை மரபில் வரும் இலக்கியங்கள், கவிதைகள் என்று இன்று வரை தொடர்ந்து வரும் கருத்து வெளிப்பாடுகள் அனைத்தி லும் பிறருக்காகச் சிந்தித்தல் எனும் பொதுநோக்கு முக்கிய இடம் பெறுவதை ஊன்றிக் கவனித்தால் உணரலாம்.

மகாபாரதத்திலே ஒரு காட்சியிருக்கிறது. பாண்டவர்களின் வனவாச காலத்தில் அவர்கள் பல சோதனைகளைச் சந்திக்கிறார்கள். அத்தகைய ஒரு நாளில் திரௌபதிக்கு கடும் தண்ணீர் வேட்கை ஏற்படுகிறது. சிறிது தூரத்தில் பறவைகளின் நடமாட்டம் இருப்பதைக் கவனித்த சகாதேவன், அங்கு தடாகம் இருக்கும் என்று கூற முதலில் நகுலன் தண்ணீர் கொணரச் செல்கிறான். ஒரு தாமரை இலையை எடுத்து கூம்புகள் செய்து தண்ணீரை முகர முயற்சி செய்கிறான். தானும் தண்ணீரால் தாகத்தைத் தணித்துக்கெள்ள முயற்சி செய்கிறான்.

அப்போது அங்கே மறைந்திருக்கும் யட்சன் அசரீரி யாக, நான் இப்போது கேட்கப் போகும் கேள்விகளுக்குப் பதில் கூறாமல் தண்ணீரை எடுத்துச் செல்ல முடியாது. மீறிச் சென்றால், நீ இறப்பது உறுதி என்று எச் சரிக்கை செய்கிறான். எச்சரிக்கையை நகுலன் மீறு கிறான். கீழே வீழ்ந்து இறக்கிறான். இதேபோல் சகா தேவன், வீமன், விசயன் ஆகிய அனைவரும் இறந்து விடுகின்றனர். தண்ணீர் கொணரச் சென்ற எவரும் திரும்பி வராமையை எண்ணி தருமன் தடாகத்துக்குச் செல்கிறான்.

அனைவரும் இறந்து கிடப்பதைக் கண்டு ஏதோ விபரீதம் என்பதை உணர்கிறான். பின்னர் யட்சன் கூறும் நிபந் தனைக்கு உட் பட்டு வினாக்களுக்குப் பதில் கூறுகிறான். யட்சன் மிகவும் மகிழ்ந்து நீ வேண்டிய அளவு தண்ணீர் எடுத்துக் கொள்ளலாம்; அது மட்டுமல்ல, நீ விரும்பும் ஒரு சகோதரனை மீண்டும் உயிருடன் அழைத்துச் செல்லலாம் என்று வரம் தருகிறான். தருமன் சிறிதும் யோசிக்காமல் நகுலன் உயிருடன் கிடைக்க வேண்டும் என்று வரம் கேட்கிறான். யட்சன் அதிர்ச்சியின் உச்சத்துக்கே செல்கிறான்.

"எதிர்வரும் பாரதப் போரில் துரியோதன மன்னனை வெல்லும் வலிமை படைத்தவன் வீமன். நீ அவனை உயிர்ப்பிக்க வரம் கேட் பாய் என்று எதிர்பார்த்தேன். இல்லாவிட் டாலும் கர்ணனை வெல்லக் கூடிய வலிமை படைத்த அர்ச்சுனனைக் கேட்டிருந்தாலும் நான் ஆச்சரியப்பட்டு இருக்கமாட்டேன். பயன்பாட்டு நோக் கில் அதுவும் சரியே அல்லது நன்மை தீமைகள் பற்றி எடுத்துரைத்து அறிவுரைகள் வழங்கக்கூடிய சகாதேவன் கூட உனக்குப் பயன்படுவான். இப்படி குறிப் பிட்டுக் கூறக்கூடிய நிலையில் இல்லாத இயல்பான, சாதாரண வீரனாக நகுலனை உயிருடன் கேட்கிறாயே தருமா?" என்று யட்சன் தனது வியப்பை வெளிப்படுத்துகிறான்.

"யட்ச தேவனே! நான் என்ன வரம் கேட்பது என்பதை நன்கு உணர்ந்துதான் கேட்கிறேன். நகுலன் பாரதப் போரில் வீமனைப் போலவோ, அர்ச்சுனனைப் போலவோ பயன்படமாட் டான்தான். ஆனால், வாழ்க்கையில் அனைத்து விடயங்களிலும் நமக்கு என்ன பயன் என்று பார்ப்பது மனித இனத்தை வாழ வைக்காது. அறம் (தர்மம்), பொதுநோக்கு, பொதுநலன் போன்றவைதான் மனித இனத் தைக் காப்பாற்றக்கூடியவை. எனவே, நம் முடைய கடமை தர்மத்தைப் பாதுகாப்பது ஒன்றே! அதைச் சரியாகச் செய்துவிட்டால், மற்றவை எல்லாம் நேராகிவிடும்" என்று கூறுகிறான். யட்சன் மிகவும் மகிழ்ந்து வீமன், விசயன், சகா தேவன், நகுலன் போன்ற அனைவரையும் உயிர்ப்பிழைக்கச் செய்து தருமனுடன் அனுப்புகிறான்.

இந்த மகாபாரதக் கிளைக் கதை பிறருக்காகச் சிந்தித்தல் என்ற கருத்தியலை மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. தருமன் அவ்வாறு முடிவு செய்ய என்ன காரணம்?

தருமனே கூறுகிறான்: "என்னுடைய தந்தை பாண்டுவின் இரண்டு மனைவியருள் மூத்த வரான குந்தியின் பிள் ளைகள் மூவரில் மூத் தவரான நான் இப்போது உயி ருடன் இருக்கிறேன். என் சிற்றன்னையான மாத்ரியின் பிள்ளைகளில் மூத்தவனான நகுலன் உயிருடன் இருப்பதே தர்ம நியாயத்திற்கு ஏற்றது. எனவே, நகுலனை நான் கேட்டேன்" என்பதே தருமன் கூறும் பொது நீதி.

பிறருக்காகச் சிந்தித்தல் என்ற இந்தக் கருத் தியலை நமது வள்ளுவப் பேராசான் ஒப்புர வறிதல் என்று குறிப்பிட்டு விளக்குகிறார். ஒப்புரவு அறிதல் என்பதற்கு உலகத்தின் போக்கிற்கு ஏற்றவற்றைத் தாமே அறிந்து செய்தல் என்பது பொருளாகும். அதாவது, உலகத்தின் பொதுப் பணி போக் கிற்கு ஏற்ற நன்மைகளைச் செய்தல் என்பது பொருள். உலகத்திற்கே வழி காட்டிய வள்ளுவர்,

இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு
ஒல்கார் கடன்அறி காட்சி யவர்

என்று கூறுகிறார். நன்மை செய்ய இயலாத சூழ்நிலையிலும் அறத்தின் – தருமத்தின் – பாதையை உணர்ந் தவர்கள் நன்மை செய்யத் தவற மாட்டார்கள் என்று வள்ளுவர் சந்தேகத்துக்கிடமின்றிக் கூறுகிறார். மகாபாரதம் நச்சுப் பொய்கை கதையின் மூலமாக விரிவாகக் கூறிய செய்தியை வள்ளுவர் செறிவாக எடுத்துக் கூறுகிறார்.

பிறருக்காகச் சிந்தித்தல் என்பதை ஒரு வாழ்க்கை நெறியாக நம் முன்னோர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். பிசிராந்தையார் என்னும் புலவர், மன்னனானவன் மக்களைத் துன்புறுத்தாமல் வரி வசூலிக்க வேண்டும். அப்படிச் செய்தால், விளைபொருள் நீண்ட காலத்திற்குப் பயன்படும். அவ்வாறில்லாமல் தன் விருப்பம் போல் மன்னன் செயல்பட்டால் யானையின் காலில் சிக்கிய விளை நிலம் போல நாடு கெட்டுவிடும் என்று அறிவுரை கூறுகிறார்.

யானை புக்க புலம்போலத்தானும்
உண்ணான், உல கமும் கெடுமே

என்று புலவர் எத்தனை கரிசனத்துடன், பொதுநோக்குடன் அரசனுக்கு அறிவுரை கூறுகிறார் பாருங்கள்! மன்னனாக இருந்தாலும் சுயநலமாக இருக்க முடியாது என்ற சமூக நடைமுறை எவ்வளவு துல்லியமாகக் கூறப்படுகிறது.

மன்னனே உலகத்தின் உயிர் என்று மக்கள் நம்பினாலும் தான் குற்றமற்ற உயிராக இருக்க வேண்டும் என்று ஓர் அரசனே பொறுப்புடன் சிந்தித்த பாங்கினைத் தொண் டைமான் இளந்திரையன் எனும் அரசன் பாடிய பாடல் உணர்த்துகிறது.

நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான சான் றுகளை இப்படி நம்மால் அடுக்க முடியும். இனிமேலாவது நம் மைப் பற்றியே சிந்திப் பதை விட்டுவிட்டு பிறருக்காகச் சிந்திப்போம். பிறரை வாழவைப்பது குறித்துச் சிந்திப்போம்.

பிறர் நலமாக இருந்தால்தான் சமூக வாழ்க்கை நன்றாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்ற மனம் பித்து




நேரம் காலை 8மணி.மணியொலி கேட்டதும் எல்லோரும் உணவருந்தும் மண்டபத்துக்கு வந்து காலை உண வருந்த ஆயத்தமாகினர்.
ஒவ்வொரு நாளும் உணவை உண்ப தற்கு முன்னர் இறைவனுக்கு நன்றி சொல்லும் அன்னபூரணி அம்மாவை இன்று காணவில்லை. எனது கண்கள் ஆவலுடன் அவரைத் தேடின. என்னரு கில் நின்ற பவானி அக்காவிடம், "என்ன இண்டைக்கு அன்னபூரணி அம்மா வைக் காணேல என்ன விசயம்....?" என்றேன்.
"இண்டைக்கு கார்த்திகை. அவ முழு நாளும் உபவாசமிருந்து இரவு பால் மட்டும்தான் குடிப்பா...." பவானியக் காவின் பதில் எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது.
அன்னை அகம் எனப் பெயர் தாங்கிய அந்த முதியோர் இல்லத்தின் மேற்பார் வையாளராக இரு வாரங்களுக்கு முன்னர்தான் பதவியேற்றுக் கொண்டேன். பிள்ளைகளால் கைவிடப்பட்ட, உறவுகளால் உதாசீனப்படுத்தப்பட்ட, ஆதரிப்பவர் யாருமற்ற முதியோர் களுடன் இருப்பதும் அவர்களைப் பராமரிப்பதும் பேறெனப்பட்டது. அந்த விடுதியில் சேவையாற்றுவது எனக்குள் ஒரு வகையான ஆத்ம திருப்தியை ஏற்படுத்துவதைப் இரு வாரங்களில் புரிந்துகொண்டேன்.
நான் வேலையைப் பொறுப்பேற்ற தினத்திலிருந்து அன்னபூரணி அம்மா வைப் பார்க்கும் போதெல்லாம் என் அன்னையைப் பார்ப்பது போன்ற உணர்வே எனக்கு ஏற்பட்டது.
தூய வெண்ணிற ஆடை, நெற்றியிலே விபூதி, அமைதியான உருவம், கண்க ளின் ஆழத்தில் ஒருவிதமான சோகம், அந்த விடுதியில் உள்ள அனைவரிடமும் அன்பாகப் பழகுவதால் எல்லோர் மனதையும் கொள்ளை கொண்ட அன்னபூரணி அம்மாவை எனக்குப் பிடித்ததில் வியப்பொன்றுமில்லை.
மண்டபத்திலிருந்து வெளியேறி பெண் களுக்கென ஒதுக்கப்பட்ட மண்டபத் துக்குச் செல்கின்றேன். மூன்று பேர் தங்கக்கூடிய அறைகளாக மண்டபத்தில் அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.
பெண்கள் அனைவரும் சாப்பாட்டுக்குச் சென்று விட்டனர். அன்னபூரணி அம்மா இருந்த அறையை எட்டிப் பார்க்கின் றேன். முருகன் படத்துக்கு முன்னாலி ருந்து கந்தசஷ்டி கவசத்தைத் தன் இனிய குரலில் பாடிக்கொண்டிருக்கிறார். அவ ரின் கண்களிலிருந்து கண்ணீர் இரு கன்னங்களிலும் வடிந்த வண்ணமி ருந்தது.
அவரது பூசையைக் குழப்பமனமின்றி அவர் வெளியே வரும்வரை காத்திருக் கிறேன். தாய் அன்புக்கு ஏங்கிய எனக்கு அன்னபூரணி அம்மா என் இறந்து போன தாயை நினைவூட்டினார்.
அவருடைய கண்களில் தெரியும் சோகம் ஏதோ வாழ்க்கையில் மிகப் பெரிய துன்பத்தைச் சுமந்திருக்கின்றார் என்பதைப் பறைசாற்றியது. பூசை முடிந்து வெளியே வரும்வரை அவ ரைச் சந்திப்பதற்காகக் காத்திருக்கிறேன். வெளியே வந்தவர் என்னைக் கண்டதும் ஆச்சரியப்பட்டார்.
"தம்பி! என்னைத் தேடியே வந்தனீங்கள் என்ன விசயம்..?" ஆர்வத்தோடு கேட்டவர், அன்போடு பார்த்தார்.
"அம்மா... நீங்கள் சாப்பிட வரேல்ல பவானி அக்கா நீங்கள் இண்டைக்கு விரதம் அதுவும் உபவாசம் என்று சொன்னவ. அதுதான் உங் களைப் பார்த்திட்டுப் போக வந் தனான்."
"நான் முருகனுக்கு விரதம் இருந்துதான் எனக்கு மகன் பிறந்தவன். அதனாலதான் அவ னுக்குக் குமரன் எண்டு பெயரும் வைச்சனாங்கள். அவன் நல்லாயிருக்க வேணும் எண்டு முருகனுக்குக் கார்த்திகை விரதம் பிடிக் கிறனான்..."
பனித்த கண்களைத் துடைத்துக் கொண் டார்.
தன் மீது இவ்வளவு பாசம் வைத்திருக்கின்ற தாயை எப்படி அவர் மகன் இந்த விடுதியில் தள்ளிவிட்டார் என்று நினைக்க கோபம் பற்றிக்கொண்டு வந்தது. அது பற்றி அறியவேண்டும் என்று மனது பரபரத்தது.
"எனக்குப் பன்னிரண்டு வயசிசாயிருக் கும்போதே என்ர அம்மா இறந்திட்டா. எனக்கு உங்களைப் பார்க்கும் போதெல் லாம் அம்மாவப் பார்க்கிற மாதிரியே இருக்கு. உங்களை நான் அம்மா எண்டு கூப்பிடலாமே...?"
என் தலையை அன்போடு கோதி விட்டார்.
"என்ர மகனுக்கும் உங்கன்ர வயதுதான் இருக்கும். நீங்களும் என்ர மகன்தான். என்னை நீங்கள் அம்மா எண்டே கூப்பிட லாம்..." அவர் முகம் மலர்ந்திருந்தது. அதில் ஒருவிதப் பரவசம் குடிகொண்டிருந்ததாகத் தோன்றியது எனக்கு.
அவருடன் பேசிக் கொண்டிருப்பது ஓர் இனிய அனுபவமாக இருந்தது. ஒவ்வொரு நாளும் அன்னை அன்ன பூரணியுடன் உரை யாடுவது எனக்கு வழக்கமாகி விட்டது. ஒருநாள் என்னைக் காணாது விட்டாலும் பவானி அக்காவிடம் விசா ரித்துவிடுவார்.

> பிள்ளைகளால் கைவிடப்பட்ட, உறவுகளால் உதாசீனப்படுத் தப்பட்ட, ஆதரிப் பவர் யாருமற்ற முதியோர்களுடன் இருப்பதும் அவர்களைப் பராமரிப்பதும் பேறெனப்பட்டது.

"ஏன் ஈசன் வேலைக்கு வரேல? ஏதாவது சுக வீனமா..." எனப் பதற் றத்துடன் கேட்பதாக பவானி அக்கா என் னிடம் கூறினார்.
எங்கள் இருவருக்கு மிடையில் ஒரு வகை யான தாய் பிள்ளைப் பாசப் பிணைப்பு உருவாகுவதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.
இந்த உறவு வளர்ந்த வேகத்திலேயே, அன்ன பூரணி அம்மா ஏன் இந்த விடுதிக்கு வந்து சேர்ந்தார் என்ற கேள்வியும் என் மனதில் ஆலமரமாக வளர்ந்துகொண்டே இருந்தது. ஒரு நாள் பீடிகையைப் போட்டேன்.
"ஈசன்! நீ என்ன கேட்கப் போகின்றாய் என்று எனக்குத் தெரியும். என்னுடைய மகனைப் பற்றியும், நான் ஏன் இந்த விடுதிக்கு வந்த னான் எண்டும்தானே கேட்கப் போகி றாய்..?" அம்மா குறிப்பறிந்துகொண்டார்.
ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தவர்,
"நீ கேட்காட்டாலும் நான் உனக்கு இந்த விசயத்தை சொல்லியிருப்பன்..."
பேசமுடியாமல் குரல் கம்ம கண்களில் கண்ணீர் மல்க அவர் கூறிய விடயங்களை கேட்டு அதிர்ச்சியில் செயலற்று போகின் றேன். இப்படியும் ஒரு மகன் இருக்க முடியுமா? தன் மனைவியின் சொல்லைக் கேட்டுப் பத்து மாதம் சுமந்து பெற்ற அன் னையை முதியோர் விடுதிக்கு அனுப்புவார் களா? என் மனம் சொல்லவொண்ணா வேதனையில் துடித்தது.
அவரிடமிருந்து விடை பெற்று எனது இருப் பிடத்துக்கு வந்த பின் னர்கூட மனம் அமைதி யடையவில்லை. தான் பட்ட துயரத்தை கண்க ளில் நீர்ப் பெருக்கோடு அந்தப் பரிதாபத்துக் குரிய தாய் சொன்னதை மீண்டும் மீண்டும் அசை போட்டது.
"தவமிருந்து முருகன் அருளால கிடைச்ச பிள் ளையவன். தகப்பன் குடிகாரன். நான் பட்ட கஷ்ரத்துக்கு ஆறுதலாய் வந்தவன் குமரன். என் உயிர் என்று நினைச்சன். அவனைப் படிப் பிக்க நான்பட்டபாடு கொஞ்சநஞ்சமில்லை. பொக்கற்றிலை காச வச்சுக்கொண்டு மனுசன் போதையில விழுந்து கிடக்கும். என்ரை பிள்ளையை எப்படியும் படிப்பிக்க வேணுமெண்டு அந்தாளிட்ட இருந்து காசக் களவாய் எடுப்பன். அடுத்த நாள் காலை யிலே போதை தெளிஞ்சதும் எனக்கு அடி உதைதான்...." ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு நிமிர்ந்தார். அந்த அடி, உதையின் வலியை மீண்டும் ஒரு முறை உணர்ந்திருப்பார் போலும்.
"மகனுக்கு இதெல்லாம் தெரியுமோ அம்மா....!"
"அவனுக்கு எல்லாம் தெரியும். அதால படிப்பில கவனமா இருந்தான். நல்லாப் படிச்சு இப்ப கச்சேரியில நல்ல வேலையாய் இருக்கிறான். என்ர மருமகளும் அவ னோடதான் வேலை பார்க்கிறா. அவவுக்கு என்னைக் கண்டாப் பிடிக்காது. ஏதாவது குறை சொல்லிக்கொண்டே இருப்பா. எனக்கு முன்னாலேயே தன்ர சிநேகி தியும் தன்ர மாமியை இந்த அன்னை அகத்திலதானாம் விட்டிருக்கிறா, இங்கு நல்லா பராமரிப்பினமாம்... என்று சொல்லுவா."
தொண்டையை அடைக்கும் துக்கத்தை மென்று விழுங்குகிறார். பார்வை தூரத்தில் வெறிக்கிறது.
"என்னை இங்கவிட குமரனுக்கு முதல்ல விருப்பமில்ல. எனக்கும் விருப்பமில்லை. அதுக்கும் மருமகள் ஒரு சூழ்ச்சி செய்தா. என்ர உடுப்பு பாக்கை திறந்து அதற்குள்ள மூவாயிரம் ரூபா பணத்தை வைச்சிட்டு காசைக் காணேல எண்டு குமரனுக்கு முன்னால ஒரு நாடகமாடி அழுதா. நாங்கள் இரண்டு பேரும் வேலைக்கு போறனாங் கள், உங்கன்ர அம்மாதான் வீட்டில இருக்கிறவ, அவவின்ர பாக்குக்க ஒருக்கா பாருங்கோ என்றா. மகன் அப் பிடிச் சந்தேகப்படமாட்டான் என்றுதான் நினைச்சன். ஆனா, அவன் அறைக்குள்ள போனவன் என்ரை பாக்கைத் திறந்து அதுக்குள்ள இருந்த 3000 ரூபாவப் பாத்தான்.
இது எப்பிடி வந்தது என்றுகூடக் கேக்கேல்ல. ஏன் இப்படிச் செய்தனீங்கள் எண்டுதான் கேட்டான். முந்தி அப்பாவின்ர பொக்கற்றுக்குள்ள காசு களவெடுத்த புத்தி எண்டான். அந்த நிமசமே நான் செத்துப் போனன். பிறகு எங்க இருந்தாத்தான் என்ன? இங்க கொண்டு வந்து விட்டிட்டுப் போனான்."
அவரது பெரு விழிகள் முழுவதும் கண்ணீர் முட்டிக் கொண்டு நிற்கின்றன. திரும்பி என்னைப் பார்த்தார். என் நாடியை வருடிக்கொண்டே "இப்ப எனக்கு நீ ஒரு மகன் கிடைச்சிருக்கிறாய்" என்று சிரிக்கிறார்.
அவரது கண்ணீர் சூரிய ஒளிபட்டு மின்னுகின்றது.

## இனியொரு விதி செய்வோம்

புதியதோர் விதி செய்ய என்றெண்ணிப் புறப்பட்டு
ஏக்கமுடன் என்னை விட்டுச் சென்ற மச்சான்
எதுவுமின்றி நடுவழியில் நிற்கின்றீர்
என்னாச்சு எங்கள் வாழ்க்கை என்னவாச்சு?

கட்டுக்காசுதனில் நீங்கள் வாங்கி வைத்த
தொலைக்காட்சி குளிரூட்டி காசு கட்ட முடியாமல்
கொண்டு சென்று விட்டனர் வீட்டை விட்டு
கல்லாக இருக்கின்றோம் குத்துக்கல்லாக

குசன் செற்றும் கால் முறிந்து மூலையிலே கிடக்குது
தொட்டிலிலே உம் குழந்தை உம் ஞாபகமாய்
நெஞ்சினிலே நிலைத்திருக்கு! நிலைத்திருக்கு!!

பட்டினியில் நானிங்கே சாகின்றேன்

பல மாதங்கள் கடந்ததப்பா பாதி வாழ்வு தானிருக்கு
பாதிக்கண்கள் தூங்கிப் பார்த்திருக்கிறோம்
பால் நிலவைப் பார்த்து பசித்திருக்கிறோம்
பாவி நாங்கள் என்ன செய்தோம் பட்டகடன் தீரவில்லை

நீர் அணிந்த ஆடைகளைத் தண்ணீரில்
நனைய விட்டுக் கழுவிக் காயவிடவில்லை
யாரும் அற்ற நேரம் தினம் எடுத்தெடுத்துப் பார்க்கின்றேன்
ஏக்கம் தீரவில்லை ஏமாற்றமதான் மிச்சம்
உம் நினைவைத் தினம் என் மனதில் மீட்டுகின்றேன்
எண்ணி எண்ணிப் பார்க்கின்றேன் ஏக்கமுடன்

விரைந்து நீர் வரவேண்டுமென்று நேர்த்தியொன்று
சேலையிலே காசுதனைக் கச்சிதமாய் முடித்து வைத்தேன்

பட்டதுன்பம் போதுமப்பா பட்டதற்கு பயனளிக்க
பத்திரமாய் நீர் பிளேனேறி திரும்பி வாரும்
பாரினிலே நாம் பக்குவமாய் வாழ்ந்திடலாம்
பயப்படாமல் வாருமப்பா பட்டகடன் அழித்திடுவோம்

கற்றவைகள் கை கொடுக்கும் கவலையை விடுங்கள்
இது எங்கள் தாய்நாடு இங்கிருந்து வளம் நிறைய
காடு வெட்டி கழனி செய்து கச்சிதமாய் வாழலாம்
இனியொரு விதிசெய்து இன்பமாய் வாழ்ந்திடுவோம்

வவுனியா சோபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லண்டனுக்கு யாழ்.தேவியில் போகலாம்

மருத்துவர்
**சி.யமுனாநந்தா**

சில விடயங்களை சில காலங்களில் கதைத்தால் கதைப்பவருக்கு பித்துப்பிடித்து விட்டது என்று உலகம் கூறும். அவ்வாறே முன்னைய காலங்களில் லண்டனுக்கு யாழ். தேவியில் போகலாம் என்று கூறியிருந்தால் அவர் மனநோய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருப்பர். ஆனால் இன்று அந்தக்கூற்று உண்மையாகிவிடும் தறுவாயில் உள்ளது.

உலகில் போர் இல்லாத சூழல் ஏற்படும்போது நாடுகளுக்கிடையிலான போக்குவரத்து, தரைவழிப் பாதை ஊடாகச் சுமுகமாகும். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தரைவழிப்பாதையான உத்தேச இராமர்பாலம் அமையப்பெறின் இலங்கை - இந்தியா இடையிலான போக்குவரவு மாத்திரம் அன்றி பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, ஐரோப்பிய நாடுகள், இங்கிலாந்து வரை புகையிரத சேவைகள் சாத்தியமாகும். ஆயின் லண்டனுக்கு யாழ். தேவியில் செல்லலாம்.

இராமர் பாலத் திட்டத்துக்கு, சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்பு இருந்தாலும் வடஇலங்கை மக்களுக்கும் மலையக மக்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமாகும். தமிழகத்துக்கான தெய்வ வழிபாட்டுப் பயணங்களை ஈழத்தமிழர்கள் சுலபமாக மேற்கொள்வர்.

இராமர் பாலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தென்னிலங்கை வாரப் பத்திரிகையில் ஞாயிற்றுக்கிழமை, மூன்று வைத்தியர்கள் கட்டுரை எழுதி உள்ளனர். அவர்கள் மலேரியா தடுப்புப்பிரிவு நிபுணர்களாகக் கடமையாற்றியவர்கள். அவர்களின் கருத்துப்படி பாலம் அமைத்தால் இலங்கையில் மறுபடியும் மலேரியா நோய் பரவிவிடுமாம். ஆகையால் பாலம் அமைக்கும் திட்டத்தைக் கைவிடல் வேண்டும் என்று கூறுகின்றனர்.

இலங்கையின் வடபகுதியில் இந்தியாவில் இருந்து வந்து மீளக்குடியேறுபவர்களிலும் கைது செய்யப்படும் தமிழக மீனவர்களிலும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் அவர்கள் மலேரியா மற்றும் காசநோய்த் தொற்றுக்கோ பாலியல் தொற்று நோய்களுக்கோ உள்ளாகியிருக்கவில்லை.

நாடுகளுக்கு இடையிலான போக்குவரத்தில் அடிப்படைச் சுகாதார நெறிமுறையைக் கைக்கொண்டால் விபரீதமான அச்சங்களைத் தவிர்க்கலாம். எனவே உத்தேச இராமர் பாலத் திட்டத்தை மருத்துவக் காரணங்களால் நிராகரித்தல் தவறானதாகும். அடுத்து தரைவழிப்பாதை இருக்கும்போது மருத்துவச்சேவை மிகவும் இலகுவாக்கப்படும். மருத்துவ சுற்றுலாத்துறை (Medical Tourism) வளர்ச்சி அடையும். இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் இரு இனங்களுக்கு இடையிலான மோதல்கள் முற்றாகத் தணியவும் நாட்டில் இனவாதம் தலை தூக்காது இருக்கவும் ஒருநாடு ஒரு பல மக்கள் என்றில்லாது பல நாடுகள் பல மக்கள் என்ற பன்முகப் பார்வை யுடன் வாழ்வதற்கான பாதையாக இராமர் பாதை நாட்டுக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுக்கும்.




# ஒவ்வொருவரும் அரசியலைப் புரிந்துகொள்வது அவசியம்

**ப. சங்கரலிங்கம்**

அரசியலா! அது நமக்குச் சரிப்பட்டு வராது. ஆகவே ஆகாது. அந்தப் பக்கம் தலைவைத்துப் படுக்கமாட்டேன் என்ற மனநிலை பெரும்பாலான மக்களிடம் உள்ளது. இது இன்று, நேற்றல்ல, பல நூற்றாண்டுகளாகவே உள்ளது.

அரசியலில் நேர்மை இல்லை. ஊழலும், மோசடியும்தான் அரசியலை வழிநடத்தும் இருபெரும் தீயசக்திகள் என்று கூறுவதில் உண்மை இருந்தாலும், அதை ஏன் மாற்ற முடியாது? மனமிருந்தால் மார்க்கம் உண்டு. இதற்கு முதலில் அச்சத்தை ஒழிக்க வேண்டும்.

எந்த ஒரு காரியத்துக்கும் தைரியமே முதல் தேவை. இது இருந்தால் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம். தலைமுறை தலைமுறையாக நம் நாட்டு மக்கள் மனதில் கறையாகப் படிந்திருக்கும் அச்சமே அரசியலைப் பற்றிய அச்சத்துக்கும் காரணம்.

"அஞ்சி அஞ்சி சாவார் இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே" என மகாகவி பாரதியார் மன வேதனையில் பாடியதே, அரசியல் விழிப்புணர்வு இல்லாமல் தமிழர்கள் ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்ததை எண்ணித்தான்.

அரசியல் என்பது கட்சிகளின் செயல்பாடு சம்பந்தப்பட்டது, அதாவது கூட்டம் நடத்துவது, கொடி கட்டுவது, தலைவர்கள் அறிக்கை வெளியிடுவது, எதிர்க்கட்சியாக இருந்தால் அரசுக்கு, அதாவது ஆளும் கட்சிக்கு எதிராகப் போராடுவது, வேலை நிறுத்தம் செய்வது என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படித்தான் கட்சிகளும் நடந்துகொண்டிருக்கின்றன. இதனால், அரசியல் அல்லது அரசியல்வாதி என்றாலே நாணயமற்றவர்கள் என்ற எண்ணம் பொதுமக்களிடம் உள்ளது.

ஊழல், பழிவாங்கும் எண்ணம், நம்பிக்கைத் துரோகம் போன்றவை தற்கால அரசியலில் தலைதூக்கியிருந்தாலும், நேர்மையான – திறமையான அரசியல்வாதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களிடமிருந்து நிர்வாகத் திறன், வெற்றி – தோல்வியை எதிர்கொள்ளும் பக்குவம், சகிப்புத்தன்மை, பேச்சாற்றல், தியாகம், ஒழுக்கம், பெருந்தன்மை, தன்னம்பிக்கை, விடாமுயற்சி போன்ற நல்ல பல விடயங்களைக் கற்றுக் கொள்ளலாம்.

அரசியல் வேறு, அரசு வேறு என்று கூறப்பட்டாலும் அரசின் அத்திபாரம் அரசியல்தான். ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் பிறப்பு முதல் இறப்பு வரை அரசியலின் பங்கு முக்கியமானது.

படித்து முடித்ததும் பணியில் சேர்வது, பின்னர் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராடுவது என அனைத்தும் அரசியல் தொடர்புடையவைதான். நாட்டின் பொருளாதாரம், வளர்ச்சிக்கான திட்டங்கள், அண்டை நாடுகளுடனான உறவு, வெளிநாடுகளுக்கு மத்தியில் நம் நாட்டின் மதிப்பு என அனைத்தையும் தீர்மானிக்கும் சக்தியாக அரசியல் உள்ளது.

இதனால், அரசியலைப் பற்றி குடிமக்கள் அனைவரும் அறிந்து கொள்வது அவசியம். ஆனால், இங்கோ மக்களிடம் இருக்கும் அரசியல் ஆர்வம்கூட படித்தவர்களில் பெரும்பாலானவர்களிடம் இல்லை. இது குற்றப் பின்னணி உள்ளவர்கள் எளிதாக அரசியலுக்கு வந்து கோலோச்ச வசதியாக அமைந்துவிடுகிறது.

இதனால், நமது நாடு இயற்கையாகவே பல்வேறு வளங்களைப் பெற்றிருந்தும், வளர்ச்சியடைவதில் பின்தங்கியே உள்ளது. இந்த நிலை மாற, படித்தவர்கள் ஆர்வமுடன் அரசியலுக்கு வரவேண்டும். நன்றாகப் படித்து முதலிடம் பிடிக்கும் மாணவரிடம்கூட அரசியல் பற்றிய புரிதல் இல்லாமல் உள்ளது.

இதற்கு நமது கல்வி முறை மட்டுமன்றி அந்த மாணவரின் பெற்றோரும் ஒரு காரணம். அரசியல் அறிவு தங்களது மகனை நல்வழிப்படுத்தாது, தவறான வழிக்கு அழைத்துச் சென்றுவிடும் என்ற அச்சம் பெற்றோரிடம் உள்ளதால், அவர்கள் தங்கள் மகனோ, மகளோ அரசியல் பற்றி அறிந்துகொள்ள விரும்புவது இல்லை. இதன் காரணமாக, சிறு வயது முதலே அரசியல் பற்றிய தவறான எண்ணம் மனதில் பதிந்துவிடுகிறது.

இதனால், உயர் கல்வி கற்றவர்களில் பெரும்பாலானவர்களிடம் அரசியல் ஆர்வம் இல்லாமல் உள்ளது. இது நாட்டின் வளர்ச்சியைப் பாதிக்கும். எனவே, நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அரசியல் அறிவும் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரவள்ளி கிழங்குப் பிட்டு



**தேவையான பொருள்கள்:**

பொன்னிறமாக வறுத்த மரவள்ளிக் கிழங்கு மா – ஒரு கப்
துருவிய தேங்காய் – ஒரு கப்
பச்சை மிளகாய்ப்பூ – 3 அல்லது 4
வெங்காயம் – ஒன்று
உப்பு – அரை தேக்கரண்டி

**செய்முறை:**

பச்சை மிளகாய், வெங்காயம் இரண்டையும் பொடியாக நறுக்கிக் கொள்ளவும். மரவள்ளி மாவுடன் தேங்காய்த் துருவல், பச்சை மிளகாய், வெங்காயம், உப்பு எல்லாவற்றையும் சேர்த்து பிசையவும். பின்னர் அதில் தண்ணீர் தெளித்து கையால் பிசைந்து இட்லிப் பானையில் வேக வைக்கவும்.
பின்னர் எடுத்து மிதமான சூட்டில் பரிமாறவும்.

# முக அழகும் பாதுகாப்பும்

முகப்பருக்கள், வடுக்கள், வெண்ணிற மற்றும் கறுப்பு திட்டுக்கள் முகச் சுருக்கம் கண்களுக்கு கீழ் ஏற்படும் கருவளையம், தேவைக்கு அதிகமான முடி போன்றவைகள் முக அழகைக் கெடுத்து விடக்கூடியவை. முகத்தின் சருமத்திலுள்ள அழுக்கும், எண்ணெய்ப் பசையும் ஒன்றாகச் சேர்ந்து சருமத்தில் உள்ள துவாரங்களின் மூலமாக உள்ளே சென்று, அங்குள்ள நுண்கிருமிகளுடன் சேர்ந்து தோலுக்கு மேல் வருகிறது. இதனை தடுக்க அடிக்கடி குளிர்ந்த நீர் கொண்டு முகத்தைக் கழுவி சருமத்தின் துவாரங்கள் அடைப்படாமல், பார்த்துக் கொள்ளவேண்டும். அதிக கொழுப்புள்ள ஆகாரங்களைத் தவிர்க்க வேண்டும். மலச்சிக்கல் ஏற்படாதவாறு உணவில் பச்சைக் காய்கறிகள், கீரைகள், பழம் போன்றவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதனால் முகப்பருக்கள், கறுப்பு – வெண்ணிற திட்டுக்கள் போன்றவற்றைத் தவிர்க்கலாம்.

**முகச்சுருக்கம் :**

வயதானதினால் ஏற்படும் முகச்சுருக்கம், ஒரு புறம் இருந்தாலும் அதிகப் படியான ஒப்பனைச் சாதனங்கள் உபயோகிப்பதாலும் வெயில், குளிர் போன்ற நிலை காரணமாகவும் மற்றும் மன இறுக்கம், [illegible] போன்றவை முகச் சுருக்கத்தை ஏற்படுத்தி அழகைக் கெடுத்[illegible] தசைப்பயிற்சிகளாலும், மசாஜ் போன்றவற்றாலும் முகச்சுருக்கம் ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

# இயற்கை தரும் இதமான அழகு

**வெள்ளரிக்காய்**

வெள்ளரி விதை, வெள்ளரிப் பிஞ்சு ஆகியவற்றைச் சருமத்தின் மீது பூசிக்கொள்ளச் சிவப்பழகு பெறுவதுடன் பட்டுப் போன்ற மென்மையும் தரும். இதன் மருத்துவக் குணம் தீப்புண், வெயில் ஆகியவற்றால் ஏற்படும் சரும எரிச்சலைக் குளிரவைக்கும். இதன் சாறு உடலைக் குளிரவைப்பதுடன் சருமத்தை அழகுபடுத்தும். சருமத்துக்கு இதமானது என்பதுடன் ஈரப்பதத்தைத் தக்கவைக்கும். வெப்பக் காற்றுப்பட்டு வறண்டுபோகும் சருமத்தைக் குளிர்விப்பதால்தான், விடயம் அறிந்த பெண்கள் வெள்ளரி சோப்பைப் பயன்படுத்துகின்றனர்.

**கற்றாழை**

ஆரோக்கியம், புத்துணர்ச்சி ஆகியவற்றுடன் முதுமையைத் தடுக்கும் ஆற்றலும் கொண்டது கற்றாழை. சருமப் பிரச்சினைகளுக்காகவே கற்றாழை பெரும்பாலும் பயன்படுகிறது. தோல் அலர்ஜி, அக்கி, அம்மை, அரிப்பு, வெட்டு, சிராய்ப்பு, தீக்காயம் ஆகியவற்றுக்குச் சிறந்த மருந்து கற்றாழை.
கற்றாழையின் தண்டில் சிறப்பான கூட்டுப் பொருள்கள் இருக்கின்றன. இதில் உள்ள வீக்க எதிர்ப்புச் சத்துக்கள் வலியைக் குறைப்பதுடன், தீப்புண், எரிச்சல் மற்றும் அரிப்பைக் குறைக்கின்றன. மிக முக்கியமாக இதில் உள்ள முதுமை எதிர்ப்பிகள் ஆரோக்கியத்தைப் பராமரிப்பதுடன், சருமத்துக்குப் பட்டுப் போன்ற மென்மை, ஈரத்தன்மை, பாதுகாப்பு, புத்துணர்ச்சி ஆகியவற்றையும் தருகின்றன. கற்றாழை ஜெல் உயிரணுக்கள் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதுடன் சேதமடைந்த சருமத்தையும் இயல்பு நிலைக்குக் கொண்டு வருகிறது. இதில் உள்ள நீர்ச்சத்து சருமத்தை ஈரப்பதத்துடன் வைத்துக் குளிர்ச்சியைத் தருகிறது.

**வல்லாரை**

வல்லாரையிலும் முதுமை எதிர்ப்பிகள் அதிகம் இருப்பதால் காஸ்மெடிக்ஸ் தயாரிப்பில் முக்கிய அங்கம் வகிக்கிறது. சீழ்ப்புரை, குழந்தை பிறந்த பிறகு வயிறு சுருங்குவதால் ஏற்படும் கோடுகளையும் தீர்க்கவல்லது. எரிச்சல், அரிப்பு ஆகியவற்றை நீக்கிச் சருமத்தைச் சுத்தப்படுத்தி மிருதுவாக வைத்திருக்கும்.

**துளசி**

ஆரோக்கியத்துக்கு மிகச் சிறந்த மருந்து துளசி. குறிப்பாக முகப்பரு, முதுமை, பேன், பொடுகு, பூச்சிக் கடி ஆகியவற்றுக்குச் சிறந்த நிவாரணி. கொசுவை விரட்டும் தன்மை இருப்பதால் கொசு விரட்டிகளில் இது பயன்படுத்துகிறது.

**மஞ்சள்**

குருதியைச் சுத்திகரிப்பதுடன், சருமத்துக்குப் புத்துணர்ச்சி ஊட்டி, ஆரோக்கியத்துடன் இயற்கையாக ஒளிரவைக்கும். வீக்கம், பக்றீரியா மற்றும் முதுமை எதிர்ப்பிகள் இருப்பதால் முகப்பரு, தடிப்பு, கருந்திட்டுகள் மற்றும் சரும நோய்களுக்கான சிறந்த மருந்தாகும். உலர் சருமத்தை மென்மையாக்கிச் சருமம் விரைவில் முதுமை அடைவதைத் தடுக்கிறது.

**சந்தனம்**

ஆயுர்வேத மருத்துவத்தில் சந்தனத்தின் பயன்பாடு மிக அதிகம். அரிப்பு, சிராய்ப்பு, வறட்சி, சொறி, முகப்பரு உள்ளிட்ட பெரும்பாலான சருமப் பிரச்சினைகளுக்குத் தீர்வாகும். வெளிப்புறப் பயன்பாட்டில் எண்ணெயாகவும், பேஸ்டாகவும், லோஷனாக வும், சோப்பாகவும் பயன்படுத்தலாம். கடுமையான வெயிலில்கூட உடலைச் சில்லெனக் குளிர்விக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலைப்பக்கம்

**அனாமிகா**
தக்க தருணத்தில் வாய்மூட
கற்றிருப்பதில் இருக்கிறது
தப்பித்தல்

**சுதன் தம்பி**
பெயர் தான் "தங்க" நகை

ஆனால்
ஒருபொழுதும்
வீட்டில் தங்குவது
கிடையாது!!!!

**மௌவல்**
நாமளா ஒரு விசயத்தை திரும்ப திரும்ப தேடிப் போனால் நம்மளோட அருமை புரியாது ஒரு கட்டத்திற்கு பிறகு நிறுத்திடணும்

**மீனம்மா**
செய்தே தீர வேண்டிய தவறுகளின் போது எத்தனை தூரம் தயங்குகிறோம் என்பதில் இருக்கிறது நம் சுயஒழுக்க சதவிகிதம்

**பொன் குழந்தை**
வசதியில்லாமல் வாழ்ந்தவர்கள்
வசதியாக வாழ்வது சுலபம் !!
ஆனால்
வசதியாக வாழ்ந்தவர்கள்
வசதியின்றி வாழ்வது தான் கடினம் !!!


**புன்னகை அரசன்**
குடும்ப
சூழ்நிலை மட்டும்
சரியாக அமைந்திருந்தால்
அனேக காதல்கள்
கல்லறை வரை சென்றிருக்காது.

**ரேவதி**
இது நாங்க வாழ்ந்த வீடுனைச் சுட்டும் ஒரு சொல்லின் பின்னால் இருக்கிறது வாழ்ந்து சிதறிய சொந்தங்கள் பற்றிய வரலாறு

**தாமோதர ஆசான்**
சொல்லில் புலப்படுத்த முடியாத பலமான காதல் ஒன்று எல்லோரிடமும் உண்டு




## புதுசா கல்யாணம் ஆன கணவன் மனைவி இடையே ஒரு ஒப்பந்தம்.....!



இன்று யார் வந்தாலும் கதவை திறக்க கூடாது என்று முடிவெடுத்தனர்.. அன்றே கணவனுடைய அம்மா அப்பா வந்தனர்... இருவரும் அவர்கள் வருவதை பார்த் தனர்... இருவரும் ஒருவரைஒருவர் பார்த்து கொண்டனர்.. கணவனுக்கு கதவை திறக்க வேண்டும் என்ற ஆசை...! ஆனால் ,

ஒப்பந்தம் போட்டது நினைவுக்கு வந்தது... அதனால் கதவை திறக்க வில்லை அவன்.. அவர்கள் யாரும் இல்லை என்று நினைத்து போய் விட்டனர்.. கொஞ்ச நேரம் கழித்து மனைவியின் அம்மா அப்பா வந்தனர். கதவை தட்டினார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஆனால் மனைவிக்கு கண்கள் கண்ணீரால் குளமானது. என்னால் கதவை திறக்காமல்இருக்க முடியாது என்று சொல்லிக் கதவைத் திறந்தாள். கணவன் ஒன்றும் சொல்லவில்லை. வருடங்கள் உருண்டோடின....!

இரண்டு ஆண் குழந்தை பிறந்தன. மூன்றாவதாக பெண்குழந்தை பிறந்தது. கணவன் பெண் குழந்தை பிறந்த சந்தோஷத்தில் பெரிய அளவில் செலவு செய்து அனைவருக்கும் விருந்து கொடுத்துக் கொண்டாடினான். அதற்கு மனைவி, இரண்டு ஆண் குழந்தை பிறந்தப்ப இவ்வளவு பெரிய அளவில் கொண்டாட வில்லை. ஏன் பெண்குழந்தை பிறந்தவுடன் இவ்வளவு பெரிய விருந்து கொடுக்கிறீங்க" என்று கேட்டாள் ... !

அதற்கு கணவன் நிதானமாக "ஏனெனில் பிற்காலத்தில் எனக்காகக் கதவைத் திறக்க ஒரு பெண் பிறந்து விட்டாள்...!!"

என்றான் கர்வத்துடன்....!!!



## சிரிக்கலாம் வாங்க...

நம்ம சர்தார்ஜி ஒரு நாள் கடை வீதிக்குச் சென்றிருந்தார். அவருடன் அவரது 2 வயது பெண் குழந்தையும் சென்றிருந்தாள். அப்போது அவர் குழந்தை தனது எடையைப் பார்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது. மேலும் ஒரு ரூபாய் நாணயத்தையும் தானே போடுவேன் என்று பிடிவாதம் பிடித்தது. ஆனால் குழந்தை உயரம் இல்லாததால் அந்த குழந்தையால் நாணயத்தை போட முடியவில்லை. அதை பார்த்த நம்ம சர்தார்ஜி குழந்தையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டார். குழந்தையும் நாணயத்தை போட்டது.
உடனே ஒரு கார்டு வந்து விழுந்தது.
எடை 0 என்று.

நோய்வாய்பட்டு கிட்டத்தட்ட சாவின் வாயிலுக்கே சென்றுவிட்ட நண்பரை பார்க்க சர்தார் ஒருவர் மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். நண்பரின் அருகில் போய் நின்றுக் கொண்டிருந்த சர்தார், நண்பரின் நிலைமை திடீரென்று மிகவும் மோசமாவதை உணர்ந்து என்னவென்று கேட்டார். அந்த நிலையில் பேச முடியாத நண்பர் செய்கையால் ஒரு பேப்பரும், பேனாவும் வேண்டுமென கேட்டார். அவசரமாக ஏதோ எழுதி கொண்டிருக்கும் போதே நண்பரின் உயிர் பாதியிலேயே அவரைவிட்டு பிரிந்தது. சர்தார் அந்த பேப்பரில் குடும்பத்துக்கு ஏதோ முக்கியமான தகவலை எழுதிவிட்டு போயிருக்கலாம், அதை நாம் படிக்கக் கூடாது என நினைத்து அதை மடித்து தன் சட்டை பைக்குள் வைத்துக் கொண்டார். சடங்குகள் எல்லாம் முடிந்து மறுநாள் சர்தார், நண்பர் வீட்டுக்கு போய் துண்டு பேப்பர் விடயத்தை நண்பர் மனைவியிடம் சொல்லி அதைப் படித்துப் பார்க்க சொன்னார். பேப்பரை பிரித்து படித்த நண்பரின் மனைவி மயக்கம் போட்டு கீழேயே விழுந்துவிட்டார். அப்பொழுதுதான் சர்தார் அந்த பேப்பரில் என்ன எழுதியிருக்கிறது என்று பார்த்தார். அதில் நீ என் ஆக்சிஜன் குழாய் மீது நின்றுக் கொண்டிருக்கிறாய் என்று எழுதியிருந்தது..

பிடித்த பெண்ணிடம் காதலைச் சொல்வதை விட கஷ்டமானது..........
மனேஜரிடம் லீவு சொல்வது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெருப்பை விழுங்கியவள்! 7

தொடர்கதை

கண. மகேஸ்வரன்



அம்மாவால் அவர்களைச் சமாதானப் படுத்த முடியவில்லை.

"என்னடி பிள்ளை! எல்லாத்தையும் ஒரு நொடியில கெடுத்துப்போட்டியே... வெண்ணை திரண்டுவாற சமயத்திலை தாழியை உடைச்சுப்போட்டியே... விரலுக்கேத்த வீக்கம் வேணுமடி. நாங்கள் இருக்கிற சீரிலை ஆரடி சும்மா பெண்ணெடுப்பான்? வீடு வளவு இருந்தாப்போலையென்ன... சுளை சுளையாய்க் கேட்பாங்களேடி....!"

அம்மா ஆதங்கப்பட்டாள்.

"அம்மா! இப்ப நான் என்ன சொல்லிப் போட்டனெண்டு மாமி துள்ளிக் கொண்டு போறா? யோசிச்சு முடிவு சொல்லவேணும் என்டால் ஒரேயடியாய் மாட்டன் என்றா அர்த்தம் கொள்ளவேணும்?"

"கலியாணப் பேச்சுகளிலை அந்த வார்த்தைக்குப் பொருள் அப்படித்தானடி...!"

"அம்மா, நீங்களும் என்னைப் புரியாமல் பேசிறியள். மாப்பிளயின்ர பேறன்ஸ் சொன்னால் அடுத்த வார்த்தைக்கு நீங்கள் சொன்ன பொருள் சரி. ஒரு காவாலிக்கு... ஒரு எத்தனுக்கு என்ர மகளைக் கட்டிக் குடுத்தனே எண்டு ஒரு நேரம் நீ கண்ணீர் வடிக்கவேண்டி வந்தால் எப்பிடியிருக்கும்? அத்தான்ர குணம் அறியாமல் காலை விட்டிருந்தால் கதை வேறை. எல்லாம் தெரிஞ்சு கொண்டுமா...?"

அம்மா இப்போது பதில் பேசவில்லை.

"அம்மா! இப்ப நீங்கள் இந்த அவசர முடிவெடுத்ததற்கு மூல காரணங்கள் ரெண்டுதான். ஒண்டு, என்ர கல்யாணம் நடக்காமலே போய்விடுமோ என்ற கவலை. மற்றது, அப்பா உயிரோட இருக்கயுக்கயே என்னைக் கரைசேர்த்துவிடவேணுமென்ற அவசரம். ஏனென்டா, அப்பா இனி எப்பெப்பவோ எண்டு நீங்கள் யோசிச்சிட்டியள். நான் சொல்லிறன். அப்பாவின்ர மனம் நோகாமல் நாங்கள் பார்த்துக்கொண்டால் அவரோட ஆயுசு கெட்டி!"

அப்பா எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தார். அவர் முகத்தில் கலவரத்தின் அறிகுறிகூட இல்லை.

"என்னப்பா..! நீங்கள் என்ன சொல்லுறியள்?"

"ஓமடா! நீ ஒண்டுக்கும் கவலைப்படாதை. விதியிருந்தால் எல்லாம் நல்லபடி நடக்கும். எடுத்தவுடனை நீ முடிவு சொல்லாதது ஓரளவு எனக்கு சந்தோசம்தான். ஆனால்..."

ஆனால் என்று நிறுத்திக் கொண்டார் அப்பா.

"ஆனால் என்னப்பா ஆனால்....?"

"சொல்லுங்கோப்பா!"

நான் துரிதப்படுத்தினேன்.

"கல்யாணமே இல்லாமல் நீ இருந்தால் என்னால் தாங்கமுடியாதம்மா... அதுதான்..." என்று அப்பா இழுத்தார்.

"அப்பா...! நீங்கள் இப்பிடிச் சொல்லுறியள்? நான் ஒண்டு சொன்னால் கோபிக்கமாட்டியளே.....?"

அப்பாவை ஏறிட்டேன்.

சொல் என்று கையால் சைகை காட்டினார்.

"உங்களுக்கே உங்களில நம்பிக்கையில்ல. இப்போதைக்கு அவ்வளவுதான் சொல்ல முடியும்!"

அப்பாவின்நிலைமையை நினைக்க மனதுக்கு என்னவோபோல் இருந்தது.

"நீ சொல்ல வந்ததைச் சொல்லி முடியடா. என்னால எதையும் தாங்கேலும்."

"இல்லயப்பா, வேண்டாம். சம்மதமா இல்லயா எண்டு சீக்கிரமே ஒரு முடிவு சொல்லிறன். அதுக்கு முன்னாடி இப்பிடியே இதைப் பற்றியே யோசிச்சால் ஒரு முடிவே வராதப்பா..... இப்ப நான் ஒரு வேலயில சேரப்போறன்...."

சொல்லிக்கொண்டே அப்பாவைப் பார்த்தேன், அப்பா எங்கே தடை போட்டு விடுவாரோ என்ற அச்சத்துடன்,

"இதென்னம்மா புதுக்குண்டு? வேலயெண்டா என்ன சும்மாவா போட்டுக் கிடக்கு, குனிஞ்சு பொறுக்க...?"

அப்பா தன்னிலை மறந்து, தானும் ஏதோ ஜோக்கடித்தாற்போல் பெரிதாய்ச் சிரித்தார்.

"இதுக்கேனப்பா சிரிப்பு? கொன்வென்ரில தற்காலிகமாய் ஒரு கிளார்க் வேக்கன்ஸி இருக்கெண்டு சித்திரா சொல்லிச்சுது. நான் ட்றை பண்ணினால், பிறின்ஸிபல் அதை எனக்கே போட்டுக்குடுப்பா... ஆனால் உங்களுக்குப் பயந்துதான்... நீங்கள் விடமாட்டியளோ எண்டுதான் இதுவரைக்கும் மூச்சு விடயில்லை. சுணங்கினால் வேறை யாருக்கும் போயிடும்... சித்திராவுக்கு நானும், எனக்கு அவளும் துணையாயும் இருக்கும். நீங்கள்...?"

அப்பாவின் பதிலறிய ஆவலோடு காத்திருந்தேன். அவர் முகத்தில ஈயாட்டமில்லை. இனிச் சரிவராதெண்டு, நானே முந்திக்கொண்டேன்.

"அப்பா! நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நான் போறதாய் தீர்மானிச்சிட்டன்..."

எங்கிருந்துதான் அந்தத் துணிவு வந்ததோ? எனது முடிவைத் தெளிவாகவே உணர்த்தி விட்டதில் ஒரு பூரிப்பு.

"நீ என்னம்மா சொல்லிறாய்?"

அம்மாவைத் துணைக்கழைத்தேன்.

"என்னப்பா! பிள்ளை சொல்லிறாளெல்லே... இனியெண்டாலும் ஓமெண்டு சொல்லுங்கோவன். சும்மா இஞ்சையிருந்து வெந்து சாகிறதைவிட அவளுக்கும் பொழுதுபோகும். வருமானமும் வரும். அது அவளுக்கு ஆறுதலாய் இருக்கும். ஏன் பேசாமல் இருக்கிறியள்?"

அம்மாவின் முகத்தில் ஆனந்தக்களை தாண்டவமாடியது.

"ஆக மொத்தத்தில என்னைக் கட்டையில போட்டிட்டியள் எண்டு சொல்லுங்கோ..."

அப்பா பொருமினார்.

வேலை என்ன, சும்மாவா கிடக்கு பொறுக்கியெடுக்க... என்று அப்பா சொன்னதன் தாற்பரியம இப்போதுதான் புரிந்தது. கிண்டலடித்து மற்றவரைக் காயப்படுத்தும் குணம் இன்னும் மாறவே இல்லையென்று. ஏன்தான் இப்படி அப்பா நடந்து கொள்கிறாரோ?

"அப்பா! ஞாபகமிருக்கட்டும். நான் உங்கள் மகள். உங்கள் கௌரவம் மதிப்புக்கு என்னால ஒருபோதும் பங்கம் வராது என்பது மட்டும் உறுதி. என்னை நீங்கள் நம்பலாம்." அப்பாவின் கைகளைப் பற்றிக்கொண்டு ஆசி கேட்டேன்.

அதற்குமேல் அவரால் மறுப்பேதும் சொல்லமுடியவில்லை.

கண் கலங்க ஆசீர்வதித்தார், அப்பா.

சற்று முன்னர் கதிகலங்கிப் போயிருந்த கலவரத்தின் சாயல் சிறிதுமின்றி அப்பாவின் முகம் மலர்ந்ததில் எனக்கு ஏகப்பட்ட சந்தோசம்.


அப்பாவின் பலம், பலவீனம் இரண்டும் அறிந்தவளாய் ஆனந்தப்பட்டேன்.

இனி, நானும் ஒரு சுதந்திரப் பறவையாய் வெளியே சிறகடித்து....

அனித்தா சந்தோசத்தில் மிதந்தாள்!

*(நெருப்பு உமிழும்)*

---



# முதியோர்கள்

கு.ராதா
இனுவில் மேற்கு

பொல்லாத உலகத்தில்
நில்லாத மனிதத்திதல்
நிழலின்றி வாழ்ந்துவிட்ட
நேயமுள்ள மனிதர்கள்

அனுபவ முதிர்ச்சியை
அமைதியாய் எடுத்தியம்பும்
குழந்தை மனம் கொண்ட
குடியுயர்வுப் பெரியோர்கள்

பழுத்த தலையும்
குழி விழுந்த பார்வையும்
சுருங்கிய தோலும்
அனுபவத்தின் [illegible] வெளிப்பாடுகள்

இலட்சியமாய் வாழ்ந்து
பலருக்கு வழிகாட்டி
வாழ்வியலை உணர்த்தி நிற்கும்
மனிதத் தலைவர்கள்
குடும்பத்தின் குலவிளக்காய்
அடியெடுத்து அகர வரிசையிட்ட
ஆதி பகவானுக்கு இணையானோர்

முதுமையென்ற பொக்கிசத்தில்
முழுமையாய் மூழ்கிவிட்ட
பெரியோர்களே
உங்கள் முதுகெலும்பிடம்
பாடம் கற்க வேண்டும்

பொல்லோடு தள்ளாடும்போது
பண்பற்றவர்களின் நகைப்பைக் கண்டு
நீவிர் கலங்குதல் வேண்டாம்
இகழ் பேச்சால் பட்டினத்தாரையும்
தொட்டுப்பார்க்காமல் விடவில்லை
எம்மாந்தர்கள் கூட்டம்

நல்லறம் தேடி இல்லறம் முடித்து
பற்றற்று துறவறம் பூண்டு
தூய்மையோடு இறையடி வேண்டும்
எனதருமைத் தாத்தா, பாட்டிக்கு
இன்ப வாழ்த்துக்கள் பல....

நடமாடும் நூலகமே
இலவசமாய் அறிவூட்டும்
அனுபவ ஆசானே
இன்னும் நீடுழிவாழ
இறை வேண்டுகிறேன்

வையகத்தில் வாழ்வாங்கு
வானுயர வாழ்ந்துவிட்ட
வாழ்வியலாளர்களே
உதடு குன்றாமல்
உளம் நிறைந்து
மகிழ்வாய் வாழ
மனதார வாழ்த்துகிறேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

## 25.10.2015 முதல் 02.11.2015 வரை

## உங்களுக்கு எப்படி?

### மேடம்

பெரும்பான்மை கிரகங்கள், அதிக நன்மை தரும் வகையில் உள்ளனர். மனதில் தெளிவு பிறக்கும். பணிகள் சிறப்பாக அமையும். கூடுதல் பணவரவால் குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உடன் பிறந்தவர்கள் ஓரளவு உதவுவர். வாகன பராமரிப்புச் செலவு குறையும். பயணங்கள் இனிதாகும். புத்திரர்களின் செயல் பெருமை அளிக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி கருத்து இணக்கம் கொள்வார். தொழில், வியாபாரம் செழித்து வளரும். பணியாளர் களுக்கு பணவரவு கூடும். பெண்கள் மகிழ்ச்சியாக வாழ்வு பெறுவர். மாணவர்கள் கருத்துடன் படிப்பர்.

### இடபம்

சூரியன், சுக்கிரன், கேது நற்பலன் தருவர், செயல்களில் நிதானம் வேண்டும். உறவினரால் உதவி கிடைக்கும். போக்குவரத்தில் கவனம் நல்லது. புத்திரர்களின் எதிர்பார்ப்பு நிறைவேற தாமதம் ஆகும் என்பதால், வருத்தம் கொள்வர். எதிர் மனப்பாங்கு உள்ளவர்களிடம் விலகி இருக்கவும். அதிக உழைப்பால் தொழில், வியாபாரம் சீரான அளவில் வளர்ச்சி பெறும். பணியாளர்கள் குளறுபடி வராமல் செயற்படுவது நல்லது. மாணவர்கள், படிப்பு, பொது அறிவில் மேம்படுவர். துர்க்கை அம்மனை வழிபட்டால் சங்கடத்தைப் போக்கும்

### மிதுனம்

செவ்வாய், சுக்கிரன், புதன், சனீஸ்வரர் நன்மை தருவர். பசு, பால், பாக்கிய யோகம் அமைந்து செல்வ வளம் பெருகும். உறவினர்களின் வருகை மகிழ்ச்சியைத் தரும். வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர்களின் எதிர்கால வாழ்வு சிறக்க சில பணிகளை மேற்கொள்வீர்கள். நிலுவைப்பணம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி விலகும். மாணவர்கள் கடும் பயிற்சியால் படிப்பில் முன்னேறுவர்.விநாயகரை வழிபட்டால்செயலில் வெற்றியைத் தருவார்.

### சிங்கம்

சுக்கிரன், சந்திரன், சூரியன் நன்மை தருவர். ஆடம்பரச் செலவைத் தவிர்க்கவும். பொது விவகாரங்களில் தலையிட வேண்டாம். வீடு, வாகனத்தில் பராமரிப்புப் பணி செய்வீர்கள். புத்திரர்கள் உங்கள் சொல் கேட்டு நடப்பர். உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு மனதுக்கு நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் சுமாரான பணவரவு இருக்கும். பணியாளர்கள் பணி இலக்கை நிறைவேற்ற கால தாமதமாகும். மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபடக் கூடாது. ஆஞ்சநேயர் வழிபாட்டால், நம்பிக்கை தருவார்.

### கடகம்

குரு, சுக்கிரன், ராகுவினால் நன்மை உண்டு. நற்செயலால் பெருமை கிடைக்கும். பணவரவு திருப்திகரமாகும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும். புத்திரர்களின் கேள்விகளுக்கு, உங்கள் அனுபவங்களைப் பதிலாகச் சொல்வீர்கள். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். மனைவியின் எண்ணங்களுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க, சில மாற்றங்களைச் செய்வீர்கள். மாணவர்கள் சிறந்த தேர்ச்சி விகிதம் பெறுவர். சனீஸ்வரரை வழிபட்டால் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும்.

### கன்னி

சுக்கிரன், சனீஸ்வரர் நற்பயன் தருவர். மனதில் தைரியம் கூடும். வாழ்வில் முன்னேற வழி பிறக்கும். புத்திரர்கள், படிப்பு, அறிவுத்திறனில் மேம்படுவர். உடல்நலனில் பாதிப்பு வரலாம் என்பதால், அதிக கவனம் தேவை. மனைவியின் ஆலோசனை, குடும்ப எதிர்கால நலனுக்கு உதவும். பணியாளர்கள் பணியிடத்தின் சூழ்நிலை உணர்ந்து செயற்பட வேண்டும். பெண்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர். நாகர் வழிபாடு, நன்மையைத் தரும்.

### துலாம்

குரு, செவ்வாய், சுக்கிரன் ஆதாய ஸ்தானத்தில் அனுகூலமாக உள்ளனர். இதனால் குரு மங்கள யோகம், சுக்கிர மங்கள யோகத்தின் சுப பலன் அதிகம் கிடைக்கும். வீட்டில் ஒற்றுமை மகிழ்ச்சி கூடும். முன்பு செய்த நற்செய–லுக்குரிய பெருமை கிடைக்கும். பூர்வச் சொத்தில் வளர்ச்சியும், பண வரவும் அதிகரிக்கும். கேதுவின் அமர்வு எதிரியின் மனதிலும் நல்ல மாற்றம் தரும். மனைவிக்கு விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். மாணவர்கள், படிப்பில் ஆர்வம் கொள்வர்.

### விருச்சிகம்

ராகு, புதன், லாப ஸ்தானத்தில் அனுகூலமாக உள்ளனர். மனதில் மகிழ்ச்சிகர எண்ணம் வளரும். தாமதமான பணிகளை, புதிய உத்தியால் நிறைவேற்றுவீர்கள். உடன் பிறந்தவர்களின் கருத்தை விமர்ச்சிக்க வேண்டாம். வாகனப் பாதுகாப்பில் கூடுதல் கவனம் வேண்டும். புத்திரர்களின் சிந்தனையில் நல்ல மாற்றம் ஏற்படும். எதிர்ப்பாளர்கள் பல–மிழந்து போவர். மனைவியின் மனதில் நம்பிக்கை வளர உதவுங்கள். பணியாளர்கள் பணி இலக்கை நிறைவேற்றத் தாமதமாகும். பெண்கள், பிறருக்கு நகை இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

### தனுசு

குரு, சுக்கிரன், சூரியன், புதனால் அதிக நன்மை கிடைக்கும். சொல்லும், செயலும் நேர் வழியில் இருக்கும். அக்கம்பக்கத்தவர் அதிக அன்பு பாராட்டுவர். புதிய வாகனம், வீடு வாங்க நல்யோகம் உண்டு. அரச நன்மை கிடைக்கும். புத்திரர்கள் கருத்து பேதம் கொள்வர். மனைவியின் அன்பு, பாசம் நெகிழ்ச்சியைத் தரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் கூடும். பணி–யாளர்கள் அக்கறையுடன் பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள் விருந்து, விழாவில் பங்கேற்பர். முருகனை வழிபாட்டால், நன்மை கூடும்.

### மகரம்

கேது, சுக்கிரன், சூரியன், சனீஸ்வரர் யோக பலன் தருவர். இஷ்ட தெய்வ அருள் பலம் துணை நிற்கும். குடும்பத்தில் ஒற்றுமை மகிழ்ச்சி கூடும். வாகனத்தில் மிதவேகத்தை பின்பற்றவும். புத்திரர்கள் விரும்பிய பொருள்களை வாங்குவார்கள். மனைவி வழி உறவினர்கள் உதவிக்கரமாக செயற்படுவர். தொழில், வியாபாரம் செழித்து சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள், இலட்சிய மனதுடன் பணிபுரிவர். பெண்கள், வீட்டு உபயோகப் பொருளை வாங்குவர். மாணவர்கள், வெளியிடங்களில் சுற்றுவதை குறைக்கவும்.

### கும்பம்

குரு, புதன், ஓரளவு நன்மை தருவர். குடும்பத்துக்கான பணத்தேவை அதிகரிக்கும். இளைய சகோதரர்களின் செயலை குறை சொல்ல வேண்டாம். அறிமுகம் இல்லாதவர்க்கு வாகனத்தில் இடம் தர வேண் டாம். புத்திரர்கள் உங்கள் சொல்கேட்டு நடப்பர். குடும்பத்தில் சமரசப் பேச்சு நன்மையை தரும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவது நல்லது. தொழில், வியாபாரம் புதி யவர்களின் ஆதரவினால் சராசரி இலக்கை அடையும். பெண்கள் வீட்டுச்செலவு சற்றுக் குறைவடையலாம்.மாண வர்கள் படிப்பில் அதிக கவனம் கொள்வர்.

### மீனம்

செவ்வாய், சந்திரனால் நன்மை ஏற்படும். புதிய திட்டங்களை வடிவமைப்பீர்கள். எவருக்கும் அதிக பட்ச வாக்குறுதி தர வேண்டாம். புத்திரர்கள் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற் கொள்ளவும். மனைவியின் செயலைக் குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் ஓரளவு இலாபம் கிடைக்கும். பணியாளர் கள் புதி ய தொழில் நுட்பங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் செலுத்துவர். மாணவர் கள் பாதுகாப்பற்ற இடங்களுக்கு பயணம் செல்ல வேண்டாம். நரசிம்மரை வழிபட்டால் நன்மை தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டுமானக் களத்தில் தொடங்கும் படம் விரைவிலேயே இலங்கைத் தமிழ் அகதிகளைச் சுற்றியதாக வளர்கிறது. தமிழக அகதிகள் முகாமின் நிலைமை குறித்து துணிச்சலான விமர்சனங்களை முன்வைக்கிறது இப்படம்.

## நெஞ்சுக்கு நெருக்கம்

# சிவப்பு

நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்யும் கட்டுமானக் களம் அது. ஓர் அசம்பாவிதத்தால் பலர் வேலையை விட்டுப் போய்விட, புதிதாக ஆள்களைத் தேட வேண்டிய நெருக்கடி அதன் பொறுப்பாளர் கோனாருக்கு (ராஜ்கிரண்) ஏற்படுகிறது. இலங்கை அகதிகள் முகாமில் இருந்து ஆஸ்திரேலியா தப்பிச் செல்ல முனையும் ஈழத் தமிழர்கள் அவரது கண்ணில்படுகின்றனர். ஆஸ்திரேலியாவுக்குப் பத்திரமாக அனுப்பிவைப்பதாக உறுதியளித்து அவர்களை வைத்து வேலையைத் தொடர்கிறார்.

பணியிடத்தில், இலங்கைத் தமிழ்ப் பெண்ணுக்கும் தமிழக கட்டுமானத் தொழிலாளிக்கும் காதல் ஏற்படுகிறது. தேர்தல் நெருங்குவதன் காரணமாக ஏற்படும் அரசியல் நெருக்கடிகளால் அகதிகளுக்குச் சிக்கல் ஏற்படுகிறது. அவர்கள் என்ன ஆனார்கள், காதல் கைகூடியதா என்பதே சத்யசிவா இயக்கத்தில் வந்துள்ள சிவப்பு படத்தின் கதை.

கட்டுமானக் களத்தில் தொடங்கும் படம் விரைவிலேயே இலங்கைத் தமிழ் அகதிகளைச் சுற்றியதாக வளர்கிறது. தமிழக அகதிகள் முகாமின் நிலைமை குறித்து துணிச்சலான விமர்சனங்களை முன்வைக்கிறது இப்படம்.

அகதிகள் தப்பிச் செல்லும் காட்சி, அரசியல்வாதியின் விபரீதமான தலையீடு, நீதிமன்றத்தில் ராஜ்கிரணின் வசனங்கள் ஆகியவை அழுத்தமாக உள் ளன. மற்றபடி, திரைக்கதையில் அழுத்தமான காட்சிகள் அதிகம் இல்லை.

மோதலில் தொடங்கும் காதலிலும் புதிதாக எதுவும் இல்லை. தான் காதலிக்கும் பெண், தேடப்படும் அகதி என்பதை அறிந்த இளைஞன் அது பற்றிய பொறுப்பே இல்லாமல் நடந்துகொள்கிறான். திரைக்கதையில் காதலுக்குக் கொடுத்திருக்கும் இடத்தில் சிறிதளவு அகதிகளின் வாழ்க்கையைச் சித்திரிப்பதற்குக் கொடுத்திருக்கலாம். உள்ளூர் அரசியல் கோணத்தையும் இன்னும் சற்று வலுவாகச் சொல்லியிருக்கலாம்.

படத்தில் இளம் காதல் ஜோடியாக வரும் நவீன் சந்திராவும் ரூபா மஞ்சரியும் பாத்திரங்களுடன் நன்கு பொருந்துகின்றனர். ஆனாலும் ராஜ்கிரண் தான் நாயகன். கட்டுமானத் தொழிலின் சவால்களைக் கையாள்வது, அகதிகளுக்காக இரங்குவது, பொறியலாளர்களை எதிர்கொள்வது, அரசியல்வாதிகளுடனான உறவைப் பேணுவது, பொங்கி எழுவது என்று பன்முகம் கொண்ட பாத்திரத்தில் பிரகாசிக்கிறார்.

கதையோடு ஒட்டிய நகைச்சுவையை வழங்கும் பாத்திரத்தில் தம்பி ராமையா நன்றாக நடித்திருக்கிறார்.

சத்யசிவாவின் வசனங்கள் பல இடங்களில் யதார்த்தம்; தேவைப்படும் இடங்களில் கூர்மை! அகதிகளின் நிலையைச் சொல்லும் இடங்களில் உணர்ச்சிகளை அள்ளிக் கொட்டாமலேயே வலிமையைக் கூட்டியிருக்கிறார். கட்டுமானக் களத்தை மது அம்பட் கேமரா தத்ரூபமாகப் படம்பிடித்திருக்கிறது.

பலரும் சொல்லத் தயங்கும் அகதிகள் பிரச்சினையை இயக்குநர் சத்யசிவா துணிவோடு கையாண்டிருப்பது பாராட்டுக்குரியது. கட்டுமானக் களத்தின் அன்றாட நிகழ்வுகளை சுவையாகச் சித்திரித்திருக்கிறார். குறிப்பாக தேநீர் போடும் காட்சி. அகதிகள் முகாமின் நிலைமையைச் சித்திரிக்கும் சில காட்சிகளும் இருந்திருந்தால் அவர் நோக்கம் முழுமையாக நிறைவேறியிருக்கும். இலங்கைத் தமிழர்களை ஆதரியுங்கள் அல்லது கைவிடுங்கள். ஆனால், உங்கள் அரசியலுக்காகப் பயன்படுத்திக்கொள்ளாதீர்கள் என்னும் செய்தியை வலுவாகச் சொல்கிறது படம்.

வசனங்களுக்கு இணையான வலிமையை காட்சிகளிலும் கொண்டு வந்திருந்தால், இலங்கைத் தமிழர்களின் துயரத்தையும் அதைப் பயன்படுத்திக்கொள்ளும் அரசியலையும் சொல்லும் முக்கியமான படமாக இருந்திருக்கும்.

# அலாரிப்பு

ஆசிரியர் படும்
அவஸ்தை
அடைந்திடுமா?
உங்கள் இலக்கை
அதிகாலை எழுதல்
அடுப்படியில் சமர்
புரிதல்
விடிகாலை வரும்
விளக்குமாறு
கைபிடிக்கும்
காலுக்குள் பிள்ளை
கைசூப்பிக் கொண்டு
நிற்கும்
கிணற்றடிக்குப் போகும்
நேரம்
பரதம் கீதமின்றி
அரங்கேறும்
அது முடித்து
ஆடைக்குள் சங்கமித்து
அலங்காரம்
தனைமுடித்து
கணிப்பீடு செயலட்டை
ஆறுதல் தேறுதல்
எல்லாமாய் வாரி
வாய்க்குக்குள்
புதைத்துக்கொண்டு
மோட்டாரை இயக்க
மூச்சிழுத்து அது
சினக்கும்
பாடசாலை வந்துவிடும்
பங்கேற்று நடிக்கின்ற
பாத்திரங்கள் பல இருக்கும்
உள்ளீடு வெளியீடு
அரைவட்டம் தரவட்டம்
எல்லாம் முடித்து
எம் வீட்டு வாசல்வர
மற்றவர்கள் வீடு போய்
மணி ஒன்று போயிருக்கும்
உனக்கென்ன அங்கே
ஓவர்டைம்
வேலையுண்டா?
கணவனின் வரவேற்புரை
குழந்தை அழும் சங்கீதம்
யாவற்றையும் ஏற்று
மாற்றுடுப்பில் தமை
மறைத்து
மீண்டும் இயந்திரமாய்
கழுவுதல் தோய்த்தல்
துடைத்தல் கூட்டுதல்
மாலை ஆறாகிவிடும்
மறுபடியும் அடுப்படியில்
அலாரிப்பு நடனம்
பதினொன்றரையாகும்
படுக்கையறை நோக்க
தேநீர் தாருமென்பார்
திருவாளர் வலியின்றி
ஊற்றி வந்து கொடுக்க
ஓரக்கண்ணால் பார்த்த
பிள்ளை
துள்ளி எழுந்து
விளையாடிக்
கொண்டிருக்கும்
இதற்கிடையில் பகுப்பாய்வு
கணிப்பீடு வேலைத்திட்டம்
உபகரணம்
வருமா? நித்திரை
யாரோடு நோக
யாருக்கு எடுத்துரைக்க



திருமதி ப.அமிர்தலிங்கம்
உசன் இராமநாதன் ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90 வீதமானோர் தமது வேலையில் ஈடுபாடில்லாதவர்கள்!



■ தி நியூயோர்க் டைம்ஸ்

நமது வேலையில் நாம் எந்த அளவுக்குத் திருப்தியாக இருக்கிறோம்? நிர்வாக ரீதியான ஆலோசனைகளை வழங்கும் அமெரிக்க ஆய்வு நிறுவனமான கால்லப், உலகமெங்கும் உள்ள தொழிலாளர்களிடம் இதுதொடர்பான ஆய்வுகளை நடத்துகிறது.

கடந்த ஆண்டு வெளியான இந்த நிறுவனத்தின் ஆய்வறிக்கையின்படி, 907 தொழிலாளர்கள் தங்கள் வேலையில் ஈடுபாடு இல்லாதவர்கள் அல்லது ஈடுபாடு காட்டாதவர்கள் என்று தெரிய வந் திருக்கிறது. நினைத்துப் பாருங்கள்: 10இல் ஒன்பது தொழிலாளர்கள், தங்கள் வாழ்வில் விழித்திருக்கும் நேரத்தில் பாதி நேரம், தாங்கள் இருக்க விரும்பாத இடங்களில், செய்ய விரும்பாத வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஏன்? வேலை செய்ய விரும்பாதது மனிதர்களின் இயல்பு என்பது ஒரு காரணமாக இருக்கலாம். தொழில்துறை முதலாளித்துவத்தின் தந்தை என்று அழைக்கப்படும் ஆடம் ஸ்மித்தின் பார்வையும் இதுதான். மனிதர்கள் இயல்பிலேயே சோம்பேறிகள்; சம்பளத்துக்காக மட்டுமே வேலைபார்ப்பவர்கள் என்று கருதியவர் அவர். எவ்வளவு முடியுமோ அவ்வளவு சொகுசாக வாழ்வதுதான் ஒவ்வொரு மனிதரின் விருப்பம் என்று 1776இல் தான் எழுதிய 'தி வெல்த் ஒஃப் நேஷன்ஸ்' எனும் புத்தகத்தில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தக் கருத்து மிகப் பெரும் தாக்கம் செலுத்தக்கூடிய ஒன்று. ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர், அறிவியல்பூர்வமான நிர்வாக இயக்கத்தை வடிவமைக்க இது உதவியது. இதுதான் திறன் மற்றும் தொடர்ந்த கவனம் ஆகியவற்றின் தேவையைக் குறைத்த தயாரிப்பு முறைகளை உருவாக்கியது.

இந்த விடயங்கள், இன்றைக்குத் தொழிற்சாலைகள், அலுவலகங்கள் மற்றும் பிற பணியிடங்களில் வேறுபடலாம். ஆனால், ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், நிலைமை இதுதான்: செய்தே ஆக வேண்டும் என்ற நிலையிலேயே நாம் வேலையைச் செய்கிறோம் எனும் அனுமானத்திலேயே வேலை கட்டமைக்கப்பட்டிருக்கிறது. கோல் சென்டரில் பணிபுரியும் ஊழியர் தனக்கு வந்த அழைப்பை எத்தனை விரைவாக முடிக்கிறார் என்று கண்காணிக்கப்படுகிறது. அலுவலக ஊழியரின் உற்பத்தித் திறனை உறுதி செய்யும் வகையில் அவரது பணித்திறன் கண்காணிக்கப்படுகிறது.

### மோசமான அணுகுமுறை

இது ஒருவகையில் மோசமான மற்றும் எதிர்மறையான அணுகுமுறை என்றே நான் நினைக்கிறேன். இது நம் வேலையில் நம்மை அதிருப்தியடைய வைப்பதுடன், இன்னும் மோசமான நிலைக்குத் தள்ளக்கூடியது. நமக்காகவும், நம்மைப் பணிக்கு அமர்த்தியிருப்பவர்களுக் காகவும், இந்த விடயங்கள் மாற வேண்டும்.

சம்பளத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட சோம்பேறிகள் என்று ஆடம் ஸ்மித் குறிப்பிட்டிருக்கும் தொழிலாளர்களுடன் தங்களை ஒப்பிடுவதற்குப் பெரும்பாலானவர்கள் விரும்பமாட்டார்கள் என்றே நினைக்கிறேன். நாம் நமது சம்பளத்தில் கவனம் செலுத்துகிறோம் என்பதும் சம்பளம் இல்லாமல் நாம் வேலைபார்க்கப் போவதில்லை என்பதும் உண்மைதான். ஆனால், பணத்தை விடவும் பல விடயங்களில் நாம் கவனம் செலுத்துகிறோம். சிறிதளவாவது நம்மை மேன்மைப் படுத்தக் கூடிய, அர்த்தமுள்ள வேலைகளை நாம் விரும்புகிறோம்.

குறைந்த சம்பளம் கிடைத்தால்கூட மேன்மையான வேலைகளைச் செய்ய விரும்புகிறவர்களும் இருக்கிறார்கள்! அமெரிக்காவின் முன்னணி நிறுவனங்களை விட்டுவிட்டு அடிமட்ட மக்களுக்காகப் பணிசெய்யச் செல்லும் வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். ஏழை மக்களுக்குச் சேவை செய்வதற்காக வசதியான இடங்களை விட்டுச் செல்லும் மருத்துவர்கள் உண்டு. அரசின் பொருளாதார ஆலோசகராக வேலை பார்க்க வொஷிங்டனுக்குக் குடிபெயரும் வோல் ஸ்ட்ரீட் பொருளாதார நிபுணர்கள் இருக்கிறார்கள்.

ஆனால், சலிப்பான் ஒரே மாதிரியான பணிகளின் விடயத்தில் முற்றிலும் எதிர்மாறான பக்கமும் உண்டு. வேலை திருப்தி எனும் விடயத்தில் நாம் இழப்பதைத்தான், வேலைத் திறன் எனும் விடயத்தில் பயனாகப் பெறுகிறோமா?

இதுவும்கூட ஆடம் ஸ்மித்தின் கருத்துதான். குண்டூசித் தொழிற்சாலையை மேற்கோள் காட்டி, தொழிலாளர்களுக்கு இடையிலான வேறுபாட்டின் தன்மையைப் புகழ்ந்து அவர் சொன்ன புகழ்பெற்ற உதாரணம் இது: ஒருவர் கம்பியை இழுக்கிறார். மற்றவர் அதை நேராக்குகிறார். மூன்றாம் நபர் அதைத் துண்டாக்குகிறார். நான்காமவர் அதைக் கூராக்குகிறார். ஐந்தாவது நபர் குண்டூசியின் தலைப் பகுதியைப் பொருத்தும் பணியைச் செய்கிறார். நமது பணியனுபவம் மோசமானதாக இருக்கலாம். ஆனால், நாம் – அல்லது குறைந்தபட்சம் நமது முதலாளிகள் – பணக்காரர்களாக முடியும்.

### பணியின் அர்த்தம்

ஆனால், 200 ஆண்டுகளுக்குப் பின்னரும், இந்த பணித் திருப்தி – திறன் தொடர்பான பரிமாற்றம் இருப்பதற்கான ஆதாரங்கள் இல்லை என்றே சொல்லலாம். சொல்லப்போனால் இதற்கு எதிர்மறையாக நிறைய சான்றுகள் இருக்கின்றன என்பதே உண்மை. ஸ்டான்போர்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜெஃப்ரி பெஃபெர், வெவ்வேறு துறைகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், 1998இல் எழுதிய 'தி ஹியூமன் ஈக்குவேஷன்' எனும் நூலில், தொழிலாளர்களை ஓர் இயந்திரத்தின் பற்சக்கரங்களைப் போல நடத்தும் பணியிடங்களை விடவும், சவாலான, அர்த்தமுள்ள வேலையை வழங்கும் பணியிடங்கள் அதிக லாபம் ஈட்டுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

மனித வளத்தில் அதிக கவனம் செலுத்திய நிறுவனங்கள், குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளுக்காவது தாக்குப்பிடிக்கும் விடயத்தில், மற்ற நிறுவனங்களைவிட 207 அதிகமாக வெற்றிகரமாக இயங்கின. இரும்பு உருக்காலைகளில், நிர்வாக நடைமுறைகள் தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வுகளிலும் இதேபோன்ற முடிவுகள் தெரியவந்தன.

தங்களுக்குப் பிடித்த வேலைகளைச் செய்யும்போது ஊழியர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கும்போது, அவர்களது வேலையும் கூடவே உற்பத்தியும் நிறுவனத்தின் செயல்பாடும் சிறப்பாக இருக்கும். இது ஒன்றும் புதிய செய்தி அல்ல. ஆனால், இது ஓர் ஆழமான கேள்வியை எழுப்புகிறது. ஆனால், பணியிடங்களில் சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் சம்பள விடயத்தில் கெடுபிடி போன்றவை பணியாளர்களின் மோசமான செயல்திறனுக்கு வித்திட்டிருக்கின்றன. சரி, இதைப் பொறுத்துக்கொள்வதையும், இந்த அணுகுமுறையை ஏற்றுக்கொள்வதையும் நாம் ஏன் தொடர்ந்தோம்?

இதற்கான பதில் என்று நான் நினைப்பது: ஆடம் ஸ்மித்தின் கருத்தாக்கங்கள் ஒரு வகையில் தன்னிறைவு தரும் தீர்க்க தரிசனமாகிவிட்டன. மனிதர்களைப் பற்றிய அவரது தெளிவற்ற அனுமானங் கள் உண்மையாகிவிட்ட பணி உலகத்தை அக்கருத்துகள் எழுச்சியடைய வைத்தன. மனிதர்களின் இயல்பைப் பற்றிய உண்மை நிலையைக் கண்டறிவதற்குப் பதிலாக, மனிதர்களைப் பற்றிய கருத்துகளை உருவாக்கிவிட்டதை ஆடம் ஸ்மித்தும் அவரது வழித்தோன்றல்களும் உணரவில்லை.

### பணம் பிரதானம் அல்ல

உண்மை என்னவென்றால், இயல்பிலேயே நாம் பணத்துக்காக அலைபவர்கள் அல்லர். பார ஊர்தி ஒன்றில் சோஃபாவை ஏற்றுவதற்காகக் கொஞ்சம் பணம் தருவதாகச் சொன்னால், அதைச் செய்ய பலர் முன்வருவதில்லை என்றும், உதவி என்று கேட்கும்பட்சத்தில் அதைச் செய்ய பலர் தயாராக இருக்கிறார்கள் என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஏனெனில், பணம் வாங்கிக்கொண்டு அந்த உதவியைச் செய்வது என்பது சக மனிதருக்கு உதவுவது என்பதாக இல்லாமல், ஒரு வணிகப் பரிமாற்றமாக ஆகிவிடுகிறது. அதேபோல், பணம் தருவதாகக் கூறினாலும் யாரும் தங்கள் குடியிருப்புகளின் அருகில் உள்ள காலியிடத்தில் அணுக் கழிவுகளை வைத்துக்கொள்ள விரும்பமாட்டார்கள். ஏனெனில், பணம் கொடுப்பது அவர்களது சமூகக் கடமை உணர்வை மலினப்படுத்திவிடுகிறது. பார ஊர்தியில் சோஃபாவை ஏற்றுவதற்காகப் பணம் கொடுப்பது வழக்கமாகிவிட்டால், உதவி செய்யும் எண்ணம் என்பது இல்லாமலே போய்விடும்.

ஒவ்வொருவருக்கும் அவர்கள் பார்க்கும் வேலைக்காகப் போதுமான சன்மானம் அளிக்கப்படவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. சமீபத்தில் அமெரிக்கா முழுவதும் குறைந்தபட்ச ஊதியத்தில் உயர்வை ஏற்படுத்துவது தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சிகள் உண்மையான சமூகப் பணியைப் பிரதிபலித்தன. எனினும், உழைக்கும் மக்களுக்கான இதுபோன்ற வெற்றிகளைத் தக்கவைப்பதைப் பொறுத்தவரை, அவர்கள் தவிர்க்கும் விடயங்களை விடவும், பின்பற்ற விரும்பும் விடயங்களில் செலுத்தும் கவன்த்தின் நோக்கத்தை இழந்துவிடக் கூடாது.

ஆனால், அதை எப்படிச் செய்வது? ஊழியர்கள் எப்படி வேலை செய்கிறார்கள் என்பது தொடர்பாக அவர்களிடம் கருத்துகளைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் செய்யலாம். அவர்கள் கற்றுக்கொள்வதற்கும், வளர்ச்சிக்கும் ஏற்ற வாய்ப்புகளை வழங்குவதை உறுதிசெய்வதன் மூலம் அதைச் செய்யலாம். பணிகளை மேம்படுத்துவது தொடர்பாக ஆலோசனைகளை வழங்குமாறு அவர்களை ஊக்கப்படுத்துவதன் மூலமும், அவர்கள் சொல்வதைக் காதுகொடுத்துக் கேட்பதன் மூலமும் அதைச் செய்யமுடியும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஓர் ஊழியரின் பணி மற்றவர்களின் வாழ்வில் சிறிதேனும் நன்மை பயப்பதாக அமைவதை உறுதிசெய்யும் வழிகளில் கவனம் செலுத்த வேண்டும். தொலைபேசி மூலம் விற்பனை செய்பவர், தகுதியான ஒரு மாணவர் சிறந்த பள்ளியில் சேர்வதற்கு வழி வகுக்கிறார். வேலைக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படுவது ஒரு முக்கியமான சமூக நன்மை. ஆனால், அதற்கேற்ற வேலையைச் செய்வதும் அதே அளவுக்கு முக்கியமான விடயம்!

*தமிழில் சுருக்கமாக:*
*வெ. சந்திரமோகன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ மண்ணில் இந்திய போர்க் குற்றம்

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

22ஆம் திகதி காலை 8.30 மணியளவில் விக்ரோரியா வீதிப் பக்கமாகவுள்ள வாசல்வழியாகக் குழந்தைகள் மருத்துவ நிபுணர் சிவபாதசுந்தரம் மருத்துவ வளாகப் பகுதிக்குள் உள்நுழைகின்றதைக் கண்ட இரு இளநிலைப் பெண்தாதிகளும் அவரோடு இணைந்து கொள்கின்றனர்.

வெள்ளைக் கொடியோடு மூவரும் மருத்துவமனை 9ஆம் விடுதியை நோக்கி நகர்ந்தனர். "நாங்கள் சரணடைகின்றோம். நாங்கள் ஒன்றுமறியாதவர்கள். நான் வைத்தியர்" என்றவாறு மயான அமைதியில் கிடந்த கட்டடங்களைப் பார்த்து மருத்துவர் கூவினார். கைகளைத் தலைக்கு மேலே உயர்த்தியிருந்தார்.

வெள்ளைக் கொடிக்கும், சரணடைவது என்ற வார்த்தைக்கும் விளக்கம் புரியாத காடையர்களாக இந்தியப் படையினர் இருப்பார்கள் என்று மருத்துவர் நினைத்திருக்கவில்லை. ஆனால் அவர்கள் அப்படித்தான் இருந்தார்கள்.

மருத்துவ நிபுணரும் இரண்டு இளநிலைத் தாதிய உத்தியோகத்தர்களும் அந்த இடத்திலேயே சுட்டுக்கொல்லப்பட்டனர். எங்கிருந்தோ ஓடிவந்த மேலும் ஒரு தாதி காயப்பட்டார். சம்பவத்துக்கு உயிருள்ள சாட்சியானார்.

சடலம் எது, உயிருள்ள உடலம் எது என்று பிரித்தறிய முடியாதபடி தரையெங்கும் சிதறிக் கிடந்த உடல்களின் மத்தியில் இருந்து ஒருவர் 'ராஜீவ் வாழ்க! ராஜீவ் வாழ்க!' என்று முனங்கிக் கொண்டிருந்தார். சிலர் சிவபுராணம் உரைத்து கடவுளைத் துணைக்கழைத்துக் கொண்டி ருந்தனர்.

அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்பதைக் காட்டிக்கொடுக்க அது போதுமானதாக இருந்தது. முதல் எறி குண்டு 'ராஜீவ் வாழ்க' என்று குரல் கொடுத்தவர் மீதே வெடித்தது. குரல் அடங்கிப்போகப் பின்னர் சடலமாக அவர் மீட்டெடுக்கப்பட்டார்.

22ஆம் திகதி காலை 10.30 மணியளவில் ஒரு பெண் வைத்தியர் விம்மி வெடிக்கும் அழுகையுடன் வந்து, தங்கியிருப்பவர்கள் யாவரும் கையை உயர்த்திக் கொண்டு வெளியே வாங்கோ எனக்கூறிய பொழுது எப்படி எழுந்து செல்ல முடியும்? மீண்டும் சாகவா என்ற பயமே தப்பியவர்களுக்கு ஏற்பட்டது.

இருந்தாலும் சாவு, எழுந்து சென்றாலும் சாவு என்ற நிலையில் ஒவ்வொருவராக வெளியே வந்தார்கள். உயிரற்ற சடலங்களைக் கடந்து நடந்தார்கள். துப்பாக்கியை நீட்டியபடி நின்ற இந்திய சீக்கியப் படையினர் நட என அதட்ட கண்களில் ஆற்றாமையையும் பயத்தையும் மூடிக்கொண்டு எல்லாக் கடவுள்களையும் துணைக்கு அழைத்துக் கொண்டு நகர்ந்தார்கள். கொடூரங்கள் அத்தோடு முடிந்துவிடவில்லை என்பது அப்போதுதான் புரிந்தது. தாங்கள் கொன்று குவித்தவர்களின் சடலங்களை ஒன்றாக்கி, இன்று குருதி வங்கி அமைந்திருக்கின்ற இடத்துக்குக் கொண்டு வந்து போட்டு கட்டைகளை அடுக்கி எரிக்கும்படி கட்டளை இட்டார்கள். தங்களது போர்க் குற்றங்களை எரித்துச் சாம்பராக்கினார்கள். சுமார் 80க்கும் மேற்பட்ட சடலங்கள் குவித்து வைக்கப்பட்ட நிலையில் ஒன்றாக எரியூட்டப்பட்டன. சரி



யாகக் கணக்கெண்ண அப் போது எவருக்கும் துணி விருக்க வில்லை.

இந்தியப் படையினர் போதனா மருத்துவமனையில் நடத்தியது, போர்க் குற்றங்களுக்குச் சற்றும் குறைந்ததல்ல. இன்றுவரையில் தமிழினத்தின் உரிமைகளுக்காகப் போராடுகின்ற தமிழ்க் கட்சிகள் ஏன் சர்வதேச மத்தியில் இதனைக் கொண்டுசெல்ல முற்படவில்லை என்பது மிகப் பெரிய கேள்வி.

யாழ்.போதனா மருத்துவமனையில் இந்தியப் படையினரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக மருத்துவமனை வளாகத்தில் நினைவுத்தூபி எழுப்பப்படல் என்ற கோரிக்கை ஆரம்பத்தில் கைவிடப்பட்டாலும் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் பழைய நோயாளர் பிரிவில் இதற்கான அடிக்கல் நடப்பட்டது. அரசியற் காரணங்களைக் காட்டி அந்த நடவடிக்கை அப்போது நிறுத்தப்பட்டிருந்தது.

இன்றுவரையில் அதற்கான முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை. கடந்த வருட 27 ஆவது நினைவு தினத்தின்போது, படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக மருத்துவ வளாகத்தில் நினைவுத் தூபி எழுப்பப் படல் வேண்டும் என அதில் கலந்து கொண்டவர்களால் கோரிக்கை விடப்பட்டிருந்தது. அத்துடன் அன்றைய தினம் இந்தியப் படைகள் நடத்திய கொலைவெறிச் செயற்பாட்டை உள்ளடக்கி,யாழ். போதனா மருத்துவமனையின் வரலாறுகள் எழுதப்பட்டு அது ஆவணமாக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. அவை எவையும் இன்னும் நிறைவேறவில்லை. வலி மட்டும் எஞ்சியிருக்கிறது நெஞ்சின் ஓரத்தில்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 392

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ✿ | 5 | 6 |
| 7 | | ✿ | 8 | | | | |
| | ✿ | 9 | | | ✿ | 10 | |
| 11 | 12 | | | ✿ | 13 | | ✿ |
| 14 | | | ✿ | 15 | | | |
| ✿ | | ✿ | 16 | | | | ✿ |
| 17 | | 18 | | ✿ | | ✿ | 19 |
| 20 | | | | | ✿ | 21 | |

அனுப்புபவர் பெயர்:..........................................

பூரணமான தபால் விலாசம்:

..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. ஒரு நட்சத்திரம்
5. மனைவி
7. நசி
8. செய்ய வேண்டிய கடமை
9. பாரம்
10. நாங்கள்
11. சொற்கள் சேர்ந்து உருவாவது
13. ஒரு கணிதக் குறியீடு
14. அச்சம்
15. அருந்துதல்
16. கவிஞர்
17. சமயத்தில் தீவிர நிலைப்பாடு கொண்டவர்
20. மிகச் சரியாக
21. புரவி

### மேலிருந்து கீழ்

1. அம்பிகாவதி மனம் கவர்ந்தள்
2. நாக்கு அறியும் சுவை
3. எரியும் செயல்
4. உறுதியான தன்மை
5. நாடாளுமன்றின் தலைவர்
6. திடீரென
9. நெருப்பு
12. பொறுத்துக் கொள்ளல்
13. பாத்திர வகைகளுள் ஒன்று
15. பன்மையைக் குறிப்பது
16. புதிதான
17. போதை தருவது
18. இராமன் ஒளிந்திருந்து அம்பு விட்டுக் கொன்றது இவனை
19. பெரிய நீர்த்தேக்கம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 390 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)மகத்துவம் (6)தீதி (7)வாடி (8)பாதி (9)பரவுதல் (11)கபடம் (14)விதம் (15)அமரன் (16)மகன் (17)உறவினன் (18)கல (19)கும் (20)துறவறம்

**மேலிருந்து கீழ்**

(1)மதுரகவி (2)கதீ (3)துவாரம் (4)வடிவு (5)மதி (8)பால் (9)படம் (10)தடிமன் (12)பதற்றம் (13)தன்னலம் (15)அகன்ற (16)மனது (17)உகு (18)கற

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 390 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**

திருமதி இந்துமதி திரவியநாயகம்,
முருகன் கோவிலடி, புலோலி வட மேற்கு
புலோலி.

**2 ஆம் பரிசு**

திருமதி சி.பராசக்தி,
சிவன் கோவில் தெற்கு வீதி,
சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு**

சத்தியகுமார் கிசாலன்
வாமாஸ் வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

**4 ஆம் பரிசு**

திருமதி த.நாகரத்தினம்,
மாப்பாணவூரி,
காரைநகர்.

**5 ஆம் பரிசு**

பா.கேதீஸ்வரி,
இல. 67, கிருஷ்ணா நகர்,
முழங்காவில்.

**பாராட்டுப் பெறுவோர்**

த.மதி,
சடச்சப்பை, கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

க.பரமேஸ்வரி,
பண்டாரவத்தை, புலோலி வடக்கு,
பருத்தித்துறை

ம.விஸ்ரஜினா.
இல 26/3 ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டி
இல.392
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(04.11.2015 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.392 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 08.11.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 390இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடறி விழும் இடது சாரிகள்

சந்திரசேகர ஆசாத்

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலவிரோத நடவடிக்கைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்துக்கு அமைய நடத்தப்படவுள்ளதான விசாரணைக்கு எதிராக நாடு பரந்த அளவில் போராட்டங்களை நடத்தப்போவதாக எதிர்க்கட்சிகளின் கூட்டணி எனத் தம்மை அடையாளப்படுத்தும் மகிந்த ராஜபக்சவின் ஆதரவு சக்திகள் அறிவித்துள்ளன. அதன் முதற்கட்ட நடவடிக்கையாகக் கலப்பு நீதிமன்றப் பொறிமுறையிலிருந்து நாட்டைக் காப்பாற்றுதல் என்ற பேரில் கொழும்பு விகார மாதேவி பூங்காவில் ஒரு பரப்புரைக் கூட்டம் நடத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் தீர்மானத்தில் கலப்பு நீதிமன்றம் என்ற பதம் நீக்கப்பட்டுவிட்ட போதிலும் மகிந்த ஆதரவுத் தரப்பினர் அதைக் கைவிடுவதாக இல்லை. உயிரைத் தியாகம் செய்து பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றிய படையினரைக் காட்டிக் கொடுக்கப் போகிறார்கள் என ஒப்பாரி வைக்க ஆரம்பித்து விட்டனர்.

ஏற்கனவே இலங்கையில் நடத்தப்பட்ட உடலகம தலைமையிலான கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, மக்ஸ்வெல் பரணகம தலைமையில் இடம்பெற்ற காணாமற்போனோர் தொடர்பான ஆணைக்குழு என்பவற்றின் விசாரணைகளின்போது போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டமை கண்டறியப்பட்டது. எனினும் இவை தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இப்படித் தீர்மானம் எடுக்க வேண்டிய நிலை உருவாகியது.

தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக நடத்திய அகிம்சைப் போராட்டங்கள் ஆயுதமுனையில் அடக்கப்பட்ட போதே ஆயுதப்போராட்டம் உருவாகி அது உள் நாட்டுப் போராக வெடித்தது. இந்தப் போரின்போது பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட இன அழிப்புத் தொடர்பான மனித குல விரோத நடவடிக்கைகள் தொடர்பாகவே தமிழ் மக்கள் இப்போது நியாயங்களைக் கோரி வருகின்றனர். அதுவே இன்று இப்படியான ஒரு தீர்மானமாக உருவெடுத்துள்ளது.

அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்கள் தமக்கு மேல் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக நீதியையும் நியாயங்களையும் கோரும் உரிமை அற்றவர்கள் என்ற தொனியிலேயே ஒன்றிணைந்த எதிர்க் கட்சிகளின் கூட்டணி தற்சமயம் எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

இந்தக் கூட்டணியில் உள்ள பெரும்பான்மையான கட்சிகள் முன்னாள் இடது சாரிக் கட்சிகள் என்பது குறிப்பிடத்தக்கது. ஒடுக்குமுறைகளுக்கு எதிராக எழுச்சிபெற்ற பொதுவுடமைத் தத்துவத்தைப் பின்பற்றுவதாகக் கூறும் இவர்களே இன்று தம்மை முன்னிலை ஒடுக்கு முறையாளர்களாக இனம்காட்டி வருகின்றனர். இவர்கள் உண்மையான இடதுசாரிகளாக இருந்தால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு தோள் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு பயங்கரவாதம் எனப் பெயர் சூட்டி அதை முறியடிக்கச் சகல முயற்சிகளிலும் இறங்கினர்.

இலங்கையில் முதன் முதலாக ஓர் இடதுசாரி அமைப்பை உருவாக்கியவர் பிலிப் குணவர்த்தனா. அவர் இறப்பின் பின்பு அவரின் மகனான தினேஷ் குணவர்த்தன மக்கள் ஐக்கிய முன்னணி என்ற அவரின் கட்சியை இன்று இனவாதச் சேற்றுக்குள் அமுக்கி விட்டார். லங்கா சமசமாஜக் கட்சி ஒரு காலத்தில் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம மதிப்பு வழங்க வேண்டுமென நாடாளுமன்றத் துக்கு உள்ளேயும் வெளியேயும் பல போராட்டங்களை நடத்தியது. சம மதிப்புக் கோரிக்கையை முன்வைத்து சமசமாஜக் கட்சி ஒரு பொதுக்கூட்டத்தை கொழும்பு நகர மண்டபத்தில் நடத்திய போது அதன் தலைவர் என்.எம்.பெரேரா மீது குண்டு வீசப்பட்டது. அதன் காரண மாகத் துறைமுகத் தொழிலாளி ஒருவர் தன் ஒரு கையை இழந்தார். அந்தப் பாசறையில் வளர்ந்த திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைப்பதை எதிர்த்து இப்போது போர்க்கொடி தூக்கி யுள்ளனர். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய பிரதேச சுயாட்சியே ஒரே வழி என வலியுறுத்தி வந்த கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டியூ.குணசேகரவும் இன்று தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுகிறார். தன்னைச் சிங்கள மக்களின் வீரநாயகனாகக் காட்டிவரும் விமல் வீரவன்ச ஜே.வி.பியிலேயே அரசியலில் அறிமுகமானார். உலகப் புரட்சித் தலைவர்கள் நால்வரில் ஒருவரான சேகுவேராவைப் பின்பற்றுவதாகக் கூறிய கட்சி ஜே.வி.பி.

அதாவது இன்று இனவாதம் கக்கும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் கூட்டணி முன்னாள் இடது சாரிகளால் நிறைந்து வழிகிறது. ஆனால் பொதுவுடமைக் கொள்கைகளுக்கு நேர்விரோதமான ஒடுக்குமுறைக் கொள்கைகளுக்கு வக்காளத்து வாங்கி வருகின்றனர். கொண்ட கொள்கையை விற்றுப்பிழைக்கும் பரிதாப நிலைக்கு அவர்கள் தங் களைத் தாங்களே கீழ்நிலைப்படுத்தி விட்டனர்.

அமெரிக்காவோ பிரிட்டனோ தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைப் பயங்கரவாதம் எனச் சித்திரித்தால் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. ஏகாதிபத்தியம் என்பது எப்போதுமே விடுதலை, சுதந்திரம் என்பவற்றுக்கு எதிரான போக்கைக் கொண்டவையே. உலகை முழுவதும் தங்கள் சுரண்டலை விரிவுபடுத்த எப்போதுமே விடுதலை என்பது சாதகமாக இருப்பதில்லை. ஆனால் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் உட்படாத ஆட்சிகள் நிலவும் நாடுகளில் போராட்ட இயக்கங்களுக்கு அமெரிக்கா உட்பட்ட ஏகாதிபத்திய நாடுகள் ஆதரவு வழங்கி வளர்க்கின்றன. நாங்கள் விரும்பாத ஆட்சிகள் வீழ்த்தப்பட்ட பின்பு போராட்ட அமைப்புக்களை அழிப்பதில் தாமே முன்னின்று செயற்படுகின்றன. அந்த வகையிலேயே தலிபான், அல்கெய்தா ஆகிய அமைப்புகள் அமெரிக்காவால் பயன்படுத்தப்பட்டன. பின்பு அவற்றை ஒடுக்குவதில் அமெரிக்காவே தீவிரமா கச் செயற்பட்டு வருகிறது. எனவே, ஏகாதிபத்தியங்கள் விடுதலை போராட்டங்களை பயங்கரவாதமாகச் சித்திரிப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் பொதுவுடமைத் தத்துவம் சகலவிதமான வர்க்க, இன, மத ஒடுக்குமுறைகளையும் அநீதிகளையும் எதிர்க்கும் ஒன்று.

பிரிட்டனின் ஆக்கிரமிப்பிலிருந்து விடு பட அயர்லாந்து மக்கள் போராடிய போது பொதுவுடமைத் தத்துவத்தின் தந்தையான கார்ல் மாக்ஸ் பிரிட்டிஷ் தொழிலாளர்களை ஐரிஸ் மக்களுக்கு ஆதரவு வழங்கும்படி அறைகூவல் விடுத்தார். அதை ஏற்றுக்கொண்ட பிரிட்டிஷ் துறைமுகத் தொழிலாளர்கள் அயர்லாந்துக்கு இராணுவத் தளபாடங்களையும், இராணுவத்துக்கான உணவு வகைகளையும் கப்பல்களில் ஏற்ற மறுத்து வேலை நிறுத்தத்தில் இறங்கினர். இந்தப் போராட்டம் அயர்லாந்தின் விடுதலையில் ஒரு முக்கிய பங்கு வகித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மாமேதை லெனினும் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை தொடர்பாகத் தெளிவான கருத்தையே முன்வைத்திருந்தார். அது மட்டுமன்றி அவர் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர் ணய உரிமை கொண்ட தேசிய இனங்களுக்கான சுயாட்சிப் பிரதேசங்களை உருவாக்கி அவற்றை ஒரு சமஷ்டி அமைப்பின் கீழ் ஒன்றிணைத்து சோவியத் யூனியனை சக்தி மிக்க வல்லரசாகக் கட்டியெழுப்பினார்.

அதேபோல் யூகோஸ்லாவியா, செக்கோஸ்லாவாக்கியா போன்ற பொதுவுடமை நாடுகளும் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயாட்சிப் பிரதேசங்களைக் கொண்ட ஒன்றியங்களாகவே விளங்கின.

இவ்வாறு பொதுவுடமைத் தத்துவம், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பாக மிகவும் தெளிவான கொள்கையையே கொண்டுள்ளது. ஆனால் இலங்கையின் இடதுசாரிகள் இன்னும் செஞ்சட்டைகளையும், செங்கொடிகளையும் கைவிடாதபோதிலும் பொதுவுடமைக் கொள்கைகளைத் தூக்கி எறிந்து விட்டனர். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்க மறுக்கும் இவர்கள் தமிழ் மக்களுக்கு எந்தவித நியாயங்களும் கிடைக்க விடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்குமளவுக்குத் தங்களைத் தாங்களே இனவாதச் சேற்றினுள் புதைத்துக் கொண்டு விட்டனர். இன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவில் தொங்கி நின்று அவரின் நலன்களின் அடிப்படையிலேயே அரசியல் செய்ய வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர்.

இப்போது போரின் இறுதிக்கட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்துக்கு எதிரான போராட்டங்களை மேற்கொள்ளும் அரசியலைக் கையில் எடுத்துள்ளனர்.

எப்போது இடதுசாரிகள் தங்கள் கொள்கைகளிலிருந்து இடறி விழுந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மடியில் தஞ்சம் அடைந்தார்களோ அப்போதே அவர்கள் தங்கள் அடையாளங்களை இழந்து விட்டனர். ஒரு தனித்துவ ஆதரவு அரசியலில் பயணிக்கும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர்.

நீதி நிலைநாட்டப்பட சில சமயம் கால தாமதமாகலாம். ஆனால் நீதி வெற்றி பெறும் என்ற உண்மையை இந்த முன்னாள் இடது சாரிகள் புரிந்து கொள்ள வெகுநாள்கள் எடுக்கப்போவதில்லை. அப்போ அவர்கள் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டு விடுவார்கள் என்பது மட்டும் உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகையே திரும்பிப் பார்க்க வைத்த

## சீனப் பாரம்பரிய மருத்துவம்

அருளினியன்

சீனாவைச் சேர்ந்த இயற்கை மருத்துவரான யூயூ தூவுக்கு இந்த ஆண்டுக்கான மருத்துவத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவத்துக்கான நோபல் பரிசைப் பெறும் முதல் சீனர் என்ற பெருமையைப் பெறுகிறார் இவர். மலேரியாவைக் குணப்படுத்தும் சீனப் பாரம்பரியத்தில் அமைந்த, இயற்கை முறை மருந்தான ஆர்டெமிசினினைக் (ARTEMISININ) கண்டுபிடித்தவராவார். நோபல் பரிசு அறிவிப்பைத் தொடர்ந்து, ஆசியாவின் பாரம்பரிய மருத்துவ முறையின் மீது, மேற்கத்திய ஊடகங்களின் பார்வை திரும்பியுள்ளது.

இலங்கையில் மலேரியா கிட்டத்தட்ட முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. எனினும் இன்றும் உலகம் முழுவதும் ஆண்டொன்றுக்கு சுமார் 4 லட்சத்து 50,000 பேர் மலேரியாவால் உயிரிழக்கிறார் கள். இதைவிட, உலக மக்கள் தொகையில் சுமார் 340 கோடி மக்கள், அதாவது உலக மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள், எந்த நேரத்திலும் மலேரியாத் தொற்றுக்குள்ளாகக்கூடிய அபாயத்தில் உள்ளனர் என்று சொல்கிறது உலக சுகாதார அமைப்பு.

1960களில் கிழக்கு சீனாவில் மிகப் பெரிய ஆள்கொல்லி நோயாக மலேரியா உருமாறியிருந்தது. தினந்தோறும் பல்லாயிரக்கணக்கானவர்கள் மலேரியாவின் தாக்கத்தால் இறந்து போனார்கள். சீனப் புரட்சியின் விளைவாக மேற்கத்திய மருத்துவம் படித்தவர்கள் எல்லாம் சீனாவை விட்டு வெளியேறியதால் போதுமான மருத்துவ வசதிகளும் கிடைக்கவில்லை.

இந்தக் காலகட்டத்தில்தான் ஹோசிமின் தலைமையிலான வடக்கு வியட்நாம் போராளிகளும் அமெரிக்காவுக்கு எதிராகப் போர் புரிந்து வந்தனர். மாவோ தலைமையிலான சீனாவும், ஹோசிமினின் வடக்கு வியட்நாமும் கம்யூனிச நாடுகள் என்ற அடிப்படையில் நட்புறவுடன் இருந்து வந்தன.

அமெரிக்கப் படையணியின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாவதைவிட அதிகளவு வியட்நாம் போராளிகள் மலேரியாவுக்குப் பலியானார்கள். மலேரியாவுக்கு மருந்தாக அந்தக் காலத்தில் உபயோகிக்கப்பட்ட குளோரோகுயின் (CHLOROQUINE) என்ற இரசாயனத்துக்கு எதிராக மலேரியாக் கிருமிகள் தம்மை தகவமைத்துக் கொண்டன. சீனாவுக்கும், அதன் நட்பு நாடாகிய வடக்கு வியட் நாமுக்கும் ஒரே நேரத்தில் பெரிய தலை வலியாக மலேரியாவின் தாக்கம் உரு வாகியது.

இந்த நிலையில்தான், மாவோ சேதுங், ஒரு இரகசியமான அறிவியல் புரட்சிக்கான முதல் வித்தை 1967ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதி ஊன்றினார். ஐந்தாம் மாதம் 23ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்ட தால் இது 'புரொஜெக்ட் 523' என்ற பெய ரில் அழைக்கப்பட்டது. இதை வரலாற் றாசிரியர்கள் இராணுவ அறிவியல் புரட்சி என்கிறார்கள்.

மாவோவின் கட்டளைக்கிணங்க, ஆள்கொல்லி நோயான மலேரியாவுக்கு மருந்து கண்டுபிடிக்க, சீன மருத்துவவிய லாளர்கள், அறிவியலாளர்கள் கொண்ட பல நூறு ஆளுமைகள் ஒரே நேரத்தில் களத்தில் இறங்கினார்கள்.

இந்த ஆராய்ச்சியில் சீனாவின் பாரம்பரிய மருத்துவக் கழகம் சார்பாகக் கலந்து கொண்டவர்தான் யூயூ தூ. சீனாவின் பாரம்பரிய மருத்துவத்தையும், மேற் கத்திய மருத்துவத்தையும் முறைப்படிக் கற்றவர் என்பது இவருக்குப் பலம் சேர்ப் பதாக அமைந்தது. ஆய்வுக் காலத்தில் சீனாவின் மூலை முடுக்கெல்லாம் பயணம் செய்து, சீன மக்கள் நோய்களை எதிர்க்க பயன்படுத்தும் சுமார் 2,000 பாரம்பரிய நோய் எதிர்ப்பு முறைகளைப் பட்டியலிட்டார் யூயூ தூ.

சீனாவின் ஒரு பிராந்திய மக்கள் காய்ச்சல் வரும்போதெல்லாம் ஆர்டெமிசியா அனுவா (ARTEMISIA ANNUA) என்ற தாவரத்தின் மரப்பட்டைகளைக் காய்ச்சி மருந்தாக உள்கொண்டு வந்தனர். காய்ச்சலும் சில மணி நேரங்களில் குணமடைந்து வந்தது.

மலேரியாவின் ஆரம்ப அறிகுறிகூட இப்படியான காய்ச்சலாகவே இருக்கும். இதைப் புரிந்து கொண்ட யூயூ தூ, அந்தத் தாவரத்தின் பட்டைகளை ஈதர் என்ற வேதியல் பொருளுடன் கலந்து கொதிக்க வைத்தபோது சீனாவே தேடிக் கொண்டிருந்த மலேரியாவுக்கான மருந்து தயாரானது.

1,600 ஆண்டுகளுக்கு முன்பாகவே சீன இலக்கியங்களில் இது சம்பந்தமான குறிப்புகள் உள்ளனவாம். மலேரியாவிற்கெதிராகக் கண்டுபிடிக்கப்பட்ட மேற்கத்திய மருந்துகளுக்கெதிராக மலேரியக் கிருமிகள் தம்மை தகவமைத்துக் கொண்டன. ஆனால், ஆர்டெமிசினின் மருந்துக்கெதிராக, மலேரியாக் கிருமிகளால் தம்மைத் தகவமைத்துக்கொள்ள முடியவில்லை. இன்றுவரை உலகெங்கும் வெற்றிகரமான மருந்தாக அது திகழ்கிறது.

'புராஜெக்ட் 523' ஆரம்பிக்கப்பட்டு சரியாக பத்து வருடங்களுக்குப் பின் இவருடைய கண்டுபிடிப்பு வெளியிடப்பட்டது. ஆனால், யூயூ தூவின் பெயர் வெளியிடப்படவில்லை.

சில வருடங்கள் முன்பு வரை ஆர்டெமிசினின் மருந்தைக் கண்டு பிடித்தவர்கள் யார் என்பது மர்மமாகவே இருந்து வந்தது. தனி நபர்களைவிட தேசமே பிரதானம் என்ற சீனாவின் கொள்கையால் இதுவரை முறையான அங்கீகாரம் பெறாமல் இருந்தவர் இந்த நோபல் பரிசு மூலமாக, தனது 84ஆவது வயதில், சர்வதேசத்தின் கவனத்தைப் பெறுகிறார்.

சீனாவின் பாரம்பரிய மருத்துவம் உலகத்துக்கு கொடுத்த கொடை இது என உலக நாடுகள் பாராட்டுகின்றன. இந்த நோபல் பரிசை, சீன மருத்துவ முறைக்குக் கிடைத்த அங்கீகாரம் என சீனப் பத்திரிகைகளில் எழுதுகிறார்கள்.

"சீனப் பாரம்பரிய மருத்துவத்தின் பெருமை உலகெங்கும் பரவ ஆரம்பித்துள்ளது. அதன் ஓர் அடையாளமே இந்த நோபல் பரிசு" என்கிறார் சீனப் பிரதமர் லீ கெகியாங்.

எவ்வளவுதான் மேற்கத்திய அறிவியல் வளர்ச்சி அடைந்தாலும், பாரம்பரிய மருத்துவம்தான் முடிவான வெற்றியாளர் என்பதை இந்த நோபல் பரிசு வெளிப்படுத்துகிறது என்றால் அது மிகையல்ல.

தமிழர்களும் நேர்த்தியான சிறந்த பாரம்பரிய வைத்திய முறைமை ஒன்றைக் கொண்டிருந்த பெருமைக்குரியவர்கள். எமது சித்தர்களும் ஞானிகளும் மருத்துவம் குறித்து தெரிந்து வைத்திருந்த அறிவு அளவிடக்கரியது. எனினும் அளவு கடந்த மேற்கத்திய மோகம் எம்மை பாரம்பரிய மருத்துவத்தில் இருந்து தூரமாக்கி, மேற்கத்தைய மருத்துவத்தை நாட வைத்துவிட்டது.

இப்போது பாரம்பரிய மருத்துவத்தின் அங்கீகாரத்துக்காகப் போராடவேண்டியிருக்கிறது. சீனப் பாராம்பரிய மருத்துவத்துக்கான அங்கீகாரம் இங்கும் பாரம்பரிய மருத்துவத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திடும் என்று நம்புவோம்!

# இறைவா! அது நீதானா!

கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த நான்கு ஆண்களும் ஒரு பெண்ணும் புனித இடமான செண். பீற்றர்ஸ் சதுக்கத்தில் கோப்பி அருந்திக் கொண்டிருந்தனர்.

முதலாவது கத்தோலிக்கர் தன் நண்பனிடம் சொன்னார். "என்னுடைய மகன் ஓர் அருட்தந்தை. ஒரு மண்டபத்திற்குள் அவன் நடந்து சென்றால், எல்லோருமே அவனை அருட் தந்தையே! என்று அழைப்பார்கள்."

உடனே மற்றைய கிறிஸ்தவரோ, "என்னுடைய மகன் ஓர் ஆயர். அவன் மண்டபத்திற்குள் நுழையும்போது அங்கிருப் பவர்கள் எல்லோருமே அவனை கருணைமிக்கவரே! என்பார்கள்". என்று கீச்சிட்டார்.

இதைக் கேட்ட மூன்றாமவரோ, "என்னுடைய மகன் ஒரு கார்டினல். அவன் மண்டபத்துக்குள் நுழைகையில் எல்லோரும் அவனை நோக்கித் தலையைத் தாழ்த்தி வணக்கம் தெரிவிப்பதுடன் மாண்புக்குரியவரே! என்று தொழுவார்கள்" என்றார் பெருமிதமாக.

நான்காவது நபர் சும்மா இருப்பாரா அவர் சொன்னார், "எனது மகன்தான் பரிசுத்த பாப்பரசர். அவன் நடந்து செல்கையில் மக்கள் எல்லோரும் அவனை புனிதமானவரே! என்று அன்பொழுக அழைப்பார்கள்" என்றார் புன்சிரிப்புடன்.

அவர்கள் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டு அமைதியாகத் தன் கோப்பியை உறிஞ்சிக்கொண்டிருந்தாள் அந்தப் பெண். நான்கு ஆண்களும் அவளை நோக்கி சொல்லி வைத்தாற்போல் திரும்பினார்கள். அவளிடம் இருந்து எதையோ எதிர்பார்த்தவர்களாக. "நல்லது அப்ப...." என்று அடியெடுத்துக் கொடுத்தார்கள்.

கர்வத்துடனும் பெருமையுடனும் அவர்களை நிமிர்ந்து பார்த்த அந்தப் பெண் சொன்னாள்.

"எனக்கொரு மகள் இருக்கிறாள்

அவள்.

மெல்லியவள்.

உயரமானவள்.

36"

24"

36"

அளவுகள்

அவள் நடந்து வரும்போதே மக்கள் எல்லோரும் - ஜீசஸ் (இறைவா!)" என்று வாயைப் பிளப்பார்கள் என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமியையும் மிச்சம் வைக்காத செல்பி மோகம்!



சுகிபாலா, இணுவில்.

ஆலயம் என்பது ஆ+லயம் எனப்பிரிந்து ஆன்மாக்கள் லயப்படும் இடம் என்றார்கள் முன்னோர்கள். ஒவ்வொரு ஊரிலும் ஆலயங்கள் மிக இன்றிமையாதனவாகக் காணப்பட்டன. அதனால்தான் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றனர்.

தெய்வ வழிபாடு என்பது அனைத்து மதங்களிலும் இடம்பெறுகின்ற ஒன்று. மதங்கள் பல என்றாலும் மார்க்கம் ஒன்றே என்பது பலரின் கருத்து. உலகிலே பல மதங்கள் காணப்பட்டாலும் அவரவர் கடவுள்களை அவரவர் முறைப்படி வழிபடுகின்றனர். சைவர்கள் சிவனையும், கிறிஸ்தவர்கள் இயேசுவையும், முஸ்லிம்கள் அல்லாவையும், பௌத்தர்கள் புத்தரையும் வழிபடுகின்றனர்.

எந்த மதமாக இருந்தாலும் அவற்றின் ஆலயங்கள் பயபக்திக்குரியவை. இந்து மதத்தில் கோயில்கள் பக்திக்கு மட்டுமல்ல ஒழுக்கத்துக்குமுரியவை. ஆனால் இன்று கோயில்களில் இந்த நிலை அருகி வருகிறது.

பொதுவாக ஒவ்வொரு சமயப் பிரிவினரின் வழிபாட்டுக்கென, அவரவர் கோயிலுக்கு செல்லவென சில பிரத்தியேக ஆடைகள், விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும். இந்து சமயத்தில் பெண்கள் முழுப் பாவாடை சட்டை, சேலையும் ஆண்கள் வேட்டியும் அணிந்துகொள்வார்கள். பாரம்பரிய ஆடை அணி என்று இது கொள்ளப்படுகின்றது. கோயிலுக்குள் வெற்றிலை பாக்கு போடக்கூடாது. ஆண்கள் மேலாடை அணியக்கூடாது, வீண் வார்த்தைகள் பேசக்கூடாது, எச்சில் துப்பக்கூடாது, பெண்கள் தலைமுடி விரித்துவிட்டு வருதல் – முடிதல் கூடாது, கால்நீட்டி இருக்கக் கூடாது எனப் பல நியதிகள் காணப்படுகின்றன.

இதற்கிடையே கோயிலுக்கு ஏன் போக வேண்டும், வீட்டிலும் சுவாமிப்படங்கள் இருக்கிறது தானே வீட்டிலிருந்து கும்பிடலாம்தானே என நினைப்பவர்களும் உண்டு. பசு பால் தரும் ஒரு மிருகம். பசு பால் தரும் என்பதற்காக அதன் காலிலிருந்தோ, நெற்றியிலிருந்தோ பாலைப் பெறமுடியாது தானே. பசுவின் மடியிலிருந்து மட்டுமே பால் கறக்கமுடியும். அது போலத்தான் தெய்வம் எல்லா இடமும் உண்டு என்றாலும் ஆலயங்களில் மனம் ஒருமைப்பட்டு சிந்தனைகள் சிதறாமல் தெய்வ அனுக்கிரகம் பெறமுடியும்.

ஆலயங்களுக்கு செல்லும்போது பூ, பழம், பால் போன்றவற்றுடன் தோய்த்துலர்ந்த தூய்மையான ஆடையையும் அணிந்து செல்ல வேண்டும். நாம் அனைவரும் சிறுவயதிலிருந்து படித்ததுதான் இவையெல்லாம்.

கடவுள் விரும்புவது மிக எளிமையாக, இயற்கையாகக்கிடைக்கக்கூடிய பொருள்களுடன் கூடிய அபிசேக ஆராதனைகளைத்தான். அத்துடன் கோயிலுக்கு புத்தாடை அணிவது என்ற நிலையில்லாமல் தோய்த்துலர்ந்த தூய்மையான ஆடைகளே போதும். ஆண்கள் வேட்டியுடன் தான் கோயிலுக்குச் செல்கிறார்கள். சுவாமி காவுகிறார்கள். ஆனால் பெண்கள்? ஆமாம் இப்போதெல்லாம் பெண்கள் கோயிலுக்கு வெளிக்கிட்டுப்போனால் அவர்கள் யாரேனும் கலியாண வீட்டுக்குச் செல்கிறார்களோ அல்லது ஏதேனும் களியாட்ட விடுதிகளுக்குச் செல்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. (இங்கே நான் குறிப்பிடுவது அனைத்து பெண்களையும் அல்ல. என்றாலும் பலர் அப்படித்தான் ஆலயங்களுக்குச் செல்கிறார்கள்.)

கோயில்களில் வருடாந்த திருவிழாக்களும், விசேட தின திருவிழாக்களும் இடம்பெறுவதுண்டு. கோயில் என்பது பக்திக்குரிய இடமேயன்றி பணம் பதவிகளை ஏலம்போட்டு கூறு போட்டுக் காட்டுவதற்கான பகட்டு இடமில்லை. தமிழ் மகளிரில் சிறு பிள்ளைகள் முழுப்பாவாடை சட்டையும், இளம் பெண்கள் அரைத் தாவணி பாவாடை சட்டையும், மற்றவர்கள சேலையும் அணிவதே மரபு. ஆனால் இன்று இந்த நிலை மாறிவிட்டது. நவநாகரிக ஆடைகளை அணிகின்றனர். இருந்தால் எழும்பமுடியாத அல்லது கிழிந்து விடும் நிலையில் உள்ள ஆடைகளிலும் பலரைக் கோயில்களின் உள்ளே காணும் நிலை இருக்கிறது.

அது மட்டுமல்லாமல் தாங்கள் எளிமையை விரும்பும்கடவுளைவணங்கச்செல்கின்றோம் என்பதையே மறந்து தென்னிந்திய சினிமா நடிக, நடிகைகள் போல முக ஒப்பனைகள், அலங்கார,ஆபரணங்களுடன் கோயிகளுக்கு வருகின்றனர். கோயில்களில் ஆன்மா லயிக்க வேண்டும். அங்கே தேவையற்ற கவனக்கலைப்பான்கள் தேவையில்லை. ஆடை அணிகள் சிலவேளைகளில் கவனக்கலைப்பான்களாக இருக்குமாயின் அவற்றைத் தூக்கி எறிந்து விட வேண்டும்; அவை கோயில்களுக்குப் பொருத்தமானவையல்ல.

தங்களை அழகாக மெருகூட்டுவதும், ஆடம்பரமாய் வெளிக்கிடுவதும் ஒவ்வொருவரதும் தனிப்பட்ட உரிமைதான். ஆனால் இவற்றையெல்லாம் திருமண வைபவங்களிலோ, பூப்புனித நீராட்டு விழாக்களிலோ அல்லது கொண்டாட்டங்களிலோ வெளிப்படுத்தலாம். ஆலயங்களில் இவைஎல்லாம் வேண்டாமே! சில பெண்கள் நடமாடும் நகைக் கடைகளாகவே மாறிவிடுகின்றனர். பெண்களுக்கு பொன்னகையும் புன்னகையும் அவசியம் தான். அதற்காக இப்படியா?

அண்மையில் ஓர் ஆலயத்தில் பூசகர் ஒருவர் பெண்ணின் கையில் நூல் கட்டுவதற்கு இடம் தேடினால் கையில் இடமில்லை.



இதனால் விசன மடைந்த பூசகர் உதுகளைக் குறைச்சுப்போட்டுக்கொண்டு வரலாம்தானே – என்று சினந்தார். இதெல்லாம் தேவை தானா? பெண்கள் மட்டுமா இப்படி? இல்லை சில பூசகர்கள் செய்யும் அக்கிர மங்களைத் தாங்கிக்கொள்ளமுடிவதில்லை(அனைத்து பூசகர்களையும் குறிப்பிடவில்லை தவறு செய்யும் ஒரு சிலரையே குறிப் பிடுகின்றேன்.)

பூசகர் பூசை செய்வது என்பது பக்தியால் என்று மட்டுமல்ல. பூசை புரிவது தான் அவர் தொழில். தொழில் என்றால் அங்கே வருமானம், பணம் தான் பிரதானம். நான் நேரில் கண்ட சம்பவம் இது. புரட்டாதிச் சனி விரதத்துக்கு எள்ளெண்ணெய்ச் சட்டி எரிக்கப் போனேன். கூடவே நவக்கிரகங்களுக்குத் தண்ணீர் ஊற்றவும் வரிசையாகக் காத்திருந்தோம். பூசகருக்குப் பணம் கொடுத்துத்தான் தண்ணீர் வார்க்கப்படுகிறது. தண்ணீர் ஊற்றிய பின் தான் பணம் கொடுக்கிறார்கள் என்று பார்த்தால் இல்லை, அடியவர்களிடம் ஒரு கையால் பணத்தை வேண்டி எண்ணிப்பார்த்து விட்டு அதை இடுப்பில் செருகியபின்தான் மற்றக் கையில் செம்பு தண்ணீர் வேண்டப்படுகிறது. இதையெல்லாம் என்னவென்று சொல்ல.

இது மட்டுமா இன்றைய கால இளைஞர், யுவதிகளையும் ஆட்டிப்படைக்கும் இன்னொரு விடயம் செல்ஃபி மோகம். ஆலயத்துக்கு பக்தியோடு சென்று வழிபடும் இளைஞர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். கூடவே சுவாமி காவுவதையே செல்ஃபியாக எடுக்கும் நெறி தவறும் நிலையும் வளர்ந்து வருகிறது. காலா காலத்துக்கும் எம் நினைவுகளை மீட்டித் தருபவை ஒளிப்படங்களே. அது உண்மைதான். ஆனால் அது அதுக்கென்று காலநேரம் உண்டு. அதைவிடுத்து பக்திக்கும் மரியாதைக்கும் உரிய தெய்வங்களை தங்கள் தோள்கள் மீது தாங்கிச் செல்லும் பேறுபெற்ற இவர்கள் இப்படியான வேலைகளில் ஈடுபடலாமா?

இத்தனைக்கும் இடையில் இன்னொரு விடயம் என்னவென்றால் அண்மையில் விசேட திருவிழா ஒன்றின்போது, கோயிலில் கும்பிட்டுக்கொண்டிருந்தேன். பூசகர் தீபராத்தியைக் கையில் எடுத்தார். எல்லோரும் கையெடுத்து அரோ..... அவ்வளவுதான் கேட்டது. என்னடா எண்டு பார்த்தால் அங்கே பூசகரின் செல்லிடத் தொலைபேசி செல்லமாகச் சிணுங்கியதால் தூக்கிய தீபாராத்தியை வைத்துவிட்டு பூசகர் போன் கதைக்கிறார். (இந்தச் சம்பவங்கள் அனேகமாக சிறிய சிறிய கோயில்களில் நடைபெறுகின்றன.) ஆக மொத்தத்தில் யார் யாரைத் திருத்துவது, யார் எங்கே போய் தலையை முட்டிக்கொள்வது என்றே தெரியவில்லை.

## விழவிழ எழுவோம் நிரூபிக்கும் வீமன்காமம்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

**தள்ளாடும் வயதிலும் தளராத நம்பிக்கை**

நீண்ட தூரம் செம்மண் தூசியைக் கிளப்பியபடி பயணித்த மோட்டார் சைக்கிள் முட்கம்பி வேலிக்கு முன்னால் நின்றது. அங்கிருந்து அந்தப் பக்கமாக இராணுவத்தினரின் முகாம் பகுதியாம். ஆளரவத்தைத் தேடினோம். சுருங்கிய முகம் – உடலில் சுருக்கங்கள், எங்களை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தார் சின்னவன். நடையும் – கதையும் அவர் இன்னமும் 40 வயதைக்கூட கடக்காதவர் என்றன.

அவர் தனது 8 பரப்புக் காணியையும் உழுதிருக்கின்றார். 25 வருடங்களாக பண்படுத்தப்படாத நிலம் – காட்டு மரங்களால் மண்டிப் போயிருந்ததையும், அவர் உழுதிருந்தாலும் அவற்றின் வேர்கள் அங்கே மிதந்திருப்பதையும் காட்டினார்.

"70 ஆயிரத்துக்கு மேல செலவழிச்சிட்டன். இங்க தோட்டம் செய்யுறது எண்டு முடிவெடுத்திட்டன். பரப்புக்கு இவ்வளவு என்று காசு தாறதாய் அதிகாரிகள் சொல்லியிருக்கினம். ஆனால் இன்னமும் தரவில்லை. முந்தி வத்தாத ஊற்றாய் இருந்த கிணறு பாழடைஞ்சு கிடக்குது, வந்து பாருங்கோ!" எம்மையும் அழைத்துச் சென்று கிணற்றைக் காட்டுகிறார் சின்னவன். கிணறு இருந்ததற்கு அடையாளமாக வட்டமாக கட்டிய கல்லுகளின் எச்சங்களும், வெளியே சீமெந்து வாய்க்கால்களும்தான் தற்போது சாட்சிகளாக எஞ்சிக் கிடக்கின்றன.

சின்னவன் இங்கு தோட்டம் செய்வதில் உறுதியாக இருந்தாலும் அவரது சொந்த வீட்டை இராணுவம் இன்னும் விடுவிக்கவில்லை. அவரது தோட்டக் காணியிலிருந்து கொஞ்சத் தூரத்தில் இராணுவத்தினரின் பாதுகாப்பு வேலி இருக்கிறது. அதற்கு அந்தப் பக்கமாக அவரது வீடும் சிறைப்பட்டிருக்கிறது. "இனியும் அகதியா அலைஞ்சு திரிய முடியாது. வீட்டை விடேக்க விடட்டும். விடத்தானே வேணும். இப்போதைக்குத் தோட்டம் செய்யப் போகின்றேன்." முடிவில் உறுதியாக இருக்கிறார்.

**தண்ணீர்ப் பிரச்சினை**

சில கிலோ மீற்றர்கள் தொலைவில் பளைவீமன்காமம் தெற்குப் பிரதேசம் இருக்கின்றது. தார் வீதி போடப்பட்டாகிவிட்டது. விளக்குகள் வீதியை வெளிச்சமாக்கியுள்ளன. பல வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

"முந்தியும் வீட்டுத் திட்ட வீடுகள்தான் எங்களுக்கு இருந்தது. இப்பவும் வீட்டுத் திட்டத்திலதான் வீடு தந்திருக்கினம். நாங்கள் இங்கதான் தங்கியிருக்கிறம். ஆனா பிள்ளைகள் படிக்கிறதுக்கு பள்ளிக்கூடம் பக்கத்தில இல்லை. தூரத்துக்குப் போகவேண்டி இருக்குது." கிராமத்தின் வயதான பெண்மணி ஒருவர் எமக்கு கதை [illegible] அங்கே ஒரு சிறு கூட்டமே கூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரும்பிராயில் நலன்புரி நிலையங்களில் பட்ட அவலத்துக்கு சொந்த மண்ணில் கஸ்ரம் என்றாலும் நிம்மதியான வாழ்க்கை என்கிறார்கள். எல்லா வசதிகளையும் அரசு செய்து தந்துவிட்டால் அரசின் நிவாரண, நிதி உதவி உட்பட எதுவும் தேவையில்லை என்பது அவர்களின் நிலைப்பாடு.

"வீட்டு வயறிங் வேலையை முடிச்சா உடனேயே கறண்ட் தாறம் எண்டவை. தண்ணீரும் இங்க பெரிய பிரச் சினை. ஒரு கிணறு இருக்குது. அது இப்ப தூர் வாரி புதுசா கட்டினது. அதுக்கு கப்பி ஒன்றும் போடேல்ல. அதில இருந்துதான் எல்லாரும் தண்ணி அள்ளவேணும்.

**வாழ்வாதாரம் இல்லை**

மீளக்குடியமர்ந்துவிட்டாலும் தொழில் வாய்ப்புகளுக்காக அவர்கள் நீண்ட தூரம் பயணித்து யாழ்ப்பாணத்துக்கோ அல்லது அவர்கள் முன்னர் இருந்த இடங்களுக்கோதான் போக வேண்டியிருக்கிறது. இடப்பெயர்வுக்கு முன்னர் தோட்டங்களில் நிறையப் பேருக்குக் கூலி வேலை கிடைத்தது. இப்போது பெரும்பாலான தோட்டக் காணிகள் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் சிக்கிக்கொண்டதால் தொழில் வாய்ப்புகள் வெகுவாகக் குறைந்துவிட்டன

இருக்கும் நிலத்தை மட்டும் விடுவித்தால் போதாது, வாழ்வாதாரத்துக்கான நிலங்களும் விடுவிக்கப்படவேண்டும் என்பது தான் அவர்களின் எதிர்பார்ப்பு. நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர்.

# மந்திரக் கண்ணாடி

முன்னொரு காலத்திலே, இங்கிலாந்து நாட்டில் கொடிய சுபாவம் மிக்க ராணி ஒருத்தி வாழ்ந்து வந்தாள். உலகத்தில் தான் தான் மிகவும் அழகானவள் என்று அவள் நினைத்து வந்தாள்.

தன்னைவிட அழகானவர்கள் அந்த நாட்டில் யாரும் இல்லை என்றும் அவள் அகம்பாவமாகப் பேசுவாள். எப்போது பார்த்தாலும் தன்னை அழகுபடுத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பாள். அந்தக் கொடிய ராணியிடம் ஒரு மந்திரக் கண்ணாடி இருந்தது. அவள் அதனைத் தனது கண்மணி போலப் பாதுகாத்து வந்தாள். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்ததும் அந்த மந்திரக்கண்ணாடியைப் பார்த்து "மந்திரக் கண்ணாடியே! மந்திரக் கண்ணாடியே! இந்த நாட்டில் மிகவும் அழகானவள் யார்?" என்று கேட்பாள். "இந்த நாட்டில் நீங்கள் தான் மிகவும் அழகானவள். உங்களைவிட அழகானவள் இந்த நாட்டில் யாருமே கிடையாது......" என்று அந்த மந்திரக் கண்ணாடி பதிலளிக்கும். அந்த ராணிக்கு குழந்தை இல்லாததால் வெண்பனியாள் என்ற பெயருடைய குழந்தையை எடுத்து வளர்த்து வந்தாள். காலம் கடந்து கொண்டேயிருந்தது. ஒரு நாள்.....! அதிகாலையில் எழுந்த ராணி வழமை போல மந்திரக் கண்ணாடியைப் பார்த்து, "மந்திரக் கண்ணாடியே! இந்த நாட்டில் மிகவும் அழகான பெண் யார்?" என்று கேட்டாள்.

"இந்த நாட்டில் இதுவரை நீங்கள் தான் அழகான பெண்ணாக இருந்தீர்கள். ஆனால் இப்போது உங்கள் வளர்ப்பு மகளான வெண்பனியாள் தான் அழகுமிக் கவள்" என்று அந்த மந்திரக்கண்ணாடி பதிலளித்தது. மந்திரக் கண்ணாடியின் பதிலைக் கேட்டதும் அந்தக் கொடிய ராணி அதிர்ச்சி அடைந்து விட்டாள். தன்னைவிட அழகான வெண்பனியாளை உயிருடன் வைக்கக் கூடாது என்று திட்டமிட்டாள். ஆத்திரம் அடைந்த அவளுடைய உடல் இலேசாக நடுங்க ஆரம்பித்துவிட்டது. குட்டி போட்ட பூனையைப்போல அவள் குறுக்கும் நெடுக்கும் நடந்தபடி சிந்தனையில் மூழ்கினாள் திடீரென்று அவளுடைய முகம் மலர்ந்தது. உடனே......! கொலைகார முரடன் ஒருவனை அழைத்துப் பின்வருமாறு உத்தரவிட்டாள். "நான் சொல்வதை கவனமாகக் கேள்....... எனது வளர்ப்பு மகள் வெண்பனியாளை இன்று நள்ளிரவு காட்டுக்குக் கூட்டிச் சென்று கொலை செய்து விடு. உன்னைத் தவிர யாருக்கும் இந்த விடயம் தெரியக்கூடாது..... ஜாக்கிரதை" இவ்வாறு அவள் கூறியதும் அந்த முரடன் ஒரு கணம் அதிர்ச்சிக்கு உள்ளானான். மறுகணம் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு; "உத்தரவு ராணி" என்று கூறித் தலை வணங்கினான். அன்று நள்ளிரவு.....!

அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த வெண்பனியாளின் கண்களைக்கட்டி, காட்டுக்குக் கொண்டு சென்றான் கொலைகார முரடன். காட்டை அடைந்ததும் ராணியின் உத்தரவை வெண்பனியாளிடம் கூறினான் முரடன். அதைக்கேட்டதும் விம்மி விம்மி அழ ஆரம் பித்து விட்டாள் வெண்பனியாள்.

அழகி வெண்பனியாள் அழுவதைக் கண்டதும் கொலைகார முரடனின் உள்ளம் கசிந்து விட்டது. "குழந்தாய்! உன்னைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. நீ எங்காவது ஓடித்தப் பிவிடு. உன்னைக் கொன்று விட்டதாக அந்தக் கொடிய ராணியிடம் கூறிவிடுகிறேன்" என்று கூறி விட்டு அரண்மனையை நோக்கிச் சென்றான் அந்த மனிதன். கடவுளைப் பிரார்த்தித்தபடி கால் போன போக்கிலே நடந்து கொண்டிருந்த வெண்பனியாள் காட்டின் மத்தியில் ஒரு குடிசையைக் கண்டதும் மகிழ்ச்சி அடைந்தாள்.

விரைந்து சென்று அந்தக் குடிசைக்குள் புகுந்தாள். அங்கு யாருமே தென்பட வில்லை. அங்கு காணப்பட்ட கட்டில் ஒன்றிலே படுத்தாள். சிறிது நேரத்தில் தன்னையும் அறியாது அயர்ந்து தூங்கி விட்டாள். திடீரென ஏதோ சத்தம் கேட்டதும் மெதுவாகக் கண் திறந்தாள் வெண்பனியாள். அங்கே.....! ஏழு சித்திரக் குள்ளர்கள் அவளைப் பார்த் துச் சிரித்தபடி நின்றனர். அவர்கள் அனை வரும் சுமார் மூன்றடி உயரம் உடையவர் களாகவே காணப்பட்டனர். தான் காண்பது கனவா, நனவா என்பதைத் தீர்மானிக்க முடியாது திண்டாடினாள் வெண்பனியாள். "குழந்தாய்! யாரம்மா நீ...... பயப்படாமல் உண்மையைச் சொல். இது எங்கள் வீடு தான்....." என்றான் ஒரு சித்திரக் குள்ளன். அதே வேளையில் மற்றச் சித்திரக்குள்ளர்கள் அவளைக் கனிவோடு பார்த்துச் சிரித்தனர்.

அழகி வெண்பனியாள் நடந்த சம்பவங்களையெல்லாம் சித்திரக்குள்ளர்களிடம் விவரமாக எடுத்துக் கூறினாள்.

"குழந்தாய்! நீ ஒன்றுக்கும் கவலைப் படாதே..... நாங்கள் உனக்குத் துணையாக இருப்போம். நீ எங்களுடன் இருக்கலாம்" என்றான் ஒரு சித்திரக்குள்ளன். மற்றச் சித்திரக்குள்ளர்கள் அவனுடைய பேச்சை ஆமோதித்தனர். அவர்களுடைய வேண்டுகோளை வெண்பனியாள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டாள். அடுத்த நாள் காலை, சித்திரக்குள்ளர்கள் அனைவரும் வயல் வேலைக்குச் செல்லப் புறப்பட்டனர். கையை அசைத்து அவர்களுக்கு விடை அளித்தாள் அழகி வெண்பனியாள்.

அழகி வெண்பனியாள் சித்திரக்குள்ளர்களின் வீட்டில் உயிருடன் இருப்பதை மந்திரக் கண்ணாடியின் மூலம் அறிந்து கொண்ட கொடியராணி ஆத்திரம் அடைந்தாள்.

ஒரு கிழவி போல வேடமணிந்து கொண்டு, நஞ்சு அப்பிள் பழம் ஒன்றுடன் சித்திரக் குள்ளர்களின் வீட்டுக்குச்சென்றாள் கொடியராணி. 'குழந்தாய்! நான் ஒரு ஏழைக் கிழவி. அடுத்த ஊருக்கு கால்நடையில் சென்று கொண்டிருக்கிறேன். தாகமாக இருக்கிறது..... கொஞ்சம் தண்ணீர் தா......



என்று கெஞ்சும் குரலிலே கூறினாள். கொடியராணி. அழகி வெண்பனியாள் ஒரு பாத்திரத்தில் நீர் கொடுத்தாள். தண்ணீரை பருகிய கொடியராணி நஞ்சு அப்பிள் பழத்தை வெண்பனியாளிடம் கொடுத்து உண்ணும்படி அன்பாகக் கூறினாள். கொடிய ராணியின் கபட நாடகத்தை உணராத வெண் பனியாள் அந்த நஞ்சு அப்பிள் பழத்தை ஆசையுடன் வாங்கிச் சாப் பிட்டாள். அடுத்த கணம்....!

"ஐயோ!" என்று அலறியபடி மயக்க முற்றுத் தரையில் சாய்ந்தாள் வெண்பனியாள்.

மாலையில் வீடு திரும்பிய சித்திரக்குள்ளர்கள் அழகி வெண்பனியாளின் நிலையைக் கண்டதும் அதிர்ச்சி அடைந்தனர். அவளின் மயக்க நிலையைப் போக்கத் தங்களால் ஆன அனைத்தையும் செய்தனர். ஆனால் எதுவித பயனும் கி[illegible]க வில்லை. அவளுடைய உடலைத் தூக்கிக் கண்ணாடிப் பெட்டி ஒன்றிலே வைத்துப் பாதுகாத்துவந்தனர்.

ஒரு நாள்.......! இளவரசன் ஒருவன் எங்கிருந்தோ அங்கு வந்து சேர்ந்தான். கண்ணாடிப் பெட்டியில் அழகி வெண்பனியாளைக் கண்டதும் வைத்த கண் வாங்காது அவளையே பார்த்தபடி நின்றான். பின்பு குனிந்து அழகி வெண்பனியாளை அன்போடு முத்தமிட்டான். அடுத்த நிமிடம்...... அழகிய வெண்பனியாள் கண் அமர்ந்தாள். சித்திரக்குள்ளர்கள் அனைவரும் துள்ளிக் குதித்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். சித்திரக்குள்ளர்களின் முன்னிலையில் அழகி வெண்பனி யாளைக் கைப்பிடித்து திருமணம் செய்து கொண்டான் அந்த இளவரசன். அதேநேரத்தில் கொடிய ராணியின் மந்திரக்கண்ணாடி சுக்கு நூறாக உடைந்து சிதறியது. அழகி வெண்பனி யாளும் இளவரசனும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்.




ந. யோகப்பிரியா,
தரம் 5C,
சென்.பெனடிற் றோ.க.த.க. வித்தியாலயம்.



ஜ.கிரிஷிகேசன்,
தரம் 5A,
யா/இந்து ஆரம்ப பாடசாலை.



ஜ.ரிஷி வர்மன்,
தரம் 3C,
யா/இந்து ஆரம்பப் பாடசாலை.



பி.அங்குஜன்,
தரம் 1,
யா/இந்து ஆரம்ப பாடசாலை.

## சிறுவர் பாட்டு



காக்கிச் சட்டை
என்ன சட்டை
காற்சட்டை
என்னகால்
ஆட்டுக் கால்
என்ன ஆடு
வெள்ளை ஆடு
என்ன வெள்ளை
பால் வெள்ளை
என்ன பால்
பசுப் பால்
என்ன பசு
கொம்புப் பசு
என்ன கொம்பு
மான் கொம்பு
என்ன மான்
கலைமான்
என்ன கலை
பல்கலை
என்ன பல்
அழகு ஆம்பல்
என்ன ஆம்பல்
குளத்து ஆம்பல்
என்ன குளம்
தாமரைக் குளம்
என்ன தாமரை
வெள்ளைத் தாமரை
என்ன வெள்ளை
வெள்ளை யுடைவாணி
யார் அந்த வாணி
கலைமகள் சரஸ்வதிதான்

வாகினி கிருபாகரன்,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஷாலுக்கு இனிமேல்தான் சவால்!

■ சேரலாதன்

ஏற்கனவே அரசியல் ரீதியாக பிளவுபட்டிருக்கும் தமிழ்நாட்டு நடிகர்கள் அண்மையில் இடம்பெற்ற நடிகர் சங்கத் தேர்தலை அடுத்து மேலும் பிளவுபட்டிருக்கின்றனர்.

இந்தியாவைப் பொறுத்த வரையில் அரசியல் ஊடுருவாத இடமே இல்லையெனக் கூறிவிடலாம். அரசியல்வாதிகள் தமது பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அரசியல் விரோதங்களைத் தூண்டி விடுவதில் முனைப்புக் காட்டுகின்றனர்.

அதிலும் தமிழ் நாட்டில் எங்கும் அரசியல்தான் என்றொரு நிலை உருவாகி விட்டது. அரசியல் என்பது இனம், மொழி, உறவு சகலதையும் கடந்த ஒன்று என்பதுதான் பொதுவான வரைவிலக்கணம். ஒரு வீட்டிலே ஒன்றாக வாழுகின்ற கணவன் ஒரு கட்சியையும், மனைவி வேறொரு கட்சியையும் ஆதரிக்கும் நிலை காணப்படுகின்றது. இதனால் கணவன், மனைவி உறவு கூட சிதைந்து போவதுண்டு.

தனது கணவனைவிட தாம் சார்ந்த கட்சித் தலைவருக்கு அதிக மதிப்பை வழங்குகின்ற பெண்களைக்கூடப் பார்க்கின்றோம். மனைவியுடன் அரசியல் ரீதியாக முரண்பட்டுக் கொண்டிருக்கும் கணவனும் இவ்வாறுதான் நடந்து கொள்கின்றான்.

கடந்த 10ஆண்டுகளுக்குப் பின்னர் தென்னிந்திய நடிகர் சங்கத் தேர்தல் அண்மையில் நடைபெற்றுள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக நடிகர் சரத்குமார் சங்கத்தின் தலைவராகப் பதவி வகித்துள்ளார். அதேபோன்று அவரது மைத்துனரான ராதாரவி செயலாளர் பதவியில் அமர்ந்திருந்தார். இந்த 10 ஆண்டு காலத்தில் நடிகர் சங்கத் தேர்தலை நடத்துவதற்கான எந்த முயற்சியும் எடுக்கப் படவில்லை.

நடிகர் சங்கத்தில் மோசடிகள் இடம்பெறுவதாகவும், சங்கத்துக்குரிய கட்டடம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டதன் பின்னால் பெரியதொரு ஊழலே சம்பந்தப்பட்டிருப்பதாகவும் முணுமுணுப்புக்கள் கிளம்பின. ஆரம்பத்தில் இதை யாருமே கண்டுகொள்ளவில்லை. ஆனால், விஷால் போன்ற இளம் நடிகர்கள் இந்த விடயத்தில் அக்கறை காட்டத் தொடங்கிய பின்னர் ஏனையவர்களும் விழித்துக் கொண்டனர். குறிப்பாக நடிகர் விஷால் நடிகர் சங்கத்தை மீளமைப்பதில் முன்னின்று கடுமையாக உழைத்தார். ஆரம்பத்தில் விஷால், சரத்குமார், ராதாரவி போன்ற பெரும் மலைகளுடன் மோதி மூக்குடைபடப் போகின்றார் என்றே பலரும் கருதினார்கள். ஆனால், மற்றவர்களின் விமர்சனங்களையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கித் தள்ளிவிட்டு விஷால் கடுமையாகப் பாடுபடத் தொடங்கினார். இவருக்கு இளம் நடிகர்கள் மட்டுமல்லாது மூத்த நடிகர்கள் சிலரது ஆதரவும் கிடைத்தது. ஆனால் இந்த மூத்த நடிகர்கள் வெளிப்படையாகத் தமது கருத்துக்களை வெளியிடவில்லை.

பாண்டவர் அணியெனப் பெயர் சூட்டிக்கொண்ட விஷால் அணியினர் தாம் பதவிக்கு வந்தால் மேற்கொள்ளவிருக்கும் நலத்திட்டங்கள் தொடர்பாக நடிகர்கள் மத்தியில் பரப்புரைகளை மேற்கொண்டிருந்தனர். இதில் நடிகர் சங்கத்துக்குச் சொந்தமான கட்டடத்தை மீட்டெடுத்தல், சங்கக் கட்டடத்தில் அரங்கம், உணவுக் கூடங்கள் அமைத்தல், நடிகர்களுக்கு இலவச காப்பீட்டுத் திட்டம் வழங்கல், கல்விக்கான உதவித்தொகை உயர்த்தப்படல், புதிய அறக்கட்டளையை உருவாக்குதல், மாத வருமானம் ஈட்டக்கூடிய வகையில் சங்கக்கட்டத்தை அமைத்தல், நாடக நடிகர்களுக்கு சினிமாவில் வாய்ப்பு வழங்கப்படல் இவ்வாறு விஷால் அணியினர் வழங்கிய வாக்குறுதிகளின் பட்டியல் நீண்டு செல்கின்றது.

சரத்குமார் அணியினரின் தோல்விக்கு ராதாரவியின் செயற்பாடுகளும் ஒரு காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது. எவரையும் மதிக்காத தன்மை அவரிடம் காணப்பட்டதால் நடிகர்களின் வெறுப்புக்கு அவர் சார்ந்திருந்த அணி ஆளானது. மேலும், தொடர்ந்து 10 ஆண்டுகள் சங்கத் தேர்தலை நடத்தாது இழுத்தடித்து வந்தமையும் ஒரு பிரதானமான காரணமெனக் கூறப்படுகின்றது. என்னதான் இருந்தபோதிலும் சரத்குமார், ராதாரவி போன்ற மூத்த நடிகர்கள் இந்தத் தேர்தலில் தோல்வியைத் தழுவிக் கொண்டமையை ஒரு சாதாரண விடயமாகக் கொள்ளமுடியாது.

மேலும், சரத்குமார் தனியானதொரு அரசியல் கட்சியை நடத்தி வருகின்றபோதிலும், ஜெயலலிதாவின் தீவிர ஆதரவாளராகவே அவர் காணப்படுகின்றார். அவரும் அவரது மனைவி ராதிகாவும் முன்னர் கலைஞர் மு.கருணாநிதி தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்திருந்தனர். கலைஞரின் தனிப்பட்ட அன்புக்கும் இந்தத் தம்பதியினர் பாத்திரமாக இருந்தனர். ஆனர்ல், ஜெயலலிதாவின் கடைக்கண் பார்வை கிடைத்ததும் கலைஞரைத் உதறித் தள்ளிவிட்டு ஜெயலலிதா பக்கம் சாய்ந்து விட்டனர்.

நடிகர் சங்கத் தேர்தல் என்பது வெறும் தேர்தல் அல்ல அது தமிழகத்தின் பிரதான அரசியலையும் உள்ளடக்கியதுதான். தேர்தலில் வெற்றிபெற்றதும் விஷால் உடனடியாகச் சென்று கலைஞர் கருணாநிதியைச் சந்தித்து ஆசி பெற்றார். ஆனால், இந்தத் தேர்தலில் தனக்கு ஆர்வம் இருப்பதாக ஜெயலலிதா காட்டிக்கொள்ளவில்லை.

அடுத்த ஆண்டு சட்டமன்றத் தேர்தல்கள் இடம்பெறவுள்ள நிலையில், நடிகர்களில் ஒரு பகுதியினரின் வெறுப்பைச் சம்பாதிப்பதற்கு ஜெயலலிதா சந்திக்க விரும்பவில்லை என்று இதற்குக் காரணம் சொல்லப்படுகின்றது. இதனால்தான் தமது கட்சிக்காரர்களாகவுள்ள நடிகர்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கும் அவர் அனுமதிக்கவில்லை.

தேர்தலில் வெற்றிபெற்ற விஷால் அணியினருக்கு எதிர்காலத்தில் சோதனைகள் பல காத்திருக்கின்றன. முதலில் தாம் வழங்கிய வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்றியே ஆக வேண்டும். இவர்களது வாக்குறுதிகளால் கவரப்பட்டதன் விளைவாகவே பல வாக்குகள் இவர்களுக்கு அளிக்கப்பட்டன. மேலும் சரத்குமார், ராதாரவி போன்றோர் அடிபட்ட புலிகளாக உள்ளதால் பிரச்சினைகளைத் கொடுக்கத்தான் பார்ப்பார்கள். தமிழ்நாடு அரசின் ஆதரவும் இவர்களுக்கு இருப்பதால் பெரிதாக எதையாவது செய்வதற்கே இவர்கள் முயற்சி செய்வார்கள். ஆகவே, அடுத்த மூன்று ஆண்டுகள் விஷால் அணியினருக்கு ஒரு சோதனைக்காலம்தான்.

எம்.ஜி.இராமச்சந்திரன், சிவாஜிகணேசன், எஸ்.எஸ்.இராஜேந்திரன் ஆகிய பெரிய நடிகர் அமர்ந்திருந்த பதவியில், தற்போது நடிகர் நாஸர் அமர்ந்துள்ளார். ஏனைய பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள்கூட அனுபவமில்லாத புதுமுகங்கள்தான் சவால்களைச் சமாளிக்கின்ற வழிமுறைகளை இவர்கள் இனிமேல்தான் கற்றுக்கொள்ள வேண்டும்.ஆகவே, எல்லாமும் இத்துடன் முடிந்துவிடப்போவதில்லை.

**நடிகர் சங்கத் தேர்தல் என்பது வெறும் தேர்தல் அல்ல அது தமிழகத்தின் பிரதான அரசியலையும் உள்ளடக்கியதுதான். தேர்தலில் வெற்றிபெற்றதும் விஷால் உடனடியாகச் சென்று கலைஞர் கருணாநிதியைச் சந்தித்து ஆசி பெற்றார். ஆனால், இந்தத் தேர்தலில் தனக்கு ஆர்வம் இருப்பதாக ஜெயலலிதா காட்டிக்கொள்ளவில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சினின் சதங்களும் சரியலாம் கோக்லியால்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் சதம் விளாசினார் கோக்லி. இந்த சதம் ஒருநாள் ஆட்டங் களில் அவரது 23ஆவதும் ஒட்டுமொத்த ஆட் டங்களில் 34 ஆவது சதமுமாகும். ஒவ்வொரு தடவையும் கோக்லி சதத்தை பதிவு செய்யும் பொழுது யாரோ ஒருவரின் சாதனை தகர்க் கப்பட்டுக் கொண்டிருக் கிறது.

அந்த வகையில் தென் னாபிரிக்காவுக்கு எதிரான சதத்திலும் பலரது பெயர் சாதனைப் பட்டியலில் இருந்து பின்னோக்கி நகர்ந் துள்ளது.

### இந்திய வீரர்களில் இரண்டாவது இடம்

இந்திய வீரர்களின் சதப் பட்டியலில் சச்சின் 49 சதங்களுடன் முதலிடத்திலும், கங்குலி 22 சதங்களுடன் இரண்டாவது இடத்திலும் இருந்தனர். குறித்த சதத்தின் மூலம் கங்குலி மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டு கோக்லி 23 சதங்களுடன் அவரது இடத்தை கைப்பற்றி யுள்ளார்.

### சர்வதேச அளவில் 5ஆவது இடம்

அதிக சதங்களை விளாசிய சர்வதேச பட்டியலில் கோக்லி 5ஆவது இடத்தில் உள்ளார். இதிலும் சச்சின் 49 சதங்களுடன் முதலிடத்தில் உள்ளார். இரண்டாவது இடத்தில் பொண்டிங் 30 சதங்களுடனும் மூன்றாவது இடத்தில் ஜெயசூரியா 28 சதங்களுடனும் நான்காவது சங்கக்காரா 25 சதங்களுடனும் உள்ளனர். மொத் தத்தில் ஐந்தாவது இடத்திலுள்ள கோக்லிக்கு முன்னர் உள்ள இந்த நால்வரும் ஓய்வு பெற்ற வீரர்களாகவே உள்ளனர். எனவே உயிர்ப்பற்ற நிலையில் இருக்கும் இவர்களின் சதங்களை தகர்ப்பதில் கோக்லிக்கு பெரிதளவில் சிக்கல்கள் இருக்காது.

அதிலும் குறிப்பாக சங்கக்கார, ஜெயசூரியா, பொண்டிங் இவர்களின் பெயர்கள் குறித்த பட் டியலில் இருந்து இன்னும் சில வாரங்களில் படிப் படியாக பின்னோக்கி நகரலாம்.

### சச்சினுக்கும் ஆபத்து

ஒருநாள் ஆட்டங்கள், டெஸ்ட் ஆட்டங்கள் என ஒட்டுமொத்த சர்வதேச ஆட்டங்களிலும் 100 சதங்களைப் பதிவுசெய்துள்ள சச்சினின் சாதனைகள் அவ்வளவு இலகுவில் தகர்க்கப்பட முடியாது என்பதே பலரது பொதுவான அபிப்பிராயமாக உள்ளது. கோக்லியின் வயதையும் அவருக்கு இருக்கும் வாய்ப்புக்களையும் பார்க்கின்ற பொழுது சச்சினின் சதங்களும் கோக்லியால் ஊதித் தள்ளப்படப் போகின்றன என்றே எண்ணத் தோன்றுகின்றது. அடுத்த மாதம் 5ஆம் திகதி கோக்லிக்கு வயது 27 ஆகப்போகிறது. சச்சின் தனது 40ஆவது வயதிலேயே ஓய்வினை அறிவித்தார்.

கோக்லி 37 வயது வரை விளையாடுவார் என்று வைத்துக் கொண்டாலும் இன்னமும் 10 வருடங்கள் அவருக்கு முழுமையாக உள்ளன. 19 வயதில் அறிமுகமாகி பழக்கமற்ற வீரராக 7 ஆண்டுகளில் இத் தனையும் சாதித்த கோக்லி முதிர்ச்சியும் அனுபவமும் உள்ள வீரராக அடுத்த 10 வருடங்களில் நிச் சயம் இதைவிட அதிகம் சாதிப்பார் என்பதற்கான சாத்தி யக்கூறு களே அதிகம் உள்ளன. அந்தவகையில் சச்சினின் சாதனைகள் கோக்லியால் தகர்க்கப்படலாம்.

### பிரபலங்களின் எதிர்வுகூறல்

கிரிக்கெட் ஆட்டங் களில் சதங்களைப் பொறுத்த மட்டில் அத்தனை சாதனை களும் கோக்லியால் தகர்க் கப்படும் என்பது இந்தக் கட்டு ரையோ அல்லது வாச கர்களோ அல்லது விமர்சகர்களோ தெரிவித்தது அல்ல. கிரிக்கெட்டைக் கரைத்துக் குடித்த பிரபலங்களே இதனை ஏற்றுக் கொண் டிருக்கிறார்கள். பொண் டிங், லாரா, கங்குலி, ராவிட், அக்ரம், அக்தர், இன்சமாம், மைக்கல் வோகன், இயான் சப் பெல் இவர்கள் கோக் லியை ஏற்றுக் கொண் டவர்களில் சிலர். இவ் வா



ற ா ன சாதனை களை யும் தாண்டி கோக்லி மீது அவ் வப்பொழுது கார சாரமான விமர்ச னங்கள் பலவும் முன் வைக்கப்படுவதுண்டு. ஏனெனில் "காய்கின்ற மரத்துக்குத் தானே கல் லெறி விழும்".

# ஆட்டம் ஆரம்பம்

"செரினா விலகல்", "செரபோவாவுக்கு அதிகப் படியான வாய்ப்பு, அவர் நிச்சயம் கிண்ணம் வெல்லு வார்", "செரபோவாவுக்கு சவாலாக வோஸ்னியாக்கி இருப்பார்", "பென்னட்டா தகுதி பெற சாத்தி யமில்லை" இவ்வாறான வாக்குவாதங்கள் முடிவுக்கு வந்து இன்று ஆரம்பமாகிறது முன்னணி வீராங்கனைகளுக்கான சிங்கப்பூர் ரென்னிஸ் தொடர்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற ரென்னிஸ் தொடர்கள் எத்தனை நடைபெற்றாலும் வருடத்தின் இறுதிப்பகுதி யில் சிங்கப்பூரில் நடைபெறும் ரென்னிஸ் தொடர் சிறிது சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகள் மட்டும் பங்கேற்பதே அதற்குரிய காரணம். செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா), சிமோனா கெலெப் (ருமேனியா), மரிய செரபோவா (ரஷ்யா), கார்பின் முகுருசா (ஸ்பெயின்), அக்னிஸ்கா ரட்வன்ஸ்கா (போலந்து), கிவித்தோவா (செக்குடியரசு), ஏஞ்சலிக் கெர்பர் (ஜெர்மனி) லூசி சபரோவா (செக்குடியரசு) ஆகியோரே இந்த தொடரில் பங்கேற்கவுள்ள வீராங்கனைகளாவார்.

குறித்த தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார் செரீனா. செரீனாவில் விலகல் செரபோவா வுக்கான வாய்ப்பு என்ற பொதுவான அபிப்பிராயம் நிலவினாலும் அனைத்து வீராங்கனைகளுக்கு மான வாய்ப்புக்களும் இருக்கத்தான் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org